# காதம்பரி

பட்டபாணனது ஸம்ஸ்க்ருத காதம்பரியின்
சுருக்கமான மொழிபெயர்ப்பு.

மேக ஸந்தேசத்தையும், பிரபல வைத்தியக்கிரந்தங்களான
அஷ்டாங்கஹ்ருதயம், சார்ங்கதரஸம்ஹிதை,
மாதவநிதாநம், இரஸரத்ந ஸமுச்சயம் முதலியவற்றையும்
ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவரும்,
ஸம்ஸ்க்ருதத்தில் கிராதார்ஜுநீய கத்யஸம்கிரஹம்,
நிதாநஸாரம், த்ரிதோஷதத்துவம் முதலியவற்றை
இயற்றியவரும்,
எல்லா இந்திய ஆயுர்வேத வித்தியாபீடத்தின்
உபாக்கிராஸநாதிபதியும், பரீக்ஷகரும், கவர்ன்மெண்டு
இந்திய வைத்தியக் கல்லூரியின் பரீக்ஷகரும்,
இலங்கை ஆயுர்வேத கலாசாலையின் பரீக்ஷகருமான

**ஆயுர்வேத பூஷணம்**

**பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ.வி.எஸ்.**

அவர்கள் இயற்றியது.

**முற்றிலும் சுருக்கிச் சீர்திருத்திய**

**மூன்றாம் பதிப்பு.**

---

**வைத்திய கலாநிதி ஆபீஸ்**

வேப்பேரி—மதராஸ்.

**1[illegible].**

ARTISTIC PRINTERS
SOLDEN AND Co
PROCESS ENGRAVERS
MADRAS. S.E.

# பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| காதம்பரியின் பொழிப்புரை | 1 |
| மொழிபெயர்ப்பின் குறிப்புரை | 8 |
| நூன் முகம் | 10 |

## பூர்வபாகம்.

| | | |
|---|---|---|
| முதல் சருக்கம் | (சூத்திரகனும் வைசம்பாயனனும்) | 1 |
| இரண்டாம் ,, | (வைசம்பாயனன் பிறப்பும் ஜாபாலியின் தரிசனமும் | 10 |
| மூன்றும் ,, | (தாராபீட சுகநாஸர்களுக்குச் சந்திராபீட வைசம்பாயனர் பிறத்தல் | 25 |
| நான்காம் ,, | (சந்திராபீட வைசம்பாயனர் கல்வி கற்றல்) | 37 |
| ஐந்தாம் ,, | (சந்திராபீடன்இளவரசுப்பட்டம் சூட்டிக்கொண்டு திக்விஜயயாத்திரை செய்தல்) | 50 |
| ஆறும் ,, | (சந்திராபீடன் அச்சோதக் குளத்தையும் மஹாச்வேதையையும் காணுதல் | 57 |
| ஏழாம் ,, | (மஹாச்வேதைக்கும் புண்டரீகனுக்கும் நட்பு) | 66 |
| எட்டாம் ,, | (புண்டரீகனைத் துறந்து மஹாச்வேதை வனவாசம் செய்தல்) | 70 |
| ஒன்பதாம் ,, | (சந்திராபீடனுக்கும் காதம்பரிக்கும் நட்பு) | 92 |

பத்தாம் சருக்கம் (சந்திராபீடன் உஜ்ஜயினிக்குச் சென்றதும் பத்திரலேகை காதம்பரியின் பிரிவாற்றாமையை அவனிடம் வந்து கூறல்) 103

உத்தரபாகம்.

முதல் சருக்கம் (கேயூரகன் வந்து சந்திராபீடனை ஹேமகூடத்திற்கு வருவதற்குத் துரிதப்படுத்தல்) 117
இரண்டாம் ,, (வைசம்பாயனன் மனம் தடுமாறி அச்சோதக்கரையில் தங்கிவிடுதல்) 125
மூன்றாம் ,, (சந்திராபீடன்—வைசம்பாயனன் களுடையவும், இந்திராயுதம்—பத்திரலேகைகளுடையவும் இறப்பு; கபிஞ்ஜலன் பிழைத்து வருதல்) 137
நான்காம் ,, (தாராபீடன் முதலியவர் அச்சோதம் செல்லுதல்) 150
ஐந்தாம் ,, (வைசம்பாயனக் கிளி சண்டாளனிடம் சிக்கிக்கொள்ளுதல்) 160
ஆறாம் ,, (சந்திராபீடனும் புண்டரீகனும் பிழைத்து, காதம்பரியையும் மஹாச்வேதையையும் மணம் புரிதல்) 170
உபகதைகளின் விவரணம் 181
கதாநாயகர் முதலியவர்களின் அட்டவணை 189

# காதம்பரியின் பொழிப்புரை.

## பூர்வபாகம்.

### முதல் சருக்கம்:

விதிசாநகரத்தரசன் சூத்திரகன் கொலுவீற்றிருக்கிறான். ஓர் அபூர்வமான சண்டாளமாது வைசம்பாயனன் என்னும் அறிவிற் சிறந்த ஒரு கிளியை அவ்வரசனிடம் கொண்டு விடுகிறாள். அக்கிளி தன் வரலாற்றை அவனுக்குக் கூற ஆரம்பிக்கிறது. [பக்கம், 1—10.

### இரண்டாம் சருக்கம்:

விந்தியாடவியில், பம்பைப் பொய்கையின் கரையில் ஓர் உன்னதமான இலவமரம். அதில் வைசம்பாயனன் பிறக்கும்போது பிரசவ நோயால் அதன் அன்னை ஆவி துறந்தது. வைசம்பாயனக் கிளியை அதன் கிழட்டுத்தந்தைப் பிரயாசப்பட்டு வளர்த்து வருகிறது. வேடன் ஒருவன் அக் கிழட்டுக் கிளியைப் பிடித்துக் கொன்றுவிட, வைசம்பாயனன் தைவச்செயலாய் உயிர் தப்புகிறது. கிளிக்குஞ்சான வைசம்பாயனன் வழியில் விழுந்து தவிப்பதைக் கண்டு ஹாரீதன் என்னும் இருஷிகுமாரன் அதை யெடுத்துத் தேற்றி, ஜாபாலி முனிவரிடம் கொண்டுவிடுகிறான். [பக்கம். 10—25.

### மூன்றும் சருக்கம்:

ஜாபாலி முனிவர்வைசம்பாயனக் கிளியின் வரலாற்றை முனிகுமாரர் முதலியோருக்குக் கூறுகிறார். உஜ்ஜயினீ நகரத்தில் தாராபீடன் என்னும் அரசன். அவன் மனைவி விலாஸவதி. அவனுக்குச் சுகநாஸன் என்பவன் மந்திரி. சுகநாஸனுக்கு மனைவி மனோரமை யென்பவள். நெடுநாளளவும் புத்திரப் பேறில்லாமல் அவ்விருவரும் தைவங்களை வேண்டினர். விலாஸவதியின் முகத்திற் சந்திரன் புகுந்ததாக மன்னவனும், மனோரமையினிடம் வெண்தாமரையை ஒருப் பிராம்மணன் அளித்ததாக மந்திரியும் கனவு

கண்டனர். பிறகு அவ்விரு ஸ்திரீகளும் கருப்பவதியாய், தாராபீடனுக்குச் சந்திராபீடன் என்பவனும், சுகநாஸனுக்கு வைசம்பாயனன் என்பவனும் புத்திரர்களாகப் பிறக்கிறார்கள். [பக்கம் 25—37.

## நான்காம் சருக்கம் :

சந்திராபீடனும் வைசம்பாயனனும் கல்வி கற்றுத்தேறுகிறார்கள். அவ்விருவரும் உயிர்த் தோழர்களாயிருந்து வருகிறார்கள். சந்திராபீடனுக்கு இந்திராயுதம் என்னும் அபூர்வமான குதிரை வாகனமாகிறது. பத்திரலேகை யென்னும் இராஜகன்னிகை சந்திராபீடனுக்கு அந்தரங்கத் தோழியாகிறாள். [பக்கம் 37—50.

## ஐந்தாம் சருக்கம் :

சந்திராபீடனுக்குச் சுகநாஸனது ஹிதோபதேசம் வெகு சிறந்தது. சந்திராபீடன் இளவரசுப் பட்டம் பெற்று, திக்விஜய யாத்திரை செய்து, கடைசியிற் கைலாசமலையருகிற் சுவர்ண புரத்திற் சேனையுடன் இளைப்பாறுகிறான். [பக்கம் 50—57.

## ஆறாம் சருக்கம் :

சந்திராபீடன் இந்திராயுதமேறிக் கைலைமலைச் சாரலில் வேட்டையாடுகையிற் கின்னர தம்பதிகளைப் பார்த்து, அவர்களைத் தூரத்திச் சென்று, அவர்கள் மறைந்துவிட, அச்சோதக் குளத்தைக் காண்கிறான். அக்குளக்கரையில் இளைப்பாறுகையில் திவ்யமான சங்கீதச் சப்தம் காதில்விழ, அத்தொனியை யனுசரித்துப் போகையில், சைத்திரரதம் என்கிற சோலைக்கிடையில், சிவாலயத்தையும், அதில் மஹாச்வேதை வைராக்கியத்துடன் சிவபெருமானைத் தொழுவதையும் காண்கிறான். அவளுடைய தபோமகிமையைக் கண்டு வியப்புற்று, அவளிட்ட அதிதி பூசையையும் பெறுகிறான். [பக்கம் 57—66.

## ஏழாம் சருக்கம் :

சந்திராபீடன் மஹாச்வேதையின் வரலாறுகளை வினவ, அவள் அவற்றைக் கூறுகிறாள். கந்தருவர்களின் குலங்கள், அம்ஸன்-கௌரிகளுக்குத் தான் பெண்ணாகப் பிறந்தது, மஹாச்வேதையெனத் தனக்குப் பெயரிடப்பட்டது, அச்சோதக்கரையிற் புண்டரீகனையும் கபிஞ்ஜலனையும் கண்டது, புண்டரீகனும் தானும் ஒருவரோடொருவர் நேசிப்பது, புண்டரீகனிடமிருந்து தரளிகை தனக்கு நட்போலை கொண்டு வருவது ஆகிய வற்றை மஹாச்வேதை சந்திராபீடனுக்குக் கூறுகிறாள். [பக்கம் 66—76.

## எட்டாம் சருக்கம் :

கபிஞ்ஜலன், புண்டரீகனுடைய கஷ்டநிலைமையை மஹாச்வேதையினிடம் வந்து கூறி, அவனைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறான். இரவில் நிலாவொளியில் மஹாச்வேதை தரளிகையோடு அச்சோதக்கரைக்குப் புண்டரீகனிடம் செல்லுகிறாள். அவ்விடத்திற் புண்டரீகன் மனோவேதனையால் மரணமடைந்திருப்பதைப் பார்த்து மிக்க வருந்துகிறாள். தேவபுருடன் புண்டரீகன் உடலை யெடுத்துக்கொண்டு, அவன் மீண்டும் பிழைத்து வருவானெனக் கூறி, சந்திரமண்டலம் போகிறான். கபிஞ்ஜலனும் அத்தேவபுருடனைப் பின்பற்றி யோடுகிறான். மஹாச்வேதை பிறகு மனம் வெறுத்து, வனத்திலேயே பிரம்மசரியவிரதத்துடன் சிவபெருமானைப் பூசித்துக்கொண்டு தவம் புரிகிறாள். துயரத்திலாழ்ந்த மஹாச்வேதைக்குச் சந்திராபீடன் ஹிதோபதேசம் செய்கிறான். மஹாச்வேதை காதம்பரியின் வரலாற்றைச் சந்திராபீடனுக்குக் கூறுகிறாள். [பக்கம் 76—91.

## ஒன்பதாம் சருக்கம் :

ஏமகூடத்திலிருந்து தரளிகை முதலானோர் ...
ச்வேதையினிடம் வருகின்றனர். மஹாச்வேதை...

டனை அழைத்துக்கொண்டு காதம்பரியினிடம் செல்லு கிறாள். காதம்பரியை அவளுடைய ஸ்ரீ மண்டபத்திற் சந் திராபீடன் காண்கிறான். காதம்பரிக்கும் சந்திராபீடனுக் கும் பரஸ்பரம் நட்பு உண்டாய் விடுகிறது. கிரீடாபருவ தத்தில் மணிமாளிகையிற் சந்திராபீடனுக்குக் காதம்பரி தன் அன்பையும் கௌரவத்தையும் காட்டி சேஷஹாரம் என்னும் முத்து மாலையை அளிக்கின்றாள். மதலேகை வெகு அழகாக உபசாரவார்த்தைகள் கூற, அதற்குச் சந்திராபீடன் விடை யளிக்கிறான். [பக்கம் 92—103.

## பத்தாம் சருக்கம் :

சந்திராபீடன் ஏமகூடத்திலிருந்து விடைபெற்று அச் சோதக்கரை வரும்போது, அவனது சேனை முதலியது அவ்விடம் வந்திருக்க, அவர்களுடன் ஒருநாள் அங்கு தங்கு கிறான். மீண்டும் கேயூரகன் வந்து சந்திராபீடனை ஏம கூடத்திற்கு அழைத்துச்செல்ல, அங்கு இமகிருகத்திற் காதம்பரி தனது பிரிவாற்றாமையால் வருந்திக் கொண்டி ருப்பதைப் பார்க்கிறான். சந்திராபீடனுடன் பத்திரலேகை யும் சென்று காதம்பரியின் நட்பைப் பெறுகிறாள். பத்திர லேகையைக் காதம்பரியினிடம் விட்டுவிட்டு, சந்திராபீடன் திரும்புகிறான். அச்சோதப்பொய்கையண்டை வந்ததும் தாராபீடனிடமிருந்து தன்னை வரும்படியாகப் பத்திரிகை ஒருவன் கொண்டுவருகிறான். வலாஹகனுடன் சில செய்தி களைக் காதம்பரிக்காகக் கூறி, வைசம்பாயனனிடம் பெருஞ் சேனையை ஒப்புவித்து விட்டு, சொற்ப சேனையோடு உஜ் ஜயினிக்குப் புறப்படுகிறான். இடையே ஒரு காட்டில் காளி கோயில் ஒன்று இருக்கிறது. அக் கோயிலும், அதிலுள்ள தமிழ்ப் பூசாரியும் வெகுவிநோதமாகக் காணப்படுகின்றனர். அங்கு அரசகுமரன் அவ்விரவில் தங்கியிருந்து, அப்பால் சில நாட்களில் உஜ்ஜயினி சேருகிறான். காதம்பரியின் பிரி வாற்றாமையால் வருந்தியவாறு உஜ்ஜயினியில் சந்திராபீடன்

இருந்து வருகையில், மேகநாதன் பத்திரலேகையை ஏமகூடமிருந்து அழைத்து வருகிறான். பத்திரலேகையும் காதம்பரி அவன் காரணமாக அனுபவிக்கும் பிரிவாற்றாமையினாலான துன்பங்களைக் கூறிவருகிறாள். [பக்கம் 103—116.

---

## உத்தர பாகம்.

### முதல் சருக்கம்.

சந்திராபீடன் பத்திரலேகையின் வாயிலாகக் காதம்பரியின் கஷ்டங்களைக் கேட்டு மனக்கவலையில் மூழ்கிறான். பிறகு ஒரு நாள் கேயூரகன் வந்து காதம்பரி கடுந்துன்பம் அனுபவிப்பதாகவும், தாமதமின்றி அவளைப் போய் பார்க்க வேணுமென்றும் வேண்டுகிறான். இதற்குள் சந்திராபீடன் பின் தங்கிய சேனை வருவதாகக் கேள்விப்பட்டு அச்சேனையையும் வைசம்பாயனையும் பார்த்து விட்டுத் தான் வருவதாகக் கூறி, கேயூரகனையும் பத்திலேகையையும் முன்னதாய் ஏமகூடம் அனுப்புகிறான். [பக்கம் 117—125.

### இரண்டாம் சருக்கம்.

வைசம்பாயனன் வருவதாக நினைத்து அவனை யெதிர் கொண்டழைக்க விரும்பி, சந்திராபீடன் தசபுரம் போகிறான். அச்சோதக்கரையிலிருந்து வரும் தன் சேனையைச் சந்திக்க, அதில் வைசம்பாயனன் காணப்படவில்லை. சந்திராபீடன் மனம் கலங்குகிறான். வைசம்பாயனன் அச்சோதக் கரையில் மனம் மாறுதலடைந்து பிடிவாதத்துடன் நின்றுவிட்டதாகச் சேனையிலுள்ளவர் கூற, மனக்கவலையுடன் சந்திராபீடன் மீண்டும் சேனைகளோடு உஜ்ஜயினிக்குச் செல்லுகிறான். வைசம்பாயனன் திரும்பி வாராததற்குச் சந்திராபீடன் மீது தாராபீடன் ஒருவாறு ஐய முற்று வருந்துகிறான். சுகநாஸன் அரசனை மறுத்துத் தன் மகன் வைசம்பாயனனைத் திட்டுகிறான். அரசன் மந்திரியின் மனவருத்தத்தைத் தணிக்கிறான். வைசம்பாயனனை அழைத்துவரப் போகப் பெற்

ரோரிடம் சந்திராபீடன் அனுமதி கேட்கிறான். தாரா பீடன் சந்திராபீடனுக்கு நல்லுபதேசத்துடன் அனுமதி யளிக்கிறான். [பக்கம் 125—137.

## மூன்றாம் சருக்கம்.

சந்திராபீடன் அச்சோதம் நோக்கிச் சேனையுடன் போகிறான். அக்குளக்கரையில் வைசம்பாயனனைக் காண வில்லை. மஹாச்வேதையின் ஆச்ரமம் போய் அவளை அவனைப் பற்றிக் கேட்கிறான். அவள் தவம்புரிந்து வருகையில் பிராம்மணவாலிபன் ஒருவன் தன்னிடம் மோகங் கொண்டு முறைதவறாக வேண்ட, அதனால் தனது சாபத்தைப் பெற்று அவ்வாலிபன் ஆவிதுறந்ததாகவும், அவன்தான் வைசம்பாயனனென்று அறிந்ததாகவும் மஹாச்வேதை விளம்புகிறாள். சந்திராபீடன் அச்செய்தியைக் கேட்டு மனம் தாளாமல் உயிர்துறக்கிறான். அனைவரும் துன்பத்தில் ஆழ்கின்றனர். காதம்பரியும் பத்திரலேகை, மதலேகை முதலியவரோடு அச்சமயம் ஏமகூடத்திலிருந்து வந்து சேர்ந்து, அச்சம்பவத்தைக் கண்டு மிக்க வருந்துகிறார்கள். காதம்பரி உடன்கட்டை யேற முயலும்போது ஓர் அசரீரி 'அவ்விதம் செய்யவேண்டாம். சந்திராபீடன் பிழைப்பான்' எனக் கூறுகிறது. பத்திரலேகையும் இந்திராயுதமும் குளத்தில் வீழ்ந்து மூழ்கின்றனர். உடனே இந்திராயுதம் கபிஞ்ஜலனாக மாறி குளத்திலிருந்து எழுந்துவர அனைவரும் கண்டு பிரமிக்கிறார்கள். கபிஞ்ஜலன், புண்டரீகனுடைய தேகத்தைச் சந்திரன் அவனது உலகத்திற் சீர்கெடா வண்ணம் வைத்துக் காப்பதையும், தனக்குக் குதிரைத் தன்மை நேரிட்டவகை முதலியதையும் கூறிவிட்டு, ச்வேத கேதுவினிடம் போகிறான். [பக்கம் 137—150.

## நான்காம் சருக்கம்.

காதம்பரி சந்திராபீடனுடலை ஆதராதிசயத்துடன் அச்சோதக்கரையிற் பரிபாலித்துவருகிறாள். துவரிதகன்

முதலிய சேவகர்கள் சந்திராபீடன் முதலானோரின் சம்ப வத்தை உஜ்ஜயினிக்குச் சென்று தாராபீடனுக்கு அறிவிக் கிறார்கள். தாராபீடன் முதலானோர் ஆவலுடன் அச்சோ தக்கரைக்கு வந்து அழகிலும் பொலிவிலும் குறைவில்லா மல் விளங்கும் சந்திராபீடனது முகத்தைக் காண்கின்றனர். பிறகு தாராபீடன் சிற்றரசர்களுக்கு அறிவித்து விட்டு, வனத்தில் தவஞ்செய்து கொண்டு மந்திரிமார் முதலியவ ரோடு சந்திராபீடதேகத்தை நாள்தோறும் தரிசித்து வருகிறான். [பக்கம் 150—160.

## ஐந்தாம் சருக்கம்.

ஜாபாலி முனிவர் வைசம்பாயனக்கிளியின் வரா லாற்றை மொழிந்து முடிக்கிறார். வைசம்பாயனக்கிளிக்கு முற்பிறப்பு நினைவு வந்து, பேசுவதற்கும் படிப்பதற்கும் திறமையைப் பெறுகிறது. கபிஞ்ஜலன் ச்வேதகேதுவினிட மிருந்து வந்து ஜாபாலியாச்ரமத்திலேயே இருக்க வைசம் பாயனனுக்குக் கூறுகிறான். வைசம்பாயனக்கிளி அவ்வாச்ர மத்தைவிட்டு வெளியில் ஓட, அதை ஒரு சண்டாளன் பிடித்துப் போய் சண்டாளமாதினிடம் கொடுக்கிறான். வைசம்பயனன் பறைச்சேரியில் மனங்குன்றி கூட்டிலடை பட்டு வருந்திவருகிறது. [பக்கம் 160—170.

## ஆறாம் சருக்கம்.

வைசம்பாயனக் கிளி ஒருநாள் விடியற் காலையிற் கண் விழித்ததும் தானிருந்த மரக்கூடு பொற்கூடாகவும், பறைச் சேரி அழகிய நகரமாகவும் இருக்கக் காண்கிறது. உடனே மாதங்கமாது அதைக் கூட்டுடன் சூத்திரகனிடம் கொண்டு வருகிறாள். இத்துடன் கிளிகூறும் கதை முடிகின்றது. சூத்திரகனுடைய உத்தரவின்மேல் சண்டாளக்கன்னிகை அர சன்முன்பு வருகிறாள். தேஜோமயமான உருவத்துடன் தான் லக்ஷ்மி யென்பதையும், அக்கிளியே புண்டரீகனென் பதையும், சூத்திரகனே சந்திராபீடன் என்பதையும் விளங் கக் கூறுகிறாள். வைசம்பாயனனைக் கட்டிப்போட்டதன் காரணம் முதலியதையும் அவள் மொழிகிறாள். சந்திரா பீடன் பிழைத்தெழுந்து காதம்பரியுடன் கூடுகிறான். புண்ட ரீகன்பிழைத்து வந்து மஹாச்வேதையுடன் கூடுகிறான். [பக்கம் 170—180.

# மொழி பெயர்ப்பின் குறிப்புரை.

## (இரண்டாம்-மூன்றும் பதிப்புகள்.)

பண்டைக் காலத்திய கவிகளுக்கிருந்த அறிவு அஸாதாரணமானது: மாசற்றது. காளிதாஸன், பவபூதி, பட்டபாணன் முதலிய ஸம்ஸ்க்ருதகவிகள் மதியினல் மகிமையினல் வாக்தேவதையை வசப்படுத்தியவர். அன்னரியற்றிய காவ்யங்களும் கதைகளும் பாரதநாட்டின் பிராசீன நாகரிகக் கொள்கைகளைப் பிரகாசப்படுத்துகின்றன; பண்டைக் காலத்தியவரின் ஸச்சரித்திரங்களை விளக்கிப் படிப்பவரின் மனதைப் பண்படுத்துகின்றன; சிற்றறிவைக் கற்றோருவக்குமாறு சீர்படுத்தும் கருவிகளா யிருக்கின்றன. இந்நூல்களில் அடங்கிய அரிய விஷயங்களை வடமொழியறியாத தமிழரும் உணர்ந்து பயன்பெற வேண்டுமென்பது என் கருத்து. ஆகவே 20 வருடங்களுக்கு முன் காதம்பரியை முதலில் மொழிபெயர்க்க முயன்றேன். முழுக் காதம்பரியையும் மொழி பெயர்ப்ப தியலாதெனத் தீர்மானித்து, ஸ்ரீமான் பண்டித ஆர் வி. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமியினுடைய அபிப்பிராயத்தை யேற்றுக் கொண்டு, அவர் ஸங்கிரஹித்துள்ள காதம்பரியையே முற்றிலும் ஆதாரமாகக் கொண்டு, 1910-ம் ஆண்டில் எனது முதல் மொழி பெயர்ப்பை எழுதி முடித்து வெளியிட்டேன்.

எனது முதல் மொழிபெயர்ப்பு வெகு விரிவானதென்றும், மாணாக்கர்களுக்கும் உபயோகமாகுமாறு அதைச் சுருக்கினல் நலமென்றும் நண்பர் சிலர் கூறியதைக் கேட்டு, 1923-ம் ஆண்டில் முதற்புத்தகத்தைச் சுருக்கியும், ஒரு சிறிது ஆங்காங்கு உசிதப்படி விஷயத்தைச் சீர்படுத்தியும் இரண்டாம்பதிப்பை வெளியிட்டேன். இவ்விரண்டாம் பதிப்பைப் படித்த அனுபவம்பெற்ற அநேக உபாத்தியாயர்களும் பண்டிதர்களும் பள்ளிக்கூடச்சிறுவர்களிடம் விஸ்தாரமாக இத்தகைய பிராசீன அரியநூலைப் பரப்பச் செய்வது நலமெனக் கருதி, இதை இன்னும் சிறிது சுருங்க இயற்று

வது உபயோககரமாகுமென அறிவித்தார்கள். ஆகவே சுருக்கமான இக் காதம்பரியை மாணாக்கர்களும் உவந்துபயோகிப்பார்களெனக் கருதி, மூன்றுமுறை இக்காதம்பரியை இனிய நடையிற் சுருக்கி இயற்றி வெளியிடமுயன்றேன்.

இப்பதிப்பில் வெகு நீண்ட வர்ணனைகளெல்லாம் விலக்கப்பட்டன. சிருங்காரரஸம் மிகுந்துள்ள பாகங்கள் இதிற் சேர்க்கப்படவில்லை. வாக்கியங்கள் கூடுமானவரையில் எளிதாக்கப்பட்டிருக்கின்றன. அபிநந்தனுடைய அழகியதான காதம்பரீ கதாஸாரத்திலிருந்தும் சிற்சில அருமையான அம்சம் இப்பதிப்பிற் கையாளப்பட்டுள்ளது. மேலும் காதம்பரியின் பூர்வ பாகத்தைப் பத்துச் சருக்கங்களாகவும், உத்தரபாகத்தை ஆறு சருக்கங்களாகவும் வகுத்துப் படிப்பவருக்கு அனுகூலமாக இப்பதிப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாகக் கவனிக்கவேண்டிய அம்சம் நான்முகம். இதில் காதம்பரியிலுள்ள உபயோகமான நீதிமுறை முதலியதின் ஆராய்ச்சி மிகச் சுருக்கமாக வரையப்பட்டிருக்கிறது. பாணனுடைய சரித்திர வரலாறு முதலியவைகளும் விளக்கப் பட்டிருக்கின்றன. மூன்றாவதாக ஒவ்வொரு சருக்கத்திலுமடங்கிய விஷயங்களின் பொழிப்புரை இதிற் பிரயோஜனகரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. நான்காவது விஷயம், இச்சுருக்கமான காதம்பரியிற் குறிக்கப்படுகிற உபகதைகள் ஓர் அனுபந்தத்தில் விளங்க எழுதப்பட்டிருப்பதே. ஐந்தாம் விஷயம் காதம்பரியில் மொழியப்படுகிற புருடர்களுடையவும், ஸ்திரீகளுடையவும், இடம் முதலியவைகளுடையவும் பெயர்கள் வரிசையாகக் குறிக்கப்பட்டு இதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இரஸிகரான தமிழ் நாட்டினர் புராதனமான வடமொழி நூற்கதையின் இப்புதிய பதிப்பைப் படித்து இன்புருவரென நம்புகிறேன்.

இரண்டாம் பதிப்பு. மே. து,

7—3—1923 (3-ம் பதிப்பு. 29—5—29.)

# நூன்முகம்.

**நூலின் மேன்மை.**

முற்காலத்தில் மஹாகவிகள் வசன நடையில் இயற்றிய காவ்யங்கள் எண்ணிக்கையிற் சிறுபான்மையன. அவற்றுள் மஹாகவி பட்டபாணன் வடமொழியில் இயற்றிய காதம்பரி பலவகையிலும் முதன்மையானது. காதம்பரியின் சுவையில் ஈடுபடுகையில் இரஸிகர் உணவையும் விரும்பாரென்று பொருள்பட வடமொழி வல்லோர் முதுமொழியொன்று வழங்குவர்.* காதம்பரியின் வாக்கியநடையும், பொருட்சுவையும், இயற்கைத் தோற்றங்களைப் பற்றிய வர்ணனைகளும் வேறு எக்காவ்யத்திலும் காண்பதற்கரிதானவை. கதையின் வரலாறோ வெகு இனிது. அவ்வரலாற்றை இக்கவிவாணன் வெகு விசித்திரமாய், அதி நுட்பமாய், மிக ஒழுங்காய் அமைத்திருக்கிறான். கதையின் இறுதியில் விளங்கப் போகிற அம்சத்தை நூலின் ஆரம்பத்திலேயே நுட்பமாக அமைத்திருக்கும் திறமையை, ஊக்கத்துடன் நூலை முற்றிலும் படிக்கும் அறிஞரே உணர்ந்து வியப்புறுவர். உஜ்ஜயினீ முதலிய நகரங்களின் நாகரிகம், விந்தியாடவி முதலான காடுகளின் காட்சி, அச்சோதப்பொய்கை முதலியவற்றின் அற்புதத்தோற்றம், ஹேமகூடம் முதலான விடங்களின் மேன்மை, காளிகோயில் முதலியவற்றிற் காணப்படும் நாட்டோடியான நடவடிக்கைகள், மஹாச்வேதை முதலானோரின் மனோகரமான மகத்துவம், தமிழ்ப்பூசாரி முதலானவர்களின் விநோதக்கூற்று, சுகநாஸன் முதலானோரது உபதேச மொழிகளிலடங்கிய உயர்வான கொள்கைகள் ஆகிய இவை முதலிய விஷயங்களைப் படிக்கையில், இக்கவிராயன் உலகப் போக்கின் உண்மைகளில் எவ்வளவு நுட்பமாக ஈடுபட்டிருக்கிறான் என்பது விளங்கும்.

---

* 'காதம்பரீரஸஜ்ஞாநாம் ஆஹாரோபி ந ரோசதே.'

**பட்ட பாணன்**

மஹாகவி பட்டபாணன், வேள்விகளைச் செய்து வெகுப் பிரசித்தி பெற்ற அந்தணர்குலத்திலே வத்ஸ வம்சத்திலே பிறந்தவன். இராஜ தேவி, சித்திரபானு என்பவர்கள் இவனுக்கு அன்னையும் பிதாவுமாவர். இவனது வம்சபரம்பரை பின் வருமாறு:— வத்ஸவம்சத்திற் குபேரன் என்றொருவன் வைச்யப்பிரபுக்களால் பெருமைப்படுத்தப்பட்டிருந்தான். அவனுக்கு நான்கு புதல்வர் பிறந்தனர். அவர்களுள் பாசுபதன் என்றொருவன். பாசுபதனுக்கு அர்த்தபதி என்பவன் குமாரன். அவனுக்குப் பிறந்த பதினொரு புத்திரர்களுள் பாணனுடைய தந்தை சித்திரபானு ஒருவன். பாலப்பருவத்திலேயே பாணகவியின் அன்னை ஆவி துறந்தாள். பின்னர் அவனை அன்புடன் வளர்த்துவந்த பிதாவும் பதினான்கு பிராயத்திற் காலகதி யடைந்து விட்டான்.

**பிறந்த ஊர் முதலிய வரலாறு.**

விந்திய மலைச்சாரலைச் சேர்ந்த ஹிரண்யபாஹு அல்லது சோணம் என்கிற ஆற்றின் மேற்கரையில் இருந்து வந்த ப்ரீதிகூடம் என்னும் பதியிலே இவன் பிறந்து வளர்ந்தது. இவன் மூத்தோரால் செல்வம் படைத்திருந்தும், உறவினரால் உவப்புடன் ஆதரிக்கப் பெற்றிருந்தும், பல நாடுகளைப் பார்ப்பதில் ஆவல்கொண்டு, ஆதியில் அகத்தைவிட்டு வெளியிற் சஞ்சாரம்செய்யப் புறப்பட்டான். அப்பொழுது பலவகைப்பட்ட தொழில்களிற் பரிசயமுள்ள நண்பர்கள் நூற்றுக்கணக்காக இவனுடன் சேர்ந்தனர். தனக்குத் தொன்றுதொட்டு வந்த குல கௌரவங்களைக் கருதாது நாடோடியைப்போலத் திரியவே உற்றோரும் கற்றோரும் இவனை இகழ நேர்ந்தது. ஆனால் பல தேசங்களிலும் யாத்திரை செய்ததால் இவனுக்குப் பல துறைகளிலும் உலகாநுபவம் ஏற்பட்டு ஒப்பற்ற அறிஞனயினன். இவன் திரும்ப வீடு வந்து சேர்ந்த சில நாட்களில் மீண்டும் இவனை அனைவரும் ஆதரித்துக் கொண்டாடினர். அக்காலத்தில் [illegible]குப்ஜம்

என்னும் தேயத்தில் * இருந்து மிகப் பிரசித்தமாய் வடதேய மனைத்தையும் ஆண்டு வந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் இவனை ஆதரித்து வந்தான். முதலில் பாணனுடைய ஒழுக்கத்தைக்கேட்டு அவ்வரசன் இக்கவியைப் புறக்கணித்தானாயினும், பாணனது உயர்குணங்களையறிந்தவனும் அவ்வரசனது சகோதரனுமான கிருஷ்ணன் என்பவனுடைய முயற்சியினால் பாணனுடைய பாண்டித்யத்தை அரசன் பாராட்டி, அவனை ஆஸ்த்தானவித்வானாகச் செய்துகொண்டான்.

**பாணன் காலம்.** பட்டபாணன் ஸ்ரீஹர்ஷனுடைய ஆஸ்த்தானத்தில் இருந்தான் என்னும் செய்தியைக் கொண்டும், வேறு பல பலமான முகாந்தரங்களைக் கொண்டும் இக்கவியின் ஜீவிதகாலம் 1300 ஆண்டுகளுக்கு முன்பென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஹர்ஷன் கி. பி. 606 முதல் 648-ம் ஆண்டு வரையில் அரசாண்டு வந்ததற்கு அநேகம் சாஸன பூர்வமான அத்தாட்சிகள் உண்டு. ‡ ஆகவே இக்கவி ஆறும் நூற்றாண்டின் முடிவுக்கும் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடையில் இருந்தவன்.

**பாணனது நூல்கள்.** பட்டபாணன் காதம்பரியைப்போலவே வசனநடையில் வரைந்துள்ள ஹர்ஷசரிதம் என்பது வடமொழியில் வெகுப் பிரசித்தமான நூல். சண்டிகாசதகம் என்கிற தோத்திரப்பத்திய நூலை இக்கவி யெழுதியதாகச் சிலரும், இவனுடையதல்லவெனச் சிலரும் கூறுவர்.

---

* வடஇந்தியாவில் (ஐக்கியமாகாணத்தில்), கான்பூருக்கு அருகில், கங்கைக்கரையில் காந்யகுப்ஜம் என்னும் இராஜ்யம் முன்பு மிகச் செழித்தோங்கி யிருந்தது.

‡ ஸ்ரீ ஹர்ஷனை ஹர்ஷவர்த்தனன் என்றும் வழங்குவர். ஹர்ஷவர்த்தனனுடைய சகம் நேபாளராஜ்யத்தில் வழங்கப்படுவதுண்டு.

காளிகாதேவியை முற்காலத்திற் சில கவிசிரோமணிகள் உபாஸனை செய்து உயர்மதியைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்களுள் காளிதாஸனை முதன்மையாகக் கூறலாம். அதுபோலவே பாணனும் காளியைத் தொழுதுத் தோத்ரம் செய்திருக்கலாம். மேலும் சண்டிகாயதநத்தைப் பற்றி (காளி கோயில்) இக்காதம்பரியிலும் சண்டிகாவநம் முதலியதைப்பற்றி ஹர்ஷசரிதத்திலும் இக்கவி வெகு முக்கியமாக வர்ணித்திருக்கிறான். ஆகவே காளிகாதேவியினிடம் இவனுக்கும் பக்தியிருந்து, சண்டிகாசதகம் எழுதியிருக்கலாமென்று நம்பலாம். **பார்வதீபரிணயம், முகுடதாடிதகம்** என்னும் நாடகங்களுக்கும் பாணனே ஆசிரியனென்று அபிப்பிராயப்படுகிறார்கள் பலர்; அவற்றிற்கு அவனாசிரியனல்லவென்றும் பல காரணங்களால் அபிப்பிராயப்படுபவருண்டு. **இரத்நாவலி** என்னும் பிரஸித்தமான நாடகமும் ஸ்ரீ ஹர்ஷனுடைய பெயரைக் கொண்டு இக்கவியினால் இயற்றப்பட்டதெனவும் கூறப்படுகிறது. **ஸுபாஷிதாவலி** யென்னும் நீதிநூலுக்கும் இவனை ஆசிரியனாகக் கூறுகிறார்கள். பட்டபாணன் காதம்பரியைப் பத்தியமாக இயற்றியிருப்பதாகவும் க்ஷேமந்திரன் என்னும் கவி ஔசித்யவிசாரசர்ச்சை யென்னும் தன் கிரந்தத்திற் குறிப்பிடுகிறான்.

**பாணனுடைய அந்திமகாலமும் காதம்பரியின் இருபிரிவுகளும்**

காதம்பரியை இயற்றி முடிப்பதற்கு முன்பே பட்டபாணனுக்கு ஆயுள் முடிந்துவிட்டதாகத் தெரிகிறது. இந்நூலில் பட்டபாணன் விட்ட பாகத்திலிருந்து மற்றதை அவன் புதல்வன் **பூஷணபாணன்** என்பவன் * இயற்றி, நூலை முற்றுப்பெறச் செய்தான். இக் காரணத்தினாலேயே காதம்பரியில் பூர்வபாகம்-உத்தரபாகம் என்னும் பிரிவுகள் ஏற்பட்

---

* பட்டபாணன் புத்திரனுக்குப் புளிந்தன் என்று பெயர் எனச் சிலர்.

டனவேயன்றி, உண்மையில் இவ்விரு பிரிவுகளுக்கும் இடையில் எவ்விஷயமும் முடிவுபெறவில்லை. காதம்பரி தன் மனத்துயரத்தைப் பத்திரலேகையினிடம் கூறியதாகப் பத்திரலேகை சந்திராபீடனிடம் பேசிவருகையில், அப்பேச்சு அரைகுறையாயிருக்கையில், மரணம் என்னும் விஷயமடங்கிய வாக்கியத்துடன் பட்டபாணன் இயற்றிய பாகம் நிற்கின்றது. இதனால் பாணகவி தன் ஆயுளும் முடிவடைந்ததாகக் குறிப்பிடுவதுபோல அவ்விடம் தோற்றுவிக்கிறது.* பிதாவைப்போலவே வெகு திறம்பட நூலின் மிகுந்த பாகத்தை பூஷணபாணன் இயற்றி முடித்திருக்கிறான். அப்படியிருந்தும், தந்தை ஆரம்பித்த அருமைக் கிரந்தத்தை முற்றுபெற நிறைவேற்றுவது தன் கடமையெனக் கருதியே அதைச் செய்வதாகவும், தந்தையவ்வளவு திறமை தனக்கில்லை யென்றும் அழகிய திருஷ்டாந்தத்தைக் கொண்டு முகவுரைப் பத்தியத்தியங்களில் தன் தாழ்மையைக் குறிப்பிடுகிறான். காதம்பரியில் தன் தந்தையினால் விடப்பட்டுள்ள பாகத்திற்கும், தான் ஆரம்பித்த பாகத்திற்கும் இடையில் பூர்வ-உத்தரபாகங்கள் என்று வழங்குவதற்கான கதையின் அல்லது வாக்கிய நடையின் பேதம் அல்லது பிரிவு எதையும் காண்பதற்கில்லை யென்றும், ஆகவே அவ்விரு பாகங்களின் சேர்க்கை பார்வதீ-பரமேச்வரர்களுடைய தேகங்களைப்போல் சந்திபாகம் அறிய முடியாவண்ணம் இணைந்து இசைந்திருக்கின்றதென்றும் முகவுரைப் பத்தியத்திற் பூஷணபாணன் இரண்டு பாகங்களுக்கும் இடையிலுள்ள இணைப்பின் நிலைமையை விளங்கக் கூறி யிருக்கின்றான். காதம்பரியில் அடங்கிய கதைக்கு அடிப்படையான அம்சம் அனைத்தும் பூர்வபாகத்தில் அமைந்திருக்கின்றது, பூர்வபாகத்தில் வர்ணனைகள் விரிவானவை. உத்தரபாகத்திலோ, அப்பாகத்தின் அளவுடன் கதையின்

* 'ஜ்ஞாஸ்யஸி மரணேந ப்ரீதிமித்யஸம்பாவ்ய மேவ'—பூர்வபாகம் கடைசி வாக்கியம்.

அம்சத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், வர்ணனை வெகு குறைவென்றும், கதையின் அம்சம் அதிகமென்றும் விளங்கும். பூர்வபாகத்தில் மிக்க நுட்பமாகக் கூறியுள்ள கதையின் இரஹஸ்யாம்சங்கள் யாவும் உத்தரபாகத்திற் கிரமமாக வெளிப்படையாக வியப்புறக்கூடியவாறு முடிவுக்கு வருகின்றன.

**கதைக்கு ஆதாரமும் அதன் நுட்பமும்.**

காதம்பரியில் அடங்கிய முக்கியமான கதாபாகங்களில் ஒன்றாகிய வைசம்பாயனன் என்னும் கிளியின் வரலாறும், பட்டபாணனுடைய சரித்திரப் போக்கும் சற்றேறக் குறைய ஒரு சீரா யிருப்பதைப் படித்துப் பார்க்கலாம். ப்ருஹத்கதை என்னும் நூலிற் கூறப்படும் ஸுமநஸ் என்கிற மன்னனுக்கு முன்பாக இருளசாதித் தலைவனின் மனைவியால் கொண்டு விடப்பட்ட அறிவிற் சிறந்த கிளியைப்பற்றிய கதையை மனதிலெண்ணி, காதம்பரியை பாணன் இயற்றியிருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. ஸுமநஸ் என்னும் மன்னவனுடையவும், அக்கிளியினுடையவும் கதையை ஸோமதேவன் என்பவன் இயற்றிய 'கதாஸரித் ஸாகரம்' என்னும் நூலிலும் படிக்கலாம். ஆனால் பட்டபாணன் காதம்பரியிற் கதையை அமைத்திருக்கும் அழகும், திறமையும் வித்வான்களை வியப்புறச்செய்யும். கதைக்கு நாயகன் சந்திராபீடனாயிருந்தும், ஆரம்பத்திற் பொருத்தமில்லாத சூத்திரகன் என்கிற ஓர் அரசனை அளவு கடந்து வர்ணித்திருப்பதின் சூக்ஷ்மமும், அங்ஙனமே காதம்பரி கதாநாயகியாயிருக்க, மஹாச்வேதையின் விஷயமே முதலிலிருந்து மேலோங்கியிருப்பதாகக் காட்டும் தத்துவமும் காதம்பரியை ஆதியோடந்தமாக வெகு ஊக்கத்துடன் படித்தாலன்றி ஒருவருக்கும் விளங்கத் தோன்றாது. கதையைக் கூறும் வைசம்பாயனனே புண்டரீகனென்பதையும், அக்கதையைக் கேட்கும்

சூத்திரகனே கதாநாயகனான சந்திராபீடனென்பதையும், அச் சூத்திரகன் பெண்டிரைக் கண்ணெடுத்துக் காண நோக்க மின்றி வாலிபப்பருவத்தில் இருந்து வந்ததற்குக் காதம்பரியி னிடம் நேசங்கொண்டிருந்த முற்பிறப்பின் கர்மவாஸனையே முகாந்தர மென்பதையும் இந்நூலைக் கருத்துடன் நுட்ப மாகப் படிப்பவரே அறிந்து ஆச்சரியப்படுவார்கள்.

**நீதிகளும் தருமங்களும்**

பட்டபாணன் கேவலம் பொழுது போக்குக்கு உபயோக மாகுமெனக் கருதி காதம்பரியை எழுதினதாகச் சில சாதாரண பண்டிதர்கள் நினைக்கக் கூடும். இந்நூலை அடிமுதல் அந்திமம் வரையில் கருத்துடன் நுட்ப மாகப் படிக்கும் பகுத்தறிவுள்ள எப்பண்டிதரும், அநேக அற நெறிகளை அனைவரும் எளிதில் அறியக் கூடுமாறு அழகிய கதையுருவமாக விளக்கக் கருதியே காதம்பரி யென்னும் இந் நூலை மஹாகவி இயற்றினனென்று உண்மையிற் கூறுவர். சிறந்த காவ்யங்களுக்குள்ள அங்கங்கள், நீதி நெறிகளை நிபுண மாக விளக்கும் அம்சங்கள், சான்றோருவக்கும் தரும மார்க் கங்கள், மறுமையை நம்பியவர்கள் மேன்மை யடைவதற்கான மர்மங்கள், உலக நடவடிக்கையிற் காணப்படும் உபயோக முள்ள விசேஷங்கள் முதலிய தத்துவங்களை யெல்லாம் பாணகவி இக் காதம்பரியிற் குறைவின்றி விளக்கி யிருப்ப தைப் பிராசீன பண்டிதர்களும் பாராட்டி யிருக்கின்றனர்.* காதம்பரியில் இக்காலத்திய நாகரிகர்களும் படித்தறிய வேண் டிய சில அம்சங்களை இங்கே வரிசையாகக் குறிப்பிடுகின் றேன் :—

(1) சூத்திரகமஹாராஜன் செல்வம், வயது, அழகு, ஆண்மை ஆகிய எல்லாச் சிறப்புகளிலும் நிகரில்லாதவனா யிருந்தும் 'பெண்டிர்பால் பராமுகமாயிருந்தான்' என்பதி லுள்ள (2-ம் பக்கம்) உட்கருத்துதான் கவனிக்கத் தகுந்தது.

* "பாணோச்சிஷ்டம் ஜகத் ஸர்வம்"

சந்திராபீடனல்லவோ சாபவசத்தால் சிறிதுகாலம் சூத்திரகனுயிருந்துவருகிறுன்? சூத்திரகன் பிரக்ருதி யென்னும் மாயையின் செயலால் தன்னைச் சந்திராபீடனென்றுணராமலிருந்தபோதிலும், சந்திராபீடனுயிருக்கையிற் காதம்பரியினிடம் அவன் கொண்ட அகற்றவியலாத வலிமையுள்ள அன்பானது, அற்பாயுளைப் பெற்ற சூத்திரகப் பிறப்பிலும் வேறு மாதரிடம் நேசங்கொள்ள இடங்கொடாதபடி அந்தரங்கத்தில் அவனையுமறியாதபடி அவனை அடக்கி வந்தது என்னும் தத்துவமே இவ்விடத்திற் குறிப்பிடப்படும் முக்கியமான அம்சம். ஓர் ஆடவனை மணமொப்பி மணந்துவிட்டால் அல்லது அன்னியோன்னியமாக நேசித்து விட்டாலுங்கூட, பிறகு மற்றெருரு மனைவியினிடம் மணங்கொள்வது உசிதமல்லவென்னும் தருமத்தை, சூத்திரகன்-வைசம்பாயனன் இவர்களுடைய மனேபாவங்களின் வர்ணனைகளைக் கொண்டு இந்நூல் விளக்குகின்றது. பெண்மக்களுக்குப் பதிவிரதாதருமம் எப்படியோ அப்படியே ஆண் மக்களுக்கும் ஏகபத்நீவிரதம் அவசியமானது என்கிற கொள்கையைக் கவி இதனுல் அறிவிக்கின்றுன்.

(2) பிராணிவதையையோ, மற்றும் எக்கொடுமையையோ, அருவருப்பான காரியங்களையோ செய்வது பகுத்தறிவுக்கும் நாகரீகத்திற்கும் நற்குணத்திற்கும் உற்றதல்லவென்று உரைத்திடுவதற்கே வேடர்களையும் (15-ம் பக்கம்), தமிழ்ப் பூசாரியையும் (111-ம் பக்கம்) கவி வெகு விநோதமாக வர்ணிக்கின்றுன்.

(3) ஆதரிப்பாரற்றுத் தவிக்கும் எவரிடமும், அசேதனமான பிராணிகளிடமுங் கூட அன்பும் கருணையும் காட்டி அவற்றைக் காக்கவேண்டியது விவேகிகளின் கடமையென்னும் தருமத்தை, வைசம்பாயனக்கிளியை, யெடுத்துப்போய் உயிர் பிழைக்கச்செய்யும் ஜாபாலிமுநிவரைக்கொண்டு கவி அறிவிக்கின்றுன். (20, 23-ம் பக்கங்கள்.)

(4) உடலும் உள்ளமும் பரிசுத்தமாயிருந்து, அவரவருக்குரிய கடமைகளிற் கருத்துடன் தைவந்தொழுது, தான-தரும-விரதாதிகளை மனஞ்சலியாமல் நிறைவேற்றி வருபவர் எவரும் பெரும் கோரிக்கைகளையும் அடைந்திடுவர் என்னும் கொள்கை விலாஸவதியினுடையவும் (31-ம்பக்கம்), மஹாச்வேதையினுடையவும் (86 ம் பக்கம்), காதம்பரியினுடையவும் (151-ம் பக்க) விரத முறைகளைக் கொண்டு விவரிக்கின்றான்.

(5) அடுத்தாற்போல் சந்திராபீடனும் வைசம்பாயனனும் குருகுல வாஸம் செய்த சீர்மை குறிப்பிடத்தகுந்தது. தேக-மனோநிலைமைகள் இளமைப்பருவமுதலே இடையூறின்றி மேன்மையுற வேண்டியும், கசடறக் கல்வியைக் கற்பிக்க வெண்ணியும், நகரத்திற்கு வெளியில் ஆரோக்கியகாமான ஆற்றங்கரையிற் கல்விச்சாலையை அமைத்த அழகும், அச்சாலையின் நிர்மாண முறையும், அதில் ஆசிரியர்களை நியமித்த நேர்மையும், மற்றும் வித்தியாப்பியாசத்திற்காகச் செய்த விமர்சைகளும் இக்காலத்திய நாகரிகக்கொள்கையுள்ளவர்களையும் வியப்புறச் செய்யும். (37-ம் பக்கம்).

(6) பத்திரலேகை என்னும் ஓர் அரசகுமரியைக் கதாநாயகனான சந்திராபீடனுக்கு அவனது அன்னையே அந்தரங்க பரிசாரிகையாக நியமிக்கின்றாள். அவ்விருவரும் வாலிப வயதினராயிருந்தும், அவர்கள் வெகு அந்தரங்கமாக எப்பொழுதும் பழகி வந்தும், ஒருவருக்கொருவர் அவர்களது அன்பானது எஜமானன் பரிசாரிகை அல்லது நண்பர்கள் என்னும் அளவிலேயே இருந்துவந்த வகையும், அவர்கள் அவ்விதம் இருந்துவந்ததைக் கண்ட ஜனங்கள் அவர்களுடைய நட்பில் வேறுவிதமாக ஐயமுறாமல் இருந்துவந்த மாதிரியும் இந்நூலிற் குறிப்பிடத்தகுந்த அம்சங்களுள் ஒன்று. (49-ம் பக்கம்). இவ்விதமே கதாநாயகியாகிய காதம்பரிக்கும் கேயூரகன் என்னும் வாலிபன் அந்தரங்க பரிசாரகனாயிருக்கிறான் என்பதையும் (93, 95, 119-ம் பக்கங்கள்) உற்

றுப்படிக்கும்போது, கணவன் மனைவிகளைத் தவிர்த்து, மனோ ரிடமுள்ள மற்ற ஸ்த்ரீபுருடர்களும் சாதாரணமான நட்புடன் பழகிவருவதை முற்காலத்திலும் தாராள நோக்கத்துடன் நல் லெண்ணத்துடனே கருதிவந்தனர் என்று நன்கு விளங்கு கிறது.

(7) ஒவ்வொரு மாணாக்கனும் மற்றவரும் சந்திரா பீடனுக்குச் சுகநாஸன் உரைக்கும் ஒப்புயர்வற்ற உபதேச மொழிகளை ஊன்றிப் படித்தல் முற்றிலும் உபயோகமானது. (50,51,52,53-ம் பக்கங்கள்). பிறவிச்செல்வமும், புதிய வாலி பப்பருவமும், வடிவழகும், செல்வாக்குடன் கூடிய வல் லமையும் ஒவ்வொரு சமயம் விளைவிக்கும் விபரீத நிகழ்ச்சி களைப்பற்றி அமைச்சன் மொழிந்திடும் அநுபவபூர்வகமான அரிய உபதேசங்கள் இந்நூலிலன்றி வேறெதிலும் படித்தற் கரிதானவை.

(8) நன்கு யோசிக்காமற் செய்யப்படும் காரியத்தினால் விளையும் சங்கடங்களைப்பற்றி, அனைவரும் அறிந்திருத்தல் வேண்டும். வேட்டையிற் கின்னரரைப் பின்தொடர்ந்து ஓடிய சந்திராபீடன் தன் காரியத்தில் அனுதாபமும் கவலை யுங் கொண்டு மனங்கலங்கும் இடத்தைப் படிப்பதால் ஆத் திரக்காரருடைய புத்திக்கு உண்மையில் ஒரு படிப்பினை யுண்டாம். (58,59-ம் பக்கங்கள்)

(9) அறிந்தோ பகுத்தறிவின்றியோ தகாத வழியிற் செல்லுபவனை அவ்வழியிலிருந்து மீட்க வேண்டியது நண்ப னின் கடமை யென்பதையும், அவ்விதம் மீட்கும் முறை எவ் விதமென்பதையும் கபிஞ்ஜலன் புண்டரீகனுக்குக் கூறும் உபதேசமொழிகள் குறிப்பிடுகின்றன. (74,78,79-ம் பக்கங் கள்).

(10) மஹாச்வேதையும் காதம்பரியும். மிகப்பெருமை வாய்ந்த பெண்மணிகள். அவ்விருவரும் தமது விருப்பப் படி மணாளர்களைத் தேடி மணந்தனர். பெற்றோர் முதலிய

பெரியோரிடம் அவர்கள் மிகவும் பக்தி விச்வாஸம் பாராட்டும் இயல்பினர். தருமங்களை யறிந்தவர்கள். இருந்தும் அவர்களிஷ்டப்பட்டவர்களையே தமக்குக் கணவராக வரித்துக் கொள்ள, அதை அவர்களது பெற்றோர் முதலியவர்களும் பெரிதும் பாராட்டினார்கள். பாரதநாட்டிற் பெண்களுக்குப் பண்டைக்காலம் முதற் பலவகையிலும் சுவாதந்திரியம் இருந்து வந்ததென்பதையும், ஆனால் அவர்கள் மிகப் பதிவிரதைகளாகவும், பகுத்தறிவு பெற்ற அறிஞர்களாகவும் இருந்துவந்தனரென்பதையும், அவ்வித மனச்சுத்தியும் தேகசுத்தியும் பெற்று மேன்மையுடன் விளங்கிய மனைவிகளுக்காக அவர்களது மணாளர்கள் பலமுறை உயிரைவிடவும் நேர்ந்ததுண்டென்பதையும் விளக்குவதற்கு மஹாச்வேதை-காதம்பரீ இவர்கள் மணம் புரிந்த முறையே சான்றாம். (73, 74, 101-ம் பக்கங்கள்.) *

(11) பிறகு சந்திராபீடனுடைய விம்வகத்தையும், மனோகாம்பீர்யத்தையும், அறிவின் பெருமையையும் நாம் கவனித்தல் வேண்டும். மனத்துயருறும் மஹாச்வேதைக்கு அவன் கூறும் உபதேசமொழிகளின் பெருமையை இக்காலத்திய நாகரிகருக்கு நாம் எடுத்துக் குறிப்பிட விரும்புகிறோம்.

---

* புண்டரீகன் தன் காதிற் சூட்டிக்கொண்டிருந்த அபூர்வமான கற்பகப்பூங்கொத்தை யெடுத்து மஹாச்வேதைக்குச் சூட்டுவதும், ஒருவருக்கொருவர் ஜபமாலையையும் மாற்றியணிவதும் அவ்விருவரும் மணம்செய்து கொண்டதற்கு ஓர் முக்கியமான அறிகுறி. 'ஜபமாலையைக் கீழே விழு முன்னமே மஹாச்வேதை யேந்திக் கொண்டாள்' என்பதன் கருத்தும் இதுவே.

அவ்விதமே காதம்பரீ தான் கழுத்தில் அணிந்திருந்த அபூர்வமான சேஷஹாரத்தைச் சந்திராபீடனிடம் அளித்து அணியச்செய்வதும் அவர்களுடைய மணமுடிப்பு நிறைவேறியதற்கு முகாந்தரமென்றறிக. ...

உடன்கட்டையேறும் கொடுஞ்செயலை பட்டபாணன் போன்ற அறிஞர்கள் அவ்வளவு பண்டைக்காலத்திலும் கண்டித்திருப்பதை இக்காலத்தியவர் கேட்டு வியப்புறுவர். (87, 88, 89-ம் பக்கங்கள்).

(12) காதம்பரியின் அரண்மனைக்கு வந்த இளவரசான சந்திராபீடனுக்குச் செய்யும் உபசாரம் குறிப்பிடத்தகுந்த அம்சங்களுள் ஒன்று. அதிலும் முக்கியமாக அவனுக்குச் சேஷஹாரத்தை வெகுமதியாகக் கொடுக்கக் காதம்பரியின் மற்றோர் மனதெனத்தகும் மதலேகையைக் காதம்பரி அனுப்பும் வகையும், மதலேகை சந்திராபீடனுக்கு உபசார மொழிகள் கூறி பிரஸங்கிக்கும் தன்மையும், கடைசியாகச் சந்திராபீடன் மதலேகைக்குப் பதிலளிக்கும் பான்மையும் ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டிய அரிய அம்சங்களாம். (99, 100, 101-ம் பக்கங்கள்.)

(13) அனைவரும் மனம் பூரித்து நகைக்குமாறு அழகாகப் பரிகாசம் செய்து வர்ணிப்பதிலும், ஆபாசமான செயல்கள் உலகத்தில் நடைபெறும் பலவேறு வகையான விநோதக் காரியங்கள், இவற்றை விளக்குவதிலும் இக்கவிக்குள்ள அனுபவமும் திறமையும் ஒப்பற்றதென்பதைத் தமிழ்ப்பூசாரியினுடையவும் காளிகோயிலுடையவும் வர்ணனைகளைப் படிப்பதிலிருந்துணரலாம். (111. 112-ம் பக்கங்கள்.)

(14) மனம்போன போக்கெல்லாம் போகும் வைசம்பாயனனைப்பற்றி அவனது தந்தை சுகநாஸனுக்கும் மன்னவனுக்கும் நடந்தேறும் ஸம்வாதம், நன்னடக்கையிற் கருத்துள்ள சிறுவராலும் மற்றவராலும் முற்றிலும் உவப்புடன் படிக்கத்தக்கது. (132-ம் பக்கம்.)

மற்றும் பல அரிய அம்சங்களை விவரிக்க இடமில்லை; எனினும் சில விஷயத் MAHAMAHOPADHYAYA கிறேன்.

'மூலகாரணத்திலிருந்தே அவற்றின் முக்கியமான குணங்கள் காரியத்திலும பற்றுகின்றன' என்கிற தத்துவத்தைப் பிராசீன கவிகள் நன்கறிந்திருந்தனர்.* இதற்குத் திருஷ்டாந்தமாகப் புண்டரீகனுடைய நடத்தையை பாணன வாணித்திருக்கிறான. மஹாருஷியின் மாசற்ற முகதேஜஸ்ஸானது மஹாலக்ஷ்மியின மனதைக் கவர்ந்து அவளிடம் பிரதிபலிக்க, அவருக்கு ஏற்ற உருவத்துடன புண்டரீகன் அவளிடம் உண்டானான. ஆனால் க்ஷேத்திர தோஷம் அவனது தாதுக்களில் நட்பமாக லயித்திருந்தது. முறைதவறிய அவாவும் மோகமும் நிாமலமான க்ஷேத்திரத்தையும் ஒருவாறு மலினமாகக, அதிலிருந்து இவன ஜனித்தான். இவனிடம் லயித்திருந்த அத்தோஷம, தகுந்த காலமும் இலககும் நேரிடவே பக்குவமடைந்து, இவனது குணத்திலும அவா மோகம் என்கிற அதே க்ஷேத்திர தோஷத்தை விளக்கிவிட்டது. புண்டரீகன் முனிகுமாரனாயிருந்தும், மஹாச்வேதையைக கண்டதும மோஹங்கொண்டான. சந்திரனிடம் கோபங்கொண்டு அவனைச் சபித்தான். மந்திரிகுமாரனாயிருக்கையில் தந்தையின அனுமதியின்றியே தேசாந்தரத்தில் தங்கிவிட்டான. இளவரசிடம் சேனைத்தலைவனாயிருந்துவர ஒப்புக்கொண்டும் அக்கடமையைப் புறக்கணித்தான். மஹாச்வேதையினிடம மனம் தடுமாறி மோகங்கொண்டான. பிறகு கிளியாகப் பிறந்தும், தந்தையான ச்வேதகேது முனிவரின சொல்லையும் மீறி ஜாபாலியின் ஆச்ரமத்திலிருந்து ஓடிவிட்டான். இம்முறைதவறிய நடத்தைகளால் புண்டரீகன் பலவகையிலும் பெருந்துன்பம் அனுபவிக்க நேர்ந்ததோடு, கபிஞ்ஜலன் முதலியவர்களும் கூடயிருந்த குற்றத்தால் துன்பத்திற்குட்பட நேரிட்டது.

**புண்டரீகன் தவறுதல்கள்.**

---

* காரியம் ஹிகாரணத் ஹி குணாநநுகரோதே.' நைஷதம்.

சந்திராபீடன் சற்குணமனைத்துக்கும் இருப்பிடம்.

**சற்குண சாலி சந்திராபீடன்.**

இருஷிகுமாரனுடைய வீண்சாபத்துக்கு விதிவசத்தால் சந்திரன் ஆட்பட்டான். உண்மையிற் சந்திரனாவது சந்திராபீடனாவது எப்பிழையும் புரிந்தவரல்லர். சந்திரனுக்கு இரண்டு ஜன்மங்களிலும் தேகமனோநிலைமைகளிற் புண்டரீகனுக்குப் பற்றியதுபோல எத்தோஷமும் சேர்ந்ததில்லை. சந்திராபீடனுக்குக் காதம்பரியினிடம் பற்றுதலுண்டாயிற்றென்றால், அது அவனது குணத்திற்காவது ஒழுக்கத்திற்காவது பிரதிகூலமானதல்ல. அன்றியும் சந்திராபீடன் அவளிடம் பற்றுதலைப் பெற்றும், அவளை மணப்பதற்கு மனம்போனபடி விரைந்து முயலவுமில்லை; அதற்காகத் தன் மற்றக் கடமைகளையும் புறக்கணித்தானில்லை. தாய்தந்தையரின் அனுமதியின்றி அவன் எதையும் செய்தவனுமல்லன். முறைதவறாத மேலான சீலங்களுக்கும், அறிவுக்கும் அழகுக்கும் உபமானபுருடனல்லவோ சந்திராபீடன்? ஆகவே அவனைக் கதாநாயகனாகக் கவி அமைத்தான்.

மஹாச்வேதையின் கற்பின் மேன்மையைப்பற்றி கவி விசேஷமாக விளக்கி யிருக்கிறான்.

**நூலுக்குக் காதம்பரி யென்னும் பெயர்.**

மஹாச்வேதை மஹாபதிவிரதை. எழிலிலும் இணையற்றவள். இளவயதிலும் கணவன்நிமித்தம் மனதை யடக்கி, முனிவரைப்போலே யமநியமாதிகளை நிறைவேற்றும் ஆற்றலுக்கேற்ற மனோதிடம் பெற்றவள். இவ்வளவிருந்தும் கேவலம் ரூபத்திலேயே நோக்கங்கொண்டு, ஏனைய குணாகுணங்களைப் பரிசோதிக்காமல், மனோதிடமமையாதபுருடனை மணாளனாகவரித்ததுமாத்திரம் அவளுடைய தன்மைக்குத் தகுந்ததாகத் தோற்றாது. இவளிடம் இக்குறை யிருப்பதைக் கருதியே பட்டாபாணன் இந்நூலை

மஹாச்வேதையின் பெயரால் அழைக்க விரும்பவில்லை போலும்! பெண்மக்களுக்கு அவச்யமான உத்தம குணங்களை விசேஷமாய் இந்நூலைக் கொண்டு பாணகவி கற்பிக்க வெண்ணியதாகத் தெரிகிறது. காதம்பரியானவள் கற்பில் தேர்ந்தவள். உத்தம கந்தருவஸ்த்ரீ. பகுத்தறிவைப் பெற்றவள். கல்வியிற் றேர்ந்தும், நிலைமையில் மிக்க மேன்மையுற்றும், குற்றமற்ற குணங்கள் நிரம்பியுமிருந்த மஹாபுருடனையே அவள் கணவனாகத் தேடி வரித்தனள். காதம்பரி, கதாநாயகனை சந்திராபீடனுக்கு எல்லா வகையிலும் ஏற்ற நாயகியாயமைந்தனள். ஆகவே இவ்வுத்தமியின் பெயரையே இந்நூலுக்கிடுவது மஹாகவிக்கு இனிதெனத் தோற்றியது.

வேப்பேரி, மதராஸ்.
29-5-1929.

மே. துரைஸ்வாமி ஐயங்கார்.

# காதம்பரி.

## பூர்வ பாகம்.

---

### முதல் சருக்கம்.

மாளவ தேயத்தில், மகேந்திரலோகமும் கண்டு பொறாமையுறக் கூடிய சீர்மை யுடையதாய் விதிசை யென்று பெயர் பெற்ற நகரம் ஒன்றுண்டு. கிருதயுக தருமங்கள் கலியுகக் கொடுமைகளிடமிருந்து பயந்து ஒருங்கே அங்கு அடைக்கலம் புகுந்து அச்சமின்றி வாழக் குடிகொண்டனவோ வெனத் தோற்றுமாறு அந்நகரம் சிறப்புற்று விளங்கியது. கலகல வென்று எப்பொழுதும் ஆர்ப்பரிக்கும் காரன்னங்கள் வாழும் கரையோரங்களால் கண்டோர் மனதைக் கவரும் வனப்பு வாய்ந்த வேத்திரவதி யென்னும் நதியினால் அந்நகரம் சூழப்பெற்றிருக்கும்.

முன்னொருகால் கடல் சூழ்ந்த பூமியனைத்துக்கும் சக்கிரவர்த்தியாய், நிகரில்லாச் சக்தி பொருந்திய வனாய் சூத்திரகன் எனப் புகழ் பெற்ற வேந்தனொருவன் அவ்விதிசாநகரத்தை இராஜதானியாகக்கொண்டு வாழ்ந்துவந்தான். அநேக அரசர்கள் அவனது பராக்கிரமத்திற்கு அஞ்சியும், வேறு பல மன்னர்கள் அவனது மாசற்ற குணங்களில் ஈடுபட்டும் அவனைப் பணிந்துவந்தனர். சகல சாஸ்திரங்கட்கும் அவன்

கண்ணாடி போன்றவன். சுருங்கச் சொல்லில் தைவத் தன்மையனெனத் தருமாறு அருங்குணங்கள் அனைத்தும் அவனிடம் குடிகொண்டிருந்தன.

இவ்வரசன் அகண்ட பூமண்டலத்தையும் வென்றவன்; பிரஜைகளைப் பரிவுடன் பரிபாலிப்பவன். அநேக குலவரிசையாய் அமர்ந்தவரும், நீதி நூல்களை நன்காராய்ந்துணர்ந்தவரும், அனவரதம் ஊக்கமுள்ளவரும், அன்பார்ந்தவருமான மந்திரிமாரை அவன் பெற்றிருந்தான். அவனியனைத்தும் அவனது செங்கோலுக்கு அடங்கிவிட்டமையால், அரசாளும் பொறுப்பைப் பெரிதும் அவ்வமைச்சரிடம் ஒப்படைத்து, அவன் மனக்கவலையின்றி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

அவன் சில நேரம் சங்கீதகோஷ்டி யமைத்துத் தானே மிருதங்கங் கொட்டி மனமுருகப் பாடி மகிழ்வான். சிறிது காலம் சித்திரமெழுதும் சீர்மைகளிற் சித்தத்தைச் செலுத்துவான். சில காலம் கலைஞர்களைக் கூட்டிக் காவியப்பிரபந்தம் இயற்றுவான். சில போழ்து சாஸ்திர வல்லோருக் கிடையில் தத்துவ விசாரம் செய்வான். சில சமயம் வனாந்தரஞ் சென்று வீரத்துடன் வேட்டையாடுவான். மற்றுஞ் சில நேரங்களில் தன் தரிசனத்திற்கு வந்த தபோதனர்களின் தாள்களைப் பணிந்துவருவான். இளமைப் பருவத்திலிருந்தும், சிறந்த சௌந்தர்யம் வாய்ந்தும் அவன் மிக்க மனோதிடமும், ஐம்புலன்களையும் அடக்கியாளும் தன்மையும் பெற்றிருந்தான். ஆகவே அவன் பெண்டிரின் சகவாசத்தைப் பேதைமையாகப் பாவிக்

கும் இயல்பினன். இவ்விதம் அவன் விநோத வார்த்தைகளிற் கைதேர்ந்த வீரரான தோழரோடும் வித்வான்களோடும் கூடிக் களித்து வாணாளைக் கழித்து வந்தான்.

இங்ஙனமிருக்கையில், ஒருக்கால் ஆகாயத்தில் ஆதித்தனுதித்துச் சிறிது நேரத்தில், இக்கோமான் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில், மாதர்களின் வழக்கத்திற்கு மாறாக இடையின் இடது புறத்தில் தொங்கும் வாளாயுதத்துடன் வாயிற்காப்பவள் ஒருத்தி அவனுக்கு முன் வந்து பணிந்து, முழந் தாளிட்டபடி இங்ஙனம் மொழிந்தனள் :— 'தேவ! தென் தேயத்திலிருந்து மாதங்கமாதொருத்தி மண் டப வாயிலிற் பொற்கூட்டி லடைத்ததோர் கிளியோடு வந்து நிற்கின்றாள். அவள், சினங்கொண்ட தேவேந் திரனால் வீழ்த்தப் பெற்றுத்தென்திசையில்ஊசலாடும் திரிசங்குவினிட மிருந்து நழுவிய இராஜலக்ஷ்மியோ வெனக் கூடிய வடிவம் வாய்ந்தவள். அவளிடமுள்ள கிளி மிகவும் ஆச்சரியமான பறவையென்றும், அதைத் தமக்குக் காணிக்கையாகச் சேர்ப்பித்துத் தம்மைத் தரிசிக்க விரும்புவதாகவும் அவள் விண்ணப்பம் பண் ணிக் கொள்கிறாள். பிறகு பிரபுசித்தம்' என மொழிந் தொழிந்தனள். அரசனும் அதைச் செவி யுற்று, ஆவல்கொண்டு, அருகிலிருந்த மற்ற மன்னவர் முகங்களையும் உற்று நோக்கிவிட்டு, 'குற்றமென்ன? அவளை வரச்செய்' எனக் கட்டளை யிட்டான்.

உடனே வாயிற்காப்பவள் போய் அம்மா தங்கமாதை மண்டபத்தினுள் அழைத்து வந்தாள்.

தனது அக் கோலத்தினால் உலகத்தோரது பரிசத்தைப் பரிகரித்தவளான அம்மங்கை ஆங்கு வந்து, ஆயிரக்கணக்கான அரசர்களின் மத்தியில் சந்திரகாந்தக் கற்களிழைத்ததோர் சிறிய மஞ்சத்தில் மன்னவன் வீற்றிருக்கக் கண்டாள். அம்மஞ்சத்தின் மணிமயமான நான்கு கால்களிலும் நல்முத்துச் சரங்கள் ஊசலாடின. மேற்புறத்தில் வெண்பட்டு மயமான விதானம் அமைக்கப்பட்டிருந்தது. வெகு விசாலமான தாமரை மலர்போன்ற நேர்த்தியான நேத்திரங்களாலும், மிகவும் அகன்ற அழகிய முகமண்டலத்தினாலும், உத்தமபுருஷனுக்கான உயர்ந்த உருவத் தோற்றத்தினாலும் அவன் கம்பீரமாய் விளங்கினான்.

அம்மாது, சற்றுத் தூரத்திலிருந்தே அரசனுக்குத் தன் வரவை அறிவிக்க ஒரு மூங்கிற் கழியினால் ஒரு முறை மண்டபத் தரையை மெல்லெனத் தட்டினாள். திடீரென விழும் பனையோலையின் சலசலப்பைக் கேட்ட காட்டானைக் கூட்டம் போல், அக்கழியின் ஓசையைச் செவியுற்ற அவ்வரசர் குழாத்தின் பார்வை யனைத்தும் ஒருமிக்கப் பார்த்திவனிடமிருந்து அம்மங்கையின்பால் திரும்பியது. மன்னவனும் மனம் வியப்புற அம்மாதங்க மடந்தையைக் கண்ணுற்றான். வாலிபப் பருவ மெல்லாம் கழிந்திருந்தும், எப்பொழுதும் உழைத்துவரும் தன்மையனாகையால் தளர்ச்சியடையாத் தேகக் கட்டுகளை யுடைய கிழவனொருவன் அவளுக்கு முன்னே வந்துகொண்டிருந்தான். நிலையில்லாமற் கலைந்தாடும் காகபக்ஷமென்னும் பக்கக்குடுமியை யுடைய சண்டாளச் சிறுவன் ஒருவன் கனகமயமான கிளிக்

கூடொன்றை யேந்திக்கொண்டு அவளைப் பின்பற்றி வந்தான். அவள் குதிகாலளவும் தொங்கும் கரு நிறமான கஞ்சுகமும், சிரத்திற் சிவந்த மெல்லிய துகிலொன்றால் முக்காடும் அணிந்து, கண்டத்தில் திரண்ட நல்முத்துச் சரம் பூண்டு, நூதன யௌவனப்பருவத்துடன் கூடி, மனதைக் கவரும் மேனி யழகையும், கண்ணைப் பறிக்கும் காந்தியையும் பெற்று விளங்கினாள்.

அத்தருணம் வியப்புடன் வேந்தன் திகைப்புற்று இவ்வண்ணம் எண்ணலானான் :—'ஓ! உத்தமமான தோர் உருவத்தை இங்ஙனம் உற்றதல்லாத குலத்திற் பிரம்மதேவன் படைத்ததேன்? இவளது தோற்றம் மானிடத் தன்மையையே மீறியதாகத் தோற்ற, மாதங்க குலத்தவளென எங்ஙனம் இவளை யெண்ணக்கூடும்!' என்று அவன் யோசித்தவாறிருக்கையில், அச்சிறுமி யும் செவியில் அணிந்த சந்தனமரத்தளிர் ஒருவாறு நழுவ, மிகப் பெருந்தன்மை வாய்ந்த பெண்மணிக் கொப்ப அரசனுக்கு முன் அடிபணிந்து, ஒருபுறமாய் மணிமேடையில் அமர்ந்தாள். உடனே கூடவந்த கிழ வன் கூட்டுடன் அக்கிளியை அரசனுக்கெதிரில் ஆத ரத்தோடு வைத்து, முழந்தாளிட்டுப் பணிந்து இங் ஙனம் பகர்ந்தான் :—

'ஆண்டவ! அகில சாஸ்திரங்களிலும் இக் கிளிக்கு ஆழ்ந்த அறிவுண்டு. காவ்விய நாடகாதிப் பிரபந்தங்களைக் கசடறக் கற்றது; அவற்றை இயற் றும் வல்லமையையும் பெற்றது; சங்கீத சாஸ்திரத் தைச் சாலவும் உணர்ந்தது; இராஜநீதிகளை யறிந்து,

அவற்றை யுற்றவண்ணம் பிரயோகிக்கும் திறமையும் வாய்ந்தது; சுருங்கச் சொல்லில் இப்பறவையானது பாருலகிற் பார்ப்பதற்கரிதான இரத்தினமெனத் தருந்தது; இதற்கு **வைசம்பாயனன்** எனப் பெயர். அரசனுக்கே உலகிலுள்ள அரும்பொருள் அனைத்தும் உரியதெனக் கருதி, எமது தலைவன் புதல்வி தமது அடியிணையிற் சமர்ப்பிக்க இதை யெடுத்துவந்தாள். ஆதலால் தாம் இதை ஏற்கவேண்டும்' எனப் பகர்ந்து, பஞ்ஜரத்தைப் பார்த்திவனுக்கு எதிரில் வைத்துப் பணிவுடன அவன் விலகினன்.

அவன் அப்புறம் போனதும், அப்பறவையரசு வெளிவந்து, பாராளும் வேந்தனை நோக்கித் திரும்பி, வலதுகாலைப் பணிவுடன் உயர்த்தி, வெகுத தெளிவான வார்த்தைகளால் வாழ்த்து கூறி, அடியில் வருமாறுப் பொருள்படப் பாடியது :—' தரணியாளுந் தேவ ! தமது பகைவரின மங்கைகளது மார்பு, கண்ணினீர் அருவிதனில் நீராடி, மனத்துயரழலுக்கு அருகிலிருந்தவாறு, அம்பூண் * அகற்றி, அருந்தவம் அனுட்டிப்பது போலும்' என்று.

அதுகேட்டு அரசன் ஆச்சரியமுற்றவனுய், அருகில் அமர்ந்திருந்த அமைச்சர் தலைவனுன **குமாரபாலிதன்** என்னும் மந்திரியை உற்றுநோக்கி,

---

* அம்பூண் : அம்—அழகிய ; பூண்—ஆபரணம் : அழகிய் ஆபரணம் விலக்கி என்று மார்புக்குச் சேர்ந்த அடைமொழிக்குப் பொருள். அம்பு—நீர், ஊண்—உணவு ; நீரையும் உணவையும் நீக்கி என்று தவத்திற்குச் சேர்ந்த பொருள்.

இனிய தொனியில தேர்ந்து தெளிவாக இஃது மொழிந்த அழகைக் கேட்டீர்களா! நெடில் குறில் முதலியவைகளை நேர்மையாய் உச்சரித்துப் பயிற்சி பெற்றவர்போல் பக்ஷமுள்ளாரிடத்துப் பகுத்தறிவுடன் சிறு பறவை இவ்விதம் பேசுவது பெரிதும் புதுமையன்றோ?" என்றான். குமாரபாலிதன் அதற்குச் சிறிது புன்னகை புரிந்து 'தேவ! இதிலென்ன வியப்பு? கிள்ளை பூவை முதலான பறவைகளுக்குச் செவியுற்றவாறே செப்புந் திறமை யுண்டென்பது தமக்குத் தெரிந்ததே. மேலும் பூர்வஜன்மத்துப் பயிற்சி விசேடத்தின் பற்றுதலாலோ, மனிதரின் மேலான முயற்சியினாலோ இவ்வாறு தேர்ச்சி இவற்றிற் குண்டாவதில் வியப்பேதுமிலது. தைவப்படைப்பில் இவ்வித விசித்திரங்கள் விதம் விதமாயுண்டு' என்று மொழிந்து வருகையில், நாழிகைகளின் முடிவில் அடிக்கப்படும் பேரிகையின் பேரொலியும், நடுப்பகலில் முழங்கப்படும் சங்கத்தின் நாதமும் ஒருங்கே கிளம்பின. அது கேட்டு நீராடும் பொருட்டு அரசோமானும் கொலு மண்டபம் விட்டெழுந்தான். மற்ற மன்னவர்களும் முறையே விடை பெற்றுக் கொள்ள, அச்சண்டாளக் கன்னிகையை நோக்கி, 'இளைப்பாறுக' என்று தானே மொழிந்து, தாம்பூலத் தட்டேந்துபவளைப் பார்த்து 'வைசம்பாயனனை அந்தப்புரத்திற்கு எடுத்துப் போ' எனக் கட்டளையிட்டு, ஆப்தர்களான சில இராஜகுமாரருடன் அரண்மனை சென்றான்.

ஆங்கு அவன் அணிகள் அனைத்தையும் களைந்தான்; கிரணங்கள் கழிந்த கதிரவன் போலப் புலப்பட்டான். அங்கே கொடியாடுமிடம் சென்று, தனக்

[illegible] மே [illegible] ராஜகுமாரரோடு இனிதாகச் சற்றுநேர [illegible] ளையும் பழகினான். உடனே அகத்தினுள் அதி [illegible] வெருக்க மில்லை திருப்பினும் 'கயமையென்று ஆட் [illegible] ன் விலக்கும் கட்டியக்காரர் வழிகாட்ட நீராடுமிடஞ் சென்றான். ஆங்கு நறுமணங்கமழும் தண்ணீரால் மன்னவன் மனங்களிக்க மஞ்சனமாடினான். புதிய பட்டுடைகள் தரித்துக் கொண்டான். பித்ரு தர்ப்பணஞ் செய்து, மந்திரமோதி மிகப் பரிசுத்தமான அர்க்கியஜலங்கொண்டு ஆதித்தனை ஆராதித்தான். சிவ பெருமானைச் சிறப்பாகப் பூசித்தான். உடனிருந்து விருந்துண்ணத்தகும் வேந்தர் சிலருடன் உவப்பாக உண்டிவினை முடித்துக்கொண்டான். அப்பால் ஆசமநம் செய்து, மணிமேடையில் உட்கார்ந்து தாம்பூலம் தரித்தான். சற்றுக் களைதீர்ந்து அங்கிருந்து மீண்டும் அக்கொலுமண்டபம் சென்று, மலர்களால் மணமேற்றப்பட்ட மேன்மையான மேல் விரிப்புடன் கூடிய மிருதுவான மெல்லணையில் அமர்ந்தான். அத்தருணம் அந்தரங்கமாகப் பேசக்கூடிய மந்திரிமார்களோடும், மன்னவர் சிலரோடும் சல்லாபம் செய்த வண்ணம் சற்றுநேரம் வீற்றிருந்தான்.

அதன்பிறகு, அரசன் அக்கிளியின் செய்தியறிய ஆவல்கொண்டு, ஆங்கிருந்த வாயிற்காப்பவளிடம் அந்தப்புரமிருந்து வைசம்பாயனனைக் கொண்டுவர ஆஞ்ஞாபித்தான். அவ்வாயிற்காப்பவள் உடனே அக்கிளியைக் கூட்டுடன் கொண்டுவந்து அரசனுக்கு முன் ஆதரவுடன் வைத்தாள். அவளைப் பின்பற்றி வெண்சட்டை யணிந்த வயதுசென்ற கஞ்சுகி யொருவன் கையிற் பொற்பிரம்புடன் வந்து, அரசன்

மூன் அடிபணிந்து, 'வேந்தே! தமது உத்தரவின்படி இவ்வைசம்பாயனனை நீராட்டி, உணவூட்டி இதோ வாயிற்காப்பவளிடம் தேவிகள் தமது சன்னிதானத்துக்கு அனுப்பியிருப்பதாக அறிவிக்கச்சொன்னார்கள்' என்று விண்ணப்பம் செய்து விலகிப் போனான்.

வேந்தன் அப்பொழுது வைசம்பாயனனை நோக்கி, 'உனக்கு இன்பமான உணவு ஏதேனும் அந்தப்புரத்தில் அருந்தினையோ?' என வினவினான். அதற்கு அப்பறவை 'அண்ணலே! அங்கு நான் உண்ணாத தொன்றில்லை. மதங்கொண்ட குயில்களது கண்களின் காந்திபொருந்தி நற்சுவையுள்ள நாவற்பழங்களின் சாற்றைப் போதுமாறு பருகினேன். மதங்கொண்ட யானைகளின் பிளவுண்ட கும்பஸ்தலத்திலிருந்து உதிரும் உதிரங் கலந்த நல்முத்துக்களின் ஒளியுடைய மாதுளம் விதைகளை மனங்களிக்கப் புசித்தேன். பலவாறு பேசுவதிற் பயனென்ன? தமது தேவிகளின் திருக்கரங்களால் அளிக்கப்பெற்றவை அனைத்தும் அமுதமாகவே இருந்தன' எனப் பகர்ந்து வருகையில், அப்பேச்சை மன்னவன் மெல்லெனத் தடுத்து, இங்ஙனம் மீண்டும் வினவினன் :—

'இஃதெல்லாம் இருக்கட்டும், உனது வரலாற்றை முற்றிலும் அறிய யான் ஆவல் கொண்டுள்ளேன்; மொழிந்திடுவாயாக. நீ எவ்விடத்திற் பிறந்தாய்? எவர் உன்றனக்கு அந்தணருக் கேற்க இந்நாமகரணஞ்செய்தவர்? உன் பெற்றோர் யாவர்? வேதங்கள் உனக்கு வந்த தெங்ஙனம்? சாஸ்திரங்களையும் கலைகளையும்

கற்ற தெவ்வாறு? உனது பிராயம் என்ன? உனக்கு இது வரப்பிரசாதமோ? அல்லது புள்ளின் வேடம் பூண்டு முற்பிறப்பின் உணர்வு பெற்ற முனிவரோ நீ? இதுகாறும் நீ வசித்தது எவ்விடம்? பஞ்சமரிடம் பிடிபட்டு நீ பஞ்ஜரத்தில் அடைபட்ட வகையென்ன? இங்குதான எதற்கு வந்தனை?' அரசன் அவ்வாறு ஆவலுடன் வினவியதைக் கேட்ட வைசம்பாயனன் சற்று நேரம் ஆலோசித்து, அப்பால ஆதராதிசயத்துடன் மொழியத் தொடங்கிற்று. 'ஈசனே! இக்கதையோ வெகு விரிவானது. ஆகிலும் ஆவலிருப்பின் செவி யுறுவீர்களாக.'

---

## இரண்டாம் சருக்கம்.

"தேவ! கிழக்கு மேற்குக் கடற்கரைகளைக் குறுக்காய் அளாவியதாய் **விந்தியாடவி** எனப் பெயர் பெற்ற மஹாரண்ணியம் ஒன்றுண்டென்பது தமக்குத் தெரிந்ததே. ஆங்கு ஓங்கி வளர்ந்து ஆகாயமளாவியவைவும், ஆகவே அவற்றின் சிகரங்களிற் சிக்கிய தாரகைக் கூட்டம்போல் மனோகரமாய் விளங்கும் மலர்களின் திரள்களைத் தலையாலே தாங்குகின்றவைவுமான விருக்ஷங்களடங்கிய சோலைகள் எண்ணிறந்தன. அவ்வடவியின் ஒரு பகுதிதான் தண்டகாரண்ணியம் எனப்படும் மஹாவநம். அவ்வாரண்ணியத்தின் இடையிலேயே, வஞ்சனையிற் பெயர் பெற்ற வாதாபியென்னும் கொடிய அசுரனைக் குக்ஷியிற் செரிப்பித்த அகத்தியமாமுனிவரது ஆச்ர

மம் கோதாவரி யென்னும் நதிக்கரையிற் புண்ணியங் களுக்குப் புகலிடமாயிருக்கின்றது. ஆங்கு அம்மா முனிவரின் மனைவியான உலோபா முத்திரை யென்பவள், தன் கரங்களால் தண்ணீர் ஊற்றி அரும் புதல்வரைப்போல் வளர்த்த வானளாவிய விருக்ஷங்கள் விஸ்தாரமாயுண்டு. இங்குள்ளதோர் பஞ்சவடி யென்னும் இடத்திலல்லவோ முன்பு ஸ்ரீராமன் தந்தையின் சொல்லைச் சிரமாக வேற்றுச் சீதாபிராட்டியுடன் இலக்ஷ்மணர் அமைத்த அழகிய பன்னசாலையில் அமர்ந்திருந்து, அகத்தியமாமுனிவரின் அடியிணைகளைத் தொழுது கொண்டு இன்புற்றுச் சிலகாலம் இருந்து வந்தார்?

அவ்வாச்ரமத்திற்கு அருகில் நிகரில்லாத மனோகரத்தோற்றமுடையதாய், நீருக்கு நிதி போன்றதாய் **பம்பை** யெனப் பெயர் பெற்றதொரு பங்கயப்பொய்கையுண்டு. கடல்போல் கொந்தளிக்கும் அக்குளத்தின் அகண்டமான அலைகளிலிருந்தெழும் திரளான திவலைகளால் அதன் கரையோரங்கள் எப்பொழுதும் மாரிகாலத்துடன் கூடியனபோல் குளிர்ந்து விளங்கும். அதில் ஒரு புறம் இருடிஜனங்கள் இறங்கி நீரைக் கமண்டலங்களில் நிரப்பும்போது கிளம்பும் கள கள வென்னும் தொனியானது, மற்றொரு புறம் மூழ்கி விளையாடும் மத்தகஜங்கள் துதிக்கைகளால் உறிஞ்சிய தண்ணீரைக் கொப்புளிக்கும் ஓசையுடன் இசைந்தெழும். முன்பு வாலியினால் விரட்டியோட்டப் பெற்ற அச்சுக்கிரீவன் செழிப்பான இக்குளக்கரைக் கானகங்களிலுள்ள காய்கனிகளை யெல்லாம் உண்டல்லவோ ஏதும் கவலையின்றி இருச்ய மூகக்குன்றில் காலங்கழித்து வந்தான்?

அத்தாமரைக் கயத்தின் மேற்கரையில் ஓங்கி வளர்ந்து வானளாவியதாய், விரிந்து படர்ந்து திசைகளைக் கவிந்ததாய், ஆகவே வனதேவதைகளுக்கு உலகமெலாம் காண்பதற்கான உப்பரிகை யெனக்கூடியதாய் மிகப் பெரிய **இலவமரம்** ஒன்றுண்டு. அவ்விருக்ஷத்தில் அடிமுதல் எல்லாப்புறமும் படர்ந்தேறிப் பரவிக்கொண்டிருக்கும் பெருங் கொடிகள், மேற்புறமெங்கும் தடித்துப் பருத்த நாடிநரம்புகள் அடர்ந்ததோர் கிழவனுடலுக்கு அம்முதிர்ந்த மரத்தை முற்றிலும் ஒப்பிடச் செய்கின்றன. அம்மரத்தடியில் அவ்வப்பொழுது யானையின் துதிக்கை யுருவமான மலைப்பாம்புகள் சுற்றிக்கொண்டிருப்பதைக் கண்டால், அதற்குப் பாத்தி யொன்று ஒழுங்காகச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருப்பது போலத் தோற்றும். ஸ்ரீராமன் பாணங்களை யெய்து வீழ்த்திய விசாலமான பழைய பனங்காடொன்று பாழ்த்திருப்பதை அதன் பக்கத்திற் பார்க்கலாம். அம்மரத்தின் கிளைகளின் இடைகளிலும், மரப்பட்டைகளின் சந்துகளிலும், பொந்துகளிலும் இடைவெளிகள் ஏராளமா யிருந்தமையாலும், எவராலும் எளிதில் ஏறமுடியாததாய் அம்மரம் மிகப் பெரிதாயிருந்ததாலும் கிளிகள், பல தேயங்களிலிருந்தும் வந்து பயமின்றியே கூடு கட்டிக்கொண்டு அதில் கூட்டங் கூட்டமாகத் தங்கி வசித்துவந்தன. அம்மரம் மிகவும் முதிர்ந்ததாகையால், உதிர்ந்து மிகுந்த இலைகளை அங்குமிங்கும் உடையதாயிருந்தும், இடைவிடாது வந்தடைந்துள்ள அக்கிளித்திரளாற் பசுமையான இலைத்தழைகளை அடரப் பெற்றிருந்தாற் போலவே.

புலப்படும். அப்பறவைகள் ஒவ்வொரு நாளும் விடியற் காலையில் எழுந்து, ஆகாயத்திற் பல வானவிற்கள் தோன்றினாற்போல் வரிசைவரிசையாகப் பறந்தோடி, வயிறாற உணவுகளைத் தேடியுண்டு, மீண்டும் அம்மரத்திற்கு வந்து, ஆசையுடன் தாம் கொணர்ந்த கனிவர்க்கம் முதலியவற்றைத் தம் குஞ்சுகளுக்கு ஊட்டி, இரவு நேரங்களை இன்பத்துடன் கழித்து வருவது வழக்கம்.

அவ் விருக்ஷத்தின் வெகு பழைய பொந்தொன்றில் இல்லாளுடன் என் தந்தையும் இருந்து வந்தது. அந்திம வயதில் விதிவசத்தால் என் தந்தைக்கு யான் ஓர் ஆண்குஞ்சு பிறந்தேன். பாக்கியப்பேறில்லாத என்னைப் பெறுகையிற் பிரசவநோய் தாங்காமல் எனது அன்னை ஆவி துறந்தது. ஒரு புறம் மூப்பினால் மேனி யொடுங்கிய என் பிதா, மனைவியின் மரணத்தினால் மற்றொரு புறம் மனமுமொடுங்கியதாயிற்று. எனினும், பொங்கியெழும் அத்துயரத்தைப் பொறுமையோடு உள்ளடக்கி, என்றனைக் காப்பாற்றுவதிலேயே கருத்தாயிருந்தது. பறக்கத் திறமையிழந்த என தந்தை, மற்றப் பறவைகளின் கூடுகளிலிருந்து மரத்தடியிற் சிந்திக் கிடக்கும் தானிய மணிகளையும் நொய்யரிசிகளையும் தேய்ந்துச் சிதைந்துள்ள அதன் அலகினால் பொறுக்கி வந்து எனக்குக் கொடுக்கும்; நான் உண்டு மிகுந்த உணவையே நாள்தோறும் அது அருந்திவந்தது.

இங்ஙனம் சில காலம் செல்ல, அன்புடன் தந்தை மார்பிலணைந்து வளர்த்துவந்தும், எனக்கு உடலிற்சின்னஞ்சிறிய சிறகுகளும், வெளியிற் பறந்தோட மன

திற் சாபல்லியமும் ஒருங்கே முளைக்கத் துவக்கின. இங்ஙனமிருக்க, ஒருக்கால் விடியற்காலம் நெருங் கிற்று. கானகமானது சுயம் கதிரவனுக்குப் பனித் துளிகளையும் புஷ்பங்களையும் தளிர்களாகும் அஞ்ஜலி களில் ஏந்தி அர்க்கிய மளிப்பதுபோல உதிர்த்தது. சூரியனும் உதித்துக் கிரணங்களை வீசக் கிளிக் கூட் டங்களும் கூடுகளை விட்டெழுந்து இறை தேடுவதற்கு இஷ்டமான திசைகளை நோக்கிச் சென்றுவிட்டன. நானும் என் தந்தையும் அப்பொந்திலே அடைந்திருந் தோம். இவ்வாறிருக்கையில் திடீரென அம்மகா ரண்ணியத்தில் மரங்களையும் மிருகங்களையும் நடுங்கச் செய்யும் வேட்டையாடும் பேரொலியொன்று கிளம் பிற்று. நான் சிறு குஞ்சாகையால் அஞ்சி நடுங்கி, மூப்பினாற் சிதறுண்ட அத்தந்தையின் சிறகு களுக்கிடையிற் பதுங்கிக் கொண்டேன். வேடர்கள் வேலாயுதங்களால் வீழ்த்திய சிங்கங் களின் பயங்கரமான கர்ச்சனைகளாலும், வேகமா யோடி வேட்டை நாய்கள் அவயவங்களைக் கடித்துச் சிதையச் செய்வதால் மனம் பதைத்து மருண்டு விழிக்கும் கலைமான்களின் கருணை புரியக்கூடிய கூக் குரலாலும், மரங்களிலிருந்து எங்கும் பரபரத்தோ டும் பறவைகளின் ஆரவாரத்தாலும் அவ்வடவியெல் லாம் அத்தருணம் அசைக்கப்பட்டது போலாயிற்று. அவ்வாரவாரம் சற்றுக்கெல்லாம் முற்றும் அடங்கி யது.

பின்னர், மெதுவாக அச்சந்தெளிந்து, தந்தையின் மடியிலிருந்தவாறே கழுத்தை நீட்டி, ஓசைவரும் திசை நோக்கி ஆவலுடன் பார்த்தேன். அக்காலை அவ்வனுங்

தாரத்தில் உற்பாத வேளையில் உதித்த வேதாளக் கூட்டம்போன்று வெகு பயங்கரமான வேடர்களின் பெரும் படையொன்று நானிருந்தவிடத்தை நோக்கியே வந்துகொண்டிருந்ததைக் கண்டேன். இவ்வேடர்களின் விவேகமற்ற வாழ்க்கையை என்னென்பேன்! இறைச்சியினால் இஷ்டதேவதைக்குப் பூசையிடுதல், நாய் நரிகளோடு பழகுதல், தோன்றிய வாறு திரிதல், கள்ளைக் குடித்துக் களித்தல், களவாடிப் பிழைத்தல். என்னே சீரழிந்த சீலம்! பல நூற்றுக்கணக்கான அப்புளினர்களுக்கிடையில், புதிய வாலிபப் பிராயம் வாய்ந்த வேடர் படைத் தலைவனொருவன் இருக்கக் கண்டேன. அவன் இரும்பால் அமைக்கப் பட்டவை போன்ற அதி கடினமான அவயவங்களைப் பெற்றிருந்தான். வேடர்களுக்கு ஏகாதிபதியாய் ஏகலவ்யனே இவ்விதம் மறுபிறப்பெடுத்து வந்தானோவெனத் தோற்றினன். பல வேறு நிறங்கொண்ட வேட்டை நாய்கள் நாக்குகளைச் சோர்வுடன் நீட்டிக் கொண்டு, பிடரிமயிர் படராத சிங்கக் குட்டிகளெனத் தோற்ற அவனைப் பின்பற்றி யோடிவந்தன. தலை மயிர்கள் தோள்வரையில் சுருண்டுச் சுருண்டு அவனுக்கு அலைந்தாடிக் கொண்டிருந்தன. இடது செவியில் மாத்திரம் இரத்தினகுண்டலமொன்று அவன் தலைவனெனக் காட்டத் துலங்கிக்கொண்டிருந்தது. கொடிய குணங்களால் அவன், கலிகாலத்தின் ஓர் உருவமெனக் கூடியவனுயினும் அவனது தோற்றம் வெகு கம்பீரமா யிருந்தது. அவன் பெயர் **மாதங்கன்** என்று அப்பால் நான் கேள்வியுற்றேன். அடவியில் அலைந்து திரிந்த ஆயாசத்தைத் தீர்த்துக்கொள்ள

அவன் அவ் விலவமரத்தடி நிழலில் வந்து, தோளிலிருந்த தன் கோதண்டத்தை யிறக்கினான். உடனே பணியாளர் பரபரப்பாகத் தளிர்களைத் தரையில் ஆசனமாகப் பரப்ப அதில் அவன் உட்கார்ந்தான். அவர்களுள் வேறொரு வேடவாலிபன் ஓடிப்போய், தாமரை யிலைத் தொன்னைகளில் பம்பப் பொய்கையிலிருந்து பனிநீர் போல் குளிர்ந்த தண்ணீரையும், தவளமான இளந் தாமரைக் கிழங்குகளையும் கொண்டுவந்து அவனுக்குக் கொடுக்க, அக்கிழங்குகளைப் புசித்து, அத்தண்ணீரையும் அருந்தி அவன் ஆயாசம் தீர்ந்தவனானான். பொய்கை நீரைப் பருகி மற்றப் புளிஞரும் களை தீர்ந்தனர். அப்பால் அவ் வேடர்படைத் தலைவன் மற்றவர்களோடு அங்கிருந்து எழுந்து மெள்ள மெள்ள மனதுக்கிசைந்த திசை நோக்கிச் சென்றுவிட்டான்.

அவர்களுள் அனைவரினும் மிகக் கொடியவனான, பயங்கரத்தோற்றமுள்ள கிழட்டு வேடனொருவன் மற்றப் புளிஞரிடமிருந்து புலால் கிடைக்கப் பெறாதவனாய், இறைச்சி தேட விரும்பி இலவமரத்தடியிற் சற்றுத் தனித்துத் தங்கினான். அத்தலைவன் அடவியில் மறைந்ததும், அக்கிழட்டுவேடன் பெரியதோர் பருந்து போல் பறவைகளின் இறைச்சியிற் பேரவாகொண்டு, அம்மரத்தை அடிமுதல் நுனிவரையிற் சிறிதுநேரம் ஏறயிறங்கப் பார்த்தான். அப்பொழுதே அம்மரத்திலிருந்த கிளிக்கூட்டங்கள் அஞ்சி ஓசையொடுங்கி ஆவி துறந்தனபோலும். ஈரமில்லா நெஞ்சத்தார் எக் கொடுஞ்செயலையும் எளிதிற் செய்து முடிப்பரன்றோ! புல் பனமரங்களின் உயரமுள்ளதாய் ஓங்கிவளர்ந்

துள்ள அம்மரத்தின்மீது அக்கொடியோன் படிகளில் ஏறுவதுபோலே எவ்விதமோ எளிதில் ஏறிவிட்டான். கொழுத்தனத்தினால் உண்டான உதறலோடு அவ்வபாயத்தைக் கண்டு இருமடங்காக நடுங்கும் என் தந்தையின் இறகுகளுக்கிடையில் நான் ஒடுங்கி யொளிந்தேன். என் தந்தையும் அப்பொல்லாத வேளையிற பிறிதோர் உபாயமின்மையைக் கண்டு, தன் சிதறுண்ட சிறகுகளால் என்னை மார்புறத் தழுவிக்கொண்டு மனமொடுங்கி அப்பொந்திற்குள் பதுங்கிக் கிடந்தது. அக்கொடிய வேடன் அம்மரததில் ஏறி, பல வேறு பொந்துகளிலிருந்தும் கிளைகளின் சந்துகளிலிருநதும் கனிகளைப் பறிப்பது போலக் கிளிக்குஞ்சுகளை ஒவ்வொன்ருகப் பிடித்தான். அவற்றுள் சில பிறந்து இரண்டொரு நாள் ஆனவை. சிறகுகள் நன்கு முளைக்காமற் பறந்தோடுந் திறமை பெருதவை பல. அவன அவற்றைப் பிடித்துத் துடிக்கத் துடிக்க உயிரையும் போக்கித் தரையில் எறிந்தான்.

அக்கொடும்பாவி வரிசையாகக் கிளைவிட்டுக் கிளை தாவிக் கிளிக்குஞ்சுகளனைத்தையும் பிடிதது அழித்துக்கொண்டே எம்பொந்தின் வாயிலண்டையும் வந்துசேர்ந்தான். அவன், காட்டுப்பன்றிகளின் நிணநீர் ஒட்டி மிகச் சவர்நாற்றம் வீசும் விரல்களையுடையதும், கிழட்டுக் கிருஷ்ணசர்ப்பம் போன்று அதி பயங்கரமாகவுமுள்ள இடது புயத்தைப் பொந்தினுள் நீட்ட, என் தந்தை தவித்துக் கொண்டே மூக்கினல் அவன் கையைக் குத்திக் கூககுரலிட்டது. அதை அக்கொலைபாதகன் கவர்ந்திழுத்து உயிரையும் இழக்கச் செய்தான். சின்னஞ்சிறிய குஞ்சாயிருந்த

தோடு அஞ்சி யொடுங்கி என்னுடல் இன்னும் குறுகி யிருந்ததாலோ, ஆயுள் இன்னும் சில காலம் நீடித்திருக்க என் நெற்றியில் எழுதப்பட்டிருந்ததாலோ, எவ்வகையிலோ என் தந்தையின் இறகுகளிடையில் யான் ஒட்டிக் கொண்டிருந்ததை அவன் காணவில்லை. அம்மாபாவி மாண்டுபோன என் தந்தையை, அந்தோ கழுத்தைத் திருகித் தரையில் எறிந்தான்! ஏதோ சிறிது புண்ணியம் மிகுந்திருந்ததுபற்றி, பூமியிற் காற்றினால் சேர்க்கப்பட்டிருந்த இலைச்சருகுகளின் குவியலொன்றின்மீது என்னைத் தந்தை யுடலோடு விழக் கண்டேன்; அதனாலல்லவோ என் சரீரம் சிதறிப் போகாமலிருந்தது? அம்மரத்தின் உச்சியி லிருந்து அந்நீசன் இறங்கி வருவதற்குள், இறந்திருந்த என் தந்தையின் உடலை இரக்கமின்றியே விட்டுப் பிரிந்து, இளந்தன்மைக்கியல்பான பயத்தினால் மனம் மிகத் திகைத்து, மெதுவாகத் தெற்றித் தள்ளாடிக் கொண்டே, அருகிற் செழித்து வளர்ந்திருந்த ஒரு பச்சிலைமரத்தின் வேரடியிற் போய் பதுங்கி யொளிந்தேன்; அக்காலை நமன் வாயி லிருந்து நான் தப்பிப் பிழைத்ததாகக் கருதினேனென்றால் அது பிறவிக்குரிய சுபாவந்தானே? அவ்விழிய கிழவன் சற்றுக்கெல்லாம் கீழே இறங்கி, நிலத்திற் சிதறிக்கிடந்த கிளிக்குஞ்சுகளின் உடல்களை யெல்லாம் பொறுக்கி ஒருமிக்கக் கொடிகளாற் கட்டி யெடுத்துக் கொண்டு, தன் தலைவன் சென்ற திசையை நோக்கித் துரிதமாகச் சென்று விட்டான்.

அவன் வெகு தூரம் சென்றதும் இனி உயிர் நிலைத்ததென நினைத்தேன். மிக்க உயரத்திலிருந்து

வீழ்ந்ததாலான சோர்வும், பரிவுடன் பரிபாலித்து வந்த பிதாவை யிழந்ததாலான கடுந்துன்பமும் சேர்ந்து ஒரு புறம் என்னை வாட்ட, மற்றொரு புறம் அவ்விரண்டையும் மறக்கச் செய்யும் நாவரட்சி நலியச் செய்தது. பறக்கும் திறமை எனக்குச் சிறிதுமில்லை யாகையால், பம்பைப் பொய்கைக்குப் பச்சிலை மரத்தடியிலிருந்து நகர்ந்துகொண்டே எப்படியும் போகவெண்ணிப் புறப்பட்டேன். புல்லைசைந்தாலும் 'அப்பாழும் கிழவனே திரும்ப வந்தானோ' என அத் தீயோனையே அடிக்கடியும் நினைந்து பயந்து, எனக்கு நடந்தும் பழக்கமின்மையினால் ஓரடி யெடுத்துவைத்ததும் தலை குப்புற வீழ்ந்தும் பெருமூச்செறிந்தும் நகர்ந்து போனேன். 'என்னை உள்ளன்புடன் தள்ளாத வயதில் தாங்கி வளர்த்துவந்த தந்தையை நொடிப் பொழுதில் மறந்தேன்! நன்றி சிறிதுமின்றி நாவரட்சிக்குப் பரிகாரந் தேடிப் பிழைக்கும்படி இவ்வுயிராசை இப்படியும் என்னைத் தூண்டுமோ! தன்னயம் பாராட்டுபவருக்குத் தன்னுயிரைத் தவிர்த்துப் பிறிதோர் அம்சம் பிரபஞ்சத்திற் பெரிதல்ல. என் செய்வேன் தந்தையே! இந்த நடுப்பகலில் கடுஞ்சுடரொளியைக் கதிரவன் தீப்பொறிபோல் வீசி வாட்டுகையில் இக்காட்டுத் தரையில் நான் நகர்ந்து நீர் இருக்குமிடம் செல்வதெங்ஙனம்? அந்நீரோடையும் நெடுந்தூர மெனத் தோன்றுகிறது. அந்தோ! அக்கொடுந்தைவம் யான் கோராமலிருப்பினும் என்னுயிரை இப்பொழுதே கொண்டுபோய் விடுமோ?' இவ்வாறு மனஞ் சோர்ந்து, முதிர் வேனிலில் உழன்று உயிருக்கு நான் மன்றாடிக் கொண்டிருந்தேன்.

அத்தருவாயில் அத்தடாகத்திற்குச் சற்றுத் தூரத்திலிருக்கும் தபோவனத்தில் வசிப்பவரான ஜாபாலி யென்னும் மாமுனிவரது மைந்தன் ஹாரீதன் என்பவர், தனக்கீடான முனிகுமாரர் சிலரோடு தம் செயலாய் அத்தாமரைக்கயத்திலே நீராட அவ்வழி யாகவே வந்தார். அவர் வேறொரு கதிரவனெனத் தகுந்தவாறு அவரது தேககாந்தி கண்ணைப் பறித் தது; காண்டவவனத்தையெரித்துப் புசிக்க விரும்பி, முன்பு மாயப்பிரம்மசாரியுருவம் பூண்டுவந்த அக்கினிதேவதைக்கு ஒப்பிடக்கூடியதாயிருந்தது அம் முனிச் சிறுவரது தோற்றம். காரணமின்றியே சான் றோர் எல்லாப் பிராணிகளிடத்தும் சாலவும் நேசம் பாராட்டுமியல்பினர்; யான் அந்நிலைமையிலிருப்பதைக் கண்டு அந்த இருஷிகுமாரர் இரக்கமுற்று, அருகி லிருந்த நண்பனொருவனை நோக்கி 'இறகு முளைக்காத இக்கிளிக் குஞ்சு இம்மரத்தின் மீதிருந்து எங்ஙனமோ தவறி வீழ்ந்திருக்கின்றது; பருந்துவாயிலிருந்தும் ஒருவேளை நழுவி வீழ்ந்திருக்கலாம். வெகு உயரத்தி லிருந்து விழுந்து வெயிலில் வாடுகிறது. தன் சிறிய தாள் களைப் பன்முறை திறந்தும் துடிக்கின்றது. உயிர் துறப்பதற்குள் தண்ணீருக்கு அருகிற் கொண்டு விடுவோம்; எடுத்துக்கொள்' எனக் கூறிக் குளக் கரைக்கு என்னை யெடுத்துச் சென்றனர். ஆங்கு ஹாரீதன் தன் இடது கரத்திலிருந்த கமண்டலத்தை யும், வலது கையிற்பிடித்திருந்த பலாசதண்டத்தையும் கரையில் ஒருபுறம் வைத்துவிட்டு, எனைனத்தன்கையில் வாங்கி முற்றிலும் சக்தியற்ற எனது முகத்தை நிமிர்த்தி, நீர்த்துளிகளை விரல்களால் சிறுகச் சிறுக ஊற்றி என்னை அருந்தச் செய்தார்; குளிர்ந்த தண்

ணீரை உடல் மீதும் தெளித்தார். உடனே ஒருவாறு களைதீர்ந்து யான் போன உயிரை வரப்பெற்றேன். பின்னர் என்னை அப்புண்ணியவான் கரையோரத்திற் படர்ந்திருந்த தாமரையிலையின் குளிர்ந்த நிழலில் விட்டு விட்டு, நீராட்டத்தை முறைப்படி நிறைவேற்றிக் கொண்டார். கமலமலர்களுடன் கைநிரம்ப நீரேந்தி அவர் கதிரவக் கடவுளுக்கு அர்க்கியமுமளித்து அவ்விடம் விட்டுப் பெயர்ந்தார். மற்ற முனிகுமாரர்களும் தன்னைப் பின்தொடர, என்னையும் அவர் கருணையோடு எடுத்துக் கொண்டு, ஈரமான உரோமச்சடைகளையுலர்த்தியவாறு மெதுவாகத் தமதாச்ரமம் நோக்கிச் சென்றார்.

சிறிது தூரம் சென்றதும், செழிப்பாக வளர்ந்த நறுமணங் கமழும் பூஞ்சோலைகளாலும், பற்பல வகையான பழங்களைக் குலை குலையாகத் தாங்கும் தழைத்தோங்கிய தோப்புகளாலும் சூழப் பெற்ற அழகியதோர் ஆச்ரமப் பிரதேசத்தைக் கண்டேன். இவ்வாச்ரமமும் தண்டகாரண்ணியத்தின் ஒரு பகுதியிலேயே அமைந்துளது. மிகவும் மூப்பு மேலிட்டும், கண்பார்வை குன்றியுமிருந்த முனிவர்களை அவ்விடத்திற் பழகிய வாநரங்கள் கைகொடுத்து ஆங்காங்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தன. அதன் பெருமையை என்னென்பேன்! கலிகாலம் காலடி வைக்க வியலாதது அவ்விடம். பிரம்மசாரிகள் ஒரு புறம் வேதமோதினர். சில தபோதனர்கள் தருமசாஸ்திரங்களைத் தருக்கித்துக்கொண்டிருந்தனர். பற்பல சாஸ்திரங்களின் பொருட்களை ஆங்கு வேறு சிலர் ஆராய்ச்சி செய்து வந்தனர்.

மிகைபடக் கூறுவானேன்? மாமுனிவர்களின் மேன்மையினால் மேதினியில் மற்றொருப் பிரம்மலோகம் இங்ஙனம் அமைந்ததோ வெனத் தோற்றுவிப்பது அவ்வாச்ரமம்.

அத்தகைய அவ்வாச்ரமத்தினிடையில், சுற்றிலும் வெகு தூரம் நெருங்கிப் பரவிய கிளைகளாலும் தழைகளாலும் விசாலமாய் அடர்ந்த நிழலைத் தரும் அழகிய அசோகமரம் ஒன்றிருந்தது. அதனடியில் நரைத்து வெளிறிய சடை முடியோடும், உடலெங்கும் பூசிய விபூதியோடும், உதடசைய மந்திரமோதி விரல்களால் உருட்டியெண்ணிய ஜபமாலையோடும் வீற்றிருந்த ஜாபாலி முனிவரைத் தரிசித்தேன். அத் தரிசனத்தினால், யான் உயிர் பிழைத்தெழுந்ததற்கு உற்றதோர் உபயோகத்தை உடனே யான் பெற்றதாகக் கருதி குதூகல மடைந்தேன். அவரது தேககாந்தி நான் கண்கொண்டு காணக்கூடாததா யிருந்தது. நரைத்த தாடி நாபிவரையில் அடர்ந்து தழைந்து தொங்கிக்கொண்டிருந்தது. தயையே உருவெடுத்தாற்போன்ற தபோதனர்கள் பலர் அத்தரும மூர்த்தியின் தாள்களைத் தொழுதுகொண்டு அவரைச் சூழ்ந்திருந்தனர். எதிலும் அவர் பற்றும் பகையற்று முற்றிலும் சாந்தி பொருந்திய மனத்தினரா யிருப்பினும், அவரது அற்புதப் பிரபாவமானது அவரை அண்டிச் செல்லுவதில் அனைவருக்கும் அச்சமூட்டுந் தன்மையதாயிருந்தது. அவர் ஆசையென்னும் விஷக்கொடிவனத்துக்குக் கோடரி. அஞ்ஞானமாகும் அந்தகாரத்துக்கு ஆதித்தன்.

தவத்திற்கு நிதி. அப்பெரியோரின் பிரபாவத்தினு லேயே அங்குள்ளப் பிராணிகளனைத்தும் இயற்கைப் பகைமையையும் பரிகரித்து ஒன்றோடொன்று ஒத்து வாழ்கின்றன. இங்கு வாநரங்கள் இயற்கையான சபல புத்தியை விடுத்து, நீராடி நிர்மலமாக நிற்கும் இருஷிகுமாரர்களுக்கு இனிய கனிகளைப் பறித்து வந்து அளித்து அகமகிழ்கின்றன. மான்குட்டிகள் சில, தம் மாதாவையும் விட்டு விட்டுப் பிடரிமயிர் படராத சிங்கக்குட்டிகளுடன் சேர்ந்து ஆனந்தத்துடன் விளையாடுகின்றன.

இவற்றையெல்லாம் கண்டு களித்துவரும் என்றனை அந்த அசோகமரத்தடியில் ஒரு புறத்தில் விட்டு விட்டு, ஆரீதன் தன் தந்தையின் தாள்களிற் பணிந்து, அங்கே சிறிது தூரத்திலிருந்த தருப்பாசன மொன்றிற் சென்றமர்ந்தனன். என்னைப் பார்த்த அங்கிருந்த முனிவர் அனைவரும் ஆரீதனை நோக்கி, 'இக்கிளிக்குஞ்சை எங்கிருந்து ஏன் எடுத்துவந்தாய்?' என வினவினர். அதற்கு அவன் 'நான் நீராடுவதற்குப் போகையில் இது குளக்கரை மரத்தின் கூட்டிலிருந்து கீழே விழுந்து வெயிலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவ்வுன்னதமான விருக்ஷத்தில் இதைக் கூட்டில் ஏற்றிவைப்பதற்கு நம்மால் ஆகாதெனக் கருதி, இதை மனமிரங்கி இங்கெடுத்து வந்தேன். இறகுகள் முற்றிலும் முளைத்துப் பறந்தோடுந் திறமையுண்டாகுமளவும் ஆச்ரமவிருக்ஷத்துப் பொந்தொன்றில் விடப்பட்டு, நம்மால் வளர்க்கப் பெற்று வரட்டும். பின்னர் அது எங்கேனும் பறந்து போகவோ, நம்முடன் பழகி இவ்விடத்திலேயே

இருக்கவோ அதன் விருப்பப்படி விட்டுவிடுவோம். நாதனற்று வருந்துபவரை ஆதரிப்பது நமது கடமையல்லவா? எனக் கூறினன்.

இச்சம்பாஷணையைச் செவியுற்ருர் ஜாபாலி முனிவரும். கருணை நிரம்பிய தம் கடாக்ஷத்தைச் சற்று என்மீது செலுத்தினர். நடந்த வரலாற்றை யெதையோ நினைவுக்குக் கொண்டுவருபவர்போல் என்னைக் கண்ணுேக்கியவண்ணம் ஆவலுடன் ஆழ்ந்து ஆலோசித்தார். பின்னர், புன்னகைப்புடன் தன் தலையை அசைத்து 'இஃது தன் நெறி மீறிய நடத்தையின் பயனையே இங்ஙனம் அனுபவிக்கின்றது' என மொழிந்தார். தவத்தின் வலிமையினுல் அம் மாமுனிவர் முக்கால நிகழ்ச்சிகளையும், மூவுலகையும் முன்புறத் திருப்பதுபோல் உள்ளபடி புணரும் ஆற்றலுடையார். அம்மகத்துவத்தை ஆங்குள்ள முனிவர் அறிந்துள்ளார். ஆகவே அவர் விளம்பியதைக் கேட்டு வியப்புற்ற அவ்வனைவரும், அக்கிளியின் முற்பிறப்பு வரலாறு முதலியதை முற்றிலும் மொழிந்தருளும்படி அவரை ஆவலோடு வணக்கமாய் வினவினர். அம்மா முனிவர் அவர்களை நோக்கி 'இவ்வரலாறு வெகு விசித்திரமானது; மிகப் பெரிது. பகற்பொழுதும் சாயப்போகிறது. நீங்க ளனைவருங்கூட எழுந்து அனுட்டானங்களை நிறைவேற்றுங்கள். கடவுளைப் பூசித்து அமைதியாகக் கனி கிழங்குகளையும் புசித்து மாலைப் பொழுதில் என்னிடம் வருவீர்களாக. அப்பொழுது இதன் செய்தி யனைத்தையும் சாவகாசமாகக் கூறுவேன். யான் மொழிந்துவரும்போதே முற்பிறப்பில் நிகழ்ந்த தன் செய்திகளெல்லாம் இதற்கும் கன

வைப்போல் நினைவுக்கு வரப்போகின்றன. இக்கிளி யையும் எடுத்துப்போய் உணவு கொடுத்து விடாய் தீரச் செய்யுங்கள்' என்றவாறு கூறிக்கொண்டே மற்ற முனிவர்களோடு எழுந்தேகி, பகற் பொழுதுக் கான அநுஷ்டானங்களை நிறைவேற்றலானார். அதற் குள் பகற்பொழுதும் கழிந்தது.

## மூன்றாம் சருக்கம்.

அப்பால் அந்திப்பொழுதும் வந்து தோன்றி யது. ஆகாயத்திலிருந்து ஆதித்தன் மேற்கடலில் விழ, அவ்வீழ்ச்சியின் விசையால் உயரக்கிளம்பிய திரளான தெள்ளிய நீர்த்திவலைகளெனக் கூடியவாறு தாரகைக் கூட்டமும் உடனே வானத்தில் உதித்தது. முனிவர்மனத்தைத் தவிர்த்து மற்றெல்லாவற்றை யும் இவ்வுலகில் இருள் வந்து சூழ்ந்து கொண்டது. அவனிதலத்தை மறைத்திருக்கும் அந்தகாரத்தைத் தன் தண் கதிர்களால் அகற்றி, அதைத் துலங்கவும் குளிரவும் செய்துகொண்டே குணதிசையிற் சந்திர னும் கிளம்பினன். அக்காலை நானும் உணவுண்டதும், ஹாரீதன் என்னை யேந்திக்கொண்டு, ஏனைய முனிவர் களும் புடைசூழத் தன் தந்தை யிருக்குமிடம் சென் றான். அப்பொழுது நிலவினால் நன்கு துலங்கி விளங்கும் அவ்வாச்ரமத்தின் ஒரு புறத்திற் பிரம் பாலாகிய ஓர் ஆசனத்தில் அம்மாமுனிவர் வீற்றிருக்க, ஜாலபாதன் என்னும் சீடனொருவன் கையில் தருப்பப் பவித்திரம் தரித்து மெதுவாக அவருக்கு விசிறிக்

கொண்டிருந்தான். ஹாரீதன் அவரை அணுகி, 'தந்தையே! இம்முனிவர் அனைவரும் மிக்க ஆவலுடன் இவ்விந்தையான செய்தியைச் செவியுற வந்திருக்கின்றனர். இதன் முந்திய பிறப்பின் கதையையும், இனிவரும் வரலாற்றையும் மொழிந்தருள வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டான். அம்முனி புங்கவர் முன்புறத்திலிருந்த என்றனை ஒரு முறை உற்று நோக்கினார். அப்பால் அச்சபையிலுள்ளோரை நோக்கி 'ஆவலிருப்பின் கேட்பீர்களாக' எனச் சொல்லவாரம்பித்தார் :—

"அவனியிற் புகழ்பெற்ற அவந்தியென்கிற தேசத்திற் சிப்ரை யென்னும் நதிக்கரையில், உலகத்தில் அனுபவிக்கக்கூடிய உத்தமப் பேறுகளுக்கு உறைவிடமாய் உஜ்ஜயினி யென்னும் மாநகரம் ஒன்றுண்டல்லவா? அஃதோர் சிறப்புற்ற சிவக்ஷேத்திரம். கைலாசவாசத்தையும் புறக்கணித்துப் பரமசிவன் இம்மாநகரத்தினில் மஹாகாலன் என்னும் திருநாமம் பூண்டு தங்கி வசிப்பதைப் பெருமையாகக் கொண்டிருக்கின்றார். அதைச் சுற்றிலும் சுண்ணச் சாந்திட்டு மிக்க வன்மையும் வெண்மையும் பொருந்தியமைந்துள்ள மிகப் பெரிய மதிற் சுவரானது, சிவபெருமானின் சன்னிதானம் இங்குச் சிறப்புற்றோங்குவதைக் கருதி, கைலைமலையே அம்மதிலுருவமாய் வந்துள்ளதோ வென்றெண்ணக்கூடியதா யிருக்கும். ஆழியெனத்தகும் ஆழமறியமுடியாத அகழியினாலும், செழித்துக் குளிர்ந்து வளர்ந்துள்ள சிங்காரத் தோட்டங்களாலும், அவற்றினிடையில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான அரண்மனைகளாலும் விளங்கும்

அந்நகரத்தில் விண்ணவரும் வந்து வசிக்க விருப்பங் கொள்வர்.

அச்சிறப்பான நகரத்தில் தருமத்தின் உருவெடுத்த மூர்த்தியெனத்தகும் **தாராபீடன்** என்னும் மன்னவன், மானிட வுலகுக்கு எப்பீடையும் நேரிடாவண்ணம் நேர்மையுடன் அரசு செலுத்திவந்தான். சாந்தியும் அருளுமாகிய குளிர்ந்த குணங்களைப் பெற்றவனென்று அவனைச் சந்திரனுக்கும், உடலின் சுடரொளியும் ஆண்மையுமாகிய தீயோரணுக முடியாத தீக்ஷண குணங்களைப் பெற்றவனென்று அவனைச் சூரியனுக்கும் ஒப்பிட்டு, ஒன்றுக்கொன்று விரோதமான இத்தகைய பல பெருங்குணங்கள் ஒருங்கே சேர்ந்து ஒற்றுமையாய் நிலைத்திருக்கும் அரும் பிரபாவம் வாய்ந்தவன் அவ்வேந்தன் என வியந்து கூறுவர் விவேகிகள். இரதிதேவியின் இரக்கமுறக் கூடிய புலம்பல்களைக் கேட்டு மனமிரங்கிய மஹேச்வரன் படைத்த மற்றொரு மன்மதனென்று அவனழகைப் பார்த்துப் பிரமித்துக் கூறுவர் பலர். அவன் தன் புயபலத்தினலே பூமண்டலத்தை வென்று வசப்படுத்தியவன். தருமசாஸ்திரங்களைக் கசடறக் கற்றவன். மதிவன்மையினல் மேன்மையுற்றவன். இவனது சரித்திரத்தை ஜனங்கள் எப்பொழுதும் இன்பத்துடன் கூறிக் களிப்பர். இவனது அரசாட்சியைக் கண்டு அகில ஜனங்களும் அவன்பால் அன்பு பாராட்டுதல் அதிகரிக்கவே, அவ்வரசன் தன் பிறப்பே பெரிதும் பயன் பெற்றதெனப் பாராட்டலானன்.

இளமைப் பருவ முதலாகப் பழகி இவ்வரசனிடம் இன்புற்று வந்தவனுன **சுகநாஸன்** எனப்படும் அந்

தனொருவன் அவனுக்கு அமைச்சனு யிருந்துவந் தான். எல்லாச் சாஸ்திரங்களையும் அவன் முற்றும் கற்றவன். எக்காரியத்தையும் ஊக்கங் குன்றாது நுட்ப மாக நோக்குபவன். நீதிசாஸ்திரத்தைப் பிரயோ கிப்பதில் நிகரில்லாத் திறமை வாய்ந்தவன். சத்தி யந் தவறாதவன். தசரதருக்கு வசிஷ்டரைப் போல வும், தருமபுத்திரருக்கு தௌம்யரைப் போலவும், தாராபீடனுக்கு அவ்வமைச்சன் அமைந்திருந்தான்.

அவ்வரசன், தனது ஆளுகைக்குட்பட்ட அகண் டமான இப்பூமண்டலத்தில் ஆயிரக்கணக்கான ஒற்றர்களை எல்லாவிடத்தும் அனுப்பி, அவர்களிட மிருந்து எப்பொழுதும் மன்னவர்களுடையவும் மற்ற வருடையவும் மூச்சு விடுதல் முதல் எல்லா நிகழ்ச்சி களையும் அகத்துள் நடப்பவற்றைப் போலவே நுட்ப மாய் அறிந்துவந்தான். அவன் அரசாங்கம் அசைவுறு தவாறு அனைத்தையும் ஒழுங்காய் அமைத்தனன். இராஜ்யத்தில் நிறைவேற்றாது நின்றுள்ள காரியம் இனி எதுவுமில்லை யென்று நன்குணர்ந்து திருப்தி யடைந்தான். அவ் வமைச்சனிடம் அப்பால் அரசாங் கத்தை ஒப்புவித்து, அமைதி பெற்ற மனத்தினனாய், இல்லறவின்பத்திற் சில காலம் ஈடுபட்டு அவன் காலங் கழித்துவந்தான். சுகநாஸனும் சுறுசுறுப்பா யிருந்து, இராஜ்யத்திலுள்ளோர் அனைவரும் போற்று மாறு மிகப் பொறுப்புணர்ந்து அறிவுவன்மையினால் அரசாங்கத்தைத் திறம்படவே நடத்திவந்தான். தாரா பீடன் தரணியில் தேவேந்திரபோகத்தைத் தென் புடன் அனுபவித்துவந்தும், வருடங்கள் பல சென் றும், வம்ச விருத்திக்கு இன்றியமையாத ஒரு மைந்

தன் முகத்தைக் காணும் இன்பமொன்றை மாத்திரம் அடைந்தானில்லை. அநேகம் அரசர்கள் அவனடியிற் காத்திருந்தும் தநயனில்லாக் குறையினால் தன்னைத் துணையற்றவனென்றே எண்ணித் துன்புறுவான்.

சிவபெருமானின் சிரத்திற்குச் சந்திர கலையைப் போலவும், திருமாலின் மார்புக்கு மாபெருஞ் சோதியான கௌஸ்துப மணியைப் போலவும் விலாஸவதி யென்னும் பெண்மணி யொருத்தி அப்பார்த்திவனுக்குப் பட்டத்தரசியாய் அமைந்திருந்தாள். அரசனை ஒருக்கால் அவளிருக்கும் அந்தப்புரம் செல்ல நேரிட்டது. ஆங்கு அவள் சிறியதோர் மஞ்சத்தில், அணிகளின்றியே, அம்புயமலர் போன்ற தன் முகத்தை இடது கரத்திற் சாய்த்துக்கொண்டு, இடைவிடாது கண்ணீர் உதிர்த்து மேலாடை நனைய, அடங்காத் துயரத்துடன் உட்கார்ந்திருக்கக் கண்டான். சற்றுத் தூரத்தில் அந்தப்புரத்துக் கிழவிமார் சிலர் இருந்துகொண்டு அவளுக்கு ஆறுதல் கூறிவந்தனர். வேந்தன் வருவதைக் கண்டு எழுந்திருக்க முயன்ற அவளைத் தடுத்து அவன் அம்மஞ்சத்திலேயே உட்காரச் செய்து தானும் உட்கார்ந்தான. உடனே அவனும் கலங்கிய மனத்தினனாய் அவளைக் கண்ணீரைத் துடைக்கச் செய்து இங்ஙனம் வினவினான்.—'தேவி! நீ என் வாய் திறவாமலே இங்ஙனம் அழவேண்டும்? அணிகளைக் களைந்து இவ்வலங்கோல நிலைமையில் நீ இருப்பதைக் கண்டு என் மனம் கவலையுறுகின்றது! என்னிடம் ஏதேனும் தவறுதலுண்டோ? அன்றேல் பணியாளர் எவரேனும் பிழை செய்தனரோ? தேவி! மனத் துயருக்கு முகாந்தரத்தை முன்னம் மொழிந்திடுவாயாக' என்றனன். விலாஸவதி அதற்கு மறு

மொழியொன்றும் அளிக்காது மனநோயுற்றவாறிருக்கவே, பக்கத்திலிருந்த பணியாளரைநோக்கி அவள் வருந்துவதற்குக் காரணம் கேட்டான்.

அப்பொழுது மகரிகை யென்னும் தாம்பூலத் தட்டேந்தும் மாதொருத்தி மன்னவனுக்கு முன் வந்து மறுமொழி யுரைத்தனள்.—' தேவ! தேவரீரிடம் சிறிதேனும் தவறுதல் இருக்குமோ? குற்றேவல் புரியும் மற்றவர் மனத்திலேனும் பிழை செய்ய எண்ணுவதுதான் எங்ஙனம்? ஆனால் உண்மை யாதெனில்— மக்கட்பேறின்றி வெகு காலமாக வீணாக வாணாளைக் கழிப்பதைக் கருதியே இத்துயரத்தில் அரசியார் ஆழ்ந்திருக்கின்றனர். இத்துயரம் இவரது மனத்தில் வெகு நாட்களாகவே குடிகொண்டிருந்தும், தம்மை வருந்தச் செய்ய விரும்பாதவராய் அதை விளங்கச் செய்யாதிருந்து வந்தார். இன்று நோன்பு தினமான சதுர்த்தசி யென்று மஹாகாலனைத் தொழுவதற்குச் சென்றார். அவ்வாலயத்தில் மஹாபாரதம் ஓதுகையில் 'புத் என்னும் நரகத்திற்குப் போகாதபடி பெற்றோரைக் காப்பதால் புத்திரன் எனப்படுகின்றான்; புத்திரப்பேறில்லாதார்க்குப் புண்ணிய லோகமில்லை' என்று மொழிந்ததைச் செவியுற நேரிட்டது. எரியும் சிறு நெருப்பில் நெய்யூற்றினாற்போல இவ்விடயம் இவரது துயரத்தைப் பெரிதும் தூண்டியெழுப்பிவிட்டது. இதைக் கேட்டு அரண்மனை வந்ததும் ஆறாத்துயருடன் இவ்விதமே இருந்து வருகிறார். இதுதான் தத்துவம்' என்றனள்.

இதைச் செவியுற்று, அரசன் சற்றுச் சும்மாவிருந்து, பெருமூச்செறிந்து இங்ஙனம் மொழிந்

தான் :—'தேவி! இவ்வேதனை அல்லும் பகலும் என் மனத்தையுந்தான் வாட்டுகின்றது. குழந்தையை எடுத்தணைத்து இன்புறும் பேற்றைப் பெற யாம் பாத்திர மல்லோம். இஃது ஈசன் செயலல்லவோ? இதற்காகப் புலம்புவதிற் பயனென்ன? மனித முயற்சிக்கு இயன்றதை யெல்லாம் செய்வதுதான் உசிதம். குருமாரிடம் பக்தி பண்ணுவதிலும், முனிவர்களையுபசரிப்பதிலும், தைவங்களைத் தொழுவதிலும் முழு மனத்துடன் முயற்சிப்பாயாக. முனிவரல்லவோ மேலான தவம்? முன்னால் விபண்டக மாமுனிவரின் புத்திரரான ருச்யச்ருங்கர் என்னும் இருஷியினுடைய அருளாலல்லவோ அம்முதிர்ந்த வயதிலும் தசரத மஹாராஜன் நான்கு புதல்வர்களைப் பெற்றார்? இத்துயரத்தை விட்டு. நமது கோரிக்கை ஈடேறத் தைரியத்துடன் தரும காரியங்களை ஆவலுடன் செய்து வருவாயாக' என அவளுக்கு ஆதரவுடன் ஆறுதல் கூறி, அவள் அமைதியுறும் வரையில் ஆங்கு தங்கி விட்டு, அப்பால் தன் இருப்பிடம் போனான்.

அரசனது உபதேசத்தைக் கேட்டு விலாஸவதி தேறுதலடைந்து, தன் தினசரிகாரியங்களில் வழக்கம்போல் ஊக்கம் செலுத்தலானாள். அது முதலாகத் தைவங்களை வெகு பத்தியுடன் தொழுது துவந்தாள். பெரியோரைப் பேராதரவுடன் பணிந்துபசரித்தாள். அந்தணரைக் கொண்டு வேதங்களை யோதிவைத்தாள். அரசு முதலிய மஹாவிருக்ஷங்களை வலம் வந்து வணங்கினாள். மந்திரமோதி மிகத் தூய்மையான குளிசங்களைக் கட்டிக் கொண்டாள். மிகப் பிரசித்தி பெற்ற மடுக்களில் மஞ்சன

மாடினாள். தினந்தோறும் நவரத்தினங்களும் எள்ளும் அடங்கிய பொற்கலயங்களை வேதியருக்கு வழங்கி வந்தாள்.

இங்ஙனம் சில காலம் செல்ல, அரசன் ஒரு நாள் இரவு, வெண்மையான மாடியின்மீது விலாஸவதி இருந்ததாகவும், அவளது முகத்தினுள் பூரண சந்திரன் புகுந்ததாகவும் கடையாமத்திற் கனவு கண்டான். உடனே விழித்தெழுந்து வியப்புற்றுச் சுகநாஸனை வரவழைத்து அச் செய்தியைச் செப்பினான். அமைச்சனும் அகமகிழ்ந்து 'தேவ! நமது கோரிக்கை நன்கு நிறைவேறும். சிறிது நாட்களிலேயே மைந்தன் முகத்தைக் காணும் பேரின்பம் கிடைக்கப் பெறுவீர்கள். இப்பொழுதே வெண்மையான உடை தரித்து வேதியரொருவர் வந்து, மலர்ந்த வெண்தாமரைமலரொன்றை எனது தேவியார் மனோரமையின் மடியில் வைத்தேகியதாக நானும் கனவு கண்டேன். இதினும் மேலான பேரின்பம் நமக்கு வேறென்ன? இரவு முடிவிற் காணும் கனவு பெரும்பாலும் பயன் தராமற் போவதில்லை' எனக் கூறிவருகையில், அவனை அரசன் கரத்திற் பற்றிக் கொண்டு, விலாஸவதி யிருக்குமிடம் சென்று, இருவருமாக அவ்விரு கனவுகளையும் கூறி, அவளையும் இன்புறச் செய்தார்கள்.

சில நாட்கள் சென்றதும் தேவதைகளின் அருளால் விலாஸவதி கருப்பவதியானாள். காலம் செல்லச் செல்ல, கருப்பமும் முதிர்ந்துவர, நீர் நிரம்பிய மேகம்போல மெள்ள மெள்ள அவள் உலாவிவந்தாள். இயற்கையிலேயே உயர்வழகு பொருந்திய

அவளுடல் தாழைமடல்போல் மேன்மேலும் வெண்ணிறம் பெற்று விளங்கி வந்தது. அந்தப்புரத்துப் பணிமாதர்கள் இந்தக் குறிகளைக் கொண்டு அவளது கருப்பநிலைமையை அறிந்துகொண்டனர். அந்தப்புரத்துப் பணிமாதர்களுக்குத் தலைவியாயிருப்பவள் குலவர்த்தனை யென்பவள்; அக்கிழவிக்கு அந்தப்புரத்திலும், அரசனருகிலும் செல்வாக்கு மிக வுண்டு. பல மன்னர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் இடையிற் கொலுமண்டபத்தில், தாராபீடன், தன முன்புறததில் உட்கார்ந்துள்ள சுகநாஸனோடு பேசிக்கொண்டு வீற்றிருக்கும் ஓர் சமயத்தில் அக்குலவர்த்தனை அவனை யணுகிச் சென்று, செவிக்கருகில் விலாஸவதியின் கருப்பச் செய்தியை அறிவித்தனள்.

அரசன் அப்பொழுது ஆனந்தபரவசனாய் முகமலர்ச்சியோடு அமைச்சனை நோக்கினான். சந்தர்ப்பமனைத்தையும் நுட்பமாக யோசித்துச் சுகநாஸன் சற்று ஆசனத்தை நகர்த்திக்கொண்டு, அரசனுக்கு அருகில் வந்து, மெதுவாக 'என்ன! அக்கனவு பலித்துவிட்டதோ? குதூஹல மேலிட்டுக் குலவர்த்தனை வந்த வகையும், என்றுங் காணாத தமது முகமலர்ச்சியோடு கூடிய தோற்றமும் அச்சுபச் செய்தியையே குறிப்பிடுகின்றன. ஆவலுள்ள என்றனக்குச் செய்தியைக் கூறியருள வேண்டும்' என வினவினன். அதற்கு மன்னவன் 'குலவர்த்தனை கூறுவது உண்மையாயின் கனவு பலித்ததெனவே கருதலாம். ஆகிலும் நமக்கேது அவ்வளவு பாக்கியம்? எழுந்திருங்கள்; நேரிற் சென்று அறிந்து

வருவோம்' எனக் கூறி, குலவர்த்தனைக்குத் தனது பொன்மாலையைப் பரிசாக அளித்துவிட்டு, சுகநாஸனுடன் எழுந்து அந்தப்புரம் சென்றான். ஆங்கு விலாஸவதி இருக்குமிடம் புதிதாகச் சுண்ணப் பூச்சிட்டு வெளுத்துச் சுத்தமாயிருந்தது. அழகிய வெண்பட்டினால் விதானமிடப் பெற்று, மிருதுவான மேல் விரிப்புள்ளதான சயனத்தில் அவள் படுத்திருந்தாள். அந்தப்புரக்கிழவிமார் சிலர் அவளுக்குப் பொற்குடத்தில் மலர்களிட்டு நீராஞ்சனம் எடுத்துக்கொண்டிருந்தனர். பார்த்திவன் வருவதைப் பார்த்து, அவள் பரபரப்புடன் பணிமாது நீட்டிய கரத்தைப் பற்றியவளாய், மற்றொரு கையை இடது முழந்தாளில் ஊன்றியவாறு மெதுவாக எழுந்தாள். அதைக் கண்டு மன்னவன் 'தேவி! போதும்; உபசாரம் வேண்டேன்' என மொழிந்து, அவளை உட்காரச் செய்து, அதே மஞ்சத்தில் ஒருபுறம் தானும் உட்கார்ந்தான். பின்னுமோர் உயர்ந்த ஆசனத்தில் அமைச்சனையும் உட்காரச் செய்தான. அவள் கருப்பவதி யென்று நேரிற் கண்டு தெரிந்தும், மன்னவன் மகிழ்ச்சிகொண்டு பரிகாசமாய் 'தேவி! குலவர்த்தனை ஏதோ கூறுகிறாளே; அஃதென்ன உண்மைதானோ? எனச் சுகநாஸர் அறிய விரும்புகிறார்' எனப் புன்சிரிப்புடன் கேட்டான். அதற்கு அவள் சிறிது சிரித்த முகத்தினளாய் தலைவணங்கிக் கொண்டாள். அப்பால் சிலநேரமிருந்துவிட்டு இருவரும் இன்புற்று அவரவர் இருப்பிடம் சென்றனர்.

பிறகு விலாஸவதிக்குப் பிரசவகாலம் நெருங்கிற்று. நற்செயலாய் அப்பிரசவதினம் சிறப்புற்ற

நன்னாளாய் விளங்கிற்று. அடிக்கடியும் நாழிகைகளை நுட்பமாகக் குறித்துக்கொண்டு சோதிடர்கள் இலக்கினம் பார்த்து வந்தனர். ஓர் உத்தமவேளையில் உலகத்தோருக்குக் களிப்பையும், அப்பால் வியப்பையும் அளிக்கப்போகும் மைந்தன் விலாஸவதியினிடம் ஆவிர்ப்பவித்தான். அக்காலை அரண்மனையில் மாத்திரமல்ல மற்றுமெல்லா விடங்களிலும் பலவித வாத்தியங்கள் முழங்கின. அந்தப்புரத்தோரும், அரசர்களும், வாலிபரும், வயது முதிர்ந்தவரும், அனைவரும் ஆங்காங்கு ஒருங்கு கூடி ஆனந்தக் கூத்தாடினர்.

பார்த்திவன் தன் பாலகனது இளமுகத்தைப் பார்க்கப் பரபரத்த மனத்தினனாய்ச் சோதிடகலைஞர் கூறிய முகூர்த்தத்திற் சுகநாஸனையும் அழைத்துக்கொண்டு அந்தப்புரம் சென்றான். பிரசவகிருஹத்தின் வாயிற்படியில் இரு புறமும் மணிமயமான மங்கள கலசங்கள் இரண்டு நீர் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன. புஷ்பமாலைகளும், பச்சைத்தோரணங்களும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவ்விடத்தில் எத்தோஷமும் சேராதபடி ஒருபுறம் வேப்பிலைகளை யெரித்துப் புகையுண்டாக்கப்பட்டு வந்தது. ஒருபுறம் வேதியர் ஸஹஸ்ரநாமம் ஓதிவர, வேறொருபுறம் வயது சென்ற பெண்டுகள் மங்களப் பாடல்களை மனோகரமாகப் பாடிக்கொண்டிருந்தனர். உதயமாகும் சந்திரபிம்பம் போன்ற நிறத்தையும் அழகையும் பெற்ற அவ்விளங்குழந்தையை அரசனும் அமைச்சனுமாக இமைகளசையாமற் கண்டு களித்தனர். அப்பொழுது அரசனை நோக்கிச் சுகநாஸன் 'வேந்தே! குழந்தைக்கு இந்த இளந்தளிர்போன்ற நிலைமையிலும்,

செங்கமலமலர்போன்ற நேத்திரங்களும், நீண்டுயர்ந்து தங்கச் சிப்பிபோன்றதாய் நாசியும், வெள்ளித் தகடுபோன்று விசாலமாக நெற்றியும், சங்குச் சக்கிர ரேகைகளைப் பெற்ற கரங்களும், மற்றுமுள்ள அரிய சக்கிரவர்த்திக்குரிய குறிளும் அமைந்திருப்பதைப் பார்த்தீர்களா? இதோ சங்கம் முழங்குமாப்போலே இக்குழந்தை அழும் கம்பீரத்தொனியைக் கேளுங்கள்' என்ருன்.

இச்சந்தர்ப்பத்தில் **மங்களகன்** என்னும் சேவகன் ஒருவன் பரபரத்துப் பரமானந்தத்துடன் அரசனிடம் ஓடிவந்து, அடிபணிந்து, மந்திரியார்மனைவியான மனோரமாதேவியாரும் ஓர் மைந்தனை யீன்றதாக மொழிந்தனன். அது கேட்டு மன்னவன் பன்மடங்கு மகிழ்வெய்தி 'இச்சமயத்தில் மனோரமையினிடம் இக்குமரன் பிறந்தது, இரேணுகையினிடம் பரசுராமன் தோன்றியதை நினைப்பூட்டுகின்றது. இக்குமாரரிருவரும் கிருஷ்ணனும் பலராமனும் போல் வாழக்கடவர். இன்பம் இன்பத்தையும், துன்பம் துன்பத்தையும் தொடருவதாக உலகத்தோர் கூறுவது உண்மையே' எனப் பகர்ந்து, பரிகாசத்துடன் சுகநாஸன் மீதிருந்து வெண்பட்டுப் போர்வையைத் தானுகவே பரிசாகப் பறித்துக்கொண்டான். உடனே புகழ்கூறும் கவிஞர் கட்டியம் பாட, பற்பல வாத்தியமுழக்கத்துடன் பரிஜனம் பின்தொடர, மந்திரியின் மாளிகைக்கு இருவரும் சென்று, அவ்விளங்குழவியையும் பார்த்து விட்டுப் பன்மடங்கு அதிகமாக அப்பெருமகிழ்ச்சியைக் கொண்டாடினன். பிறகு பார்த்திவன் பத்தாம் நாள் மங்கள ஸ்நானதி

களைச் செய்துகொண்டு, கோதானம் சொர்ணதானம் முதலியவைகளை மிகச் சிறப்பாகப் பண்ணினான். இக் குழந்தையின் அன்னையினுடைய முகத்தினுள் அகில கலைகளோடும் அம்புலி புகுந்ததாகக் கனவிற்கண்டு அவள் கருப்பந்தரித்ததால், வேந்தன் தன் மைந்தனுக் குச் **சந்திராபீடன்** எனப் பெயரிட்டான். மறுநாள் மந் திரியும் தன் குமாரனுக்கு வைதிகச் சடங்குகளைச் செய்து, அரசனது கருத்தையும் அனுசரித்து வேதி யற்கேற்ப **வைசம்பாயனன்** என்று நாமகரணம் செய் தான். அப்பால் சூடாகரணம் முதலிய சடங் குகள் முறைப்படி நிறைவேற்றப்பட்டன. இவ்விரு வரும் அரண்மனையில் வெகு சிறப்பாக வளர்க்கப் பட்டுக் கிரமமாகக் குழந்தைப்பருவமும் அவர்களுக் குக் கழிந்து வந்தது.

## நான்காம் சருக்கம்.

பிறகு தாராபீடன் தன் குமாரனுக்குச் சிறப் பாகப் பயிற்சியளிக்க விரும்பி, சிப்பிரா நதிக்கரையிற் பட்டணத்திற்குப் புறம்பாக, அரைக் குரோசதூரம் விஸ்தீர்ணமுள்ள வித்தியாசாலை யொன்றை நிகரில் லாச் சீர்மைகள் பொருந்தியதாய் நிருமித்து வைத் தான். வெவ்வேறு வகையான கல்விகளைக் கற்பிப் பதற்கும், சிலம்பப் பயிற்சிகள் செய்வதற்கும், விளை யாடுவதற்கும் பலவேறு கட்டிடங்கள் அதில் அமைக் கப்பட்டன. சற்று ஒதுக்குப் புறத்திற் குதிரைகள் கட்டும் தொழுவமும் கட்டப்பட்டது. இக்கல்விச்

சாலையைச் சுற்றிலும் சுண்ணச்சாந்து பூசிய பெரிய மதிற்சுவர் எழுப்பபட்டிருந்தது. அதற்கு ஒரு பக்கத்தில் மாத்திரம் விசாலமான கபாடங்களுடன் வாயிற்படியொன்று அமைக்கப் பட்டிருந்தது. சகல வித்தைகளிலும் தேர்ந்த அறிவுள்ள அநேகம் ஆசிரியர்களைப் பெருமுயற்சி செய்து வரவழைத்து, அவ்விடத்திலேயே அவர்களையும் வசிக்கச் செய்தான். சந்திராபீடனையும் வைசம்பாயனனையும் ஒரு சுபதினத்தில் ஆசிரியர்களிடம் ஒப்புவித்து, கூட்டிற் சிங்கக் குட்டிகளை விடுவதுபோல அவர்களை அச் சாலையிலேயே இருந்துவரவும் ஏற்பாடு செய்துவிட்டான். குருமார்களது குமாரர்களையே இச் சிறுவர் இருவருக்கும் பரிஜன பரிவாரங்களாகவும் இருக்கச் செய்தான். நாள்தோறும் வேந்தன் விடியற் காலையில் விலாஸவதியோடு வித்தியாசாலைக்கே சென்று அருமைப் புதல்வனைப் பார்த்து வருவான்.

புத்தித்திறமையும் அமைதியும் அமையப்பெற்ற மாணுக்கனுன சந்திராபீடனுக்கு அவரவரது முழுத் திறமையையுங் காட்டி ஆசிரியர்கள் அவ்வவ் வித்தையை ஆவலுடன் போதித்து வந்தனர். அவன் கிரமமாக வியாகரணம், தருக்கம், வேதாந்தம், தரும சாஸ்திரங்கள், இராஜநீதிகள், சங்கீத வித்தை, ஆயுதப்பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம், சிலம்பம், இயந்திரப் பிரயோகங்கள், சுரங்கங்களைக் கண்டு பெயர்த்தல், பல தேசபாஷைகள், சகல லிபிகள், மற்றுமுள்ள கலைகள் ஆகியவற்றில் ஒப்பற்ற திறமையைப் பெற்றுவிட்டான். இயற்கையிலேயே மிகத் திடகாத்திரம் பெற்ற இவன் பத்துப் புருடர்கள்

சுமக்கக்கூடிய பாரமுள்ள இருப்புத் தடியை ஒருவனாகவே எடுத்து எளிதிற் கொடியாடுவான். ஒவ்வொரு வாள்வீச்சால் அவன் பனைமரங்களையும்பங்கயத்தண்டுகளைப்போல் அநாயாசமாகவே அறுத்து வீழ்த்துவான். தேகவலிமையொன்றைத் தவிர்த்து மற்றெல்லாக் கலைகளிலும் வைசம்பாயனனும் சந்திராபீடனுக்குச் சமானமான யோக்கியதையை யடைந்துவிட்டான். அவ்விருவரும் ஒருவனை யொருவன் விட்டுப் பிரிந்திருக்கக் கூடாதவாறு அவ்வளவு அன்னியோன்னியப் பிரீதியைப் பெற்று, உடன் பிறந்தோரினும் உயர்வாகக் கூடிப் பழகி வந்தனர்.

இங்ஙனம் கல்விச்சாலையில் இருந்துவரும் போதே அவனது இயற்கையான அழகிய தோற்றத்தைப் பன்மடங்கு பெருகச் செய்யும் வாலிபவயதையும் கிரமமாக அவன் அடைந்தான். அவன் சகல கலாவல்லவனானதாக ஆசிரியரால் ஆமோதிக்கப் பெற்றானென அரசன் அறிந்து, ஒரு சுபதினத்தில் அவனை வித்தியாசாலையிலிருந்து அழைத்து வருவதற்கு வலாஹகன் என்னும் சேனைத்தலைவனை அனுப்பினன். அவன் அங்ஙனமே சென்று வாயிற்காப்பவனிடமிருந்து அனுமதி பெற்று, உட்சென்று, இராஜகுமாரனை அணுகிச் சென்னிவணங்கி, ஆங்கிருந்ததோர் ஆசனத்தில் அவனது அனுமதிப்படி யுட்கார்ந்தான். அப்பால் சந்திராபீடனுக்கு அருகில் ஆசனத்தை யிழுத்துக்கொண்டு வணக்கத்துடன் இங்ஙனம் விண்ணப்பம் செய்தான்: —“ அரசிளங்குமர! சாஸ்திரங்களெல்லாம் உம்மால் கற்கப்பட்டன. சகலகலா வல்லவராயினீர். ஆயுதப் பற்சியிலும் நிகரற்றதோர் திறமை

யைப் பெற்றுவிட்டீர். வித்தியாசாலையினின்றும் இனி விலகலாமென்று ஆசிரியர் அனைவராலும் ஆமோதிக்கப் பெற்றீர். பெற்றோர் முதலிய அனைவரது கோரிக்கைகளும் குறைவின்றி நிறைவேறின. இனி உம்மை உலகத்து ஜனங்களும் அந்தப் புரத்தோரும் கண்டு, வெகு நாட்களாக அவர்களுக்கு இருந்துவரும் ஆவலைத் தீர்த்துக் கொள்ளட்டும். நீர் வித்தியாசாலையில் வசிக்கத் துவக்கி இப்பொழுது பத்து வருடங்கள் ஆகின்றன. ஆறும் ஆண்டில் இச்சாலையிற் பிரவேசித்தது. ஆகவே பதினாறு பிராயம் பெற்று இப்பொழுது விளங்குகின்றீர். இனி ஆசிரியர்களின் அடிபணிந்து, நிர்ப்பந்தங்களினின்றும் நீங்கி, இராஜ போகங்களை இனிது அனுபவிப்பீராக' என்றவாறு மன்னர்பிரான் மொழியச் சொன்னார்.

'மேலும் அரசர் பெருமான் உங்களுக்காக இந்திராயுதம் என்னும் உத்தமமானதோர் குதிரையை அனுப்பியிருக்கிறார். அவ்வச்வம் கடலிலிருந்து உதித்த அற்புதப் பிறவியென்றும், நமது மன்னவருக்கே ஏற்றதென்றும் கூறி அதைப் பாரசீகதேசப் பிரபு தமது தந்தைக்குப் பரிசாக அளித்தார். அன்றியும் இதோ ஆயிரக்கணக்கான அரசர்கள் தம்மைக் காண்பதற்காக வாயிலில் காத்திருக்கின்றனர்' என்றான் வலாஹகன். தன் தந்தையின் கட்டளையை ஆதரவுடன் ஏற்று அரண்மனைக்குச் செல்ல விரும்பி 'இங்கு இந்திராயுதத்தைகொண்டு வருக' என்று கம்பீரமான தொனியில் உத்தரவிட்டான். உடனே இரண்டு குதிரை வீரர்கள் இருபுறமும் தங்கக் கடிவாளங்களைப் பற்றி இழுத்துக்கொண்டு இந்திராயுதத்தை இராஜ

குமாரனுக்கு முன்னிலையிற் கொண்டு வந்து நிறுத்தினர். சந்திராபீடன் அதைக் கண்டு வியப்புற்றுப் போனன். வெகு உன்னதமான புருடன் தாவினாலும் எளிதில் எட்டக்கூடாத உயரமுள்ளது அக்குதிரை. கறுப்பு, சிவப்பு, பசுமை முதலிய நிறங்களால் வானவில்லுக் கொப்பான ஒளியுடன் விளங்கிற்று. அதன் நாசிமுனை படபடவென்று துடித்துக் கொண்டிருந்தது. அதற்குக் கூடவே பிறந்த இரண்டு செஞ்சாமரைகளெனத் தோற்றும் இரண்டு செவிகளையும் அது நெறித்துக் கொண்டிருந்தது. பொதுவாக அதன் உருவம் உலகமனைத்தையும் கொண்டு விலை மதிக்கத் தகுந்ததாயிருந்தது. இதைக் கண்டதும் சந்திராபீடன் இங்ஙனம் எண்ணி வியப்புற்றான்: 'ஓ! என் தந்தையின் பெருமை யென்னே! எவரும் பெறுதற்கரிய இவ்வித இரத்தினங்களெல்லாம் அவருக்கு நன்கொடையாகக் கிடைக்கின்றனவே! இதன் கம்பீரமான உருவத்தோற்றமும், உடலொளியும், ஒப்பற்ற வன்மையும் இஃது தைவத்தன்மை பொருந்திய அருமையானதோர் பிராணியென எனதுள்ளம் கருதுகின்றது. தேவதைகளும் இவ்வாறு சாபக்கேட்டினல் குதிரையாகப் பிறப்பதுண்டு. முன்பு ஸ்தூலசிரஸ் என்கிற மாமுனி யொருவர் இரம்பையென்னும் தேவமாதைச் சபிக்க, அவள் விண்ணுலகை விடுத்து, ஒரு குதிரையின் வயிற்றிற் பிறந்து, 'அச்வஹ்ருதயை' என்னும் பெயருடன் 'மிருத்திகாவதி' யென்னும் பட்டணத்தில் 'சததந்வா' என்கிற அரசனிடம் வெகு காலம் மண்ணுலகில் வசித்துவந்ததாகக் கேட்டிருக்கிறேன். ஆகவே இதுவும் அவ்விதமான

தோர் பிராணியாகவே இருக்கலாம்.' என்று யோசித்துக்கொண்டே ஆசனம் விட்டெழுந்தான்.

அப்பால் வலாஹகன் கொண்டுவந்த பூமாலை முதலியதை யேற்று அணிந்து கொண்டான். ஆங்கிருந்த ஆசிரியர் அனைவரிடமும் விடைபெற்று, அவர்களால் வாழ்த்தவும் பெற்று, வைசம்பாயனனையும் சிறந்ததோர் குதிரையின் மீது ஏறச்செய்து, தானும் இந்திராயுதத்தினிடம் சென்றான். அதனிடம் 'ஓ மேன்மை பொருந்திய அச்வமே! நீ எவராக விருப்பினும் உன்றனுக்கு வந்தனம் செலுத்துகிறேன். உன்மேல் ஏறுவதாகும் எனது இக்குற்றத்தை நீ மன்னிப்பாயாக' என்று தனக்குள்ளேயே வேண்டிக் கொண்டான். இந்திராயுதமும் தலையைக் கீழும் மேலுமாய் அசைத்துப்பார்த்துக் கனைத்ததானது, அவனது அபிப்பிராய முணர்ந்து, அவனுக்கு அனுமதியளித்ததாகத் தோன்றியது. உடனே அதன்மீது ஏறிக்கொண்டு, உலகமனைத்தும் ஒரு சாணளவிலிருப்பதுபோலக் கருதி வெளிக் கிளம்பினான். வெளியில் இவனுக்காகக் காத்திருந்த திரளான குதிரைப்படை இவனைக் கண்டதும், உதயமாகும் சந்திரனைக் கண்ட கடலின் அலைபோல ஒருமிக்க அனைத்தும் கொந்தளித்தது. ஆங்கிருந்த அரசரனைவரும் குடைகளை விலக்கிவிட்டு வரிசையாக இவனைக் கண்டு வணங்கினர். வலாஹகன் அவ்வரசர்களுடைய பெயர் முதலியதைத் தனித்தனியே மொழிந்து சந்திராபீடனுக்கு அவர்களை அறிமுகம் செய்துவைக்க, அவ்வனைவரையும் அரசகுமரனும் தகுந்தவாறு கௌரவித்தான். பிறகு வைசம்பாயனன் அவனது குதிரையிலேறி இவனைப் பின்

பற்ற, மற்ற அரசர்களும் புடைசூழ இவன் பட்டணம் நோக்கிப் புறப்பட்டான். சுற்றிலும் அசைந்தாடும் நல் முத்துச்சரங்களைப் பெற்றதும், முனையிற் சிங்கப் பதுமையோடு கூடியதும், பெரிய பொற்பிடியையுடையதுமான வெண்குடை அவனுக்குப் பிடிக்கப்பட்டது. 'ஜய விஜயீபவ!' என்று வந்திபாடுவோரும் பிறரும் முன்னே அவனை வாழ்த்தியவாறு சென்றனர். நகரத்து ஜனங்கள் ஆயிரமாயிரமாய் அவரவரது பணிகளை நிறுத்திக்கொண்டு இராஜ குமாரன் வரும் பாதையில் இருபுறமும் குமிழி நின்று, உண்மையில் தைவத்தன்மைபொருந்திய தோற்றமுள்ளவனை சந்திராபீடனைக் கண்டு வந்தனை செய்து மகிழ்ந்தனர். சந்திராபீடனும் வைசம்பாயனனுடன் மெதுவாக அரண்மனை வாயிலில் வந்து சேர்ந்து, குதிரையை விட்டுக் கீழிறங்கினன்.

அப்பால் சந்திராபீடன் வைசம்பாயனனது கரத்தைப் பற்றிக்கொண்டு அரண்மனையிற் பிரவேசித்தான். சேனைத்தலைவனை வலாஹகன் வழிகாட்டிக்கொண்டு முன் சென்றான். ஆங்கு சித்திரப்பதுமைகளைப் போல அசையாது நிற்கும் வாளேந்திய கரத்தினரான வாயிற்காக்கும் வீரர்கள் இவனைக் கண்டதும் முறைப்படி வணங்கினர். குதிரைப்படைகளிருக்கும் இடங்களையும், கந்தமாதனன் என்னும் பட்டத்தானை முதலியவை கட்டியுள்ள மிகப் பெரிய கட்டிடங்களையும், பார்ப்பவர் அச்சமுறக்கூடிய போர்க்கருவிகள் அணியணியாய் வைக்கப் பட்டுள்ள இடங்களையும், நீதிபதிகள் மிகப் பெருந்தன்மைக் கேற்ப உடைகளையுடுத்து உயரிய ஆசனங்களில் அமர்ந்து

நீதிவிசாரணை நடத்திவரும் நியாயஸ்தலங்களையும், மற்றுமுள்ள அரசாங்க வேலைகள் நடந்துவரும் காரியாலயங்களையும் கடந்து உள்ளே சென்றான். அரண்மனை யாவும் முத்துத்தோரணம் முதலிய வற்றால் அலங்கரிக்கப்பட்டும், இயந்திரங்களைக் கொண்டு நீர் ஊற்றி ஒவ்வோரிடமும் குளிரச் செய்யப்பட்டும் இருந்தன. கடைசியாக அரண்மனையினுள் ஆஸ்த்தானமண்டபம் செல்ல, ஆங்கு 'மெய்காப்பாளர் நாற்புறமும் சூழ்ந்து நிற்க, வெண்மையானச் சிறியதோர் மஞ்சத்தில் தன் தந்தை வீற்றிருக்கக் கண்டான்.

தந்தைக்குத் தலைகுனிந்து வந்தனம் செய்தான். தாராபீடன் தூரத்திலிருந்தே தன் புயங்களை நீட்டி 'வரவேண்டும் அப்பா! வர வேண்டும்!' என்று மனமகிழ்ச்சியோடு மொழிந்து வரவேற்று அவனைத் தழுவிக்கொண்டான். பார்த்திவனது பாதபீடத்திற்கு அருகில், தாம்பூலத்தட்டேந்துபவள் துரிதமாய் ஆசனமாக மடித்திட்ட பட்டுச் சீலையைப் பாதத்தினால் தள்ளிவிட்டுத் தரையிலேயே உட்கார்ந்தனன். வைசம்பாயனனையும் வேந்தன், புதல்வனைப்போலவே வெகு அன்புடன் வரவேற்று, அருகில் ஓர் ஆசனத்தில் அமரச்செய்தான். தந்தையின் முன்னிலையிற் சிறிது நேரம் அவன் இன்புற இருந்துவிட்டு, அவனது அனுமதியைப் பெற்று ஒரு சிறு பரிஜனம் பின்தொடர, அன்னை முதலியோரைக் காண வைசம்பாயனனோடு அந்தப்புரம் சென்றான். அச்சமயம் புண்ணியமான கதைகளைக் கூறியும், புராணங்களைப் படித்தும், தருமங்களை யுபதேசித்தும் நற்போது

போக்கும் துறவறம் பூண்ட இருஷிமார் பலருக்கு இடையில், தன் அன்னை, அவர்கள் கூறுவன வற்றைக் கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். அவளைக் கண்டு அவன் அடிபணிய, விலாஸவதி வெகு பரபரப்பா யெழுந்து, அவனை யெடுத்து உச்சிமுகந்து, தானே நீராஞ்சனமெடுத்து, அவனுக்குப் பற்பல சுபங்களையும் கோரினாள். அவள் வைசம்பாயனனை யும் வெகு அன்புடன் வரவேற்றபின் அனைவரும் அவரவருக்குற்ற ஆசனங்களில் அமர்ந்தனர். அவள் சந்திராபீடனைத் தன் அருகிலிருக்கச் செய்து, முது கிலும் உச்சியிலும் தடவிக் கொடுத்துக்கொண்டு, அரு மைப்புதல்வனது முகத்தைப் பார்த்துப் பார்த்து அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பிறகு அவள் தன் மைந்தனை நோக்கி 'குழந்தாய்! வெகு இளம் பிராயத்திலும் உன் மனம் குழந்தைகளின் இயல்புக்கேற்ற விளையாட்டுகளிற் பற்றில்லாது, நீ குருமார்களின் கட்டுத்திட்டங்களுக்கு உட்படிந்து, அக்கல்விச்சாலையிற் கலக்கமின்றியே கல்விகளைப் பயின்று வந்ததை நோக்க என் மனம் வியப்புறுகின் றது. தந்தையின் பெருமுயற்சியினாலும் உனது திறமையினாலும் நீ சகலகலா வல்லவனாயினாய். இன் னும் சின்னாட்களில் உன்றனுக்கேற்ற மனையாட்டி யுடன் நீ கூடியிருக்கவும் காண விரும்புகிறேன்.' அது கேட்டு அவன் வெட்கத்துடன் சிறிது புன்னகை புரிந்து தலைகுனிந்தான். அப்பால் அந்தப்புரத்தோர் அனைவருக்கும் தரிசனம் தந்து வெளிவந்தான்.

அரண்மனைவாயிலில் சந்திராபீடனும் வைசம் பாயனனும் வந்து அவரவரது குதிரைகளி லேறிக்

கொண்டு, முன்போலவே இராஜகுமாரர்பலர் புடைசூழ மந்திரியைக் காண்பதற்கு அவனது மாளிகைக்குப் போயினர். ஆங்கு வாயிற்படியில் இறங்கி வைசம்பாயனனது கையைப் பற்றிக்கொண்டு உட்சென்றான். தன் தந்தையைப் போலவே அவ்விடத்திற் பல அரசர்களுக்கிடையில் அரசாங்க வேலைகளைக் கருத்தாகப் பார்த்துக் கொண்டு வீற்றிருக்கும் சுகநாஸனை அணுகி அடிபணிந்தான்; அங்ஙனமே வைசம்பாயனனும் செய்தான். உடனே சுகநாஸன் பரபரப்புடன் எழுந்து மனமகிழ எதிர் கொண்டழைத்தான். அமைச்சன் எழுந்ததைக் கண்ட அரசர்களும் அங்ஙனமே எழுந்து நின்றனர். சுகநாஸன் இராஜகுமாரனையும் வைசம்பாயனனையும் ஆனந்தக் கண்ணீர் ததும்ப ஆவலுடன் ஆலிங்கனம் செய்துகொண்டான். இராஜகுமாரன் தனக்கிடப்பெற்ற இரத்தினபீடத்தை விட்டுவிட்டு வெறுந்தரையில் உட்கார்ந்தான்; வைசம்பாயனனும் அவ்விதமே செய்தான். சுகநாஸனைத் தவிர மன்னவர் அனைவரும் உடனே தமது ஆசனங்களை அகற்றி நிலந்தனில் அமர்ந்தனர். சுகநாஸன் சற்று யோசித்து, உள்ளம் மகிழ, உரோமம் சிலிர்க்க இங்ஙனம் சந்திராபீடனை நோக்கிக் கூறினன். 'அப்ப! சந்திராபீட! என் சொல்வேன்! நம் மன்னர்பெருமான் இப்பொழுதுதான் செங்கோற் செலுத்துவதன் முழுப்பயனையும் பெற்றவராகிறார். எல்லா நல்வினைகளும் இப்பொழுதே நற்பயன் தந்தன. புண்ணியம் செய்யாதோர் புவனம் புகழும் உன் போன்ற புதல்வரைப் பெறுவ தெங்ஙனம்? இச் சிறு பிராய மெங்கே! வித்தையனைத்தையும் விரைவாகக்

கிரகிக்கும் இத்திறமை யெங்கே! தந்தையுடன் நீயும் இத்தரணியைப் பல்லாண்டு பல்லாண்டாகப் பெருமையுடன் பரிபாலிப்பாயாக.' என்றவாறு ஆசி கூறி, மாலை சூட்டி, ஆடையாபரணாதிகள் அளித்து, அப்பால் அவனுக்குப் போக விடையளித்தான். சந்திராபீடன் எழுந்து அந்தப்புரம் சென்று, மனோரமா தேவியைப் பார்த்துப் பணிந்துவிட்டு வெளிவந்தான்.

பிறகு இந்திராயுதமேறி, முன்னமே தன் தந்தையினால் இவனுக்காகப் பிரத்தியேகமாய் அமைக்கப் பெற்றிருந்த அழகிய அரண்மனைக்குச் சென்றான். அதில் ஸ்ரீமண்டபம் என்னும் உல்லாசக் கூடத்தில் ஒரு மஞ்சத்தின்மீது அவன் சற்று அமர்ந்திருந்தான். பிறகு மற்ற மன்னவர்குமாருடனே மஞ்சனமாடுதல் முதல் விருந்துண்ணுமீறாக எல்லாவற்றையும் முடித்துக்கொண்டான். அம்மாளிகையில் தன் பள்ளியறைக்குப் பக்கத்திலேயே ஓரிடத்தில் இந்திராயுதத்தைக் கட்டுவதற்கும் இடமொன்றை அமைக்கச் செய்தான். இச்செய்தியுடன் பகற்பொழுது சாய்ந்தது. புரோகிதர் பூபதிக்கு வாழ்த்து கூறி வெளிவந்துகொண்டிருந்தனர். சந்திராபீடன் தன் தந்தையையும் அன்னையையும் போய் தரிசித்துவிட்டுத் திரும்பி வந்து, அவனது அரண்மனையிற் படுத்து இரவைக் கழித்தான்.

பொழுது விடிந்ததும் எழுந்து, பிதாவின் அனுமதி பெற்று, அநேகம் வேட்டைநாய்களோடும் குதிரைப்படைகளோடும், கோதண்டமேந்திய காலாட் படைகளோடும் காடு சென்று, வேட்டையாடினான். அவ்விடத்திற் காட்டுப்பன்றிகளையும்

சிவங்கிகளையும், சிங்கங்களையும் அதிகடோரமான அம்புகளைக் கொண்டு அடித்து வீழ்த்தினன். துணிவும் வலிமையும் மிகப் பெற்றவனாதலால், மற்றுங் கொடிய விலங்குகளையும் துள்ளத் துள்ள உயிருடன் கவர்ந்து கொண்டான். அவ்வலி வுள்ள இந்திராயுதமும் இவ் வேட்டையினால் மிகச் சோர்வடைந்தது. அப்படிக்கிருந்தும் இந்திராயுதம் மற்றக் குதிரைப் படையினால் பின்பற்ற முடியாத வாறு வெகு விரைந்தோடி வந்தது. தன்னுடன் வேறு குதிரைகளில் ஏறிவரும் சில இராஜகுமாரர் களுடன் வேட்டையாடியதிற் கண்ட விநோதங்களைப் பற்றி வார்த்தையாடிக் கொண்டே திரும்பவும் அரண் மனை வந்து சேர்ந்தான். ஆங்கு அநேகம் பணியா ளர் ஓடிவந்து வேட்டைக்காக உடுத்திருந்த அவனது உடைகளைக் களைந்தனர்; சிலர் சிற்றாலவட்டம் வீசிக் கொண்டிருக்க மஞ்சத்தில் சின்னேரம் அமர்ந்து இளைப்பாறினன். பிறகு மஞ்சனமாடி, தைவம் தொழுது, மற்ற இராஜகுமாரர்களோடும் வைசம்பா யனனோடும் விநோதவார்த்தைகளாடிக் கொண்டே உண்டி வினையையும் முடித்துக் கொண்டான். அப் பால் ஆசமநம் செய்து, தாம்பூலம் தரித்துக்கொண்டு, இந்திராயுதத்தினிடம் சென்று, அதற்குத் தன் கையா லேயே புற்கவளம் சிறிது எடுத்துப் போட்டான். தந்தையை மீண்டும் தரிசித்துவிட்டு அன்றிரவையும் கழித்தான்.

மறுநாட் காலையில், அந்தப்புரத்துப் பணியாள ருக்குத் தலைவனான கைலாசன் என்னும் கஞ்சுகி யானவன் ஓர் அழகிய கன்னிகையை அழைத்துக்

கொண்டு சந்திராபீடனிடம் வந்தான். அவள் மிகப் பெருந் தன்மைவாய்ந்த பெண்மணியாகத் தோற்றி னாள். அக் கஞ்சுகி இவனை யணுகிப் பணிந்து இவ்வாறு கூறினன் :— 'ஐயன்மீர்! முன்னொருகால் நமது மன்னர்பிரான் குலூதராஜ்யத்தை வென்று, அவ்விடத்திற் சிறைப்பிடித்த மாந்தர்களின் இடையில் இவள் இருக்கக்கண்டு, அரசன் இவளை அந்தப் புரத்தில் தேவிகளிடம் ஒப்புவித்தார். இவள் அக் குலூதராஜன் புதல்வி. இவளைப் பத்திரலேகை யென்பார்கள். இராஜகுமாரத்தியெனக் கருதி இவளைத் தமது அன்னையார் தன் புத்திரியைப் போலவே பாராட்டி வளர்த்துவந்தார்கள். தமது முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான அந்தரங்கத் தோழியாகவும், தமக்குத் தாம்பூலத் தட்டேந்தும் சேடியாகவும் இருக்கத்தகுந்தவள் என்றெண்ணி, இவளை மகாராணியார் தங்களிடம் விட்டுவர வேண்டுமென உத்தரவிட்டார்கள்.' எனக் கைலாசன் பகர்ந்ததும், பத்திரலேகை கம்பீரமாக அவனுக்கு வந்தனம் செய்தாள். சந்திராபீடன் சற்றுநேரம் அவளை உற்றுநோக்கிவிட்டு, 'அன்னையின் ஆஞ்ஞையின்படியே' எனக் கூறி, கஞ்சுகியை அனுப்பிவிட்டான். பத்திரலேகை அவனைப் பார்த்ததுமே, மனதுக் கெட்டாததோர் காரணத்தினால் அவனிடம் பாசங்கொண்டு, அவனுக்குப் பணிவிடை செய்வதைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். அது முதலாக அல்லும் பகலும் அவனது நிழல்போல் அவள் அவனைவிட்டுப் பிரிவதில்லை. சந்திராபீடனும் அவளது அருங் குணங்களைக் கண்டு மனங் களித்து, எக்காரியத்திலும் அவளைத் தன் மற்

ரோர்; இருதயம்போலவே நம்பி, நன்கு அன்புடன் நடத்திவந்தான்.

## ஐந்தாம் சருக்கம்.

இவ்வாருகச் சில நாட்கள் சென்றுவர, வேந்தன் சந்திராபீடனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட விரும்பிச் சுகநாஸனோடு ஆலோசித்து, அதற்காகப் பண்டங்களைச் சேர்ப்பதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா அதிகாரிகளுக்கும் கட்டளையிட்டான். சின்னாட்களிற் பட்டம் பெறப்போகும் சந்திராபீடன் ஒரு நாள் வழக்கம்போல் சுகநாஸனைத் தரிசிக்கச் சென்றான். அமைச்சன் அதுதான் ஏற்ற தருணமெனக் கருதி, அவனுக்குப் பின்வருமாறு உபதேசிக்கலானான் :—

'அப்ப! சந்திராபீட! நீ அனைத்தையும் அறிந்திருக்கின்றனை. சாஸ்திரங்களையும் கசடறக் கற்றனை. உன்றனுக்கு இனி உபதேசிக்க வேண்டியது ஏதுமிலது. எனினும் என் கடமையென யான் உனக்குச் சிறிது கூற விரும்புகின்றேன். பிறவிச் செல்வம், புதிதான வாலிபப் பருவம், ஒப்புயர்வற்ற வடிவழகு, மானிடத்தன்மைக்கு மேலான திறமை ஆகியவற்றை நீ பெற்றிருக்கின்றனை. இவற்றுள் ஒவ்வொன்றுமே நல்லொழுக்கத்தை யொழிப்பதற்குப் போதுமானது. அவ்வனைத்தும் ஒன்று சேர்ந்துவிடின், நிலைமை எவ்வாருகுமென்பது கூருமலே விளங்கும். வாலிபப் பருவத்திற் புத்தியானது சாஸ்திரங்களாகும் தண்

ணீராற் கழுவப் பெற்றிருந்தும் கலங்கி விடுகின்றது. உன்னைப் போன்றவனே உபதேசங்களுக்கு உரியவனு கின்றான். மாசு மறுவற்றதோர் படிகமணியில் மதி யின் கதிரொளிகளைப் போல, மாசற்ற மனத்திலல் லவோ உபதேசகுணங்கள் ஊடுருவிச் செல்லும்? சான்றோர் உவக்கும் நற்குணங்களைப் பெறுதோர்க் குச் சாஸ்திரமோதுவதும் உயர்குடிப் பிறப்பும் உப யோகமற்றவை. குருவின் உபதேசம் புருடருக்கு மனத்திலுள்ள மாசுகளை அலம்புவதற்கு நீரில்லா நீராட்டம். நரை திரை முதலிய உருமாறுபாடேதும் உண்டாகாத முதிர்வற்ற மூப்பு. மன்னவருக்கோ இவ்வுபதேசம் இன்னும் இன்றியமையாதது. என் றாலும் அவருக்கு உபதேசிப்பவர் உலகில் அரிது. கற்றறிந்த மனிதரும், மன்னவன் மொழி எவ்விதம் இருப்பினும் அதையே எதிரொலியொப்பப் பின்பற்று கின்றனர். ஒருக்கால் எவரேனும் துணிந்து உப தேசிக்கப் புகினும், இறுமாப்பென்னும் கடும் விப் புருதியால் இப்பிரபுக்களுடைய செவிக்குழி முற் றிலும் மூடப்பட்டதுபோல் அவ்வுபதேசச் சொல் எதுவும் அவரது செவியினுட் புகுவதில்லை.

பிறகு இச்செல்வத்தினால் ஏற்படும் செருக்கை நீ மிக்க எளிதாக நினைத்துவிடவேண்டாம். இஃது எவ ரிடமும் நிலைத்து நில்லாமல் இங்குமங்குமாகச் சுழன் றோடும் இயல்பினது. இச்செல்வம் உதாரகுண முள்ள உத்தம புருடனை உபயோகமற்றவனுயெண்ணு கின்றது. அருங்குணம் படைத்தோரை அவசகுன மாகக் கருதியதுபோலக் கண்ணெடுத்துப் பார்ப்ப தில்லை. நிலையில்லாத் தன்மையதான இச்செல்வம்,

தீபத்தின் சுடரொளிபோல எவ்வளவு ஓங்கி யொளி வீசுகின்றதோ, அவ்வளவு மலினமான தீராத் தீவினை களையே தூமத் தொடரைப்போல வெளிப்படுத்து கின்றது. இது ஐம்புலன்களாகும் அடவி மான்களை மயக்கச் செய்ய மறவர்களின் பாட்டு. தீயொழுக்க மென்னும் பெரும் பாம்புகளுக்குப் படுக்கும் பாழி. செல்வச் சூட்டினூற் பிரபுக்கள் சமைக்கப்பெற்றவர் போலத் துள்ளித் துடிக்கின்றனர். இவர்கள் சூதாட் டத்தைப் பொழுது போக்குவதற்கான சிறந்த விளை யாட்டென்றும், மதுபானத்தை மனமகிழ்ச்சிக்கான மகோற்சவமென்றும், மூத்தோர் வார்த்தையை மதிக் காமலிருப்பது முற்றிலும் சுதந்திர புருடனது அரிய தோர் அடையாளமென்றும், இங்ஙனம் தீமைகளையும் நன்மைகளெனப் பகட்டாகக் கூறி உலகைப் பாழாக்க உலாவுகின்றனர்.

போதாக் குறைக்குப் பொருளென்னும் புலா லைக் கவர்ந்து விடுவதிற் பருந்து போன்று முற்றிலும் சுயநலமிகளான மாய மித்திரர்கள் இச் சீமான்களைச் சார்ந்துவிடின், அப்பால் அச்சீரழிவைச் சொல்லவும் வேண்டுமோ? ஆஸ்தானமாகும் அம்புயக் கயத்திற்கு வஞ்சனையில் வல்ல கொக்குகளெனத்தகும் இத்தோ ழர்கள் இப்பிரபுக்களை மகேந்திரனென்றும் மகேச்வர னென்றும் வீணிற் புகழ்வதையெல்லாம் கேட்டு, அப் படிப்பட்டவர்தாமெனத் தம்மை நினைத்து, மகாத் மாக்களுக் கேற்றவாறு நடிக்கவும் முயன்றுவிடுகின்ற னர். தாம் தரிசனம் தருவதையும் அனுக்கிரகமாக வும், கட்டளையிடுவதையும் வரப்பிரசாதமாகவும் கருதுகின்றனர். அல்லும் பகலும், அஞ்சலி செய்து

கொண்டு யாவனொருவன் தம்மைத் தேவதா மூர்த்தியைப்போல் போற்றி, மாய மாகாத்மியத்தை யேற்றி வைக்கின்றனரோ அவனது சொற்களையே இவர் செவியுறுகின்றனர்; அவனிடந்தான் செல்வத்தைச் சொரிந்து, இறுதியில் ஏமாற்றமு மடைகின்றனர்.

முடிவாக யான் மொழிவது என்ன வென்றால்— செங்கோலைச் செலுத்துங்கால் இவ்வகைச் சங்கடங்களெல்லாம் அநேக வகையில் அரசருக்கு வலியவே வந்து சேருகின்றன. விவேகிகளையும் கலங்கச் செய்து வீழ்த்திவிடும் வாலிபவயதில் நீ இருந்து வருகின்றனை. ஆனதுபற்றி எப்படியானால் மதியில் வல்ல மாயமித்திரர்கள் உன்றனை மோசத்திற் காட்படுத்தாமலிருப்பரோ, சிற்றின்பங்கள் எங்ஙனம் சற்றும் வசப்படுத்தாவோ, பிரஜைகள் எவ்விதம் பரிகசிக்காமலிருப்பரோ, பெரியோர் பழியும் எங்ஙனம் உன்றனிடம் பற்றுமலிருக்குமோ, உத்தமமானதோர் கொற்றவனைப் பெற்றேமென உலகம் எங்ஙனம் உன்றனைப் போற்றுமோ அவ்வாறு நன்கொழுக முயற்சிப்பாயாக. நீயோ சுயம் தீரன். தந்தையினால் பெரு முயற்சியோடும் பயிற்சி செய்விக்கப் பெற்றிருக்கின்றனை. உன் சற்குணங்களைக் கண்டுண்டான சந்தோஷமே இங்ஙனம் என்னைக் கூறத் தூண்டியது. இனி நீ சுபமாக இளவரசுப் பட்டம் பெற்று, உன் குலத்திற்குத் தொன்றுதொட்டு வந்துள்ள இச் செங்கோலைச் செவ்வெனச் செலுத்துவாயாக. முன்னமே உன் தந்தை முற்றிலும் சென்று உலகத்தை வென்றிருப்பினும், நீயும் முடிசூட்டிக் கொண்டு மேதினியைச் சுற்றி திக்விஜயம் செய்து வரவேண்டும்'

எனச் சுகநாஸன் கூறிமுடித்தான். அவ்வுபதேச மொழிகளால் தனக்கு விவேகம் விரிவடைந்ததாகவும், தன் உள்ளம் மிகத் தெளிவுற்றதாகவும் உணர்ந்தான் சந்திராபீடன். அதன் பிறகு அமைச்சனிடம் தன் மனக்களிப்பை அறிவித்து, விடை பெற்றுக்கொண்டு, மீண்டும் தன் அரண்மனை சென்றான்.

அப்பால் சொற்ப நாட்களிலேயே ஒரு சுப தினத்தில் சந்திராபீடனுக்கு முடிசூட்டு வைபவம் வெகு ஆடம்பரமாக நடந்தேறியது. அபிஷேக மண்டபத்தில் ஆயிரக்கணக்கான அரசர்களும், அந்தணர்களும், மற்றும் பெரியோர்களும் புடைசூழ்ந்தனர். அபிஷேகத்திற்காக அநேகம் நதிகளிலிருந்தும் கடல்களிலிருந்தும் பொற்குடங்களிற் புனிதமான நீர்களைக் கொண்டுவந்து, புண்ணியகீதங்களைப் பலர் பாட, புரோகிதர்கள் வேதமந்திரங்களை யோத, தாராபீடன் தானும் சுகநாஸனுமாக அவற்றைக் கொண்டு சந்திராபீடனுக்கு மனம் பூரிக்க மஞ்சனம் செய்து வைத்தனர். பின்னர் அந்தப்புரத்து மாதர்களுடன் விலாஸவதியும் வந்து நீராஞ்ஜநம் முதலிய மங்களச் சடங்குகளைத் தானே நிறைவேற்றினாள். பிறகு பிதாவே பிரம்புத்தடியேந்தி முன் புறத்தில் வழி விலக்கும் அதிகாரத்தைச் செலுத்திவர, அங்கிருந்து அநேக வாத்திய முழக்கங்களுடன் சந்திராபீடன் கொலுமண்டபம் சென்று, உதயகிரியின் உச்சியிற் பூரண சந்திரன் போல உயரிய தங்கச் சிங்காசனத்தில் ஏறியமர, அதை அனைவரும் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தனர். மன்னவரெல்லாம் மதிப்பிடுதற்கரிய திரவியங்களை இளவரசர்க்குக் கணக்கின்

றியே காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். பொன்னையும், பூமிகளையும், பசுக்களையும் தாராளமாகத் தாராபீடனும் தானம் செய்தான். மன்னவரும் மற்றவரும் ஏற்ற மரியாதைகளைப் பெற்று மனங்களித்தனர்.

இவ்வாறு இளவரசு அச்சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போதே, அவனது திக்விஜயத்தை யறிவிப்பதான புறப்பட்டுப் பறை மிகவும் கம்பீரமாக முழங்கிற்று. சந்திராபீடன் உடனே சிங்காசனம் விட்டெழுந்தான். 'ஜய ஜய' என்று அனைவரும் ஒருங்கே வாழ்த்து கூறினர். விலாஸவதி வந்து மங்களகரமாகப் புறப்பாட்டுச் சடங்குகளை நிறைவேற்றினள். பெற்றோரையும், சுகநாஸனையும், மற்றப் பெரியோரையும் அடிபணிந்து, அவர்களது அநுக்கிரகங்களைப் பெற்றுக்கொண்டு, அநேகம் அரசர்கள் பின்தொடர, இரத்தினங்களாலும், பொன்னணிகளாலும் அலங்கரிக்கப்பெற்ற இந்திராயுதமேறி வெளிவந்தான். பத்திரலேகையானவள் பெரிதும் அலங்கரிக்கப்பட்டிருந்த பட்டத்தானையின்மீது ஏறி இளவரசுக்கு முன்னே சென்றனள். இவர்களுக்கு முன்னாகவும் பினனாகவும் ஆயிரக்கணக்கான காலாட்படைகளும், குதிரைவீரர்களும், யானையேறிய சூரர்களும் அநேக போர்க்கருவிகளோடு அணிவகுத்து ஆரவாரத்துடன் சென்றனர். இங்ஙனம் இளவரசு திக்விஜயத்தின் பொருட்டு முதலிற் கீழ்த்திசை நோக்கிப் பிரயாணமானான்.

வைசம்பாயனனும் அவ்விதமே மங்களச் சடங்குகளைச் செய்துகொண்டு, வெகு உயரமான குதிரையிலேறிக்கொண்டு, வெண்குடை தரித்த அரசர்களும்,

சேனைத்திரளும் புடை சூழ, அவனது மாளிகையி லிருந்து புறப்பட்டு இரண்டாம் இளவரசு போன்ற வனுய் சந்திராபீடனுடன வந்து சேர்ந்து கொண்டான். அவ்விடத்திற் கரை புரண்ட கடல்போலச் செல்லும் படைத்திரளைப் பார்த்து வைசம்பாயனனும் ஒருவாறு வியப்படைந்தான். அப்பால் சந்திராபீடன் சிறிது தூரத்தில், சிப்பிராநதிக்கரையில் இவனுக்காகவும் இவனது பரிவாரங்களுக்காகவும் பலநிறமான தோர ணங்களோடும் அழகிய கொடிகளோடும் வரிசை வரிசையாக அமைக்கப் பட்டிருந்த கூடாரங்களிருக்கு மிடத்திற் சேனையுடன் போய் இறங்கினுன். அவ னுக்காக அமைத்திருந்த பெரியதோர் படக்குடியிற் பிரவேசித்து, வைசம்பாயனனேடும் இராஜகுமார ரோடும் விநோத வார்த்தைகளாடியவாறு, அவன் பெற்றேரைப் பிரிந்ததாலுண்டான மனக்கலவரத்தை ஒருவாறு மறந்திருந்தான். அப்பால் இரவும் வந்து தோன்றியது ; அப்பொழுது ஒரு புறம் வைசம் பாயனனேடும், மற்றொரு புறம் படுத்திருந்த பத்திர லேகையோடும் பேசிக்கொண்டே பெரும்பாலும் நித்திரை யின்றியே நிசியைக் கழித்தான்.

அவன் அதிகாலையில் எழுந்து, முறைப்படியே காலைச்சடங்குகளை முடித்துக்கொண்டு, பிரயாண பேரிகை முழங்க, விஜய யாத்திரை செய்யத் துவக் கினுன். திசைகள்தோறும், தேசங்கள்தோறும் அவன் படையெடுத்துச் சென்று போர்புரிந்து வென்ற பகை வரின் படைத்திரளால் தன் சேனையை மேன்மேலும் பெருக்கிக் கொண்டான். கானகங்களைக் கழித்தொ ழித்தான். மேடு பள்ளங்களைச் சீர்திருத்தி மார்க்

கங்களைச் சரிப்படுத்தினான். ஆங்காங்கு ஏரிகளையும் குளங்களையும் ஏற்படுத்தினான். தீயோரைத் தாழ்த்தித் தலை வணங்கச் செய்தான். அடைக்கலம் புகுந்தோரை அன்புடன் ஆதரித்தான். அரும் பொருட்களைச் சாலவும் சம்பாதித்தான். கப்பங்களைக் கிரகித்தான். தேசங்கள்தோறும் சட்ட திட்டங்களைச் சரிவர அமைத்தான். பலவிடங்களில் தன் ஞாபகச் சின்னங்களை ஸ்தாபனம் செய்தான். சிறந்த சாசனங்களை வரைந்துவைத்தான். உலகத்தோர் அனைவருக்கும் அன்னியோன்னியம் அன்பையும் ஒற்றுமையையும் ஓங்கச் செய்தான். தன் பராக்கிரமத்தையும் புகழையும் எங்கும் பரவச்செய்தான். இவ்வாறு அரும் பெருங்காரியங்களைச் செய்துகொண்டு முதலிற் கீழ்த்திசையையும், பிறகு தென் திசையையும், அப்பால் மேற்றிசையையும், அதன்பின்பு வடதிசையையும் வரிசைக்கிரமமாக வலம்வந்து வென்றான். இம்மகாவீரன் மூன்று வருடங்களில் இங்ஙனம் பூமண்டலத்தைச் சுற்றிவந்து, துவீபாந்தரங்களையும் தன் வசமாக்கிக்கொண்டு, தன் யாத்திரையை முற்றிலும் வெற்றிபெற முடித்துவிட்டான். இதன்பிறகு ஒருக்கால் கைலைமலையின் அருகில் **சுவர்ணபுரம்** என்னும் ஓரழகிய இடத்திற்கு வந்து சேர்ந்தான். அது **வமஜடர்** என்னும் வேடர்கள் குடியிருக்குமிடம். கிழக்குக் கடற்கரைக்குச் சமீபமாயுள்ள அச்சுவர்ணபுரத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டு, தரணியெல்லாம் அலைந்து திரிந்து ஆயாசமடைந்த தனது சேனையனைத்தும் இளைப்பாறும் பொருட்டுச் சில நாட்கள் ஆங்கு சுகமாகத் தங்கியிருந்தான்.

## ஆறும் சருக்கம்.

இவ்விதமாகச் சந்திராபீடன் சுவர்ணபுரத்தில் விடாய் தீர்ந்துவரும் நாட்களில், ஒருக்கால் இந்திராயுதமேறி வேட்டையாட வனத்தினில் உலாவுகையில், தற்செயலாக மலைச்சாரலில் இறங்கிவந்த ஆண்பெண்களான இரண்டு கின்னரர்களைக் கண்டான். அவன் அவ்வபூர்வமான பிராணிகளைப் பற்றிக்கொள்ள ஆவலுடன் கிட்டப்போனான். அக்கின்னரர் மானிடப் பிறவியைக் கண்டதில்லை யாகையால், அவனைப் பார்த்ததும் பரபரப்புடன் பயந்தோடத் துவக்கினர். சந்திராபீடன வெகு வேகமாக இந்திராயுதத்தைத் துரத்திக்கொண்டே தன் சேனையை விட்டு அக்கின்னர தம்பதியைத் தொடர்ந்து தொலைதூரம் சென்றான். குதிரை மகா வேகசாலியாகையால், அவ்விடமிருந்துச் சொற்பநேரத்திற் சந்திராபீடன் பதினைந்து யோஜனைத் தூரத்தைக் கடந்துவிட்டான். அப்பால் அக்கின்னரர்களோ, இவன் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே எதிரில் தோன்றிய குன்ற மொன்றின்மீது விரைவில் ஏறிப்போய் மறைந்துவிட்டனர்.

அதன் பிறகுதான் அவன் வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான். அவ்விடம் குன்றுகளும் கற்பாறைகளும் நிரம்பி யிருந்ததால் அதற்கப்பால் இவனாற் செல்லவும் முடியவில்லை. ஆகவே கடிவாளத்தையிழுத்துக் குதிரையைப் பிடித்து நிறுத்தினான். அப்பொழுது இந்திராயுதத்தையும் தன்னையும் உற்றுப் பார்த்தான். அக் குதிரையின் உடல் முடியவும் வியர்த்துப்போய் அது மிகக்

களைத்துப்போய்விட்டது. அப்பொழுது அவன் மனம் சோர்ந்து இங்ஙனம் எண்ணலானான் :—'சிறிதும் பயனின்றி ஒரு சிறுவனைப்போல என்னை இங்ஙனமும் ஆயாசப்படுத்திக் கொள்வேனோ? அக்குதிரைமுகத்தோரைப் பிடித்தோமென்றால் அதனால் யானடையும் பயன் யாது? இப்பொழுது பிடிக்காமற் போனதால் நேர்ந்த குறைதான் என்ன? ஓ! என்ன மூடத்தனம்! தோன்றியவாறு யான் யாதேனுமொன்றைப் பகுத்தறிவின்றி இப்படியும் செய்வேனோ? இராஜதருமத்தைப் புறக்கணித்து, சற்றும் யோசனையின்றியே சேனைகளையும் விட்டு விட்டு, ஆவேச முண்டவனை யொப்ப இவ்வளவு தூரம் வந்துவிட்டேனே! இவ்விந்திராயுதமும் நொடிப்பொழுதில் நெடுந்தூரத்தைக் கடந்து விட்டது. குதிரையின் வேகம் அதிவிரைவாக இருந்தமையாலும், கின்னர தம்பதிகளின் மீதே குறிவைத்தவாறு குதிரையிற் சவாரி செய்ததாலும், ஒரே சீராகக் கொடிகளும் மரங்களும் அடர்ந்து இலைச் சருகுகளால் மார்க்கம் மூடவும் பட்டிருந்ததாலும் இம் மகாரண்ணியத்தில் யான் திரும்பிப்போக வழியையும் காணமுடியவில்லை. எவரையேனும் கேட்டுச் சுவர்ணபுரம் போகும் வழியைத் தெரிந்துகொள்வோமென்றால், இவ்விடத்திற் பெருமுயற்சியோடு தேடிப்பார்த்தாலும் ஒரு மானிடவுருவையும் காண்கிலேன்.' எனச் சிந்தித்து, மீண்டும் சற்றுப் பின்வருமாறு யோசித்தான்.—

'பரதகண்டத்தில் எல்லாத் தேயங்களுக்கும் சுவர்ணபுரமென்பது வடதிசையின் எல்லைப் புறமென்றும், அதற்கப்பால் நிர்மானுஷ்யமான அரண்ணிய

மெனவும், அதற்கப்புறம் கைலாசமலை யென்றும் யான் கேட்டிருக்கின்றேன். கைலையங்கிரியும் இது தான். ஆகவே நானே கவனித்துத் தென்திசையைக் குறியாக வைத்துக்கொண்டு இப்பொழுது திரும்பிச் செல்லவேண்டும். தாம் செய்த பிழைகளின் பயனைத் தாமே அனுபவித்தாக வேண்டுமல்லவா ?' என்று எண்ணியவாறு, இடது கரத்திற் கடிவாளத்தைச் சற்று இழுத்துக் குதிரையைத் திருப்பினான். அப்பொழுது வேளையும் உச்சிப்பொழுதாய்விட்டது. வெயில் வெகு கடுமையாயிருந்தது. இந்திராயுதத்திற்கு ஏதேனும் நீரோடையில் தண்ணீர் காட்டிப் பசும் புற்களையும் மேயச்செய்து, தானும் தண்ணீரருந்தி, இருவரும் இளைப்பாறிய பிறகு திரும்பிப் போவோமென்று தீர்மானித்தான். அங்ஙனமே தண்ணீரிருக்குமிடம் தேடிப் போகையில், கைலை மலைக்கு வடகிழக்குப் பக்கத்திற் கார்முகிற் கூட்டம் போலத் தோற்றும் செழித்து வளர்ந்த மிகப் பெரிதான அழகிய சோலை யொன்று கண்ணிற் புலப் பட்டது. அவ்விடத்தை நோக்கிச் சிறிது தூரம் போகையில், குளிர்ந்த நீர்த் திவலைகளையும், பங்கய மலர்களின் பரிமளத்தையும் ஏந்திய மந்தமாருதம் வீச, அதையுணர்ந்து, அருகிலேயே நீரோடை யொன்று இருக்கவேண்டுமென நிச்சயித்தான. பகற் பொழுதின் வேட்கையைப் போக்கிக் கொள்ளவும், அக் குளிர்ச்சியான பிரதேசத்தைப் பார்த்துக் களிக்கவும் அச் சோலையினுட்புகுந்தான்.

அச்சோலையின் இடையில் **அச்சோதம்** என்று வழங்கப்படும் அழகிய குளமொன்றைக் கண்டான்.

அஃதோர் தாமரைக் குளமெனினும் கரை காண வியலாத கடலெனக் கூடியது. இமயமலையே உருகி உருமாறி இவ்விதம் குளமாயிற்றோவெனத் தோற்றுவது. அதைக் கண்டதும் களைதீர்ந்தவன் போன்று அவன் இங்ஙனம் யோசிக்கலானான்: 'ஓ! அக்கின்னரரைப் பின்பற்றியது வீணென நினைத்து வருந்தினேன்; ஆனால் இப் பொய்கையைப் பார்த்தபின் என் சிரமம் பயனுள்ளதாயிற்று. கண்ணைக் கவரும் காட்சிகளுக்கெல்லாம் எல்லையைக் கண்டுகொண்டேன். அளவற்ற அம்புய மலர்களின் மதுவையருந்தி மதம்பெற்ற அன்னப் பறவைகளின் ஆர்ப்பரிப்பாகும் இன் சொல்லால் இக்குளம் என்றனை நல்வரவு கூறி அழைக்கின்றது போலும்' என்றவாறு எண்ணிக்கொண்டு, அக்குளத்தின் தென் கரையில் மணற்பாய்ந்து மனோகரமாயுள்ளதோர் இடத்திற் குதிரையிலிருந்து இறங்கினான்.

பிறகு இந்திராயுதத்தின் மேலிருந்து சேணம் முதலியதை அவிழ்த்துப்போட, அப்பால் அது பூமியிற் புரண்டெழுந்து, பசும் புற்களையும் மேய்ந்து, அக்குளத்திற் குளிர்ந்த நீரையும் குடித்தபின், அதை அவன் குளிரக் குளிப்பாட்டி, ஓர் மரத்தடியிற் கொண்டுபோய் நீண்டதொரு பொற்சங்கிலியாற் கட்டி, ஆங்கு நீண்டு வளர்ந்திருந்த புற்களைத் தன் வாளால் அரிந்து அதன் முன்பு அன்புடன் போட்டான். பிறகு அவனும் அமிழ்ந்து நீராடி, ஆதித்தனுக்கு அர்க்கியமளித்து, இளந்தாமரைத் தண்டுகளையும் கிழங்குகளையும் சிறிது புசித்துத் தண்ணீரையும் பருகிவிட்டுக் கரை யேறினான். கொடிகள் அடர்ந்து மிகக் குளிர்ந்திருந்த ஓரிடத்தில், ஒரு சுற்பாறையின்மீது இளந்

தாமரையிலைகளைப் படுக்கையாகப் பரப்பி, மேலணியும் வஸ்திரத்தை மடித்துத் தலையணையாக வைத்துக்கொண்டு, மெல்லெனப் படுத்து இளைப்பாறினான். அக்காலை இந்திராயுதம் புற்கவளத்தையும் எடுக்காது, உயர்த்திய கழுத்தோடும், நிமிர்த்திய முகத்தோடும், நெறித்துக்கொண்ட இருசெவிகளோடும் அசையாது நின்று, வடதிசையிலிருந்து வரும் ஓர் இன்னிசையைக் கேட்டுக் கொண்டிருப்பதை இவன் கண்டான். திவ்யமான வீணாதொனியுடன் இசைந்து வரும் சங்கீத நாதத்தைச் செவியுற்று இவனும் வியப்புற்றான்.

அச் சங்கீதத்திற்கு முகாந்தரம் யாதென்றறிய ஆவலுடன் எழுந்து, இந்திராயுதம் ஏறி அக்குளத்தின் மேற்குக்கரையிலுள்ள கானகப்பந்தியின் வழியாக அக்கீதத்தொனி வரும் திசையையே குறியாக நோக்கிச் சென்றான். அப்பால் சிறிது தூரத்திற் பலவேறு கனிமரங்களும், நறுமணமுள்ள மலர்ச் செடிகளும், குளிர்நிழலைத் தரும் கொடிவீடுகளும் அடங்கிய சோலைகள் அடர்ந்திருந்தன. அக் குளத்தின் மேற்குக்கரை மூலையாக வெண்ணிலவுபோன்று ஒளிவீசும் **சந்திரப் பிரபை** யெனப் படும் கைலைமலைச்சாரல் ஒன்றுண்டு. அவ்விடத்தில் மனிதசஞ்சாரமற்று ஏகாந்தமாய் மிக்க மனோகரமாய் ஒரு சிவாலயம் அமைந்திருக்கக் கண்டான். குதிரையை விட்டிறங்கி மெதுவாக அவ்வாலயத்தினுட் சென்றான். அதனுள் படிகக் கற்களாலாகிய நாற்கால் மண்டபமொன்று மிகப் பிரகாசமாக விளங்கிற்று. அதன் மத்தியில் இரத்தின கசிதமான [illegible] பிரதிட்டை செய்யப் பட்டிருந்த

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.



நான்கு முகங்களுடன் கூடிய சிவபெருமானைத் தரிசித்தான்.

அவ்வீச்வரனுடைய தென்திசை நோக்கிய மூர்த்திக்கு எதிரில் பாசுபத விரதமனுட்டிக்கும் ஒரு திவ்யகன்னிகை, மடியில் யாழ்வைத்து மீட்டி மிகவு முருக்கமாகப் பாடி அவ்வீச்வரனைப் போற்றியவாறுப் பிரம்மாசனத்தில் வீற்றிருந்தாள். அவளது தேகம் தந்தத்தினல் கடையப் பெற்றது போன்று மிகச் சுத்தமான வெண்ணிறங் கொண்டிருந்தது. அந்த நிறத்திற்கு அவள் எல்லையெனக் கூடியவாறு விளங்கினுள். ஆரியருவக்கும் அரும் தருமங்களெல்லாம் கலிகாலத்தினுற் பாழுடைவதைப் பார்த்துப் பெரிதும் மனம் வெறுத்து வனம் சென்ற மூர்த்திகரித்த மும்மறையோவெனக் கூடியது அவளுருவம். சிவபெருமானது திருநாமமும் திருவடிகளும் பதிக்கப்பெற்ற மணிமயமான சூடாமணியை அவள் சிரத்தினில் தரித்துக் கொண்டிருந்தாள். தைவத்தன்மை பொருந்தியவளாகையால், வயதின் அளவு அறியக் கூடாமலிருப்பினும், பதினெண் பிராயத்தினள் போலக் காணப்பட்டாள்.

பிறகு அவன் இந்திராயுதத்தை அருகிலிருந்ததோர் மரக்கிளையிற் கட்டிவிட்டு, சிறிது சமீபம் சென்று, சிவபெருமானைச் சிரந்தோயப் பணிந்து, அத்திவ்யமாதை மீண்டும் உற்று நோக்கினுன். 'ஓ! எதிர்பாராமலே விந்தைக்கிடமான விஷயங்கள் வந்து தோன்றுகின்றனவே! வேட்டையில் தற்செயலாகவே அக்கின்னரரைக் காணநேர்ந்தது. அவர்களைத் துரத்தி வந்ததில் மானிடர்க்கு எப்பொழுதுங் காணக் கிடைக்காத மனேகரமான சோலை முதலியவைகளைக் கண்டேன்.

பிறகு தண்ணீரைத் தேடிப்போகையில், தவசிகளுவக்கும் பெருமையைப் பெற்ற இப் பொய்கையையும் தற்செயலாகப் பார்த்தேன். அதன் கரையில் விடாய் தீருகையில் சங்கீதத் தொனியும் செவியில் விழுந்தது. அச் சப்தமறிய யான் புறப்பட்டுவருகையில், தேவாலயத்தையும், அதனுள் இம்மண்டபத்திற் கருகில் இத்திவ்யமாதையும் தரிசிக்க நேர்ந்தது. இவள் தேவகன்னிகை யென்பதில் ஐயமில்லை. இவ்வடிவமும், இக் கண்டத்தொனியும் மானிட வுலகில் உண்டாவதெங்ஙனம்? இவள் திடீரென மறைந்துவிடவும் கூடும்; அதற்குள்ளாகவே அவளது வரலாறுகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்' எனத் தீர்மானித்து, அப்படிகமணி மண்டபத்தின் ஒரு தூணின் பக்கமாக உட்கார்ந்து, அவளது சங்கீதமுடிவை எதிர்பார்த்தவாறிருந்தான்.

சற்றுக்கெல்லாம் அக்குமரி சங்கீர்த்தனத்தை முடித்து எழுந்து, அச்சந்திரமௌளியான பெருமானை வலம்வந்து வந்தனம் செய்துவிட்டு, அப்பாற் சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த இராஜ குமாரனைக் கண்டாள். உடனே அவள் 'ஓ! பாக்கியசாலியானேன். தமக்கு நல்வரவா? பெருமைவாய்ந்தவர்களாகத் தோற்றுகிறீர்கள்; இவ்வளவு தூரம் எங்ஙனமோ வந்தீர்களே! அருள்புரிந்து வந்து அதிதி பூசையைப் பெற வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டாள். உடனே அவன் அவளது அனுக்கிரகத்தைப் பெற்றதாகக் கருதி எழுந்து, அவளுக்குத் தலைவணங்கி 'அம்மணி! உமது உத்தரவின்படியே' என மொழிந்து, சீடன் போல அவ

னைப் பின்பற்றலானான். அப்பால் ஒரு நூறடி தூரம்போற் சென்றதும், ஆங்கோர் விசாலமான குகையைக் கண்டான். அவ்விடம் அடர்ந்து வளர்ந்துள்ள அநேகம் பச்சிலைமரங்களாலும், மலையருவிகளாலும் குளிர்ச்சி பொருந்தியதாய் மிக்க மனோகரமாயிருந்தது. அக்குகையினுள் படிகக் கற்களாலான கமண்டலங்கள் ஒரு புறமும், சங்கத்தாலான பிக்ஷைக்கலம் மற்றொரு புறமும், திருநீறடங்கிய சுரைக்குடுவை வேறொரு பக்கமும் வைக்கப்பட்டிருந்தன. அக்குகையின் வாயிற்படியிலிருந்த கற்பாறையின்மீது அவளது வேண்டுகோளின்படியே அவன் உட்கார்ந்தான். அவளும் வீணையை ஆங்கு ஒரு புறம் வைத்துவிட்டு, மலையருவியிலிருந்து நீர் கொணர்ந்து வற்புறுத்தி யளித்த அர்க்கியநீரை அவன் பணிவுடன் பெற்றுக்கொண்டான்.

பின்னர் அம்மாது மற்றொரு பாறையின்மீது உட்கார்ந்து, மெதுவாகச் சந்திராபீடனது செய்திகளை வினவினள். அவன் தனது திக்விஜயப்புறப்பாடு முதற்கொண்டு, கின்னரதம்பதிகளைப் பின்பற்றி அவ்விடம் வந்ததீறாக அவனது வரவின் வரலாற்றை முற்றிலும் மொழிந்தான். பிறகு அவள் எழுந்து, பிக்ஷைக்கலத்தைக் கையிலேந்தி, அவ்வாச்ரம மரங்களின் அடியிற் போய் இங்குமங்குமாக உலாவினாள். சற்றுக்கெல்லாம் தாமாகவே விழுந்த இனிய கனிகளால் அப்பிக்ஷைக்கலம் நிரம்பியது. அவள் அவற்றையெடுத்து வந்து உபயோகிக்குமாறு சந்திராபீடனைக் கேட்டுக் கொண்டாள். அவன் 'ஓ தவத்தின் மகிமையே மகிமை! இதினும் மேலான விந்தையு

முண்டோ? அசேதனங்களான அடவிவிருக்ஷங்களும் தாமாகவே இங்ஙனம் கனிகளைத் தந்து தமது அன்பை அறிவிக்கின்றனவே!' என வியப்புற்றவாறு எழுந்து, இந்திராயுதத்தை அவ்விடத்திற் கொண்டு வந்து நிழலிற் கட்டிவிட்டு, மலையருவிநீரில் நீராட்டஞ் செய்து, இனிமையான அக்கனிகளைப் புசித்தான். ஆங்குள்ள நிர்மலமான அருவி நீரையும் அருந்தி, ஆசமனம் செய்து, அக்கற்பாறையின்மீது உட்கார்ந்தான். அம் மாதும் கனி கிழங்குகளையும் நீரையும் அருந்திவிட்டு, மற்றொரு பாறையின்மீது வந்துட்கார்ந்தாள்.

## ஏழாம் சருக்கம்.

அப்பால் சந்திராபீடன் சற்று யோசித்துவிட்டு, வணக்கத்துடன் அவளை இவ்வண்ணம் வினவினான் :— 'அம்மணி! அடியேனிடம் நீங்கள் அளவு கடந்து அருள்புரிந்து விட்டீர்கள்; அவ்வருள் மனிதருக்கியல்பான சாபல்யத்தை என்னிடம் பெரிதும் தூண்டிவிட்டது; ஆகவே யான் வினவுகின்றேன்: உமக்கு அதிக ஆயாசமாக இல்லாதிருப்பின் உமது வரலாற்றை விரித்துரைக்க வேண்டுகிறேன். எந்த தேவசாதி உமது பிறப்பினால் பெருமையடைந்தது? இவ்விளம் வயதில் இவ்விரதத்தைக் கைப்பற்றியதேன்? மனிதசஞ்சாரமற்ற மகாரண்ணியத்தில் தனித்து வசிக்கும் காரண மென்ன? எங்கும் கண்டறியாத நிலவுபோன்ற இவ்வளவு வெண்ணிறக் காந்தி உமக்கு எவ்விதம் ஏற்பட்டது? அருள்புரிந்து விடையளிக்க வேண்டும்' என்று அவன் கேட்டதும்,

அவள் ஏதோ சிந்தித்தாள். மிகப் பெருமூச்செறிந்தாள். சற்றுக்கெல்லாம் அவளது கண்களிலிருந்து நீர்த்துளிகள் சொரிந்தன. அது கண்ட சந்திராபீடன் 'ஆ! துயரங்களுக்கு எவரும் விலக்கில்லை. இவ்வகையான திவ்யமூர்த்திகள் அற்ப காரணத்தினால் அடங்காத் துயரம் அடைவார்கள். இவளுடைய மறைந்திருந்த துயரத்தைப் புதிதாக்குபவன்போல யான் நினைப்பூட்டினேனே' என்று நினைந்து வருந்தினான். அவளும் ஆறுத்துயரத்தை அடக்கியவளாய், மரவுரியின் முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பெருமூச்செறிந்து இங்ஙனம் மொழிந்தனள் :—

"இராஜகுமார! யான் ஒரு துர்ப்பாக்கியசாலி. வெகு வன்னெஞ்சுக்காரி. எனது துயரச் செய்திகளைக் கேட்க நீர் விரும்புகிறீர். சொல்லுகிறேன் கேளும் :—தைவலோகத்தில் அரம்பையர் எனப் புகழ்பெற்ற தேவமாதுகள் உண்டென்பதை நீர் கேட்டிருக்கலாம். சந்திரன், அமுதம், வாயு, சூரியன், தக்ஷப்பிரஜாபதி முதலானோரிடமிருந்து பிறந்த அத்தேவகன்னிகைகள் பதினான்கு குலத்தினர். அவர்களுள் தக்ஷப்பிரஜாபதியினிடமிருந்து பிறந்த கன்னிகைகள் இருவர்; அவர்களுள் ஒருத்திக்கு முனியெனப் பெயர்; மற்றொருத்தி அரிஷ்டை யெனப்படுவாள். முனி யென்பவளுக்குச் சித்திரஸேனன் முதலாகிய பதினாறு பேர் புத்திரர்கள்; அவர்களுள் குணங்களாற் பெரியவரும், வயதால் இளையவருமாயிருப்பவர் **சித்திரரதன்** என்பவர். அவர் இளம் பருவத்திலேயே கந்தருவருக்கெல்லாம் அரசனாய்விட்டார்.

இங்கிருந்து சிறிது தூரத்தில் இப்பாரதவருஷத்துக்கு வடக்கிலுள்ள கிம்புருஷ வருஷமென்னும் தேசத்தில் **ஏமகூடம்** என்னும் குன்றம் ஒன்றுண்டு; அக்குன்றுதான் சித்திரரதன் வாசம் பண்ணுமிடம். அவரது புயபலத்தினுற் பரிபாலிக்கப்பட்டு இலக்ஷக்கணக்கான கந்தருவர் அவ்விடத்திற் குடிகொண்டிருக்கின்றனர். **சைத்திரரதம்** என்னும் விசித்திரமான இச்சோலையையும், **அச்சோத**மென்னும் அழகிய இப்பொய்கையையும் அமைத்தவர் அச்சித்திரரதனே. இவ்விடத்திற் சிவ பெருமானையும் அவரே பிரதிட்டை செய்தார்.

அரிஷ்டை யென்பவளுக்குப் பிறந்த தும்புரு முதலிய புதல்வர் அறுவரில் **அம்ஸன்** என்பவர் மூத்தவர். அறிவிலும் ஆண்மையிலும் பெயர் பெற்ற அம்ஸனை மற்றொரு கந்தருவகுலத்திற்கு மன்னவனுகச் சித்திர ரதனே முடிசூட்டி வைத்தார். அநேகம் கந்தருவப்படைகளோடு இவரும் ஏமகூடத்தையே இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறுர். இவ்விரு கந்தருவாதிபதிகளும் தேவேந்திரனது நட்பைப் பெற்று அவரால் நனகு மதிக்கப்பெற்று வருகின்றனர். சந்திரனிடமிருந்து அப்ஸரஸ்ஸுக்களின குலமொன்று உண்டாயிற்றென முன்பு கூறப்பட்டதல்லவா? அக்குலத்திற் சந்திரமூர்த்தியின் உருவெனத் தகுந்த மேனிநிறம் பெற்றவளாய் **கௌரி** யென்னும் பெண்மணி யொருத்தி பிறந்தனள். அவளை அம்ஸன் மணம் புரிந்தார். அவள் அந்தப்புரத்தேவிமார்களுக்குத் தலைவியாயினள். மேன்மைபொருந்திய அத்தம்பதிகளுக்கு யான் ஒரே

பெண் இங்ஙனம் துன்பம் அனுபவிப்பதற்கென்றே வந்து பிறந்தேன். நெடுநாட்கள் மக்கட்பேறின்றி யான் பிறந்ததால், யான் பிறந்த நாளை மைந்தன் பிறந்ததற்கும் மேலாகவே கருதி அனைவரும் கொண்டாடினர். ஒப்புயர்வற்ற எனது மேனியின் வெண்ணிறத்தையும், மதியின் மரபிலே தோன்றினேனென்பதையும் கருதி மஹாச்வேதை யென்று என் தந்தையார் எனக்குப் பெயர் தந்தார். அக்குழவிப் பருவத்தில் இன்ப துன்பங்களை யறியாது மழலைச் சொல் பேசும் என்றனை, அவ் வரண்மனையில், கந்தருவர் ஓர் இன்னிசைதரும் தமது யாழைப் போலவே மாற்றி மாற்றி மடிகளில் ஏந்தி எப்போதும் தாலாட்டி மனமகிழ்வார்கள். அப்பால் நாளடைவில் வசந்தகாலம் தளிர்களையும் மலர்களையும் போலவும், மலர்கள் நறுமணத்தையும் மதுவையும் போலவும், யான் யௌவனப் பருவத்தையும் மேலான மேனியழகையும் பெற்றேன்.

பிறகு எல்லாப் பிராணிகளின் மனதையும் கவரக்கூடிய வனப்புவாய்ந்த வசந்தருதுவில் ஒரு நாள் என் அன்னையுடன், நான் இவ்வச்சோதப் பொய்கையில் நீராட வந்தேன். மந்தமாருதம் மரக்கிளைகளை மெதுவாக அசைத்துக்கொண்டு வீசிற்று. மரங்கள் மதுநிரம்பிய மணமிகுந்த மலர்களை உதிர்த்தன. அம்மலர்களும் மலர்ப்பொடிகளும் அடர்ந்து வீழ்ந்து அச்சோதக்கரையின் தரையெங்கும் அழகாகவும் மிருதுவாகவும் இருந்தது. இக்குளிர்ந்த சோலையிற் குளக்கரையிற் கானகக்காட்சி மனதைக் கவர, யான் தோழிமாருடன் உல்லாசமாகச் சிறிதுநேரம் உலாவி

வந்தேன். அப்பொழுது ஓரிடத்தில் முன்னர் எப்பொழுதும் யான் முகர்ந்தறியாததும், மற்றெல்லா மலர்களின் மணத்தையும் மறைத்துப்போடுவதுமான மிகச் சிறந்ததோர் பூமணத்தை யான் உணர்ந்தேன்.

அவ்வபூர்வமான மணத்துக்கு முகாந்தரம் யாதென்றறிய ஆவலுடன் சிறிது தூரம் யான் போகையில், முக்கண்ணனது நெற்றி நெருப்பால் பரிசிப்பதற்கு முன்னம் இருந்த மன்மதனுக்கு நிகரான மனோகரவடிவம் வாய்ந்த முனிகுமாரர் ஒருவர் அக்குளத்தில் நீராடுவதற்காக வருவதைக் கண்டேன். அவர் நெற்றியில் மூன்று விபூதிக்கோடுகளோடும், தோளிற் பரிசுத்தமான பூணூலோடும், இடையில் முஞ்சியினாலான அரைஞாணோடும் விளங்கினார். ஒரு கரத்திற் கமண்டலமும், மற்றொரு கையிற் பருத்த படிகமணிகளாலாகிய ஜபவடமும் வைத்திருந்தார். பிரம்மசரியவிரதத்திற்கு அவரைப் பூஷணமெனக் கூறலாம். கிருத்திகையென்னும் தாரகைக் கொத்துபோன்று அழகானதொரு பூங்குலையை அவர் செவியில் அணிந்திருந்தார். மற்றெல்லாப் பூக்களின் பரிமளத்தையும் புறக்கணிக்கும் புஷ்பக்கொத்து அதுதானென்று அப்பொழுது அறிந்துகொண்டேன்.

அவ் வபூர்வமான மலரின் மணத்தில் ஈடுபட்ட என் மனம், பன்மடங்கு அதிகமாக அவரது இணையற்ற இலாவண்ணியத்திலும் என் வயமின்றியே ஈடுபட்டுவிட்டது. இமைகளசையாமல் ஆச்சரியத்துடன் அவரைக் கண்ணோக்கியவாறு நின்றேன். என் மனோநிலைமை, அம்முனிகுமாரனது குணகுணங்களைப் பகுத்

தறியவும் நோக்கமின்றி, வடிவழகு ஒன்றிலேயே பக்ஷம் பாராட்டி என்னைப் பரவசமாகச் செய்தது. யான் அவ்விடம் விட்டுப்போக முயன்றும், அவ்விதம் செய்யமுடியவில்லை. என் புலன்களையும் அடக்கியாளுந் திறமை யொழிந்தவளாயினேன். முனிவர்களைப் பணியாமற்போவது முறையல்லவென்று மனதி லெண்ணி, எவராலேயோ ஏவித் தள்ளப்பட்ட வளைப்போல அவரிடம் அணுகி, என் காதிலணிந்த இரத்தினகுண்டலம் குலுங்கி யசையுமாறு வந்தனம் செய்தேன். பிறகு யான் என் சொல்வேன்? வாலிபப் பருவம் ஒழுக்கத்தவறுதல்களுக்கு உறை யிடமல்லவோ? அடிபணியும் என்றனைக் கண்டு அம் முனிகுமாரு மன்றோ மன்மதவலையிற் சிக்கி மனமி ழந்து நின்றார்? விதியின் செயல் விலக்க முடியாத தன்றோ? அவரது வெளிப்படையான மனக்குழப் பக்குறிகளை யறிந்து யான் 'இதுதான் தருணம்' எனக் கருதி, அவரது வரலாற்றைப்பற்றி வினவு வதற்குத் துணிந்தேன். அவருக்கு அருகில் அவருக் கீடான வயதும் பொலிவும் வேடமும் உள்ள வேறொரு இருடிகுமாரன் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டே பின் தொடர்ந்து வந்தார். அவருக்கும் வந்தனம் செய்து எழுந்து, 'ஐயன்மீர்! இத்தபோதன வாலிபர் யாவர்? எவரது புதல்வர்? இவ்விடம் வந்ததேன்? எம்மரத்தினது இம் மலர்க்கொத்து?' என விநயத் துடன் வினவினேன்.

அதைக் கேட்டு அவர் புன்னகை புரிந்து இவ் வாறு கூறினர் :—"நங்காய்! இவ்வரலாற்றில் உனக்கு அவ்வளவு விருப்பமாயின் கூறுகிறேன் கேள். தைவ

லோகத்தில் தேவாசுரர்களால் வணங்கப் பெற்றவ ரான சுவேதகேதுவென்று புகழ்பெற்ற ஓர் மாமுனிவர் உண்டென்று நீ அறிந்திருக்கலாம். அவர் ஓர் அற்புத மான சுந்தர புருடன். அவர் ஒரு நாள் பகவானுக்கு அர்ச்சனை செய்வதற்குப் பங்கயமலர்களைப் பறிப்ப தற்குக் கங்கையில் இறங்கினர். ஆங்கு எப்பொழு தும் ஆயிரம் தளங்களைப்பெற்ற அம்புயமலரில் வீற் றிருக்கும் மஹாலக்ஷ்மி இவரது இணையில்லா வடி வழகைக் கண்டு வியப்புடன் காதல்கொள்ள, உடனே அவளிடமிருந்து அழகிய குழந்தையொன்று உதித் தது. அப்பொழுதே அவள் அக் குழந்தையை யேந்தி வந்து, ' ஐயன்மீர்! இவன தமது குமாரன்; ஏற்க வேண்டும்.' என மொழிய, அவரும் தமது ஞானக் கண்ணல் உண்மையறிந்து, அக் குழந்தையை வாங்கிப் போய் வளர்த்து, வெண்தாமரையிற் பிறந்ததால் அதற்குப் புண்டரீகன் எனப் பெயரிட்டார். குழந் தைப் பருவம் கழிந்ததும், அவனுக்கு வைதிகமான செய்முறைகளையும் செய்வித்து, கல்விகளையும் கற் பித்து வைத்தார். அப்புண்டரீகனே இவன. இனி இப்பூங்கொத்தின் செய்தியைச் சொல்வேன்: இன்று சதுர்த்தசியென்று, கைலையில் வீற்றிருக்கும் பார்வதீ பதியைப் பணிவதற்கு விண்ணுலகமிருந்து நாங்கள் இருவரும் நந்தனவனத்தின் வழியாக வந்துகொண் டிருந்தோம். அச்சமயம் பாரிஜாதமரத்தின் இப் பூங் கொத்தை யேந்திக்கொண்டு நந்தவனதேவதையே நேரில் வந்து நமஸ்கரித்து, இப் பூங்கொத்தைச் செவி தனில் அணியவேண்டுமென்றும், அதனல் பாரிஜாதம் பயன் பெற்றதாகத் தாம் கருதுவதாகவும் கூறி, வேண்

டிக்கொண்டே புண்டரீகனைப் பின் தொடர்ந்தாள்.
இவனது பிரம்மசரிய விரதத்துக்குப் பூவணிதல் ஏற்ற
தல்லவாயினும், அவ்வனதேவதையின் வேண்டு
கோளை மறுப்பது தகாதெனச் சொல்லி, யான் இவன்
செவியில் இப் பூங்கொத்தை வலியவே அணிய வைத்
தேன். இதுதான் இப்பூங்கொத்தின் வரலாறு" என்
றார்.

அவர் அவ்வாறு கூறியதும், அத்தபோதனவாலி
பர் புன்சிரிப்புடன் என்னை நோக்கி 'இதற்காக ஏன்
இவ்வளவு கேள்விகள்? உனக்கு இது அவ்வளவு
இன்பமளிப்பதா யிருந்தால், நீயே இதை அணிந்து
கொள்வாயாக.' எனக் கூறி, என் அருகில் வந்து, அப்
பூங்கொத்தை யெடுத்துத் தாமே என் செவியில்
அணிந்திட்டார். என் கன்னத்தைப் பரிசிக்கவே
அவரது கைவிரல்கள் வயமிழந்து நடுக்க முற்றன;
அவரிடமிருந்து இலசசையும், அவரது கையிலிருந்து
ஜபமாலையும் ஒருமிக்க நழுவிப் போயின; அதையும்
அவர் உணர்ந்தவரல்லர். அஜ்ஜபவடம் தரையில் விழு
வதற்கு முன்பே யான் அதைக் கரத்திலேந்தி எளி
திற் கண்டத்தில் அணிந்து கொண்டேன்.

இந் நிகழ்ச்சியில் என் குடையேந்தும் மடந்தை
யொருத்தி வந்து, என் மாதா மஞ்சனமாடி விட்டதா
கவும், மாளிகைக்குப் போகவேண்டியிருப்பதால்
நானும் குளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்
டாள். அவ்விடம் விட்டுப்போக என் மனம் துணிவு
பெறவில்லை யென்றாலும், அன்னையின் ஆணைக்
குட்பட்டு நீராடப் புறப்பட்டேன். அப்பொழுது
புண்டரீகனது நண்பர் அவருக்குத் தைரியத் திமாற்

றம் அவ்வாறுண்டானதைக் கண்டு இங்ஙனம் உரைத்தார் :—'புண்டரீக! இஃதுனக்கு உற்றதல்ல. திடீரென்று உன் தைரியமனைத்தையும் இழந்தனையே! இஃதென்ன மனக்குழப்பம்! உன் கரத்திலிருந்து அக்கமாலை நழுவியதையும், அதை அக்கன்னிகை கவர்ந்து போனதையுங்கூட நீ உணரவில்லையே! உன் மனத்தையும் அவள் கவர்ந்திழுத்து விடாதபடி தடுப்பாயாக' என்றனர். அதற்கு அவர் 'நண்ப! கபிஞ்ஜல! என்னை நீ வேறுவிதமாய் நினைக்கின்றனையென்னை?' எனக் கூறிவிட்டு, கள்ளக் கோபத்துடன் என்றனை நோக்கி 'நங்காய்! என் ஜபவடத்தைக் கொடாது இவ்விடம் விட்டு ஓர் அடியெடுத்து வைக்கவும் விடேன்' எனப் பகர்ந்தார். உடனே யான் சிறிது சிரித்துக்கொண்டே எனது முத்துமாலையைக் கழற்றி 'இதோ தமது ஜபமாலை' எனக் கூறி அவரிடம் கொடுத்தேன். அவர் என் முகத்தையே நோக்கிக் கொண்டு, ஒருவாறு உணர்ச்சி யின்றியே கைநீட்டி, யான் கொடுத்ததைப் பெற்றுக்கொண்டார்.

இவ்விநோதங்களையெல்லாம் என் தோழிமாரும் பார்த்துவந்ததால், யான் வெட்கங்கொண்டு வேறெவராலோ வலியச் செலுத்தப்பட்டவள்போலக் குளத்திற் குளித்துவிட்டு, மனம் பின்னால் முனிகுமாரரிடம் ஓட, மாளிகைக்கு மாதாவுடன் உணர்ச்சியில்லாத் தேகத்துடன் போய்ச் சேர்ந்தேன். ஏதோ சுகமின்மையைக் கூறி, சகிகளை விலக்கித் தனியாக ஓரறையிற் போய், மோகத்தில் மூழ்கிய மனத்தினளாய், மஞ்சத்தில் வீழ்ந்து, வீடு சேர்ந்ததையும் மறந்து கிடந்தேன்.

என்னுடன் தடாகம் சென்றிருந்த எனது தோழி தரளிகை யென்பவள், சற்றுக்கெல்லாம் வந்து, என்னை அந்நிலைமையிலிருக்கக் கண்டு இங்ஙனம் கூறினள்:— "அம்மணி! ஒரு செய்தி. அக்குளக்கரையில் உமது காதிற் பாரிஜாதமலரைச் சூட்டின முனிகுமாரர், தம் தோழனுக்குத் தெரியாமல் என்னைத் தொடர்ந்து வந்து, உம்மைப்பற்றிய வரலாறுகளை வினவினர். யான் உமது பெயர், பெருமை, இருப்பிடம் முதலியதை அவரிடம் உரைத்தேன். அவர் ஏதோ சிந்தித்துக்கொண்டே 'அம்ம! நீ கபடமற்றவளாகத் தோற்றுகிறாய். எனக்கோர் உபகாரம் செய்வாயா?' என வேண்டினர். அதற்கு யான் 'சுவாமி! தமது ஆணை எனக்கு அனுக்கிரகமல்லவோ? தம் கட்டளையைக் கடமையாகச் செய்வேன். மொழிந்தருள்க' என்றேன். உடனே அவர், தமது மரவுரியிலிருந்து சிறு துண்டொன்று கிழித்து, அத்துண்டிற் பச்சிலைச் சாற்றால் ஒரு சிறு கடிதமெழுதி என்னிடம் கொடுத்து, அதை ஒருவருமறியாது உமதிடம் ஏகாந்தத்தில் கொடுக்கச் சொன்னார். இதோ அக்கடிதம்" என்றுரைத்துத் தாம்பூலக்கரண்டத்தைத் திறந்து, அதை யெடுத்து என்னிடம் அளித்தனள். அதிற் பின்வருமாறு வரையப் பட்டிருந்தது:—

'தனக்கிணை யான தாமரை வளையந்
தானெனத் தரள மாலையினை
நினைத்துடன் கவ்வி வெள்கிய வன்ன
நெடுந்துய ருழந்திருந் ததுபோற்
சினைக்கயல் விழியார் முத்த மாலையினைச்
செபவட மென்ற கேட்டுண்டு

'மனத்திடர் பெருகா நாணுரு வருந்தா
மயங்குகின்றா னொரு முனியே.'

மேல் வெள்ளம் ஆற்றைக் கலக்குவது போல, அக்கடிதம் என் மனதை முற்றிலும் குழப்பமுறச் செய்தது. அதை ஆவலுடன் பன்முறையும் படித்தேன். பிறகு அவளுடன் அம்முனி குமாரரைப் பற்றியே பேசிக் கொண்டு அப் பகற்பொழுதைப் போக்கினேன்.

## எட்டாம் சருக்கம்.

பிறகு சூரியபிம்பம் மேற்றிசையிற் சாய்ந்து அந்திப் பொழுதும் நெருங்கிற்று. குளக்கரைக்கு வந்திருந்த அக்குடையேந்தும் பணிப்பெண் வந்து 'அம்மணி! அவ்விடத்திற் கண்ட இரண்டு முனிகுமாரரில் ஒருவர் வாயிலில் வந்து நிற்கின்றார். ஜபவடம் கேட்க வந்ததாகவும் கூறுகிறார்' என்றனள். முனி குமாரர் என்ற மாத்திரத்திலேயே, அவராகத்தான் இருக்கலாம் எனக் கருதி, உடனே அவரை அழைத்து வரச் செய்தேன். சற்றுநேரத்தில் அவர் நான் இருந்த விடதிற்கு வந்து சேர்ந்தார். வந்தவர் அவ்விரண்டாவது முனிகுமாரர். அவரது உருவம் பெரிதும் மனக்கவலை மேலிட்டு வாடியிருந்தது. வந்ததும் அவருக்கு வந்தனம் செய்து, அர்க்கியமும் தந்துபசரித்தேன். அவர் ஆசனத்தில் அமர்ந்ததும், யான் தரையில் உட்கார, அவர் என்னுடன் ஏதோ சொல்ல விரும்பி, என் அருகில் இருந்த தரளிகையைப் பார்த்தார். அவரது கருத்தறிந்து யான் 'அவள் என்னி

னும் வேறுபட்டவளன்று. கூச்சமின்றியே கூற லாம்' என்றேன்.

பிறகு அவர் வெட்கப் பட்டவர்போல இங்ஙனம் கூறத் தொடங்கினர் :—"புழுதிவிளையாடி இளம் பிராயமுதற் பழகிய புண்டரீகனுடைய நண்பன் கபிஞ்ஜலன் யான். யான் என்னென்று கூறுவேன்? வெட்கத்தினால் நாவெழும்பவில்லை. கானகங்களிற் காய்கிழங்குகளைப் புசித்துச் சாந்தமாகக் காலங்கழிக் கும் முனிஜனமெங்கே! சிற்றின்பத்திற் பெரிதும் பற்றுண்ட இப் பிரபஞ்சமெங்கே! என் செய்வேன்? நண்பனுயிரைக் காக்கக் கருதியே நான் இவ்விழி தொழிலைச் செய்ய வந்தேன். உமது முன்னிலையி லேயே அவனது நடக்கையைக் கண்டு, யான் கண்டித்தேனல்லவா? நீர் சென்றுவிட்டதும், அவன் செய்வது யாதென்பதை மறைந்திருந்தே கவனித்து வந்தேன். சற்றுக்கெல்லாம் அவன் என் கண்ணிற் படவில்லை. அவன் ஒருவேளை வெட்கங்கொண்டு தைரியமிழந்து உயிருக்கே அபாயம் விளைவித்துக் கொள்வனோ என்று பயந்து, அவ்விடமெல்லாம் அவனைத் தேடித் திரிந்தேன். அப்பொழுது அக் குளக்கரையில் ஒருசார் வசந்தருதுவுக்குப் பிறப் பிடம் போன்றதாய், வெவ்வேறு வகையான மலர் களடர்ந்து மனத்தைக் கவரும் வனப்புடையதாய் அமைந்திருந்த ஒரு கொடிமண்டபத்தில் மனோவி காரங்கொண்டு அவன் ஒரு சிலாதலத்தின்மீது சிறிது முணர்ச்சியின்றியே வீழ்ந்திருப்பதைப் பார் த்துப் பிரமித்துப் போனேன். விடியற்காலத்துச் சந்திரபிம்பம் போல் அவனது முகம் வெளிறிப்

போயிற்று. 'குழந்தைப் பருவமுதல் நல்லொழுக் கத்துக்கு நிதரிசனமாயிருந்து வந்த இவனுக்கும் முற்றிலும் இத்தகைய மாறுபாடுண்டாகுமோ? அந் தோ! இதுவுமொரு விந்தை' என்று எனக்குள் ளேயே சிந்தித்து, அவனருகிற் போய் உட்கார்ந் தேன். அவனது நிலைமைக்கான முகாந்தரமனைத் தும் எனக்குத் தெரிந்திருந்தும், முறைகேடான விஷயத்தில் மனஞ்செலுத்திய மித்திரனை மீட்டு, நன்னெறியில் நிலைநிறுத்துவது நமது கடமையென் பதை யுணர்ந்து இங்ஙனம் உரைக்கலானேன்:—

'நண்ப! புண்டரீக! இஃதென்ன? குருமார் உன் றனக்கு இக்கோலத்தை யுபதேசித்தனரோ? அல்லது பல தருமசாஸ்திரங்களைப் படித்ததன் பயனோ? அன் றேல், இஃதொரு தவஞ்செய்யும் புதிய வகையோ? இவ்விழிய வழியை நீ மனத்திலேனும் நினைத்திட லாமோ? புலன்களையும் மனதையும் கட்டியாள மாட்ட தவனாய்த் தோன்றிய வண்ணம் ஓடவிட்டனையல்லவா? மனதை நிலை நிறுத்தி, முனிவர் தருமத்தின பெருமை யிற் கருத்து வைத்து, தைரியத்துடன் எழுந்திரு புண் டரீக!' எனப் பலவாறு மதி புகட்டினேன். அதற்கு அவன் செங்கமல மலர்களை யொப்ப மிகச் சிவந்திருந்த நேத்திரங்களை விழித்து என்னைப் பார்த்துவிட்டு, சுடச்சுடப் பெருமூச்செறிந்து, இவ்வாறு கூறி னான்:—'நேசனே! நேரில் அனைத்தையும் பார்த்துள்ள உன்றனுக்கும் விஷயத்தை விரித்துரைத்தல் வேண் டுமோ? பிறருக்கு உபதேசிப்பது எளிது. இவ்விஷ யத்திற் பகுத்தறிவுடன் நடப்பதற்கான ஆற்றல் என்னை விட்டகன்று நெடுநேரமாயிற்று. என் செய்

வேன்? என் மனதும் உடலும் கடுந்தீயில் அகப்பட்டவைபோல மிகத் தாபமுறுகின்றன. உயிர்நீங்குமளவும் இவ்வுடலுக்கு ஏதேனும் உன்னாலான உபசாரத்தைச் செய்தால் போதும்' என மொழிந்து மௌனமாய்விட்டான். இனி உபதேசங்கள் உபயோகமற்றவையெனத் தெரிந்து, உயிரைக்காப்பதற்கான உபாயங்களைச் செய்ய முயன்றேன். தாமரைத்தளிர்களைப் பரப்பி அவற்றின்மீது அவனைப் படுக்கச் செய்தேன். சந்தனக்குழம்பை உடம்பெல்லாம் பூசினேன். வாழையிலைகளால் வீசி வியர்வையைத் தணியச் செய்தேன். ஏதேதோ எண்ணங்கொண்டேன்:—'அடவியில் இருந்து அருந்தவஞ்செய்யும் முனிவரெங்கே! அரண்மனையில் இருந்து அகில போகங்களையும் அனுபவிக்கும் மஹாச்வேதையைப்போன்ற மங்கையரெங்கே? என்னே ஈசன் செயல்! இறைவன் விரும்பினால் இயற்கையையும் செயற்கையையும் ஒன்றாக இயற்றிவைப்பான். ஒளியையும் இருளையும் ஒன்றுசேர்ப்பான். வீணில் இச்சிந்தையேன்? உசிதமோ அல்லது அநுசிதமோ? எவ்வுபாயத்தினாலேனும் நண்பனுக்கு நேரும் ஆபத்திற்குப் பரிகாரம் தேடி, அவனுயிரைக் காப்பது கடமையெனச் சான்றோர் கூறுவர். வேறு கதியில்லை. மஹாச்வேதையினிடம் போய் மன்றாடிக் கேட்போம்.' எனத் தீர்மானித்து, அவனுக்குத் தெரியாமலே இதோ விரைந்தோடி வந்தேன். இவ்வவசர நிலைமைக்கு எது நேர்மையானதோ, இவ்விதமான உள்ளன்புக்கு உசிதமெதுவோ, எமது வரவுக்கு எது ஏற்றதாகுமோ, உமக்கும் எது உசிதமானதோ அதைச் செய்யும் பொறுப்பு உம்மு

டைய்து" எனக் கூறிவிட்டு, எனது மறுமொழிக்காக என் முகத்தை நோக்கியவாறிருந்தார்.

அதுகேட்டு யான், எனது எண்ணம் நிறைவேறியதாக நினைத்து, மட்டில்லா மகிழ்ச்சியாகும் மாகடலில் ஆழ்ந்தேன். 'புண்டரீகனது நிலைமை நிச்சயமாக்வே அவ்வித மிருந்தால் ஈசன் எனக்குச் செய்யாத உதவியென்ன? இப்போது யான் கபிஞ்ஜலனுக்கு என்ன பதில் கூறுவேன்?' என்று யான் எண்ணமிட்டிருக்கையில், வாயிற் காப்பவள் திடீரென வந்து, என் அன்னை யான் சுகவீனமா யிருப்பதாயறிந்து என்னைப் பார்க்க வருவதாய் அறிவித்தாள். கபிஞ்ஜலனும் அதைக் கேட்டு, ஜனநெருக்கம் அதிகரிக்குமெனக் கருதி, உடனே எழுந்து 'இராஜபுத்திரி! நெடுநேரம் ஆய் விட்டது. அந்திப்பொழுதும் நெருங்கிற்று. யான் போய் வருகிறேன். நண்பனுக்கு உயிர்ப்பிச்சை யளிக்க வேண்டுமெனக் கோரி இதோ யான் அஞ்ஜலி செய்கிறேன்' என விளம்பி, வெளிக்கிளம்பி யேகினார். கபிஞ்ஜலன் கூறிய புண்டரீகனது நிலைமைகளையே நினைவிற் கொண்டு மெய்மறந்து கிடந்த யான, என தன்னை வந்ததையாவது, பேசியதையாவது, திரும்பவும் சென்றதையாவது, ஒன்றையும் அறிந்தவளல்லள்.

இதற்குள் இரவு நெருங்கி இருள் வந்து என் மனதைப்போல இவ்வுலகையும் கவிந்து கொண்டது. சந்திரன் கெல்லாம் வெண்ணிலவினால் வெளிச்சமும் குளிர்ச்சியும் அளித்துக் கொண்டு வெளித்தோன்றிய மதியானவன், எம் மனதிற்கு மாத்திறம் காரிருளையும் கடுந்தாபத்தையும் தந்தது விந்தையன்றோ? அக்காலை

யான் மிகக் குழப்பமுற்ற மனத்துடன் தாளிகையை இவ்வாறு வினவினேன்:—'என் மனம் கடுங்கவலையுறு வதை நீ நேரிற் காண்கிருய். கபிஞ்ஜலன் செப்பியதையும் நீ செவியுற்றனை யல்லவா? இப்போது யாம் செய்யவேண்டுவது யாதென்பதைச் சற்று நீதான் மொழிய வேண்டும். வேறு கன்னிகைகளைப் போல வெட்கத்தை விட்டு, எப்பழியையும் பாராட்டாது, ஒழுக்கத்தையொழித்து, பெற்ளேரின் அனுமதியைப் பெருது நானே சென்று மணம்புரிந்துகொள்ள முயல்வதா? அச்செயல் பெரியோரைப் புறக்கணிப்பதான பெரும் அதருமமல்லவா? அல்லது தருமத்திற்கு அஞ்சி வலிய ஆவி துறப்பேனுயின், தாமாகவே வந்து நம்மைப் பெருமைப் படுத்தியதோடு நம்மை நம்பிப் போயுள்ள அக்கபிஞ்ஜலனை வஞ்சனை செய்தவளாவேன். மேலும் என்னைப்பற்றி நிராசை கொண்டு அப்புண்டரீகன் தம் உயிருக்கு அபாயம் விளைவித்துக்கொண்டால், முனிவரது வதைக்கு யான் மூலகாரணமாய் மகத்தான பாதகத்தையும் தேடிக் கொண்டவளாவேன. என் செய்வேன்?' என மொழிந்தவாறு மூர்ச்சையடைந்தேன்.

உடனே பரபரப்புடன் தாளிகை செய்த சிறந்த சீதோபசாரங்களால் என் மனம் மயககந் தெளிந்தது. அவளைக் கண்விழித்துப் பார்த்தேன். அத்தருணத்திற்கேற்றவண்ணம் தாளிகை என்னை நோக்கி 'அம்மணி! மனக்குழப்பம் வேண்டாம். பொறுத்திரும். மனமுவந்த மணுளரைத் தாமே மணம் புரிந்துகொண்ட மாதுசிரோமணிகள் பலருண்டு. மாசற்றவரென்று அவர்கள் மிகப் பெயரும் பெற்றனர். இது

பெற்ரேரை அவமதித்ததாகாது. கந்தருவருக்கு வழக்கமான இவ்விவாகமுறை முற்றிலும் சாஸ்திர சம்மதமானதென்றே சான்ரேர் கூறுவர். ஆகவே எனக்கு அருள்புரிந்து அனுமதி கொடுங்கள். யான் சென்று உம் பிராணநாதனை இதோ அழைத்துவருகின்றேன். அல்லது எழுந்திரும்; இருவருமாக அவரிருக்குமிடம் செல்வோம்' என்று வருந்தி வேண்டினள்.

அவளது அருஞ்சொற்களைக் கேட்டு, அது உசிதமெனக் கருதி, உடனே அச்சமயத்திற் கேற்ற உடைகளை அணிந்து, ஒரு செந்நிறமான ஆடையினாற் சென்னியை மறைத்துக்கொண்டு, மற்றவரெவருங் காணமலிருப்பதற்காகத் தரளிகையுடன் மாளிகையின் பின்புறவழியாகப் புறப்பட்டு, முனிகுமாரர் இருக்குமிடம் நோக்கிச் சென்றேன். அப்பொழுது என் வலது கண் துடித்தது. என்னே அவசகுனம் என மனமும் பதைக்க, மிகத் துரிதமாக யான் வருகையில், இக்கானகத்திடையே கிளம்பிய அழுகுரல் ஒன்று என் காதில் விழுந்தது 'ஆ! நண்பனே! புண்டரீக! உயர் தவத்திற்கு உறைவிடமே! உலகம் பாழ்க்க உயிர் துறந்தனையே! ஆ! பாதகி மஹாச்வேதே! என் ஆருயிர் நண்பனின் அக்கமாலையை அபகரித்ததோடு அவனது ஆவியையும் அந்நியாயமாய் இங்ஙனம் கவர்ந்தனையே! ஒ தருமமே! தாங்குவாரற்றுப் போயினையே! விண்ணுலகமே! வீணிற் பாழடைந்தனையே!' என்றும், இன்னும் பலவாருகவும் கபிஞ்ஜலன் கதறிப் புலம்பியது என் காதைத் துளைத்து. யான், 'தரளிகே! இஃதென்ன விபரீதம்!' எனக் கூறிக்கொண்டு, நான்

கள் இருவருமாக, எவராலோ எடுத்தேகப் பட்ட வரையொப்ப எமக்கும் தெரியாமல் விரைந்தோடி, அவ்விடமடைந்தோம்.

இராஜகுமாரரே! எனது துர்ப்பாக்கிய நிகழ்ச்சியை என்னென்று கூறுவேன்? யான் அக்குளக் கரைக்குப் போய்ச்சேர்ந்ததும், சந்திரகாந்தச்சிலாதலமொன்றிற் பரப்பிய பங்கயப்பூக்களாலும் இலைகளாலுமாகிய படுக்கையின்மீது அப் புண்ணியவான் புண்டரீகன் உயிரிழந்து, அந்தோ சாய்ந்திருக்கக் கண்டேன். 'நெடுநேரம் என்னைப் பார்க்கவராமல் நீ பராமுகமாயிருந்தனையல்லவா? இனி உன்னைப்பற்றியென்ன?' என்று மனஞ்சலித்து, என்னைப் புறக்கணிக்க விரும்பி மௌனத்துடன் சயனித்திருப்பவர் போலவே அவரது தோற்றம் இருந்ததேயொழிய உயிரிழந்த விகாரக்குறி ஏதும் காணப்படவில்லை. அதன்பிறகு என் மனம் துயரக்கடலில் ஆழ்ந்துவிட்டது; மூர்ச்சையாகும் காரிருள் என் கண்களை மறைக்க, யான் தரையில் வீழ்ந்தேன். வெகுநேரம் சென்று நினைவு பெற்று, நெருப்பிலகப்பட்டவனையொப்ப ஒன்றும் தோன்றாமற் புவியிற் புரண்டு நான் தவித்துக்கொண்டிருப்பதாயுணர்ந்தேன். அவர் உயிரிழந்ததிலும் யான் பிழைத்திருப்பதிலும் எனக்கே அக்காலை நம்பிக்கையுண்டாகவில்லை. 'ஓ! என் பொருட்டல்லவோ நீர் திடீரென இந்நிலைமையையடைந்தீர்? சீ! என்னைச் சுடவேண்டும். இனி எனக்குப் பெற்றோரைப்பற்றியென்ன? மற்றவரால்தான் ஆகவேண்டுவதென்னை? ஓ ஈசனே! கருணையுடன் என்னைக் கடாக்ஷிப்பாயா? கணவன்பிச்சையைக்

கொடுத்தருள்வாயா ?' என்று இன்னும் பலவாறாகப் பேய்ப்பிடித்தவளை யொப்பக் கதறினேன்." என்று வாறு மஹாச்வேதை முன் கடந்துபோன அக்கடுமை யான வரலாறுகளைக் கூறிவருகையில், அந்நிகழ்ச்சியை மீண்டும் அனுபவிப்பவள்போல நினைவு தடுமாறி நிலத்தினிற் சாய்ந்தனள். சந்திராபீடன் பிழை செய் தவனையொப்ப மிகத் திகைத்துப் போனான். உடனே குளிர்ந்த நீரைத் தெளித்தும், வாழையிலையால் வீசி யும் அவளைத் தெளியச்செய்தான்.

மஹாச்வேதை மெதுவாகக் கண்விழித் தெழுந் ததும், சந்திராபீடன் உள்ளங்கசிய அவளை நோக்கி 'அம்மணி! உமது பழைய துயரத்தைப் புதிதாகச் செய்த என் பிழையைப் பொறுத்தருளவும். போ தும்; இனி இக்கதையைக் கேட்கத் துணியேன்' எனக் கூறினான். அப்பொழுது அக்கடுந்துயரத்தை யடக்கிக்கொண்டு ஒருவாறு மனச்சோர்வுடன் மீண் டும் மொழிந்தனள் :—" இராஜபுத்திர ! மிகக் கொடி தான அப்பாழும் இரவிலேயே எத்தீங்கும் என்ற னக்கு நேராமலிருந்திருக்க இனி எனக்கு எக்கேடும் நேரிடமாட்டாது. மேலும் இதுகாறும் யான் கூறிய செய்திகளினும் செப்புவதற்கோ செவியுறுவதற்கோ முடியாதபடி கடுமையானது இனி என்ன இருக்கின் றது ? பேரிடியின் வீழ்ச்சிபோன்ற அந்நிகழ்ச்சிக் குப் பின் நேரிட்ட அற்புதச் செய்தியைக் கேளும். எத்துராசையாகும் பேய்த்தேரிற் பற்றுள்ளவளாய் இப்பாழுமுடலை யான் தாங்குகின்றேனோ, அதற்கு நன்கு விளங்காதவகையில் தோன்றிய காரணம் அச் செய்தியே.

பிராணனிழந்த புண்டரீகனுக்கு அருகிற் புரண்டும் புலம்பியும் எழுந்து, உடன்கட்டையேறுவதாகத் தீர்மானித்து, தீராத் துயரங்கொண்டு திகைத்து நின்ற தரளிகையை யழைத்துத் துரிதமாகச் சிதை யடுக்கச் சொன்னேன். திடீரென அச்சந்தர்ப்பத்திற் சந்திரமண்டலத்திலிருந்து நிலவினும் தெளிந்த தேககாந்தியால் இக்குளக்கரைகளனைத்தையும் சோதிமயமாக்கிக்கொண்டு தேவபுருடனொருவன் இறங்கி வந்தான். திரண்டுருண்டும் பனிபோற் குளிர்ந்தும் இருந்த தன் இரு புயங்களாலும் மாண்டுபோன புண்டரீகனது தேகத்தை யேந்திக்கொண்டு, மீண்டும் விசும்பில் எழும்பி நின்று, வெகு கம்பீரமான தொனியில் 'அம்ம! மஹாச்வேதே! மரணத்திற்கான இம் முயற்சியை விட்டுவிடுவாயாக. மீண்டும் இவனது சேர்க்கை உனக்குண்டாகும்' எனத் தந்தையைப் போல் ஆதரவுடன் ஆறுதல் கூறி, ஆகாயமார்க்கத்திற் சென்றுவிட்டான். உடனே அஞ்சி நடுங்கி ஆச்சரியங் கொண்டு, 'இஃதென்ன?' எனக் கபிஞ்ஜலனைக் கேட்டேன். கபிஞ்ஜலனும் கடுகவெழுந்து, எனக்குப் பதிலளிக்காமலே மிகக் கோபங்கொண்டு 'யாரடா? என் நண்பனைக் கவர்ந்து போகின்றனையா?' என உரத்துக் கூறி, உயர நிமிர்ந்தவாறு, உத்தரியத்தினால் விசையாகக் கச்சம் கட்டி, வானத்தில் எழும்பி அத் திவ்யபுருடனைப் பின்தொடர்ந்தேகினார். யான் வியப்புற்றுப் பார்த்திருக்கையிலேயே அனைவரும் விசும்பாறுகச் சந்திரமண்டலம் சென்று மறைந்தனர்.

அக்கபிஞ்ஜலனும் மறைந்திடவே, அவ்விரவில் இத்தடாகக் கரையில் தரளிகையோடு தனித்திருந்து

பிகத் தவிக்க நேர்ந்தது. 'இஃதென்ன விசித்திரம்!' எனத் தரளிகையைக் கேட்டேன். அவ்வேழைத் தரளிகை உடல் நடுங்க, உயிர் துறந்துவிடுவேனோ வென்று ஐயமுற்று இவ்வாறுரைத்தனள் :—'அம்ம! இஃது விந்தையிலும் பெரும் விந்தை. தேவபுருடன் திரும்பிச் செல்லுகையில் உள்ளங்கசிய உமக்கு ஆறுதல் கூறினர். நமது கண்முனனிலேயிலேயே இஃதனைத்தும் நிகழ்ந்திருக்கின்றது. அத்திவ்யபுருடன் வார்த்தையும் வீணுகுமோ? அன்றியும் கபிஞ்ஜலனும் அம் மாபுருடனைப் பின்பற்றி வானேறிப் போயிருக்கின்றார். கபிஞ்ஜலன் திரும்ப வந்ததும் திவ்யபுருடனின் வரலாறு, புண்டரீகனது சரீரத்தை யெடுத்துப் போனதன் முகாந்தரம், உமக்கு ஆறுதல் கூறியதன் காரணம் முதலான எல்லாத் தகவல்களையும் தெரிந்து கொள்வோம். ஆகவே அவர் மீண்டும் வருமளவும் உமது சரீரத்திற்கு எத்தீங்கையும் விளைவித்துக்கொள்வது விவேகமல்ல.' எனப் பகர்ந்து எனக்குத் தேறுதல் கூறினள். உயிராசை ஒருவரையும் விட்டதல்ல ; ஆகவே அவள் உரைத்ததனைத்தும் உசிதமெனக் கருதி உயிரிழந்தேனில்லை. காளராத்திரி போன்ற அவ்விரவைத் தரையிற் புரண்டுகொண்டு தரளிகையோடேயே இவ்விடத்திற் கழித்தேன். காலையில் எழுந்து இக்கயத்தில் நீராடி, இப்பொழுதுள்ள இந்நிலைமையிலிருக்கத் தீர்மானித்தேன். இச் செய்தியறிந்து என் பெற்றோர் முதலியவர் வந்து, என்னுடன் வருந்தி இருந்து, அரண்மனைக்கு வரவேண்டுமென வற்புறுத்தியும், யான் இணங்கவில்லை. மணாளனின்றி மாளிகையில் வசித்தல் விரும்பத்தக்கதல்ல வென்பது

எனது துணிபு. ஆகவே என் பெற்றோர் என் கொள்கையை மாற்றக்கூடாமல் திரும்பவும் அகம் போயினர். பிறகு அம்முனிகுமாரரிடம் வைத்த அன்பினால் அவரது கமண்டலத்தைத் தண்ணீரருந்தவும், அவரது மரவுரிகளை யுடுத்திக்கொள்ளவும், அவரது ஜபமாலையைக் கழுத்திலணியவும் எடுத்துக் கொண்டேன். பின்னர் பிர்ம்மசரிய விரததனைக் கைப்பற்றி, முக்காலமும் இக்குளத்தில் மூழ்கி, இக்கானகத்திற் கிடைக்கும் கனி கிழங்கு முதலியதைப் புசித்துப் பசியாறி, இப்பரமசிவனைப் போற்றிக்கொண்டு, இக்குகையிலேயே தாளிகையோடு மனம் வருந்தி வசித்து வருகின்றேன். பிராம்மணவதை செய்த மஹாபாதகியான எனது வரலாறு இவ்விதமானது." என மொழிந்து, கண் சிவந்து நீர்ததும்ப, உதடு துடிக்கப் பெருமூச் செறிநதனள்.

முதலிலேயே மஹாச்வேதையின்பால், சந்திராபீடன் அவளது அருந்தவம் முதலியதைக் கண்டு அதிக கௌரவம் பாராட்டினன். அவளது மற்ற வரலாறுகளையும் கேட்கவே அவனுக்குப் பன்மடங்கு அவளிடம் மதிப்பு அதிகரித்தது. பிறகு அவளை மெல்லெனத் தேற்றி இங்ஙனம மொழியலானன்:—'அம்மணி! ஆயாசங்களைக் கண்டு அஞ்சுபவரும், சுகங்களிற் பற்றுள்ளவருமான ஜனமல்லவோ, அன்பிற்கேற்றவாறு நன்றிபாராட்ட வகையின்றி, வீணில் அழுகையொன்றால் மட்டும் அன்பு கொண்டவராகக் காட்டிக் கொள்கின்றனர். நீர் காரியத்திலேயே உமது அன்பை உள்ளபடி விளக்கிக் காட்டி விட்டீர்: பெற்றோரையும், பிறந்தநாள் முதலாகப் பழகிய மற்ற

உற்றோரையும் துறந்தீர். இந்திரபோகங்களை அனுபவிப்பதற்கேற்ற செல்வமிருந்தும் இல்லறத்திலுள்ள இன்பமனைத்தையும் இழந்தீர். இனிய இளம்பிராயத்தில் இத்தவத்தையும் ஏற்றுக்கொள்ளும் ஆற்றலைப் படைத்தீர். அபலைகள் செய்தற்கரிதான அரண்ணிய வாசத்தையும் அங்கீகரித்தீர். ஆகவே உம்மைப் போன்றவருமா இங்ஙனம் அழுவது? மேலும் துயரத்திற்காளானவர் தமதுயிரை ஆயாசமின்றியே மாய்த்துக்கொள்கின்றனர் என்பது எனதெண்ணம். அவர்கள் பெருமுயற்சி செய்து, தமது ஆத்துமாவைக் கடுந்துன்பங்களுக்கு ஆளாக்குகின்றனர். அன்றியும் உடன்கட்டை யேறும் வழக்கம் மிகக் கொடியது; உபயோகமற்றது. இது விவேகமற்றவர் செய்யும் விபரீதச் செயலாகும். கற்றறிந்தோர் இகழும் கொடுஞ் செயலாம் இது. தானே பிரிந்து போகாத உயிரை வலுவில் மாய்க்க முயலுவதினும் மூர்க்கத்தனம் வேறிலது. நன்கு ஆலோசிக்குங்கால், பொறுக்கவியலாத மனவேதனையை வேறுவகையிற் பரிகரிக்க வகையில்லாமற் சுயநலங்கருதியே உயிர்விடப்படுகின்றது. மாண்டுபோனவருக்கு இதனாற் குணமேதுமிலது. அது பரலோகம் போனவரைப் பார்க்கவோ, இறந்தவரை உயிர்ப்பிக்கவோ, நல்லுலகத்தை நாடிச் செல்வதற்கு உபாயமாகவோ உதவாது. ஆத்துமாவானது, தான் செய்த வினைப்பயன்களது பரிணமத்திற்கேற்றவண்ணம் வேறு கருமபூமியிற்றானே பரவசமாகக் கொண்டு சேர்க்கப்படுகின்றது. இவ்வாத்துமாவினிடமே தற்கொலை செய்துகொண்டதாலான பெரும்பாவம் பற்றிக்கொள்கின்றது. பிழைத்திருந்

தால் அஞ்ஜலி ஜலங்கொண்டு தருப்பணம் செய்தா வது இறந்தவருக்கும் தனக்கும் உபகாரம் செய்யக் கூடும். தற்கொலை புரிந்தவரோ இருவருக்குமே முற்றிலும் பயனற்றவராகிறார்.

இனி இப்போதைய விஷயத்தை விசாரிப்போம். புண்டரீகனை மீண்டும் பிழைத்து வருவதைப்பற்றி நீர் ஏன் ஐயமுறவேண்டும்? அவரது சேர்க்கை மீண்டும் உமக்கு உண்டாகுமென்று நீரே தேவபுருடன் சொல்லவும் கேட்டிருக்கிறீர். நன்கு யோசிப்போமாயின், உயிரளிப்பதற்கல்லாது ஆவிதுறந்த அவ்வுடலையெடுத்துப் போவதற்கு வேறு காரணம் எதுதான் சிந்திக்கக் கூடியது? இவ்வித சம்பவங்கள் அநேகம் நிகழ்ந்திருப்பதாக நாம் படித்தும் கேட்டுமிருக்கிறோம். ஆம்:—முன்பு விச்வாவசு வென்னும் கந்தருவராஜனுக்கு மேனகையினிடம் பிறந்த பிரமத்வரை யென்னும் கன்னிகை, ஸ்தூலகேசமுனிவரது ஆச்ரமத்திற் கருநாகத்தினால் தீண்டப்பட்டு மரித்துப்போக, அவளை முனி குமாரனான ருரு என்பவன் ஆயுளிற் பாதியைத் தந்து உயிர்ப்பித்திருக்கிறான். உஜ்ஜயினியில் ஸ்ரீகிருஷ்ணன் ஸாந்தீபினி யென்னும் அந்தணருடைய இறந்துபோன புதல்வனை நமனிடமிருந்து மீட்டுப் பிழைப்பித்தானன்றோ? அவ்விதந்தான் புண்டரீகனையும் மீண்டும் நீ கண்டு மகிழ்ச்சியுறும்படி நிகழும். அல்லாமலும் எஃது எவ்விதமாயினும் யாம் செய்வதென்னை? எல்லாம் வல்ல அவ்விதியல்லவோ மேலானது? நமது எண்ணப்படி மூச்சுவிடுவதற்கும் இயலாது. ஆகவே உம்மை வெறுத்துக்கொள்வதற்குச் சிறிதும் காரணமில்லை." என்று

கல்லுபதேசங்களைக்கொண்டு ஆறுதல் கூறி, அவளை அமைதியுறச் செய்தான்.

அப்பால் அந்திப்பொழுதும் வந்திடவே, மஹாச்வேதை மெள்ள வெழுந்து நீராடி, சந்திச்சடங்குகளை நிறைவேற்றிக்கொண்டு, மரவுரிப் படுக்கையில் வந்துட்கார்ந்தாள். சந்திராபீடனும் அங்ஙனமே சந்தியைத் தொழுதுவிட்டு, முன்னிருந்த அச்சிலாதலத்தின்மீது சில தளிர்களைச் சயனமாய் அமைத்துக் கொண்டு, அவளெதிரில் உட்கார்ந்தான். சற்று அவன் யோசித்து அவளை நோக்கி 'அம்மணி! வனவாசத்தையும் துன்பங்களையும் ஏற்று, உம்முடன் கூடவே இருந்து வந்த அத்தரளிகை இப்பொழுதெங்கே?' என வினவினன். அதற்கு மஹாச்வேதை அடியில் வருமாறு கூறினள் :—" இவ்வேழைத் தோழி என்னைவிட்டு எங்கும் போகாள். இவள் எங்கே என்பதையும் விளங்கக் கூறுகிறேன் கேளும் :—

சித்திரரதன் என்னும் கந்தருவராஜன் ஒருவர் ஏமகூடத்தில் இருந்துவருவதாக முன்னால் சொன்னேனல்லவா? அமுதத்திலுதித்த அரம்பையர் குலத்திற் பிறந்த மதிரை யென்னும் மாதுசிரோமணி அவரது மனைவியாவள். அவர்களுக்கு ரூபலாவண்ணியாதிகளால் ஸ்ரீதேவிக்கும் மேலான சீர்மையுடன் வாலிபவயதிற் காதம்பரி என்னும் புதல்வி யொருத்தியுண்டு. எனக்கு அவள் இரண்டாம் இருதயமெனத்தகும் பிறவித் தோழி. சங்கீதம் முதலிய கலைகளை யெல்லாம் நாங்கள் இருவரும் ஓரிடத்திற் கற்றுவந்தவர்கள். அவள் எனக்கு நேரிட்ட இப்பாழுஞ்செய்தியை யறிந்து அநேகம் தோழிமார்களுக்

கும் உறவினருக்கும் எதிரில் 'மஹாச்வேதை மீண்டும் மணாளனுடன் கூடி மனத்துயரம் நீங்கியவளாகும் வரையில் யான் மணம்புரிந்து கொள்ளேன்' என்று சபதம் செய்து கொண்டாள். பெற்றோர் முதலியவர் பெரிதும் வேண்டியும் அவளது மனதை மாற்ற முடிய வில்லை. அவர்களுக்கும் அவள் ஒருத்தியே புதல்வி. அவளுக்கு மணம்புரியும் வயது முற்ற முற்ற, அவளது பெற்றோரை மனத்தொல்லையும் மேன்மேலும் வாட்டி வந்தது. இப்படியிருக்க இன்று காலையிற் சித்திரரதன் 'மஹாச்வேதாய்! உனது நிலைமை எமது மனதை ஒரு புறம் துன்பப்படுத்திவர, உனது தோழியின் பிடிவாதம் மற்றொரு புறம் துளைக்கின்றது. இச்சமயம் நீதான் அவளை வழிக்குக் கொண்டுவர வேண்டும்' என்று க்ஷீரோதன் என்னும் அந்தப்புரத்துப் பணியாளனிடம் எனக்குச் செய்தியனுப்பினார். உடனே தாளிகையை அழைத்து 'யான் வேறுவிதமாய் அனுபவிக்கும் துயரம் அளவற்றது; உனது வீண் பிடிவாதத்தினால் என்றனை வாட்டுவது நியாயமல்ல. யான் உயிர்வாழவேண்டுமானால் பெற்றோர் மொழியைப் புறக்கணிக்காது நடக்கத்தான் வேண்டும்' எனக் காதம்பரியினிடம் கூறுமாறு பதிற் கூறி, அவளை க்ஷீரோதனோடு எமகூடத்திற்கு அனுப்பினேன். தாளிகை அப்பாற் சென்ற சிறிது நேரத்தில் இவ்விடத்தில் யான் உம்மைக் காணும் பாக்கியத்தைப் பெற்றேன்." எனக் கூறி முடித்தாள்.

## ஒன்பதாம் சருக்கம்.

இதற்குள் சந்திரனும் உதித்தது. மஹாச்வேதை மெதுவாக நித்திரையுறலானாள். சந்திராபீடனும் தளிர்ப்படுக்கையிற் சயனித்தான். அப்பொழுது தான் தனது சேனை முதலியவற்றைப் பற்றி அவன் கவலையுறலானான். அச்சிந்தையோடு ஒருவாறு நித்திரை போயினன். இவ்வாறாகச் சந்திராபீடனுக்கு மஹாச்வேதையின் ஆச்ரமத்தில் ஒருநாள் கழிந்தது. மறுநாட் காலையில் மஹாச்வேதை யெழுந்து, நீராட்டம் முதலிய சடங்குகளை நிறைவேற்றிக் கொண்டு, ஒரு புறம் தருப்பாசனத்தில் அகமர்ஷண மந்திரங்களை ஜபித்தவாறுட்கார்ந்திருந்தாள். சந்திராபீடனும் விடியற்காலத்திற்கேற்ற விதிகளையெல்லாம் முடித்துக்கொண்டு அங்கு வந்து அமர்ந்தனன். அக்காலை ஓர் அழகிய கந்தருவ வாலிபனை அழைத்துக் கொண்டு அவ்விடம் தரளிகை வந்துசேர்ந்தாள். அக்கந்தருவ வாலிபனுக்கு வயது பதினாறு இருக்கும். அவ்விருவரும் அற்புத வடிவம் வாய்ந்த சந்திராபீடனைக் கண்டு வியப்படைந்த மனத்தினராய், மஹாச்வேதையைப் பணிந்துவிட்டு, அவரவருக்குரிய இடங்களில் உட்கார்ந்தனர்.

பிறகு மஹாச்வேதை ஜபத்தை முடித்துக் கொண்டு, 'காதம்பரி க்ஷேமமா? நான் சொன்னபடியே செய்யச் சம்மதித்தாளா?' எனத் தரளிகையைக் கேட்டாள். அதற்குத் தரளிகை வணக்கமாக ஒருவாறு சாய்ந்த முகத்தினளாய் 'காதம்பரி சௌக்கியமாயிருக்கின்றாள். நீங்கள் கூறியபடி விளங்கச்சொன்னேன்.

காதம்பரி கண்ணீர் சொரிந்துகொண்டே கூறிய பதிலை அவளனுப்பிய கேயூரகன் மொழிந்திடுவான்,' எனக் கூறினள். உடனே கேயூரகன் இங்ஙனம் உரைத்தனன் :— "காதம்பரீதேவி அனுப்பிய செய்தியாவது : 'தரளிகையினிடம் நீ செப்பியனுப்பிய செய்தி என் மனதைப் பரிசோதிக்கும் வகையோ? அல்லது யான் அரண்மனையில் வசிக்கும் குற்றத்தைக் குறித்துக்காட்டும் பாவனையோ? பிறந்தநாள் முதற் பற்றுமுமற் பெருகிய நம் பிரீதியை நீ நன்கறிந்தும், இனிதாக வார்த்தையாடும் இயல்புள்ளவளாயிருந்தும், இவ்வடாத செய்தியை நீ எங்ஙனம் அனுப்பத் துணிந்தாய்? என் பிறவித்தோழி மனம் பரிதவித்து, அங்கங்களை யுலர்த்தி, அருந்தவம் செய்து வரும்போது, என்னை மணம் புரிந்துகொள்ள வேண்டுமென மொழிவதும் முறையோ? எனதுயிருடன் நீ கானகமேகினுய்; கனவிலும் இனி நீ இவ்விதம் சொல்ல நினையாதே.' என்றவாறு மொழியச் சொன்னுள் காதம்பரி" என்றுன். இதைக் கேட்டு மஹாச்வேதையும் சற்று யோசித்து, 'கேயூரக! நானே அவ்விடம் வந்து அவளுக்கு அவசியமானதைச் செய்வேன்' எனச் சொல்லி கேயூரகனை அனுப்பிவிட்டாள்.

அதன்பிறகு மஹாச்வேதை சந்திராபீடனை நோக்கி இவ்விதம் கூறினள் :—'இராஜகுமாரரே! உம்மைப் பார்த்ததுமுதல் வெகுநாட்களா யிருந்து வந்த என் துயரம் தணிந்துவிட்டது. சான்றோர் உவக்கும் உமது தோற்றமும் குணங்களும் உம்மை எதைப் பற்றியும் வேண்டலாமெனத் தூண்டுகின்றன. ஏமகூடம் மிகவும் வனப்பிற் சிறந்தது. சித்திராத ராஜ

தானியும் விசித்திரமானது. கந்தருவ ஜனங்களும் வெகு சுந்தரமானவர். காதம்பரியும் மிகப் பெருந் தன்மையும் சரசமான மனமும் பெற்றவள். அவ ளுக்குத் தோன்றியுள்ள அவிவேகத்தை அகற்றவும் உமது வரவு உதவி புரியும்; வேறு பெருங்காரியமெ துவும் வீணாய்விடாமலிருக்குமாயின், இதுகாறும் காணாத காட்சிகளைக் காண்பதில் ஆவலிருப்பின், எனது வேண்டுகோளை அங்கீகரித்து ஏமகூடத்திற்கு இன்று என்னுடன் வந்து, காதம்பரியையும் பெருமைப் படுத்திவிட்டு, நாளைய தினம் நீங்கள் திரும்பி விட லாம்' என்றதும், சந்திராபீடன் 'அப்படியே. சான் றோர்க்கு யான் சாலவும் ஆட்பட்டவன்' எனப் பதில ளித்து, இந்திராயுதத்தின் கடிவாளத்தைக் கரத்திற் பற்றியவாறு, மஹாச்வேதையோடு நடந்து ஏமகூடஞ் சென்றான். சிறிது தூரத்திலேயே மற்றோர் அமரா வதிபோன்று கண்ணைக் கவரும் காந்தி பொருந்திய கந்தருவராஜதானியை அடைந்தான். படிகக் கற்க ளாலமைந்த வானளாவிய தோரணவாயிலைக் கடந்து, ஏழு அங்கணங்களையும் தாண்டி, கன்னிகைகளின் அந் தப்புரம் சென்றான். மஹாச்வேதையைக் கண்டதும தொண்டுபுரியும் ஆட்கள் தோரணவாயிலிலிருந்தே தலைவணங்கி அவர்களுக்கு வழிகாட்டிச் சென்றனர்.

அவ்வந்தப்புரம் பேரழகைப் பெற்றிருக்கும் பெண்மணிகளின் களஞ்சியம்போல் அவனுக்குத் தோன்றிற்று. அழகியதோர் உத்தியானவனத்தி னிடையில் அமைந்திருந்த அவ்வந்தப்புரத்தின் முன் புறத்தில் மணித்தூண்களோடும், முத்து விதானங்க ளோடும் ஸ்ரீமண்டபம் என்னும் கொலுவிருக்குங்

கூடத்தினிடையில், நீலநிறப் பட்டு மெத்தை யிடப் பெற்ற இரத்தினகசிதமான மஞ்சத்தில், மதியின் கதிரொளி போன்ற தேககாந்தியுடன் காதம்பரி வீற்றிருக்கக் கண்டான். இரத்தினுபரணங்களும் இலாவண்ணியமும் பொதிந்த நூற்றுக்கணக்கான கன்னிகைகள் அவளைச் சூழ்ந்து உபசரித்திருந்தனர். வேறெங்கும் கண்டிராத அவளது வடிவழகைக் கண்டு அவன் 'இவ்வித அழகுகளைப் படைக்கும் அயனது பண்டகசாலைக்கு அளவில்லைபோலும்!' என்றெண்ணி வியந்தான். இவர்களுக்கு முன் சென்ற கேயூரகன் அருகில் உட்கார்ந்து ஏதோ வியப்புற்ற முகத்துடன் விளம்ப, அதைக் காதம்பரி மிகக் கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள்; அச்சந்தர்ப்பத்தில் மஹாச்வேதையின் ஆச்ரமத்தில் தன்னைப் பார்த்து வந்ததைக் குறித்தே அப்பேச்சு இருக்கவேண்டுமென்று சந்திராபீடனும் உணர்ந்தனன். காதம்பரியின் சந்திரபிம்பம் போன்ற முகத்தின் சீர்மையானது, சந்திராபீடனின் இருதயமாகும் கடல் நீரைக் கவர்ந்து மிகக் கொந்தளிக்கச் செய்தது. காதம்யரியும் காண்பதற்கரிதான காம்பீரியமும் அழகுமமைந்த சந்திராபீடனைக் கண்டு மிகவும் திகைத்துப்போனுள்.

மஹாச்வேதை வருவதைக் கண்டு காதம்பரி விரைந்தெழுந்து அவளை எதிர்கொண்டழைத்தாள். அவ்விருவரும் பார்த்துக்கொண்டு நெடுநாட்களானது பற்றி ஒருவருக்கொருவர் அன்புடன் தழுவிக் கொண்டனர். பிறகு மஹாச்வேதை அவளை நோக்கி 'காதம்பரி! பாரதவருடத்தில் தாராபீடன் என்று மிகப் புகழ்பெற்ற சக்கிரவர்த்தி யொருவர் உண்டு.

அவருடைய திருக்குமாரரான யுவராஜன் சந்திராபீ டன் என்பவர் இம் மஹாபுருடன். கற்றூண்களெனத் தகும் தமது புயங்களால் புவனமெல்லாம் இவர் திக்விஜயம் செய்துவிட்டு, நமது ஆச்ரமத்திற்குத் தற்செயலாய் நமது புண்ணியத்தினால் வந்து சேர்ந் தார். கல்வியிற்றேர்ந்தவர். சிறந்த குணங்களும் செல் வமும் நிறைந்தவர். இவரால் விண்ணுலகினும் மண் ணுலகம் மேன்மையுற்றது. அகில சீர்மைகளோடு அழகுமமையப்பெற்ற இம்மஹாபுருடனை நீயும் என் னைப் போலவே தெரிந்துகொள்ளவெண்டுமென்று ஆலோசித்தே இங்கு அழைத்துவந்தேன். உன்னைப் பற்றியும் இவரிடம் வேண்டியவளவு மொழிந்துள் ளேன். ஆகவே நூதன புருடன என்கிற பேதம் பாராட்டாது, இவரைப் பரம மித்திரனாகவும் பந்துக் களில் முதன்மையானவராகவும் கருதி நீ நடந்து கொள்வாயாக' என்று அறிமுகம் செய்துவைத்தாள். அப்பால் சந்திராபீடனும் காதம்பரியும் ஒருவருக் கொருவர் வந்தனம் செய்து கொண்டனர்.

உடனே சந்திராபீடனுக்குப் பணியாளர் பர பரப்புடன் பொற்பீடமொன்று கொண்டுவர, அதில் அவன் அமர்ந்தான். மஹாச்வேதையும் காதம் பரியின் அருகில் மஞ்சத்திலுட்கார்ந்தனள். அவ் விடத்தில் அனைவரும் நிச்சத்தமாய் நின்றனர். காதம் பரிக்கு வடிவத்தாலும் வயதாலும் ஏற்றவளான மத லேகை யென்னும் தோழியானவள் சந்திராபீட னது பாதங்களைக் கழுவி, அவனுக்குபசாரங்களைச் செய்தாள். அப்பால் காதம்பரி அழகிய தட்டொன் றில் மஹாச்வேதைக்குத் தாம்பூலம் எடுத்தளிக்கப்

போனாள். அப்பொழுது மஹாச்வேதை 'நமது அகத்திற்குப் புதிதாக வந்துள்ள அரசகுமாரை யல்லவோ நாம் அனைவருமாகக் கௌரவிக்கவேண்டும்? ஆகவே இதை நீ அவரிடம் அளிப்பாயாக' என்று வற்புறுத்திக் கூறினாள். பிறகு காதம்பரி முகம் கவிழ்ந்தவண்ணம் அநாகரிகரைப்போல ஒருவாறு வெட்கத்துடன், தளிர்போன்ற கரங்கள் வியர்த்து நடுக்கமுற, அவனுக்குத் தன்னையே அர்ப்பணம் செய்துகொள்பவள் போலத் தாம்பூலத்தை யளித்தனள். சந்திராபீடனும் அவளது பரிசத்தினால் மகிழ்வடைந்தான். இவ்வின்பமான சமயத்திற் காதம்பரிக்கு அருமையான காளிந்தி யென்னும் பூவையானது அதன் கணவனான பரிஹாசன் என்னும் கிளியைப் பழித்துச் சண்டையிடுவதைக் கண்டு, சந்திராபீடனும் மற்றவரும் சற்று நேரம் விநோதவார்த்தையாடி மகிழ்ந்தனர்.

இங்ஙனமிருக்கையிற் கஞ்சுகியொருவன் ஆங்கு வந்து, சித்திரரததேவனும், மதிராதேவியும் மஹாச்வேதையை அழைப்பதாகக் கூறினான். அதைக் கேட்டதும், அவர்களைக் காண்பதற்குப் போக விரும்பிய மஹாச்வேதை 'சந்திராபீடன் எங்கே தங்கலாம்?' எனக் காதம்பரியைக் கேட்டாள். அதற்குப் புன்சிரிப்புடன் அவள் 'நீயும் இங்ஙனம் வினவுகின்றனை யென்னை? பார்த்ததுமுதல் என் சரீரத்திற்கே இவர் அதிகாரியாயிருக்க, மற்றவைகளுக்குக் கேட்பானேன்? ஆகவே இவருக்கு எவ்விடம் பிரியப்படுகின்றதோ, அல்லது நீ எது ஏற்றதென்று நினைக்கின்றாயோ அவ்விடத்தில் இவர் இருக்க யாது தடை?' என்றாள்.

பிறகு காதம்பரியின் அந்தப்புரத்துக்கு அருகில், உத்தியானவனத்துக் கிரீடாபருவதத்தில் அமைந்துள்ள இரத்தின மாளிகையிற் சந்திராபீடன் இருப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, மஹாச்வேதை கந்தருவ ராஜனைக் காணச் சென்றனள்.

சந்திராபீடனும் உடனே வெளிவந்து, முன்புறத்திற் கேயூரகன வழிகாட்ட, வாத்திய முழக்கங்களோடு அநேகம் கந்தருவகன்னிகைகள் பின்தொடர, அம்மணிமாளிகைக்குச் சென்றான். அவ்விடத்தில் மஞ்சனமாடல் முதலிய மத்தியானச் சடங்குகளையெல்லாம் சரிவர முடித்துக்கொண்டான். தைவலோகத்திற் கிடைப்பதற்கேற்ற விருந்துகளையும் மற்ற வைபவங்களையும் பெற்று ஒரு புறம் வியப்பும் மற்றொரு புறம இன்பமும் எய்தினன். அம்மாளிகையில் ஓர் இரத்தினமேடையில் இடப்பெற்றிருந்த அம்சதூலிகாசயனத்திற் சாய்ந்துகொண்டான். கேயூரகன் முதலானோர் இவனுக்கு ஆலவட்டம் வீசியும், நறுமணங்கமழும் சந்தனம் பூசியும் பலவாறு உபசரித்தனர். பிறகு கதிரவன் குடதிசையிற் சிறிது சாய, சந்திராபீடன் அக்கிரீடாபருவதத்தின் மீதேறி, அதைச் சார்ந்த பூந்தோட்டத்தின் சீர்மைகளைக் கண்ணுற்று மனம் களிப்புற உல்லாசமாய் உலாவினன். அவன் ஆங்கு வந்திருப்பதைக் கண்ட காதம்பரியும், மதலேகையோடு மஹாச்வேதை வரும் பாதையைப் பார்க்கும் பாவனையாகத் தன் மாளிகை மீதேறி, மனங் களிக்கச் சந்திராபீடனைக் கண்ணுற்றனள். இவ்வாறாகச் சந்திராபீடனும் காதம்பரியும் ஒருவரை

யொருவர் நோக்கிக்கொண்டே சில நேரம் இனிதாகக் காலங் கழித்தனர்.

அப்பால் சந்திராபீடன் அக்குன்றத்தின் முன்புறத்திலிருந்த மரகதக்கற்பாறையின்மீது வந்துட்கார்ந்தான். சற்றுக்கெல்லாம் அநேகம் கன்னிகைகள் புடைசூழ, மதலேகை இவனிருக்குமிடம் நோக்கி வந்துகொண்டிருக்கக் கண்டான். அவளுக்கு வெண்பட்டுக்குடையொன்று பிடிக்கப்பட்டு, இரு புறமும் கவரிகளும் வீசப்பட்டன. இரண்டு மெல்லிய வெண்பட்டுடைகளைக் கையிலேந்தியவாறு கெயூரகன் முன்னே வந்து கொண்டிருந்தான். மதலேகைக்குப் பக்கத்தில் தரளிகையானவள் உள்ளே வெண்துகில் பரப்பிய ஓர் தட்டிற் பிரகாசமான காந்தி பொருந்திய முத்துமாலையொன்றை யேந்திவந்தாள். பூரண சந்திரனது நிலவினொளியையும் மறைக்கக்கூடிய மேன்மையுடையது அம்முத்துமாலையின் காந்தி. சிறிது தூரத்தில் வருகையிலேயே சந்திராபீடன் எழுந்து மதலேகையை எதிர்கொண்டழைத்தான. மதலேகையும் வநது அக்கற்பாறையின் ஒரு பாரிசத்தில் உட்கார்ந்தாள். மற்றவர் எல்லோரும் கீழே அமர்ந்தனர்.

அப்பால் மதலேகை முகமலர்ச்சியோடு எழுந்து, சந்திராபீடனுக்குச் சுகந்தம் நிரம்பிய் சந்தனக்குழம்பை அளித்துப் பூசச் செய்து, இரு வெண்பட்டுடைகளையும் அளித்து அணியச் செய்து, மிகவும் அழகிய மல்லிகைப் பூமாலையைத் தோளிலிட்டாள். பின்னர் அவ்வற்புதமான முத்துமாலையைக் கையிலெந்தியவளாய், இங்ஙனம் மொழியலானாள்:—“இராஜகுமாரா!

உமது நிகரில்லாத் திறமையும் வடிவமும் அஹங்கார மின்மையால் அனைவரும் கண்டு இன்புறக்கூடியவைக ளாயிருக்கின்றன ; ஆகவே உமது இவ்வினிய குணங் கள் உமது அன்புக்கு ஆட்பட்ட மனிதரைக்கொண்டு எதையும் செய்விக்கத் தூண்டுகின்றன. உமது வணக்கமே இவ்வுபசாராதிகளைச் செய்ய எமக்கு இடந்தருகின்றன. யாம் செய்யும் இவ்வுபசாரங்கள் உமக்கு உவப்பாயிருக்கலாம் ; அல்லது வேறு விதமா மாகவும் இருக்கலாம் ; யாம் என் செய்வோம்? இயற் கையிலேயே இனிதான உமதுருவம் உம்மைப் பார்த் ததுமே நமக்கு இவ்விதம் செய்ய நம்பிக்கையைத் தரு கின்றதே. இல்லையேல் புவனமெங்கும் புகழ் பெற்றுச் செல்வமும் சீரும் நிரம்பி விளங்கும் உங்களிடம் நாடு வதற்குத்தான் எவரேனும் துணிவு பெறுவரோ? உம்மைப்போன்ற பிரபாவமுள்ளவருக்கு எம்போன்ற வர் செய்யுமுபசாரம் அனைத்தும் அநுசிதமாக வல்ல வோ தோற்றும்? மேலும் நீங்கள் எமது மனதைச் சுய மாகவே கவர்ந்து விட்டீர்கள். நீங்கள் முதலில் யாமி ருக்குமிடம் வந்து அரிதான உமது தரிசனத்தை எளி தாகவே அளித்தீர். இதற்கு நாம் எக்கைம்மாறு செய்து உமது வரவைப் பயனுள்ளதாக்குவோம்? இவ்வுபசாரத்தினால் காதம்பரி அன்பை யறிவிக்கின்று ளன்றி, அவளது செல்வப் பெருமையைக் காட்டுவதா கக் கருதக்கூடாது. மேலும் உம்மைப் போன்றவ ருக்கு அடிமையாவதுங்கூட மேலான பாக்கியமே. அவள் உமக்குத் தன் தேகத்தைச் சமர்ப்பித்துக் கொண்டபோதிலும் மோசம் போனவளாகாள். மேன் மக்களது பெருந்தன்மையானது, அன்பார்ந்தவரெவ

ரது விருப்பத்தையும் புறக்கணிப்பதில்லை. உமது மேனியே இம்முத்துமாலைக்கு முற்றிலும் ஏற்றதெனக் கருதி, இவ்வணியைக் காதம்பரி உங்களுக்குச் சமர்ப்பிக்க அனுப்பி யிருக்கின்றாள். இஃது அமுதங் கடைகையிற் பாற்கடலில் தோன்றிய அரும்பொருட்களுள் ஒன்று; அவற்றுள் பிறருக்குதவாது இஃதொன்றே சமுத்திரராஜன்வசம் மிகுந்திருந்தது; அதனால் இம்முத்துமாலை சேஷஹாரம் என்று வழங்கப்படுகின்றது. சமுத்திரராஜன இதை வருணபகவானுக்கு அர்ப்பணம் செய்ய, அவ்வருணனும் கந்தருவராஜனுக்கு இதை நன்கொடையாகக் கொடுத்தார். கந்தருவராஜனிடமிருந்து காதம்பரியும் இதைப் பெற்றாள். உமது இயற்கையான வடிவமும் குணங்களும் உம்மை அலங்கரிக்கப் போதுமானவை; ஆகிலும் இதையணியச் செய்வதிற் காதம்பரியின் அன்பே காரணமாம். உமது அன்பிற்குக் காதம்பரி உரியவளென்பதை ஊனறி யோசித்தே மஹாச்வேதையும் இந்த முத்துமாலையோடு தரளிகையையும் அனுப்பியிருக்கின்றாள். யான் மொழிந்தவாறு மஹாச்வேதையே உமதிடம் விண்ணப்பம் செய்துகொள்ளச் சொன்னாள். பாக்கியசாலியான இராஜகுமார! காதம்பரி இவ்விதம் முதன் முதற் காட்டும் அன்பை அருள் புரிந்து அங்கீகரிக்கவேண்டும்" என மொழிந்து, அம்முத்துமாலையை அவனது மார்பில் அணிந்தனள்.

சந்திராபீடனும் அதைப் பெற்றுக் கொண்டு ஆச்சரியமுற்று இவ்வாறு மறுமொழி கூறினான்:—'மதலேகே! என் சொல்வேன்? நீ வெகு சாமர்த்தியக் காரி. உனது விருப்பப்படி நன்கொண்ட முதலி

யதைப் பெறச் செய்ய நீ நன்கறிவாய். விடையளிப்பதற்கும் இடங்கொடாமற் பேச்சிற் பெரிதும் திறமையைக் காட்டிவிட்டனை. ஆனால் ஒன்று கூறுகிறேன். எதைப் பெறுவதற்கும் பெறாமலிருப்பதற்கும் எமக்கேது உரிமை? அக்கதை அத்தமித்தல்லவோ போய்விட்டது? சற்குணசாலிகளான உங்களுக்கு யான் கருவியாயினேனன்றோ? எனது அநுகூலப் பிரதிகூலங்களை யெதிர்பாராது உமது விருப்பப்படி எதிலும் என்றனை யேவுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. மிகப் பெருந்தன்மை வாய்ந்த காதம்பரீதேவியின் அருங்குணங்கள் எவரையும் ஊழியராகச் செய்யும் வல்லமையுள்ளவை' என்றனன். பிறகு மதலேகை முதலியவர் காதம்பரியைப்பற்றி இனிய வார்த்தைகளாடிக் கொண்டே சந்திராபீடனிடம் சின்னேரம் இருந்துவிட்டு, விடைபெற்றுச் சென்றனர். அவ்வழகிய குன்றத்தினில் முத்துமாலை முதலிய அணிகளணிந்து வீற்றிருந்த சந்திராபீடன், தாரகைத்திரளாற் சூழப்பெற்று உதயகிரியில் உதயமாகும் சந்திரனைப்போல விளங்கினான். அருகிலிருந்த மாடியின் மீதிருந்து அவனது அம்மனோகரத் தோற்றத்தைக் காதம்பரியும் கண்டு மனம் பூரித்தனள்.

அச்சமயம் இருள்வந்து மறைக்கவே மாடியிலிருந்து காதம்பரியும், கிரீடாபருவதத்திலிருந்து சந்திராபீடனும் இறங்கிவிட்டார்கள். காதம்பரி ஒன்றுந்தோன்றாத மனத்துடன் உண்டிவினை முடித்து, மெல்லணையிற் சாய்ந்து, சந்திராபீடனைக் கண்டதும் தன் மனவுறுதி மாயமாய்விட்டதையும், அவனிடம் காத[illegible] மனம் மிக்க குழப்பமுண்டதையும் பற்றி

நினைத்து நினைத்து வெட்கத்திலாழ்ந்து ஒருவாறு துயிலுறலானாள். சந்திராபீடனும் மாலைச்சடங்கு களைச் செய்துவிட்டு, மஞ்சத்திற் சயனித்துத் தான் கண்ட அக்கந்தருவராஜகுமாரியின் விலாசக் காட்சி களும் செயல்களும் உண்மையிலேயே தன்னைப்பற்றி யனவோ, அல்லது கந்தருவமாதுகளுக்கு இயல்பா னவையோவென்று பலவாறு மனத்தினிற் கலவர முற்றும், கந்தருவ லோகத்தின் மேன்மைகளை நினைத் துக் கொண்டும் நன்கு நித்திரையுறக் கூடவில்லை.

## பத்தாம் சருக்கம்.

பிறகு விடியற்காலையிற் சந்திராபீடன் சயனம் விட் டெழுந்து, நீராடி காலைச்சடங்குகளை முடித்துக் கொண்டு, கேயூரகனை யழைத்துத் துரிதமாகக் காதம் பரி இருக்குமிடத்தை யறிந்துவர அனுப்பினான். அவன் அப்படியே சென்று மீண்டும் வந்து, மந்தர மலைக்கருகிலுள்ள மாளிகையின் முற்றத்திற் காதம் பரியும் மஹாச்வேதையும் மணிமேடையொன்றில் இருப்பதாகக் கூற, உடனே அவர்களைக் காண்பதற்கு எழுந்தேகினான். அம்மாளிகையின் முற்றத்திற் பல சமயாசாரங்களைச் சார்ந்தவர்களும், துறவறம் பூண்ட வருமான, அநேகம் தாபதப் பெண்கள் மஹாச்வே தையைச் சூழ்ந்து கொண்டு, வெவ்வேறு சமய நூல் களைப் படித்துக் கொண்டிருந்தனர். பின்புறத்திற் கின்னரதம்பதிகள் உட்கார்ந்து வேய்ங்குழலூதிவர, இனிய நாதத்துடன்

மோதிவர அதைக் காதம்பரியும் செவியுற்றவா றிருந்தாள்.

இவன் அருகிற் சென்று வந்தனம் செய்து, அவர் களிருந்த அத்திண்ணையின் மீதே ஓர் ஆசனத்தில் அமர்ந்தனன். சற்று நேரம் இருந்துவிட்டு, மஹாச் வேதையை நோக்கி ஒருவாறு புன்னகை புரிந்தான். அவளும் உடனே அவனுள்ளம் அறிந்து, காதம் பரியை நோக்கி 'இராஜகுமாரன் நின் குணங்களில் ஈடுபட்டு ஏதும் கூற முடியாமலிருக்கின்றார். பின்னால் விட்டு வந்த இவரது சேனையும் நண்பர்களும் இவ ரது செய்தியறியாது வருத்தமுற்றிருப்பர். நெடுந் தூரத்திலிருக்கையிலும் கதிரவனுக்கும் கமலங்களுக் கும் இருப்பதுபோல் ஆயுளுள்ளவளவும் அசையாப் பாசம் உங்களிருவருக்கும் இசைந்துண்டாய்விட்டது. இனி நீவிர் இருவரும் ஒருவரையொருவர் மறந்திடீர் கள். அவருக்குப் போக விடை தருவாயாக' என்ற னள். அதற்குக் காதம்பரியானவள் 'சகி! யானும் நமது பரிஜனமும அவரது உயிரும் உடலும் போல எவ்விதத்திலும் இவருக்குச் சுவாதீனமாயிருக்க வேறே என் அனுமதி யெதற்கு ?' எனக்கூறி விட்டு, உடனே கந்தருவகுமாரர்களை யழைத்துச் சந்திராபீட னைத் தன் தேசத்திற் சேர்த்துவரக் கட்டளையிட்டாள்.

சந்திராபீடனும் எழுந்து, அனைவருக்கும் வந்த னம் செய்துவிட்டு, 'தேவி! மிகைபடப் பேசுபவரை யுலகம் நம்புவதில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள் வது இதுதான்: உமது பணியாளரைப்பற்றிய பேச்சு வருங்கால் என்னையும் நினைத்துக் கொள்ளவேண்டும்' எனக் காதம்பரியை நோக்கிக் கூறிவிட்டு, வெளிக் கிளம்

பினான். காதம்பரியைத் தவிர்த்து மற்றெல்லோரும் தோரணவாயிலீறாகப் பின்தொடர்ந்து வழியனுப்பி னர். சந்திராபீடன் இந்திராயுதத்திலேறிக் கொண்டு, கந்தருவ வாலிபர் பலர் பின் தொடர, மஹாச்வேதை யின் ஆச்ரமமடைந்தான். ஆங்கு அவன் தன் சேனை அனைத்தும் வந்து அச்சோதக்கரையில இறங்கியிருக் கக் கண்டான். அச்சேனை இந்திராயுதத்தின் குளப் படிக குறிகளைத் தொடர்ந்து வந்து சேர்ந்திருந்தன. உடனே கந்தருவகுமாரர்களைத் திரும்பப் போகச் செய்து, தனது படக்குடியிற்போய் இறங்கினான். அப்பொழுது சேனையிலுள்ளோர் அனைவரும் அவ னைக் கண்டு ஆனந்த பரவசராயினர். அப்பால் வைசம் பாயனனோடும் பத்திரலேகையோடும் ஏகாந்தத்தில் ஏமகூடத்தையும் காதம்பரி முதலியவர்களையும் பற் றிய பெருமைகளைப் பேசிக்கொண்டே பகற்பொழு தைப் போக்கினான். இதன்பிறகு இராஜ்யலக்ஷ்மி முன்போல் இவனுக்கு இன்பந்தரவில்லை. காதம்ப ரியை நினைத்து நினைத்து மிகக் கலவரமடைந்த மனத் தினனாய் நித்திரை யின்றியே இரவையும் கழித் தான்.

மறுநாட்காலையில் உல்லாசமாகப் படமண்டபத் திற் சந்திராபீடன் வீற்றிருக்கையில், வாயிற்காப்பவ னோடு திடீரெனக் கேயூரகன் வரக் கண்டான். சிறிது தூரத்திலிருந்தே சென்னிவணங்கிய அவனைச் சந்திரா பீடன் அன்புற வரவேற்று உட்காரச் செய்தான். ஈரத்துணியினால் மறைத்துக் கொண்டுவந்த தாமரை யிலைத்தொன்னையில் பருத்த மரகதமணிபோன்ற பச் சைப்பாக்குகளையும், வெண் பசுமையான வெற்றிலை

களையும், மிகக் குளிர்ச்சியான பச்சைக்கற்பூரக் கட்டிகளையும், கஸ்தூரி முதலியது கலந்த சந்தனத்தையும், காதம்பரி அனுப்பியதாகச் சந்திராபீடனிடம் அளித்தனன். சயனத்தில் மறந்துவிட்டு வந்ததாகக் கூறி அவன் சேஷஹாரத்தையும் உத்தரியத்தலைப்பிலிருந்து அவிழ்த்துச் சாமரை யேந்துபவளிடம் கொடுத்து விட்டு இங்ஙனம் கூறினன். 'ஐயன்மீர்! அவ்விடம் வந்து நீர் அனைவரது முன்னிலையிலும் இருந்து 'சந்திரனைப்போல் பரமானந்தமளித்ததாகவும், நீர் திரும்பிவந்ததும் கந்தருவநகரமே களிப்பொழிந்து உரக்கங் கொண்டதுபோல் ஆய்விட்டதாகவும், காதம்பரி உமது புன்னகை புரிந்த முகத்தை நினைந்து நினைந்து வருந்துவதாகவும் மஹாச்வேதை மொழியச் சொன்னார். ஆகவே நீங்கள் மற்றொரு முறை அவ்விடம் விஜயம் செய்து அவர்களைப் பெருமையுறச் செய்யவேண்டுமென்கிறார்கள்.'

சந்திராபீடன் அச்சந்தனப்பூச்சு முதலியதை யுபயோகித்து, முத்துமாலையையும் மார்பிலணிந்து கொண்டான். 'காதம்பரீ தேவியின் மகத்தான அன்பை யான் பெற்றதானது மஹாச்வேதையின் தாள்களைத் தொழுததன் பயனேயாம்' எனக் கூறிவிட்டு, ஏமகூடம் போகவெண்ணிக் குதிரையைக் கொண்டுவர உத்தரவிட்டான். உடனே குதிரைப் பாகன் இந்திராயுதத்தைச் சேணமிட்டு வாயிலிற் கொண்டுவந்து நிறுத்தினன். படையனைத்தையும் பார்த்துக்கொள்ள வைசம்பாயனனிடம் ஏற்பாடு செய்துவிட்டு, இந்திராயுதமேறிப் புறப்பட்டான். அவனுக்கருகில் ஓர் வெண்குதிரையிற் பத்திரலேகை

யும், பின்னால் மற்றொரு குதிரையின்மீது கேயூரக னும் வர, ஏமகூடம் சென்று, காதம்பரியின் அரண் மனைவாயிலிற் கீழிறங்கினான்.

அங்கே வாயிற்காப்பவனிடம் குதிரையைக் கொடுத்துவிட்டு உள்ளே சென்றான். இவனைப்பின் தொடர்ந்தேகும் பத்திரலேகையும் முதன் முதற் காதம்பரியைக் காண்பதிற் பேராவல் கொண்டிருந் தாள். கிரீடாபருவதத்தின் அடிவாரத்து நடபாவியின் கரையில் அமைத்துள்ள இமகிருகத்திற் காதம்பரி இருப்பதாய் அறிந்து, கேயூரகன் முன் சென்று வழி காட்ட அவ்விடம் சென்றான். அந்த இமகிருத்தினுட் செல்லும்போது, உள்ளும் புறமும் பனித்திரளினும் சீதளமான பரிசத்தினாற் கடும் குளிர்ச்சியை யுணர்ந் தான். அவ்விடத்தில் தாமரைத் தண்டுகளாலும் இலைகளாலும் ஆகிய மண்டபமொன்றிற் காதம்பரி மனங்குன்றி மலர்ப்படுக்கையிற் சாய்ந்திருந்தாள். சந் திராபீடன் வருவதைக் கண்டு வெகு பரப்புடன் கண் களில் இன்பநீர் ததும்ப அப்பூப்படுக்கையிலிருந்து எழுந்து நின்றாள். அவன் அருகில் வந்து மஹாச் வேதை முதலியவருக்குத் தலைவணங்க, அவர்களும் இவனுக்குத் திரும்ப வந்தனம் செய்தனர். பிறகு அனைவரும் அவரவருக்குரிய இடங்களில் அமர்ந் தனர். அப்பொழுது கேயூரகன் காதம்பரியை நோக்கி, 'தேவி! இவள் சந்திராபீடதேவனுடைய அருளுக்குப் பாத்திரமான பத்திரலேகை யென் னும் தாம்பூலமேந்தும் மாது' எனப் பகர்ந்து அவ ளைக் காட்டினான். பத்திரலேகை உடனே காதம்பரி யைப் பணிய, காதம்பரி அவளது உயர் நிலைமையை

யறிவிக்கும் உருவத்தைக் கண்டு வியப்படைந்து, ஆதரவுடன் 'வரவேண்டும்' என மொழிந்து, அவளை முதுகிற் பரிசித்து அருகில் உட்காரச் செய்தாள்.

சந்திராபீடனும் தன் வரவுக்கேற்ற உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு, மதலேகை முதலியவர்களோடு அச்சந்தர்பத்திற்கேற்றவாறு சம்பாஷணை செய்துகொண்டிருந்தான். அப்பேச்சின் நிகழ்ச்சியானது, சந்திராபீடனும் காதம்பரியும் ஒருவருக்கொருவருடைய உள்ளத்தை ஒருவாறறிய உபயோகமாயிருந்தது. காதம்பரியும் அதனால் சிலநேரம் மனந்தேறி மகிழ்ச்சியுடனிருந்தாள். சந்திராபீடன் இனி காலதாமதத்திற் கிடமில்லை யென்றுணர்ந்து, மஹாச்வேதை முதலானவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு வெளிக்கிளம்பினான். அவன் குதிரையிலேறுந் தருவாயில், கேயூரகன் விரைந்து வந்து 'காதம்பரீதேவி பத்திரலேகையைத் தன்னிடம் சிலநாள் வைத்திருந்து அனுப்ப விரும்புவதாக மதலேகை உங்களிடம் விண்ணப்பம் செய்யச் சொன்னாள்' என்றனன். 'காதம்பரீதேவியின் அருளைப் பத்திரலேகை எளிதிற் பெற்றது அவளது பாக்கியமே. நல்லது அழைத்துப் போ' எனச் சந்திராபீடன் பதிலளித்து, அவளைக் காதம்பரியினிடம் அனுப்பினான். அப்பால் இந்திராயுதமேறித் தன் சேனை யிருக்குமிடம் சென்றான்.

அச்சோதக் கரையில் அவன் கூடாரத்திற் புகுங்கால், தன தந்தையினிடமிருந்து ஒரு சேவகன் பத்திரிகை யொன்றைக் கொணர்ந்து இவனிடம் அளித்தான். உடனே பெற்றோர் முதலியவரது க்ஷேமச்

செய்திகளை விசாரித்துவிட்டு, அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தான். விஜயயாத்திரைக்குப் புறப்பட்டு வெகுநாட்களானது பற்றி, உடனே புறப்பட்டு உஜ்ஜயினிக்கு வந்து சேரவேண்டுமென அதில் வற்புறுத்தி வரையப்பட்டிருந்தது. வைசம்பாயனனுக்கும் அவ்விதமே மற்றொரு கடிதம் வந்திருப்பதாய் இவன் அறிந்தான். தந்தையின் ஆஞ்ஞையைச் சிரமேற்றாங்கி, உடனே புறப்படத் தீர்மானித்துப் பிரயாணபேரிகளை முழங்க உத்தரவிட்டான்.

பிறகு தன் தந்தையின் சேனைத்தலைவனான வலாஹகனுடைய புத்திரனும், தன் படைக்குத் தலைவனுமான மேகநாதன் என்பவனை நோக்கி இங்ஙனம் கட்டளையிட்டான்:— 'கேயூரகன் ஏமகூடத்தினின்றும் பத்திரலேகையை இவ்விடம் அழைத்துவருவான்; இங்கிருந்து நீ அவளை உஜ்ஜயினிக்கு அழைத்துவருவாயாக. மேலும் தந்தையின் கட்டளை கடக்கமுடியாததுபற்றி யான் நமது நகரம் செல்லுகிறேனாயினும், மனது ஏமகூடத்தையே நாடியோடுகின்றதென்பதையும், யான் உயிருடன் இருந்தால் மீண்டும் காதம்பரியைக் காணவாராமலிரேன் என்பதையும் அக்கேயூரகன் வாயிலாகக் காதம்பரி முதலியவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும்' எனக் கூறினன். உடனே வைசம்பாயனனிடம் சேனையனைத்தையும் ஒப்படைத்து, அவற்றை அமைதியுடன் பின்னால் செலுத்திவரச் செய்து விட்டு, அனைவரிடமும் விடைபெற்று இந்திராயுதமேறி ஒரு சிறு குதிரைப்படையுடன் பிரயாணமானான்.

பல போர்வீரர்கள் பளபளவென்றுள்ள கட்டி களை யேந்தியவண்ணம் பரிமாக்களின் மீதேறி இள வரசுக்கு முன்னும் பின்னுமாகச் சவாரி செய்தார்கள். அவ்விதம் செல்லுகையிற் பெருங் காடொன்றை இடை யில் அவன் ஊடுருவிச் செல்ல நேர்ந்தது. வனத்தில் வசிக்கும் விலலி வேடர் முதலியவர் செதுக்கிய கான கக் காளிகளின் உருவங்களுடன் கூடின அடித்தண்டு களைப் பெற்ற அநேகம் பெரிய மரங்கள் ஆங்கு அடர்ந்திருந்தன. வழிப்போக்கர்கள் தோண்டிய மணலூற்றுகளைப் பெற்ற நீர் வற்றிய சிறிய காட்டாறு களால் அக்காடு மேடு பள்ளமாயிருந்தது. ஆங்காங்கு நாய்கள் பல குரைப்பதையும், கோழிகள் கூவுவதை யும் கொண்டு அக்காட்டிற் சில பட்டிக்காடான ஊர்கள் உண்டென்றும் உணர்ந்தான். இவ்விதம் செல்லுகையிற் சூரியன் குடதிசைக் குன்றத்திற் சாயுங்கால், அவ்வனத்திடையில் ஓங்கி வளர்ந் திருந்ததோர் சந்தனமரத்தின் உச்சியிற் கட்டி யிருந்த சிவப்புக்கொடி யொன்றை அவன் கண் டான். சிங்கத்தின் பிடரிமயிர்களாலாக்கிய சிறிய சாமரையுடன் கூடிய தங்கத்திரிசூலமொன்று அதில் தொடுக்கப் பெற்றிருந்தது. அக்கொடியில் இருப்புச சங்கிலியிற் கட்டிய மணி யொன்று கணீரென்று எப் பொழுதும் சப்தித்துக் கொண்டிருந்தது.

அக்கொடியை நோக்கிச் சிறிது தூரம் அவன் சென்றான். அவ்விடத்திற் செந்தளிர்களாலும், கிளை களிற் பதுங்கிய செங்கோழிகளாலும் முற்றிலும் செந்நிறம் பெற்ற அநேக அசோகமரங்களுக்கும், பலியிடும் இரத்தத்தைப் பருக வந்த வேதாளங்கள்

போன்ற தாளிப்பணைகளுக்கும் இடையிற் காளி கோயில் ஒன்றிருக்கக் காணலானன். அக்கோயிலுக்கு முன்புறத்தில் ஒரு கருங்கல்மேடையின்மீது இரும் பாலாகிய மிகப் பெரியதோர் எருமைக்கடா வைக் கப் பெற்றிருந்தது. காட்டானைகளின் தந்தங்களாற் செய்த இரண்டு கதவுகளோடு கூடிய இரும்பு வாயிற் படியில் மயில்களின் தொண்டை முருந்துகளாலும், சுண்ணக்கோடுகளிட்ட வெண்கலமணிகளாலும் தோ ரணங்கள் கட்டப்பட்டிருந்தன. பிதுங்கிய நாக்கிை லும், இரத்தநிறமான உதடுகளாலும், செந்நிறக் கண்களாலும், நெறிப்புள்ள புருவங்களாலும் அக்கா ளிதேவதையின் முகம் காண்போரை அச்சமுறுத் துவதாயிருந்தது.

அக்கோயிலிற் கருநிறமான கம்பளப் போர்வை யுடன் கடுங்கோபக்காரனை தமிழ்த்தேயத்துக் கிழட்டுப்பூசாரி யொருவன் இருந்தான். தடித்துப் பருத்த இரத்தநாளங்கள் அவனுடலெங்கும் பரவி யிருந்தன. ஆழ்ந்த அம்மை வடுக்கள் அவன் முகம் முதலிய முழுச்சரீரத்தையும் குழி குழியாகச் செய் திருந்தன. காளிகாதேவியின் கால்களில் மூடபக்தி யோடு அடிக்கடியும் வீழ்வதால் வீங்கிப்போன அவ னது நெற்றியிற் புரைகுழற் புறப்பட்டிருந்தது. இர சவாதம் கற்கப் புகுந்து, அதில் தேற்சியடையு முன்பே, தானே சித்தாஞ்ஜனம் ஒன்று செய்து அதை யிட்டுக்கொண்டதனல், அவனுக்குக் கண்ணென்று அவிந்து போயிருந்தது. ஊத்தை யடைந்த அவனது பற்கள் மிக்க வளர்ந்து வெளியே நீண்டிருந்தன. தான் மந்திரவாதியெனக் கூறி மூடதைரியத்துடன்

சிலருக்குப் பேயோட்ட முயன்றதில், அப்பேய்ப்பிடித்தவர் ஓங்கியறைந்ததால் அவனது கன்னங்கள் குன்றிக்கிடந்தன. அவன் அக்கோயிலிற் பூசைக்காக வைத்திருந்த கனிகளைக் கவர்ந்துபோகவந்த குரங்குகளை அடித்தோட்ட, அவற்றால் கடித்தறுக்கப்பட்டு அவனது மூக்கு மூளியாக்கப்பட்டிருந்தது. கோயிலிற் படுக்கவந்த பாட்டைசாரிகளிடம் கோபங்கொண்டு தடுத்துப் போராடவே, அவர்களால தடியால் அடிக்கப்பெற்று அவனது முதுகு கூன்வளைந்துகிடந்தது. சுரைக் குடுவையாற் செய்த வீணையொன்றை இசைத்துத் தலையைசைத்துத் தாறுமாறாய்க் கங்காஸ்தோத்திரத்தைக் கூறியவாறு, கொசுக்கள் கீச்சிடுவது போலப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தான். தள்ளாடும் கிழவனாயிருந்தும், துர்க்கைக்குத் தெண்டனிட்டுத் தென் தேசத்திற்குத் தான் மன்னனாக வேண்டுமென்று மன்றாடி வேண்டுவான். நடுக்கங்கொண்ட கரத்தினனாகையால், அம்மனை அர்ச்சிக்கையிற் கைதவறிப் போய் கீழேவிழும் மலர்த்தட்டின்மீதும் சினங்கொள்வான்.

அப்பூசாரி வசிக்கும் அக்கோயிலில் அன்றிரவு தங்குவதெனச் சந்திராபீடன் தீர்மானித்துக் குதிரையை விட்டிறங்கி, ஆலயத்திற் சென்று, அக்காளிகா தேவியை வலம் வந்து வணங்கினான். இதற்குள் அத்தமிழ்ப்பூசாரி கோபாவேசத்துடன் கூச்சலிட்டுச் சந்திராபீடனை வெருட்டிக்கொண்டு ஓடிவந்தான். காதம்பரியின் பிரிவாற்றாமையினாற் பெரிதும் கவலையுற்றிருந்த அவன், அப்பூசாரியின் விநோதக்கூற்றைக் கண்டு ஒருவாறு ஆறுதலடைந்து நகைத்தான். அவன்

தனது படையாட்களிற் சிலர் அவ்வேழைப்பூசாரியை அடக்கியும் கேலிசெய்தும் வந்ததைத் தடுத்துவிட்டு, நல்வார்த்தை கூறி அக்கடுங் கோபத்திலிருந்து அவனைத் தெளியச் செய்தான். சந்திராபீடன் அவனது பிறப்பு வளர்ப்பு முதலிய வரலாறுகளைக் கருணையோடு கேட்கவே, களிகூர்ந்து அக்கிழவன் முன்னால் தனக்கிருந்த அழகு, ஆண்மை, செல்வம் முதலியவற்றைத் தற்புகழ்ச்சியோடு கூறிக்கொண் டான். இவ்விதம் சின்னேரம் விநோதமா யிருந்து, அவனுக்குத் தாம்பூலமளிக்கச் செய்தான்.

இதே சமயத்திற் குதிரைகளெல்லாம் புவியிற் புரண்டெழுந்ததும், அவற்றைப் பணியாளர் ஆயாசந்தீ ரக் குளிப்பாட்டி, வரிசையாகப் புதைத்த ஈட்டிக்கழி களிற் கட்டிப் புற்களிட்டார்கள். இந்திராயுதமும் தனியாக ஓரிடத்திற் கட்டப்பட்டது. இதற்குள் இரவும் வந்து உலகம் இருட்டில் ஆழ்ந்தது. சேனை யிறங்கியவிடம் அனைத்தும் கொழுந்துவிட்டெரியும் தீவர்த்திகளாற் பகற்பொழுதைப்போலப் பிரகாசமா கச் செய்யப்பட்டது. யாமத்திற் கொருவனாகக் கண் விழித்துப் படைவீரர் அச்சேனையைப் பாதுகாத்து வந்தனர். சந்திராபீடனும் இந்திராயுதத்திற்கு எதிரில் தனக்கென்றிடப்பெற்றிருந்த சயனத்திற் படுத்து, ஏமகூடத்தைப்பற்றிய கலவரம் மனதைக் குழப்ப, நன்கு நித்திரையுறாமலே அவ்விரவை யொருவாறு கழித்தனன். அதிகாலையில் அவன் எழுந்து, அக்கி ழட்டுப்பூசாரிக்குப் பொருளைப் போதுமானளித்து விட்டு, அங்கிருந்தும் புறப்பட்டுச் சொற்ப நாட்களிலே உஜ்ஜயினீநகரம் போய்ச் சேர்ந்தான்.

சந்திராபீடன் வருவதை முன்னதாய் அறிந்த தாராபீடன், அநேகம் சிற்றரசர்களும் குடை கவரி யேந்திய பரிவாரங்களும் புடைசூழக் கால்நடையாகவே அவனை யெதிர்கொண்டழைக்கப் போனான். தன் தந்தையைக் கண்டதும் சந்திராபீடன், இந்திராயுதம் விட்டிறங்கிச் சென்னியிலணிந்த சூடாமணிக் காந்தி நிலத்திற்படிய அவன் பாதங்களிற் பணிந்தனன். அரசன் 'என் குழந்தாய்! வரவேண்டும்' எனப் பெருமகிழ்ச்சியுடன் எழுப்பி, அவனை மார்புறத் தழுவினான். மன்னவனருகிலிருந்த மற்றப் பெரியோரையும் வணங்கிய பின்பு, அரசன் அவனை அந்தப்புரம் அழைத்துப் போனான். விலாஸவதியும், அந்தப்புரத்து மாதர் பலர் புடைசூழத் தன் செல்வப்புதல்வனை வரவேற்று முறைப்படி மங்களச் சடங்குகளைச் செய்ததும், அவளிடம் சற்றுநேரம் தனது திக்விஜயச் செயல்களைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, மந்திரியைக் காண்பதற்குச் சென்றான். அவ்விடத்திற் சுகநாசனைப் பணிந்து, மனோரமையையும் பார்த்துவிட்டு, அவர்களிடம் வைசம்பாயனன் பின்னாற் படைகளை நடத்தி வருவதாகச் சொல்லி, மீண்டும் விலாஸவதியின் அரண்மனைக்குப் போய், நீராடி உணவுண்டு இளைப்பாறிவிட்டு, மாலைப் பொழுது வந்ததும் தன் மாளிகைக்குச் சென்றான். உஜ்ஜயினியிலுள்ளோர் இவனது வரவைக் கொண்டாடி இவனைப் பெருமைப் படுத்தியும், அரண்மனையிலுள்ளவர்கள் அரசர்கள் ஆகியோர் அவனிடம் அளவற்ற அன்புடன் அளவளாவி வந்தும், அவனுக்கு மாத்திரம் காதம்பரியைக் காணாத எவ்விடமும் இன்பந்தரவில்லை.

இவ்வாறாகச் சில நாட்கள் சென்றன. ஒருநாள் மேகநாதன் பத்திரலேகையை அழைத்துக்கொண்டு இவனிடம் வந்து சேர்ந்தான். வந்து இருவரும் வந்தனம் செய்து நிற்கப் பத்திரலேகையைப் பக்கத்திலழைத்து, மிகவும் அன்புடன் மஹாச்வேதை-காதம்பரி முதலியவர்களுடைய க்ஷேமச்செய்திகளை யெல்லாம் விசாரித்தான். இவனது முகசாடையைக் கண்டு மேகநாதன் முதலிய அனைவரும் வெளியிற்போக, அவனுக்குப் பத்திரலேகை இங்ஙனம் பதிலுரைத்தனள் :—'தேவரீர் அங்கிருந்து வந்துவிட்டதும் காதம்பரியின் பக்கத்திற் பூப்படுக்கையில் உட்கார்ந்தேன். காதம்பரீதேவி எனதிடம் காட்டிய அன்பிற்கு அளவில்லை. அன்று மாலைப்பொழுது வந்ததும் என் தோளைப் பற்றிக்கொண்டே, இமகிருகத்திலிருந்து அவளது இளம்பூஞ்சோலைக்குச் சென்றாள். ஆங்குள்ள ஒரு மேடையின் மீது அழகிய மரத்தூணிற் சாய்ந்த வண்ணம், கண்ணீர் ததும்ப, எதும் சொல்லக் கூடாமல் மண்டபத்தின் மத்தியில் தொங்கிய பட்டுக் கயிறொன்றைப் பற்றியவாறு வருத்தமுற்று நின்றாள். பிறகு பலமுறை வேண்டியபின், உம்மைப்பற்றிய பிரிவாற்றாமையால் அந்நிலமை அவளுக்கு நேரிட்டிருப்பதாய் ஒருவாறு அறிந்தேன். அவள் இனி அத்துயரம் தாங்கவியலாத நிலமையைப் பெற்றதாகத் தெரிந்து, உங்களை யான் எப்படியும் அழைத்து வருவதாகச் சொன்னேன். அதற்கு அவள் கூறியதாவது :—'பத்திரலேகே! நீ என்னிடமுள்ள அன்பினால் இங்ஙனம் மொழிகின்றனை. என் செய்வேன்? எனக்கு நம்பிக்கை யுண்டாகவில்லையே! நீ ஆவலுடன் சென்று

அவரை வேண்டுவா யென்பதில் ஐயமில்லை. எனினும் அவர் பெரியோரிடம் பயந்து என்னைப் புறக் கணிக்கலாம். அல்லது அரசாங்கவேலைகளும் அவருக்கு இடையூருக இருக்கலாம். அன்றேல் இவ்வளவு தூரம் மீண்டும் வருவது வருத்தமெனக் கருதலாம். இல்லையேல் அவரது இருப்பிடம் சென்றபின் இவ்விடத்து விருப்பமும் குறைந்திருக்கக்கூடும் அல்லாமலும் முன்னிலும் இப்பொழுது என்ன விசேஷம்? முன்பு அவர் வந்து இமகிருகத்திற் பார்த்துப் போன அக்காதம்பரியே யான். அவரும் இங்கு இருமுறை வந்துபோன அவ்வரசகுமாரரே. எனக்குள்ள மற்றொரு துயரத்தைப்பற்றி என் சொல்வேன்? மஹாச்வேதை மனம் வருந்தி நிற்கையில், நானும் மணம் புரிவதில்லையெனப் பலரறிய உறுதி கூறுகையில், இவ்வாக்குறுதி வீணாய்விடும் சந்தர்ப்பம் நேரிடுமென்று என் தோழி மொழிந்ததுண்டு. அவ்விதமே இதோ நிகழ்ந்துவிட்டதே! இப்பொழுது மானத்தைக் காத்துக்கொள்ள மாண்டுபோவதே மேல்' என்றனள் காதம்பரி.

# உத்தர பாகம்.

---

## முதல் சருக்கம்

அதன் பிறகும் அவளுக்குப் பலவாறு ஆறுதல் கூறி விட்டு, யான் இதோ வந்துசேர்ந்தேன். தேவரீர் இந் நிலைமையில் காதம்பரீ தேவியை இனி விட்டிருப்பது விரும்பத் தக்கதல்ல" என விளம்பி நின்றனள் பத் திரலேகை.

சந்திராபீடனும் பத்திரலேகையுரைத்த வார்த் தையையும், கம்பீரக் கொள்கையுடன் காதம்பரி கூறிய மொழியையும் கேட்டு, வெகு தைரியசாலியா யிருந்தும் மட்டில்லாக் கவலையில் மூழ்கினான். காதம் பரியின் மனோநிலைமை யத்தனையும் பத்திரலேகையின் வாயிலாக ஓட்டுவரொட்டி யெனக் கூறுமாறு இவனி டம் அப்படியே பற்றிக்கொண்டது போலும். பிறகு அவன் 'பத்திரலேகே! யான் அங்கிருக்கையில் என் மனம் முற்றிலும் குழப்பத்தி லாழ்ந்திருந்தது. மற்ற தனைத்தும் இருக்கட்டும். இச்சேஷஹாரத்தை என் மார்பிலணியச் செய்ததைக் கண்டேனும் அவளது கொள்கை இவ்வகைத் தானதென்று யான் உணர்ந் திருக்க வெண்டும். எங்ஙனமாயினும் காதம்பரீதேவி எனது குற்றத்தை மன்னித்தருளுவதற்கான முறையை இனி கைப்பற்றுவேன்' என்று மொழிந்து வருகையில், ஒரு வாயிற்காப்பவள் வந்து, வந்தனம்

செய்து, பத்திரலேகையையும் அவனையும் பார்ப்பதற்கு விலாஸவதீதேவி அழைப்பதாகக் கூறினள்.

அதுகேட்டதும் சந்திராபீடன் 'ஓ! இவ்வாறு முறண்பட்ட நிகழ்ச்சிகள் என் உயிரை ஊசலாடும் நிலைமையில் வைக்கின்றனவே! அன்னையோ இங்ஙனம் என்னை நொடிப்பொழுதும் காணுமலிருக்க முடியாதவளா யிருக்கின்முள். காரணமின்றியே அன்புமேலிட்ட காதம்பரியின் கட்டளையோ கடக்கவியலாததா யிருக்கின்றது. மனமோ காலதாமதத்தைச் சகிக்கக்கூடாமல் வருந்துகிறது. ஏமகூட விந்தியமலைகளுக்கிடையிலுள்ள பாதையோ நெடுந்தூரமானது' எனச் சிந்தித்தவாறு, அவ்வாயிற்காப்பவள் முன்னே செல்ல, அன்னையிடம் பத்திரலேகையுடன் சென்முன். அப்பகல் முடியவும் அந்தப்புரத்திலேயே அன்னையினிடம் பொழுது போக்கிவிட்டு, தன் அரண்மனைக்கு வந்து, பொல்லாத மனக்கலவரத்துடன் அன்றிரவைக் கழித்தான். இவ்வாறுக அல்லும் பகலும் அமைதி பெருதவனுயிருந்தும், தனது கம்பீரத்தன்மையினுல் தன் உள்ளக்கருத்தவ்வளவும் கரைபுரளாவண்ணம், ஒருவாறு தன்னைத்தானே நிலை நிறுத்திக்கொண்டு நாட்களைக் கழித்துவந்தான்.

பின்னர் ஒருக்கால் பட்டணத்திற்குப் புறம்பாபாகப் பத்திரலேகையுடன் சென்று, அவன் சிப்பிரா நதிக்கரையிற் சிறிது தூரம் உலாவினுன். அந்நதிக்கு எதிர்க்கரையில் ஆறுமுகக் கடவுளின் ஆலயம் ஒன்றுண்டு. அத்தேவாலயத்தை நோக்கிக் குதிரைப்படை யொன்று பதைக்கப் பதைக்க வந்துகொண்டிருந்தது. அப்படையின் தகவலறிய அவன்

ஆவல்கொண்டு, ஆற்றைக் கடந்து, அச்சுப்பிரம்மண் ணியாலயம் சென்றதும், அக் குதிரைப்படைக் கிடை யில் வெள்ளைக் குதிரையின் மீது கேயூரகன் வருவ தைச் சந்திராபீடன் பார்த்துப் பத்திரலேகைக்கும் அவனைக் காட்டினான். கேயூரகனது முகம் தோற்றத் தில் மிகக் கவலை கொண்டதாயிருந்தது. நெடுந்தூரப் பிரயாணத்தினால் மிகப் பிரயாசையடைந்த கேயூர கனைச் சந்திராபீடன் அன்புடன் வரவேற்று, எல்லாச் செய்திகளைப்பற்றியும் ஆயாசந்தீர்ந்தபின்பு வினவுவது நலமெனக் கருதி, யானையின்மீது தானும், பத்திரலே யும், கேயூரகனுமாக ஏறிக்கொண்டு, அவனது அரண் மனைக்குச் சென்றனர். அனைவரும் அவ்விடத்தில் நீராடல் முதலிய பகற்சடங்குகளை முடித்துக்கொண்டு இளைப்பாறினார்கள்.

பிறகு சற்றுக்கெல்லாம் பத்திரலேகைமாத்திரம் பக்கத்திலிருக்கக் கேயூரகனைநோக்கி 'மஹாச்வேதை முதலியவர் அனுப்பிய செய்தி யென்ன'? எனக் கேட்டான். கேயூரகன் அதற்கு வணக்கமாகக் கூறிய தாவது:— 'இராஜகுமார! யான் இதற்கு என் னென்று மறுமொழி கூறுவேன்? காதம்பரீதேவியி னிடமிருந்தாகிலும், மஹாச்வேதையினிட மிருந்தே னும் எச்செய்தியையும் யான் கொண்டுவந்தேனில்லை. இப்பத்திரலேகையைக் காதம்பரீதேவியினிடமிருந்து அழைத்துவந்து மஹாச்வேதையின் ஆச்ரமத் திற்கருகில் மேகநாதனிடம் ஒப்புவித்தேன். அப் பொழுது தாம் கூறிய செய்திகளை யெல்லாம் மேக நாதன் என்னிடம் கூற, நானும் ஏமகூடம் திரும்பிச் சென்று, தேவரீர் உஜ்ஜயினிக்குச் சென்று விட்டதை

யும், மேகநாதன் வாயிலாகக் கூறிய செய்தியையும் மஹாச்வேதையினிடம் விளங்கக் கூறினேன். அதற்கு மஹாச்வேதை மிகப் பெருமூச்செறிந்து,மனம்வருந்தி 'சரி, இதுவுமிப்படியா!' என மொழிந்து, மீண்டும் கடுந்தவம்புரியவெண்ணித் தனது ஆச்ரமம் சென்றாள். காதம்பரீதேவியும் இச்செய்திகளைக் கேட்டு, உடனே மனம் திடுக்கிட்டு, மஹாச்வேதை சென்று விட்டதையும் அறியாமல், இவ்வின்பச்செய்தியை மஹாச்வேதையினிடமே சொல்லிக்கொள்' என்று முகச்சுடிப்புடன் என்றனைநோக்கி வெறுப்புடன் செப்பிச் சயனத்திற் போய்ச் சாய்ந்து, அத்தினத்தைத் துயரத்துடன் கழித்தனள்.

மறுநாள் விடியற்காலையில் நான் அருகிற் செல்ல, என்றனைச் சிறிது நேரம் சுடசுடப் பார்த்தாள். அப்பார்வையினால் 'இங்ஙனம் நீவிர் திடகாத்திரராயிருக்கையில் யான் இப்பொல்லாத நிலைமையை அனுபவிக்கின்றேன்' என்று முகச்சாடையினால் வெறுப்பவள் போலத் தோன்றிற்று. உடனே காதம்பரீ தேவி யான் புறப்படுவதற்கு வாய்திறவாமலே விடையளித்ததாகக் கருதி, தேவியினிடம் சொல்லிக்கொள்ளாமலே, இதோ தேவரது திருவடியை நாடி வந்தேன். தேவரீர் ஒருவரையே கதியாகக் கருதிய காதம்பரியைக் காப்பாற்றுவீர்களாக. காதம்பரியின் அருகிற் பேசப்படுவதனைத்தும் தேவரீரைப்பற்றிய பேச்சே. உங்களைக் கனவிலாவது காண்போமென்று தான் காதம்பரி அடிக்கடியும் கண்வளர முயல்கின்றாள்.' கேயூரகனது இம்மொழிகளைக் கேட்டு வந்த சந்திராபீடனுக்குத் தைரியம் குன்றிற்று. கண்களில் நீர் ததும்

பிற்று. பிறகு அவன் கேயூரகனை நோக்கி 'அப்ப! உனக்கு முன் வந்த பத்திரலேகையே இச்செய்திகளை யெல்லாம் அறிவித்து விட்டாள். யான் அங்கு எதிரிலி ருக்கையில் ஏதுங்கூறாமல் மௌனமாய் இருந்துவிட்டு, இப்பொழுது இவ்விதம் வருந்துவது முறையோ? வழியும் நெடுநாட்களில் நடந்தாக வேண்டியதாயி ருக்க, யான் இப்பொழுது திடீரெனக் கேட்டும் என் செய்யலாகும்? நம்பக்கூடாதவாறு நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளை நோக்குங்கால் இப்பாழுந்தைவம் இத் துடன் நிற்காதெனநினைகின்றேன். அன்றேல், பயனைக் கருதாமற் குதிரைமுகத்தோரைப் பின் பற்றுவானேன்? மனிதசஞ்சாரமில்லாத மஹாரண் ணிய மடைந்து நீர்வெட்கையுண்டு அபூர்வமான அச்சோதப்பொய்கையைப் பார்ப்பானேன்? அதன் கரையில் தேவலோகமாதின் கீதத்தொனியைச் செவி யுறுவானேன்? அதையறியச் சென்றதில் மஹாச் வேதையின் தரிசனம் கிடைப்பானேன்? அவளுடன் ஏமகூடஞ்சென்று கனவிலும் எதிர்பாராத காதம்பரி யைக் காணுவானேன்? கோரிக்கை நிறைவேறு முன்பே உடனே வரவேண்டுமெனத் தந்தை என்ற னுக்குக் கட்டளையை அனுப்புவானேன்? இசையாத காரியங்களையும் இயற்றிவைக்கு மியல்புள்ள இத்தை வம் எம்மை வெகுதூரம் ஏற்றிவைத்தல்லவோ வீழ்த் துகின்றது? எவ்விதமாயினும் தேவிகளுக்கு ஆறுதல் செய்ய முயலுவோமாக' என்றனன்.

இவர்கள் இவ்விதமாகப் பேசிவருகையில் அந்திப் பொழுதும் வந்துவிட்டது. அவ்வனைவரும் அவ் வரண்மனையிலேயே உண்டிவினை முதலியதை நிறை

வேற்றினர். உஜ்ஜயினீநகரத்தின் ஒப்பில்லாக்காட்சி யையும், அவ்வரண்மனைகளின் அற்புதமான வனப்பு மிகுந்த அமைப்பையும், மன்னவனது மற்றும் செல்வப்பெருக்கு முதலிய மேன்மைகளையும் கண்டு கேயூரகன் வியப்புற்று, 'ஏற்றவிடத்திலேயே காதம்பரிக்கும் கடவுளருளால் பற்றுதலேற்பட்டது' என்றெண்ணிய வாறு நித்திரையுறலானான். சந்திராபீடனும் ஏமகூடம் போவதைப்பற்றி ஏதேதோ எண்ணமிட்டான். 'பெற்றோரிடம் விடைபெறுமற் செல்லுவதெப்படி? தந்தைக்கு மனவருத்தம் தந்துவிட்டுப் போவது தருமமேயல்ல. மேலும் அரசின பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க, யான் இவ்விடம் விட்டு அசைவதுதான் எங்ஙனம்? அல்லாமலும் அவ்வளவு காலம் அயல்நாடுகள் சென்று அலைந்து ஆயாசமடைந்து வந்துள்ள அச்சேனை மீண்டும் நெடுந்தூரப் பிராயணம் செய்ய என்னுடன் புறப்படுவது எப்படி? தந்தையினிடம் விடைபெற்றுச் செல்வோமென்றால், என் பிரயாணத்துக்குக் காரணமென்னென்றுரைப்பேன்? போவதற்குப் பொருந்திய முகாந்தரம் கூறுமல் என்னை விடுவித்துக்கொள்வதெங்ஙனம்? இடையில் நண்பரிருந்து நிறைவேறவேண்டியது இவ்விஷயம். இச்சமயம் எனது தோழன் வைசம்பாயனனும் இல்லையே! என் செய்வது?' என்று உள்ளக் குழப்பத்துடன் உறக்கமின்றியே இரவைக் கழித்தான்.

மறுநாட்காலையில் துயிலெழுந்ததும், தசபுரம் வரையில் தனது சேனை வந்துவிட்டதாகக் கேள்வியுற்றான். தனது மற்றொரு இருதயமெனக்கூடிய வைசம்பாயனன் உற்றசமயத்தில் அவ்விதம் வந்து

சேரக் கடவுள் அருள்புரிந்ததாக அவன் மனப்பால் பருகினன். அச்சமயத்திற் கேயூரகன் தன்னிடம் வர, அவனை நோக்கிச் சந்திராபீடன் 'கேயூரக! வைசம்பாயனனும் வந்துவிட்டதாகத் தெரிகிறது. காரியம் கைகூடியதாகவே கருதலாம்' என மகிழ்வுற மொழிந்தனன். அதைக் கேட்டதும், தான் திரும்புவதற்குத் தாமதம் நேரிடுமென்று அவனுக்குத் தோன்றிற்று. ஆகிலும் 'இஃதோர் நற்செய்தி' எனப் பதிலுரைத்து விட்டு, அருகிற் சென்றுட்கார்ந்து, 'தேவ! கீழ்த்திசை வெளிறியதும் சந்திரனுதிப்பதிற் சற்றும் ஐயமுறுபவருண்டோ? அதுபோலவே காதம்பரிக்காக மனநோய்கொண்டு வெளுத்துள்ள உமது இத்தேகநிலைமை ஏமகூடத்திற்கு நீங்கள் தாமதமின்றி வருவீர்களென்பதை அறிவிக்கின்றது. ஆனால் வைசம்பாயனன் வந்து அவரிடம் எல்லாவற்றையும் அறிவித்து, அப்பால் பிரயாணத்திற்கு முயற்சி செய்யப்போகிறீர்கள். அதுகாறும் யான் காத்திருப்பதினும் முன்னதாகச் சென்று, தேவிகளிடம் தமது வரவை அறிவித்தேனனால் அவளுக்குப் பெரிதும் ஆறுதல் உண்டாம். மேலும் யான் இங்கிருந்து இனி ஆகவேண்டிய காரியமும் ஒன்றுமில்லை. ஆகவே எனக்குப் போக விடையளித்தருளவும்' எனக் கேயூரகன் வேண்டினன்.

சந்திராபீடன் அது கேட்டு 'இவ்விதம் காலதேசநிலைமைகளைப் பகுத்தறிந்து நடப்பதற்கு வேறு எவருக்குத் தோன்றும்? நல்லது; காதம்பரியின் நலத்தைக் கருதி நீ உடனே புறப்படுவதுதான் உசிதம். யான் வருவதற்குத் தாமதமாகாதென்பதற்கு

அறிகுறியாகப் பத்திரலேகையும் உன்னுடன் புறப் படட்டும். தேவியின் அருளுக்கு இவளல்லவோ முதற் பாத்திரம்?' எனக் கூறி, அவனுக்குப் பின் புறத்திலுட்கார்ந்திருந்த பத்திரலேகையைப் பார்த்து 'என்ன சரிதானே?' எனக் கேட்டான். அவளும் ஒருவாறு தலைகுனிந்து 'உங்களது உத்தரவுக்கும் தடை கூறுவேனே?' என மொழிந்து, உடனே புறப் படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டாள். பிறகு சந்திராபீடன் மேகநாதனையழைதது, 'முன்பு பத்திரலேகையை அழைத்துவர உன்னை எவ்விடத் தில் இருக்கச் செய்தேனே, அவ்விடம் வரையில் பத்திரலேகையை அழைத்துப் போய் விட்டு வருவா யாக. நானும் வைசம்பாயனனைப் பார்த்துவிட்டுப் புறப்பட்டுவருவேன்' எனக் கட்டளையிட்டான்.

பிறகு இராஜகுமாரன் தன் காதணியைக் கழற் றிக் கேயூரகனுக்குப் பரிசாக அளித்து அணியச் செய்தான். பத்திரலேகையை நோக்கி இங்ஙனம் கூறினன்:—'பத்திரலேகே! காதம்பரியின் குணங்கள் மிகச் சரசமானவை. அவளது அருங்குணந்தான் என்னை இங்ஙனம் தைரியமாக மீண்டும் செய்தியனு பச் செய்கின்றது. எனது வரவு அவ்விடத்திற் பயனுள்ளதாக வேண்டுமானல், பாருலகும் பாக்கிய சாலியா யிருக்கவேண்டுமாயின் காதம்பரீதேவி தன் உயிருக்கு எத்தீங்கும் தேடிக்கொள்ளலாகாது என்ற வாறு அவளிடம் கூறுவாயாக. நீயும் என்னைப் பிரிந் திருப்பதால் வருந்தலாகாது. உன் சரீரத்தையும் சீருடன் பார்த்துக்கொள். தனிவழியே எங்கும் சென்று விடாதே. ஜாக்கிரதையாகப் போய்வரு

வாயாக.' என மொழிந்தனன். மீண்டும் கேயூரக னிடம் 'யான் சீக்கிரம் அவ்விடம் வருவேன். நீயும் பத்திரலேகையுடன் மஹாச்வேதையின் ஆச்ரமத் திற்கு வரவேண்டும்.' என்றுரைத்து அவ்வனைவரை யும் அனுப்பினான்.

---

## இரண்டாம் சருக்கம்.

பிறகு வைசம்பாயனனை எதிர்கொண்டழைக்கப் போக அனுமதி பெறுவதற்குப் பிதாவினிடம் சென்றான். அவ்விடத்தில் தந்தைக்கும் சுகநாஸனுக்கும் வந்தனம் செய்ய, எல்லா எழிலுடன் வாலிபப்பருவத்தையும் பெற்றிருக்கும் மைந்தனைக் கண்டு மனம் பூரித்து, மந்திரியை நோக்கி 'ஐயன்மீர்! இவ்வளவு காலங் கழித்து இறைவனருளால் அருமைக்குமரனைக் காணக் கொடுத்து வைத்தோம். இவனுக்கு இனி மணம் புரிவித்து மருமகளின் முகத்தைக் காணவும் மனம் ஆவலுறுகின்றது' என்றான். அதற்குச் சுக நாஸனும் 'தேவ! நல்ல யோசனை செய்தீர். நமது சந்திராபீடன் சுயம் மதியிற் சிறந்தவன். வித்தை களைக் கசடறக் கற்றும் தேர்ந்தனன். குடிகளின் அன்பையும் சம்பாதித்து, அரசின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டான். பூமண்டலத்தையும் முற்றிலும் சுற்றி வெற்றியுறத் திரும்பிவந்தான். இனி ஏதும் குறையிலது. ஏற்ற வயதையும் பெற்றிருக்க, இவ னுக்கு மணம் புரிவது இனி இன்றியமையாப் பணி யாம்' எனப் பரிவுடன் பதிலளித்தான். இதை யெல்லாம்செவியுற்று, ஒருவாறு தலைகுனிந்தவண்ணம்

சந்திராபீடன் 'ஓ! இவர்களது பேச்சு இச்சந்தர்ப்பத்திற் காரிருளிற் புகுந்தவனுக்குத் தீவர்த்தியின் கதிரொளி போன்றதாயிருக்கின்றது. வைசம்பாயனன் வந்து சேர்ந்ததும் காதம்பரியை மணம்புரிந்தாய் விட்டதாகவே கருதலாம்' என்றெண்ணலானன். பிறகு மெதுவாகச் சுகநாஸனிடம் கூறி, அவனைக் கொண்டே வைசம்பாயனனை யெதிர்கொண்டழைக்கச் செல்லுவதற்குத் தன் தந்தையின் அனுமதியைப் பெற்றான்.

அன்னையின் அந்தப்புரத்தில் அன்று பகற்பொழுதைப் போக்கினான்; இரவும் வந்து இரண்டு யாமங்கள் கழிந்தன. அம்புலியும் உதித்தது. அமுதத்திரள் போன்ற நிலவின் ஒளியினால் உலகமனைத்தும் வெளுமையையும் குளுமையையும் பெற்று விளங்கிற்று. சற்றுக்கெல்லாம் இளவரசு புறப்படுவதற்குச் சங்கமும் முழங்கியது. அவன் அப்பொழுது அரண்மனை முற்றத்திற் காத்திருந்த இந்திராயுதமேறி, அநேகம் குதிரைப்படைகள் அணிவகுத்து முன் செல்ல, வெகு ஒழுங்காய் அமைந்துள்ள தசபுரமேகும் இராஜமார்க்கத்தினூடே பிரயாணமாயினன். இவன் சேனையுடன் சிப்பிராந்தியையும் கடந்து, மூன்று யோஜனை தூரம் சென்றதும், இராப்பொழுதும் சென்றுவிட்டது. சூரியோதயமாகுந் தருணத்தில், ஒரு கூப்பிடு தூரத்திற் கரைபுரண்டுவரும் கடல்போன்றதாய் ஒரு படைத்திரள் வருவதைக் கண்டு, இந்திராயுதத்தை விரைவாயோட்டி அச்சேனைக்கு அருகிற் சென்றான். சற்றுத் தூரத்திலேயே அச்சேனையிலிருந்த அநேகம் சிற்றரசர்கள் இந்திராயுதத்தைக் கண்டு அவனைச்

சந்திராபீடன் என்றறிந்து, அனைவரும் குதிரைகளை விட்டிறங்கி அவனை வந்துசூழ்ந்தனர்; அவர்கள் முகம் வாடி ஏக்கங்கொண்ட நோக்கமுள்ளவராயிருந்தனர்.

சந்திராபீடன் அவர்களைநோக்கி ஆவலுடன் வைசம்பாயனன் இருக்குமிடத்தை வினவினன். அச் சிற்றரசர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி இன்னது கூறுவதெனத் தோன்றாமல் நின்றனர். அப்பொழுது சேனைத்தலைவனான வலாஹகன் முன் வந்து 'இம்மரத்தடியில் நீங்கள் இறங்கியுட்காரவேண்டும்; செய்தியனைத்தையும் விவரித்துரைப்பேன்' என்றான். வலாஹகன் கூறியவகை அவன் மனதைக் கடுந்துயரத்திலாழ்த்தியது. அவன் உடனே உடல் தெரியாமற் சாய, அவ்வரசர்கள் இவனைத் தாங்கி இந்திராயுதத்திலிருந்து இறக்கி, அருகிலிருந்த மரத்தடியில் அமர்த்தி யுபசரித்து, மனந்தெளியச் செய்தனர். மீண்டும் வலாஹகனை நோக்கிச் சந்திராபீடன் 'யான் வந்த பிறகு வழியில் வைசம்பாயனன் எவரோடேனும் போர் புரிய நேரிட்டதோ? அல்லது ஏதேனும் கடும்பிணி கண்டு என் ஆருயிர்த்தோழன் ஆவி துறந்தானோ?' எனக் கேட்க, வலாஹகனும் அவ்வரசர் அனைவரும் தம் செவிகளைப் பொற்றிக்கொண்டு 'இல்லை இல்லை; வைசம்பாயனன நூறாண்டு வாழட்டும்' என்றனர். இதைச் செவியுற்று, இளவரசு ஒருவாறு மனமாறுதலடைந்து, 'வைசம்பாயனன் உயிருடன் இருக்கையில் இவ்வாறு என்னைவிட்டு வேறிடத்தில் தங்கமாட்டானே! ஆனால் அவன் செய்தியாது?' என்று வினவ, வலாஹகன் அப்பால் இங்ஙனம் கூறினன்.

" நீங்கள் மாஹாச்வேதையின் ஆச்ரமத்திலிருந்து வந்த மறுநாள் விடியர்காலத்திற் புறப்பாட்டுப்பறை சாற்றப்பட்டது. அப்பொழுது எங்களையழைத்து வைசம்பாயனன் 'அச்சோதமென்னும் பொய்கை புனிதமானது; இதில் நீராடி, இங்கு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானையும் தொழுதுவிட்டுப் போவோமாக: விண்ணவருக்குரிய இப் புண்ணிய பூமியை மீண்டும் காண்பதேது ?' எனக் கூறி, அக்குளக்கரையில் உல்லாசமாய் உலாவிச் சென்றார். அவ்விடங்களையெல்லாம் உற்றுப்பார்த்துக் கொண்டே போகையில், அங்கிருந்த அற்புதக் காட்சிகளுக்கெல்லாம் உறைவிடமான கொடி வீடொன்றை இவர் காண நேர்ந்தது. நெடுநாட்களாகக் காணுமல் மறைந்திருந்து மீண்டும் தற்செயலாகக் காணப் பெற்ற ஒரு நண்பனைப்போல அக்கொடி வீட்டையே இமையசையாமற் பார்த்தவண்ணம், கண்ணீர் தாரை தாரையாகப் பொழிய அதனெதிரில் ஆவலுடன் உட்கார்ந்தார். அவர் அவ்வாறு வெகு ஆச்சரியமான வகையில் அவ்விடங்களில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு நாங்கள், அவரையடுத்து 'உண்மையில் வெகு மனோகரமான இடங்களைக் கண்டுகொண்டோம். இவற்றைப் பார்த்து வெகுநேரம் நாம் இன்பமுற்றோம். அரசர்களும் ஏனைய சேனையும் ஏகுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றனர். எழுந்து வரவேண்டும்' என வேண்டினோம்.

பிறகு வைசம்பாயனன் அக்கொடிவீட்டையே நோக்கியவாறு, ஒருவாறு எங்களைக் கடிந்து இங்ஙனம் மொழிந்தனர். 'இவ்விடம் விட்டு வருவதற்கு என்னாலாகாது. சந்திராபீடன் சென்ற பிறகு, அவரது

இப்பெரும் சேனையை நீங்கள் இவ்விடத்திற் சிறிதேனும் தாமதிக்கச் செய்வது தகாது' என்கிற அவரது பொருத்தமில்லாப் பேச்சைச் செவியுற்று, வியப்பும் குழப்பமும் அடைந்த மனத்தினராய், மீண்டும் வற்புறுத்திக் கூறினேம்:— 'இங்ஙனம் இங்கு நாங்கள் தாமதிப்பது தகாதுதான்! போற்றக்கூடிய பெருமைவாய்ந்த அச்சுகநாஸருக்குப் புதல்வனாகப் பிறந்து, உடன் பிறந்தவருக்கும் மேலான சந்திராபீடதேவனுடன் கூடவே வளர்ந்து, அவரால் ஆருயிர் நண்பனாகவும் கருதப்படுகிற உமக்கோ இஃது மிகவும் ஏற்றதாயிருக்கிறது! உமதிடமல்லவோ அவர் முழுச் சேனையையும் ஒப்படைத்துப் போனார்? மேலும் நீங்கள் எம்மையும் படைத்திரளையும் புறக்கணித்தாலும், மனிதசஞ்சாரமற்ற இவ்வடவியில் நாங்கள் உம்மைத் தனித்து விட்டுப்போய் இளவரசிடம் என்னென்று பதிலுரைப்போம்? இம்மனோவிகாரத்தை விட்டு எழுந்திரும் போவோம்' என்றனம். அவர் அதற்கு முகவிகாரமேது மில்லாமலே, முற்றிலும் மாறுபட்ட மனத்தினராய், எம்மை நோக்கி 'நீங்கள் எனக்கு இவ்வளவுதூரம் போதிக்கவேண்டுமோ? என் செய்வேன்? நொடிப்பொழுதில் என தேகமனோவல்லமையனைத்தும் எங்ஙனமோ மாயமாய் விட்டது! நீங்கள் என்னை வலிய அழைத்துப் போக முயன்றும், நானும் இங்கிருந்து நகர்ந்தேனானல், எனதுயிர் நிலைக்காதெனை யான் நினைக்கின்றேன். இங்கிருப்பேனாயின், இதோ என் உள்ளத்தில் உணரக் கூடாதவகையில் உழலமிடுகின்ற ஓர் அபூர்வமான ஆவியால் யான் உயிர் தரித்திருப்பேன் என என

தெண்ணம். இனி நீவிர் அனைவருமாவது என் நண்பன் சந்திராபீடனைத் தரிசித்துக்கொண்டு இன்பமனுபவியுங்கள்' என்றுரைத்தனர். பின்னர் 'நீராடவும் உணவருந்தவுங்கூட வேண்டாமோ?' என நாங்கள் வினவ, அதற்கு அவர் 'சந்திராபீடனுக்கு என் உயிர் மீதுள்ள பாசம் அளவற்றதாயிற்றே' எனக் கூறி, அக்குளத்தில் நீராடி, அடவியில் வசிப்பதற்கேற்ப ஏதோ காய் கனி கிழங்குகளைப் புசித்தார். பிறகு நாங்களும் ஒருவாறு உணவருந்தி, மனம் வருந்தி, அன்றையப் பொழுதைப் போக்கினோம். அப்பால் அவர் மனம் திரும்புவரோ வென்றெண்ணி மூன்று நாட்கள் ஆங்கு தங்கியிருந்து, இறுதியில் நிராசையாகவே இதோ வந்து சேர்ந்தோம்' என்று வலாஹகன் கூறிமுடித்தான்.

இவ்விநோதச் செய்தியைச் செவியுற்று இளவரசு வியப்படைந்தது இயல்பே. பிறகு சந்திரபீடன் "இவன் இவ்வாறு இவ்விளம்பிராயத்தில் வைராக்கிய மடைந்ததற்குக் காரணம் காணேன். யானும் அவனுக்கு எப்பிழையும் இழைத்திலேன். மணம் புரிந்து இல்லறவாழ்க்கையிலும் ஈடுபடாது, அன்புடன் வளர்த்தெடுத்த அன்னையையும் தந்தையையும் தகுந்தவாறு ஆதரிக்காது, இஃதென்ன இவன் இவ்வாறு செய்தானே!' என்றவாறு எண்ணியெண்ணி மனம் புழுங்கி, அப்பால் தனக்கென்று அமைத்ததொரு படக்குடிலிற் போய், கஞ்சுகம் முதலியதைக் கழற்றி யெறிந்து, மஞ்சத்திற் சாய்ந்தான். பிறகு அவன் 'இப்படியே தந்தையாரின் அனுமதி பெறுது வைசம்பாயனனை அழைத்துவர யான் போவது உசித

மல்ல. மந்திரியாரும், மனோரமாதேவியும் மனத் துயரத்தில் ஆழ்ந்திருக்க அவர்களுக்கு ஆறுதல் கூறு மலும், அவரது கருத்தை யறியாமலும் யான் சென் றேனாயின், நானும் வைசம்பாயனனையே நடத்தையிற் பின்பற்றியவனாவேன். அரண்மனைக்குப் போய் அனை வருடைய அனுமதியையும் பெற்றுப் போவதே நன்று' எனத் தீர்மானித்தான். வைசம்பாயனன் அவ்விதம் செய்தது, தான் ஏடகூடம் போக ஏதுவா னதுபற்றி, அதைப் பிணிதீருவதற்கு மருந்துண்ணும் வருத்தம்போல் ஒருவாறு அனுகூலமாகவே கருதி ஆறுதலடைந்தான். அன்று முடியவும் அங்கிருந்து ஏனையோரோடு விடாய் தீர்ந்து, அருணோதயத்திற்கு முன்பே எழுந்து, புறப்பாட்டுப்பறையும் சாற்றுமலே அனைவருடனும் உஜ்ஜயினியை யடைந்தான்.

சந்திராபீடனுக்கு முன்பே நகரம் சென்ற சிலரிட மிருந்து வைசம்பாயனனது செய்தி எங்கும் பரவி விட்டது. 'இஃதென்ன விந்தை! இஃதென்ன துன் பம்!' என்று ஜனங்கள் ஓலமிடுவதைக் கேட்டு மனம் தவித்தவாறு அரண்மனை வாயிலிற் செல்ல, அவன் பெற்றோர் அமைச்சன்மனைக்குச் சென்றிருப்பதாய் அறிந்து, தானும் அவ்விடம் சென்றான். ஆங்கு அவன் துயரங்கொண்டு தவிக்கும் தந்தைக்கும் சுகநாஸனுக் கும் முன்னிலையிற் சற்று ஒதுங்கினாற்போல முகங் குனிந்தவண்ணம் உட்கார்ந்தனன். அரசன் தன் மைந்தனை நொடிநேரம் நோக்கிவிட்டு, மனம் துடிக்க 'சந்திராபீட! அன்பார்ந்தவனிடமிருந்தே சில சமயம் துன்பம் நேரிடுமென்பதை நம்பார் பெரும்பாலோர். வைசம்பாயனனது ஒழுக்கம், அவன் உன்னிடம்

கொண்ட அன்பு முதலியவைக் கருதும்போது, நீ அவனைப் புறக்கணித்தாலல்லது இவ்விதம் அவன் தனித்துப் பிரிந்திருக்கத் துணியான் என்று என் மனம் ஐயமுறுகின்றது' எனக் கூறுகையிலேயே, சுகநாஸன் மனம் பொறுக்காமல், முகம் கறுக்க, மன்னவனை மறுத்து இங்ஙனம் மொழிந்தனன்.

'சந்திராபீடன்மீதுமா குற்றம் சுமத்துவது? சந்திரனிடமும் சூடு தோன்றுமோ! அவ்வைசம்பாயனனல்லவோ மித்திரத்துரோகி? நற்குணசாலியின்மீது காரணமறியாமற் குற்றம் சாட்டுவதினும் கடுந்துன்பமளிப்பது பிறிதொன்றில்லை. நற்குணசாலிகளும் தீயோரது சேர்க்கையினால் அவச்சொல்லுக்கு ஆளாகின்றனர். நற்குலப்பிறப்பும், கல்விகளின் கற்பும், செல்வாக்கும் இத்தகையோருக்குக் குற்றம் புரிவதற்குக் கருவிகளாகின்றனவேயன்றி குணத்திற்கல்ல. சந்திராபீடன் பிறவித்தோழன் என்பதையும், பெற்றோர்க்குத் தான் ஒரே குமாரனாயிற்றே என்பதையும் கருதாமல், பெரியோரது அனுமதியையும் பெறாமல், அனைத்தையும் துறந்துவிட்டுத் தனித்து நிற்பது எங்ஙனம் என்று அப்பேதையன் யோசிக்கவில்லையன்றோ? இவ்வறிவிலாப் பிராணியைக் கிளியைப் போல் வளர்த்து வீணே கல்வியையும் கற்பித்துவைத்தோம். இவன் உண்மையில் அவ்வறிவிலாப் பிராணியின் வயிற்றிற் பிறக்கவேண்டியவனே' எனப் பகர்ந்து பெருமூச்செறிந்தான்.

அதுகேட்ட மன்னவன் 'ஐய! தாம் மிகப்பெரியோர். நல்லறிஞராயினும் துயரம் வந்து தோன்றின் மாரிநீரால் மாநதிபோல் கலங்கிவிடுகின்றனர். வாலிபப்

பருவத்தை விகாரமின்றியே கழிப்பவன் உலகில் மிக வரிதன்றோ? நமது குழந்தையையும் சினங்கொண்டு இங்ஙனம் திட்டுவதோ? ஆன்றோர் அளிக்கும் வாழ்த்து வருவதுபோலச் சினங்கொண்டு சொல்லும் கடுஞ் சொற்கள் சாபமாகவும் முடியும். நாம் வளர்க்கும் மரங்களின் மீதுமல்லவோ மனம் அன்பு பாராட்டு கின்றது? அவன் மீது இக்கடுங்கோபம் வேண்டாம். நாம் குற்ற மென்றெண்ணுவது குணமாகவும் மாறு வதுண்டு. இவன் இவ்விதம் நடந்து கொண்டதற்குக் காரணம் இன்னதெனத் தீர விசாரித்தறிய வேண்டும். ஆகவே வைசம்பாயனனை எவ்விதமேனும் அழைத் துவர முயலுவோமாக' எனக் கூறி, அமைச்சனுக்கு அமைதியை யுண்டுபண்ணினான்.

பிறகு சந்திராபீடன் மெதுவாக மந்திரியை நோக்கி 'ஐயன்மீர்! என் தந்தையார் என்மீது குற்றமிருக்குமென ஐயமுறுகிறாராதலின், அவனை அழைத்துவரும் பொறுப்பாகும் பிராயசித்தத்தைத் தாம் தந்தையைக்கொண்டு என்றனுக்கு விதித்தருள வேண்டும். வைசம்பாயனனைப் பெரியதோர் சேனைத் தலைவனாகச் செய்துவிட்டு, அமைதியாய் அனைவ ரோடும் வரவேண்டுமெனச் சொல்லி வந்தேன். இவ் வித நிகழ்ச்சியை நான் எதிர் பார்க்கவில்லை. தசபுரத்தி லிருந்தே சென்று, அவனை அழைத்துவரப்போக நினைத்தும், பெரியோரது அனுமதியில்லாமல் அவ் விதம் போவது உசிதமல்லவென்று யோசித்தே இங்கு வந்தேன். இப்போது விடையளித்தருளும்' என்று வேண்டினான். அதுகேட்டு மன்னவனது முகத்தைச் சுகநாஸன் உற்று நோக்கினான். அமைச்சனது கருத்

தறிந்த அரசன் 'ஐய! நம் அருமை மகனுக்கு இவ் வயதில் மன மகிழ மணம் புரிவிக்க நினைத்தோம். விதியின் விபரீதச்செயலால் வேறு விதமாக இச்சம்ப வம் வந்து தோன்றியது. வைசம்பாயனனை அழைத்து வருவதற்கு வேறெவனும் திறமையுள்ளவனல்லன். அவனின்றி இவன் மனமும் அமைதியுறாது. இத்துய ரக்கடலை இம்மரக்கலம் கொண்டுதான் கடக்கவேண் டும். நெடுந்தூரம் செல்லவேண்டியிருப்பதால், சோதி டக்கலைஞரைக்கொண்டு ஒரு சுபதினம் பார்த்துப் பிர யாணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என மொழிந்து விட்டுத் தன் மாளிகைக்குச் சென்றான். சந்திராபீட னும் மந்திரியிடம் விடைபெற்று அவனது மாளிகைக் குச் சென்று, சோதிடரை வரவழைத்து, அமைச்சரா வது, தன் தந்தையாவது சுபதினத்தைப்பற்றி வின வினால், தாமதமின்றியே தனக்குப் பிரயாணம் ஏற்படு மாறு ஒரு நாளைக் குறிப்பிடும்படி ஏகாந்தத்தில் உத்தர விட்டான். அதற்கு அவர்கள். 'இராசிகள் இப் போது இருக்கும் நிலைமைகளை நோக்குங்கால், உமது பிரயாணத்திற்கு இச்சமயம் ஏற்றதாகவே இல்லை. பிறகு உமது மனம் இப்பொழுது தெளிவாயிருந்தால் புறப்படலாம். அரசனையும் காலத்திற்குக் காரண மென்பர் சான்றோர்' என்றனர். சந்திராபீடன் மீண்டும் 'துரிதமாகச் செய்யவேண்டி நேரிடும் காரி யங்களில் எம்போன்றவர் நாளைத் தேடிக்கொண்டிருப் பது முடியாதல்லவோ? ஆகவே நாளையதினமே நான் புறப்படலாமென்றுரைத்திடுங்கள்' எனக் கூறி யதும், அவர்களும் அப்படியே செய்தனர்.

அன்றைய பகற்பொழுதைச் சந்திராபீடன் வெகுப் பிரயாசையுடன் கழித்தான். இரவிற் சந்திரோதயமானதும், அன்னையும் மனோரமாதேவியும் ஓரிடத்திலிருக்க, அவர்களிடம் சென்று வந்தனம் செய்துவிட்டுத் தான் வைசம்பாயனனை அழைத்து வரப் போய்வருவதாகச் சொன்னான். அப்பொழுது மனோரமை 'குழந்தாய்? நீயே செல்லுவதாகச் சொல்லி என்னைத் தேற்றுகிறாய்போலும்! நீயும் சென்றுவிட்டால் நாங்கள் எவரைக் கண்டு மனந் தேறுவது? நீ போவது தகாது' என்றாள். அதற்கு விலாஸவதியானவள் 'மனோரமாதேவி! நீ மிகுதியான அன்பு கொண்டு இங்ஙனம் மொழிகின்றனை; ஆனால் வைசம்பாயனனை இவன் விட்டிருக்கத் தகுமோ? அவனைக் காணுமல் ஏக்கங்கொண்ட சந்திராபீடனது முகத்தைத் தினந்தோறும் கண்டு யாம் துன்புறுவதினும், சில நாள்மட்டும் இவ்விருவரையும் காணுதிருக்கும் துன்பம் பெரிதல்ல. நாம் இருவருமாக இவனையனுப்ப ஏற்பாடு செய்வோம் எழுந்திரு' எனக் கூறிவிட்டு, மைந்தனை நோக்கி 'குழந்தாய்! நீ சுகமாய் போய்வருவாயாக. ஆனால் இப்பொழுது உன் பிரயாணத்தைக் கண்டு என்னையுமறியாது என் மனம் ஏனோ அமைதியுறவில்லையே! உன் முதற் பிரயாணத்திற் கூட இவ்விதம் எனதுள்ளத்திற் சங்கடமுண்டாகவில்லையே! என் மனம் துன்புறுவதைக் கருதி, முன்போல நீ இப்பொழுதும் நீடித்தகாலம் எங்கும் தங்கிவிடலாகாது' எனக் கூறி, மங்களச்சடங்குகளைச் செய்து அவனை அனுப்பினாள்.

பிறகு அவன் பிதாவினிடம் விடைபெறப் போய் அவனைப் பணிந்தனன். அப்பொழுது மைந்தனை நோக்கி மனங்கலங்கி அவன் ' அப்ப ! யான் உன்றன் மீது குற்றம் சாட்டினேனென்பதை மனதிற் கொள்ளாதே. உனது நற்குணங்களைக் கண்டு இவ்விராஜ்ய பாரத்தை உனதிடம் ஏற்றி வைத்தேனல்லாது, அருமைப் புதல்வனென்னும் அபிமானத்தினால் மாத்திரமன்று. உலகத்தை ஆளுவது எளிதல்லவென்பது உன்றனக்குத் தெரிந்ததே. திறமையற்றவனிடமும், பிரியமாகப் பேசுங் குணமில்லாதவனிடமும், பகுத்தறிவற்றவனிடமும், மனம்போன போக்கெல்லாம் போகின்றவனிடமும் இவ்விராஜ்யம் அடிவைப்பதில்லை. பற்றறு நற்குணங்களாகும் கயிறுகளால் அனைவரையும் வலியக்கட்ட வல்லவனெவனோ அவனிடந்தான் இச்செங்கோல் நிலைபெறும், உலகத்தோரைத் திருப்தியுறச் செய்வது நமது கடமை. அக்கருத்துடனே யான் அப்பொழுது உன்னை அங்ஙனம் கூற நேரிட்டதென்பதை விவேகியான நீ நனகறிந்திருப்பாய். இப்பதவியை ஏதும் தவறுதலின்றி வெகு காலம் நிர்வகித்து விட்டேன். நீ பிறந்து இச்செங்கோலையும் ஏற்கும் நிலைமையைப் பெற்று விட்டாயாதலின், எமது எண்ணம் பலித்து இன்பமுற்றோம். இனி எளிதில் நிறைவேறக்கூடிய மூன்று கோரிக்கைகள் எமக்குண்டு : ஒன்று உனக்கு ஏற்ற மனைவியைத் தேடி மணம் புரிவித்தல். இரண்டாவது முழுச்செங்கோற் பொறுப்பையும் உனதிடம் ஒப்படைத்தல். முடிவாக நமது மூத்தோர் சென்ற வழியை அனுசரித்து யான் சாந்திமார்கத்தைக் கைப்பற்றுதல்.

எனது இக்கோரிக்கைகள் இனி தாமதமின்றி நிறைவேறுமாறு நீ துரிதமாக வந்து சேரவேண்டும்' என மொழிந்து விடையளித்து அவனை அனுப்பினான்.

---

## மூன்றும் சருக்கம்.

பிறகு சந்திராபீடன் புறப்படுவதற்காக, அவனெதிரில் இந்திராயுதம் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. அஃது பிரயாணத்திற் பிரியப்படாததுபோல் சற்றுத் தூரம் விலகிப்போய் ஏங்கிய முகத்துடன் நின்றது. அவன் காரியத்திற் கருத்து கொண்டு, அஃதெதையும் பொருட்படுத்தாது, அக்குதிரையிலேறி வெளிக்கிளம்பினான். சந்திராபீடன் முதற் பிரயாணத்தினால் மிகக் களைத்திருந்த அரசர்களையும் படையாட்களையும் நிறுத்திவிட்டு, வேண்டாமென்றாலும் இளவரசனிடமுள்ள பக்திவிச்வாசத்தினால் பின்பற்றும் வலாஹகனோடும், சில சிற்றரசர்களோடும், சொற்பச் சேனையோடும் பிரயாணம் புறப்பட்டான். காதம்பரியைக் காண்பதிலுள்ள ஆவலாலும், வைசம்பாயனனைப் பற்றிய கவலையாலும் கைலாயவிந்தியமலைகளுக்கிடையிலுள்ள நெடுந்தூரத்தையும் அவன் கடுகச் செல்லும் குறுகிய வழியாகவே கருதினான். முட்களும் மரங்களும் அடர்ந்த அடவிகளையும், அநேகம் குன்றுகளையும், ஆறுகளையும் ஆயாசங்கருதாமற் கடந்து, அல்லும் பகலுமாக விரைந்தேகினான். இவ்விதம் செல்லுகையில் மார்க்கத்திற் குறுக்கே கிருஷ்ண சர்ப்பம்போலே மாரிகாலம் வந்து தோன்றியது. நீர்கொண்ட மேகங்கள் கிளம்பி வெளியுலகத்திலும்

சந்திராபீடன்மனத்திலும் ஒருங்கே காரிருளைப் பரப்பின. அவ்வடைமழையிலும் அவன் வழிநடத்தலை விடாது நடத்தினான்.

இவ்வாறு செல்லுகையிற் போய்ச்சேர வேண்டிய வழியில் மூன்றிலொரு பங்கு மிச்சமிருக்கையில், மேகநாதன் திரும்பி எதிரில் வந்துகொண்டிருந்தான். அருகில் வந்ததும் அவன் இளவரசுக்கு வந்தனம் செய்ய, 'வைசம்பாயனை அச்சோதக்கரையிற் கண்டனையோ?' என்று அவனை வினவினன். அதற்கு அவன் 'ஆண்டவ! வைசம்பாயனன் அச்சோதப் பொய்கையின் பக்கம் வந்ததாகச் செய்தியே என் செவியில் விழவில்லையே! நாங்கள் அச்சோதம் போகு முன்பே, மாரிகாலம் துவக்கியதைக் கண்டு, நீங்கள் வராமலிருந்துவிடுவீர்களோவெனச் சிந்தித்து, என்னைப் பத்திரலேகையும் கேயூரகனும் திருப்பியனுப்பிவிட்டார்கள். ஆகவே யான் தம்மைத் துரிதப்படுத்த இதோ வந்துகொண்டிருக்கிறேன். தைவச்செயலாய் இவ்வளவுதூரம் தாமும் வந்து விட்டீர்கள். கேயூரகனும் பத்திரலேகையோடு இந்நாட்களில் ஏமகூடம் போய்ச் சேர்ந்திருக்கலாம்' என்றான். அது கேட்டு, மாரிகாலத்தையும் மனதிற் கருதாது, மற்ற வழியையும் சில நாட்களிற் கடந்து, அச்சோதப் பொய்கையை யடைந்தான். மழையினால் முற்றிலும் உருமாறிய அக்கயம் கலங்கிக் குழம்பிய நீராலும், ஆழ்ந்தும் அழிந்தும் போன அம்புயங்களாலும், சீரழிந்த கரையோரத்துச் சோலைகளாலும் இவன் மனதுக்குச் சிறிதும் களிப்பூட்டவில்லை. அப்பால் அவன் சில குதிரைவீரரை யழைத்து 'வைசம்பாயனன் நம்மைக் கண்டு வெட்

கத்தினல் மறைந்து வேறிடம் போய்விடலாம்; ஆகையால் குளத்தைச் சுற்றிலும் சூழ்ந்து நில்லுங்கள்' எனக் கட்டளையிட்டுவிட்டு, இந்திராயுதத்தின் மீதே சவாரிசெய்து, அக்குளத்தையும் சோலைகளையும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அவ்விடமெங்கும் வைசம்பாயனனையாவது, அவன் இருந்த எக்குறியையுமாவது அவன் காணவில்லை. அவனுக்குக் கவலை நிகரித்தது. நண்பனைக் காணாது அப்பால் ஓரடியெடுத்துவைக்கவும் அவன் துணியவில்லை. மஹாச்வேதை அவனது செய்தியை யறிந்திருத்தல் கூடுமெனக் கருதி, அவளாச்ரமத்திற்குச் சென்றான்.

அவ்விடத்திற் குகையின் வாயிலில் ஒரு கற்பாறையின்மீது, இவனைக் கண்டதும் ஏனே வெட்கங்கொண்டு முகம் கவிழ்ந்திருந்தாள் மஹாச்வேதை. அவளுக்கருகில் ஏதோ தேறுதல் கூறிக்கொண்டிருந்த தரளிகையையும் கண்டான். 'காதம்பரிக்கு ஏதும் தீங்கு நேரிடாமலிருக்க வேண்டுமே! இல்லையேல் எனது வரவைக் கண்டு மனங்களிக்கவேண்டியிருந்தும் இவள் இவ்விதம் இருக்கின்றாளே!' எனச் சிந்தித்து, அருகிற் சென்று 'இஃதென்ன?' எனத் தரளிகையைக் கேட்டான். அதற்கு மஹாச்வேதையே துயரவெழுச்சியை ஒருவாறு அடக்கிக்கொண்டு இவ்வண்ணம் விளம்பலானாள்:—'இராஜகுமார! இவ்வறிவிலா மங்கை என்னென்று அறிவிக்கட்டும்! ஆகிலும் கேண்மின்! முன்பு நீர் உமது தேயம் சென்றுவிட்டதாகக் கேயூரகன் வாயிலாகக் கேட்டு, மனமொடிந்தவளாய், காதம்பரிக்கு மணமுடிக்க முயன்றும் அது நிறைவேறாமற்போகவே, வைராக்கியம் பன்மடங்காக,

மீண்டும் கடுந்தவம் புரியத் தீர்மானித்து இவ்விடம் வந்தேன். யான் எனது குகைக்கருகில் இருந்து தவம் புரிந்துவருகையில், ஓர் அந்தணவாலிபன் இந்தவிடத்திலே வந்து, எதையோ பறிகொடுத்தவன்போல உலாவக் கண்டேன். அவன் வடிவத்தில் உம்மைப் போன்றவனே. வேறெதிலும் நோக்கமில்லாதவனாய் மெதுவாக எனதருகில் வந்து, என்னைப்பற்றியெதையோ நினைவுக்குக் கொண்டுவருபவன் போல உற்று நோக்கினான். பிறகு 'சுந்தரி! வயதுக்கும் வடிவத்திற்கும் ஏற்றவாறு நீ நடந்து கொள்ளாமல் இக்கடுந்தவம் புரிவதும் விதியோ? இவ்வுலகத்து இன்பங்களை முதலில் அனுபவித்தல்லவோ பிறகு வேறு உலகத்தைப்பற்றி யோசிக்க வேண்டும்?' என்று முறைதவறாகப் பேசினான். அது கேட்டு யான் எதும் கூறாமல் எழுந்து வேறிடம் சென்றேன். ஈசனது பூசைக்காகப் பூப்பறித்துக்கொண்டே தரளிகையையழைத்து 'எவனோ பிராம்மண வாலிபன் ஒருவன் பேச்சிலும் பார்வையிலும் வேறு மாதிரியாயிருப்பதாகத் தோற்றுகின்றான். மீண்டும் அவன் இங்கு வராவண்ணம் தடுப்பாயாக. மறுமுறை இங்கே வருவானாகில் உண்மையில் அவனுக்குத் தீங்கு நேரிடுமெனச் சொல்லிவிடு' என்றுரைத்தேன். இங்ஙனம் எச்சரிக்கை செய்து தடுத்தும், அவனுக்கு இப்பற்றுதல் மாறவில்லை.

சில தினங்களுக்கு முன் ஒரு நள்ளிரவில், தரளிகை ஒரு புறம் சாய்ந்து நித்திரையுறுகையில், சந்திரனை நோக்கி 'இவ்வெண்கதிரோன் உலகனைத்துக்கும் ஆனந்தமளிக்கும் தன் அமுதக் கதிர்களினூடே

என் மணாளனையும் பொழிவனோ?' எனக் கோறியவாறு, போற்றத்தகும் புண்டரீகதேவனையே தியானித்த வாறு, நித்திரையின்றியே கற்பாறையிற் சாய்ந்திருந் தேன். வெகு துலக்கமான அந்நிலவிற் சற்றுத் தூரத்தில் அவ்வாலிபன் வெகு மெதுவாக என்றனை நோக்கியே வருவதைக் கண்டேன். அருகில் வர வர அவனது நிலைமை மன்மதாவேசங்கொண்டு மிகவும் மனக்கோளாறு அடைந்திருந்ததாகத் தோற்ற, என் உடல் நடுக்கமுற்றது. 'இவன் வலியவந்து என்றனைப் பரிசித்துவிட்டால், இவ்வுடலை அப்பால் சுடத்தான் வேண்டும்; புண்டரீகநாதனை மீண்டும் காண்போமென் னும் ஆசையால் இவ்வளவு நாட்களாக இவ்வுடலைக் காப்பாற்றி வந்தது வீணாகவல்லவோ ஆய்விடும்?' என்று யான் எண்ணமிட்டவாறிருக்க, அவன் என் அருகில்வந்து 'சந்திரமுகி! இம்மதியும் மன்மதனுமா கச் சேர்ந்து என்றனை மாய்க்க முயலுகின்றனர். என் னைக் காப்பாற்றுவாயாக. அடைக்கலம் புகுந்தவனைக் காப்பது தவசியரின தருமமல்லவா?' என்றான். உடனே யான் ஆவேசங்கொண்டவளையொப்ப அவ னைக் கடிந்து 'அடா பாவி! என்னை நோக்கியா இவ் விதம் கூறுகின்றனை? உன் நாக்குச் சிதறவில்லையோ! பரமேச்வர! இவன் தகாதவழியிற் காதல் கொண்டு கேவலம் கிளிப்பிள்ளையைப் போல இவ்விதம் பகுத் தறிவின்றியே பகருவதால், பிறருக்கு இனி இவ்வி தம் தீங்கிழைக்காதவண்ணம் அக்கிளிப்பிறப்பையே அடையக் கடவன்' எனக் கூறினேன். அவன் உடனே வேரறுபட்ட மரம்போல நினைவற்று நிலத்தினில் வீழ்ந்தான். அவன் அவ்விதம் சாய்ந்து உயிர் துறந்

ததும், அவனைச் சேர்ந்த பணியாளர் அதையறிந்து ஓடி வந்து ஓலமிட்டனர். அப்பொழுதுதான் அவ்வாலிபன் உமது நண்பனென அவர்களால் யான் அறிய நேர்ந்தது" என மொழிந்து, மனம் வெட்கியும் துயரமுங் கொண்டு முகஞ்சாய்ந்து அழுதாள்.

அதைக் கேட்டு வந்த சந்திராபீடன் 'அம்மணி! நீர் பெரு முயர்ச்சி செய்தும் காதம்பரீதேவியை யடையும் பாக்கியத்தை யான் கொடுத்துவைக்கவில்லை. மறுபிறப்பிலேனும் அப்பேறு எனக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்' என்று மொழிகையிலேயே, வாய் தழுதழுத்து அவனது இளகிய இருதயத்தை ஈட்டிமுனைபோன்ற அத்துயரவெழுச்சிநொடிப்பொழுதிற் பிளவுறச் செய்தது. தரளிகை உடனே அவனைத் தாங்கிக்கொண்டு 'அம்ம! அரசகுமாரர் அசைவற்றுப் போனாரே! அவரது கழுத்தும் இதோ சாய்ந்து விட்டதே! ஆ! காதம்பரீப் பிராணநாத! உயிர் துறந்தீரே!' எனக்கூறிக் கதறினாள். மஹாச்வேதையும் அப் பரிதாப நிலைமையைப் பெற்ற இராஜகுமாரனைக் கண்கொட்டாமற் பார்த்துப் பிரமித்து அழுவதையும் மறந்து நின்றாள். 'ஆ! துஷ்டதாபசி! தாராபீட சுகநாஸர்களது உயர்குலங்கள் உன்னால் வேரறுந்தனவே!' என்று அவனுடன் வந்த அரசர்களும் ஆட்களும் முறையிட்டுப் புலம்பினர். இந்திராயுதமும் சந்திராபீடனது முகத்தையே உற்று நோக்கியவண்ணம் ஏங்கியும் ஓங்கியும் கனைத்தது. காதம்பரியும் பத்திரலேகையின் வாயிலாகச் சந்திராபீடன் வரப்போவதாய் அறிந்து, அன்னை முதலியவரிடம் மஹாச்வேதையைக் காணப் போவதாய் மொழிந்து,

நன்கு அலங்கரித்துக்கொண்டு, பத்திரலேகையின் கரத்தைப் பற்றியவளாய், மதலேகையுடன் சல்லாபம் செய்தவாறு, கேயூரகன் முன்னே வழிகாட்ட அவ்வாச்ரமத்திற்கே சந்திராபீடனைக் காணும் அவாவுடன் வந்தாள்.

அவள் அப்பொழுது அமுதங் கடைந்தெடுத்த மாகடல் போலவும், பூந்தாது களைந்து நின்ற பங்கயம் போலவும் ஆவிநீங்கிய சந்திராபீடனைக் கண்டு மிகத் திகைத்துப்போனாள். 'ஆ ஆ! இஃதென்ன!' எனத் தலை கவிழ்ந்த வண்ணம் தரையில் வீழ்ந்தனள். அப்பொழுதே பத்திரலேகையும் மூர்ச்சையடைந்து வீழ்ந்தனள். காதம்பரியை மதலேகை யெழுப்பி நினைவு வரச் செய்தும், சந்திராபீடனைக் கண்கொட்டாது நோக்கியவாறு அழுகையையும் வெறுத்து அழுத்தமான மனத்துடனிருந்தாள். அது கண்டு மதலேகை, அளவற்ற இத்துயரத்தை வாய்விட்டழுது வெளிவிடாமற்போனால், மிகக் கோமளமான உன் இருதயமும் தானே பிளந்துவிடுமே!' எனக் கூறினள். அதற்குக் காதம்பரி ஒருவாறு நகைத்து, 'அடி பேதாய்! பிராணநாதன் உயிர் துறந்திருப்பதை முதலிற் பார்த்ததுமே விரிவுறாத என் இருதயம், இப்பொழுது மூர்ச்சையும் தெளிந்து எழுந்தபின் பழுதுறுவதேதது? அன்றியும் பெற்றோரும் உற்றோரும் ஊழியரும் எல்லாம் உயிருடன் வாழ்பவருக்கல்லவோ? யான் இதோ உயிர் துறக்கப்போகின்றேனே! என் நாதன் உயிருடன் இருந்தால் கூடிக் களித்தும், உயிரிழந்தபின் உடன் கட்டையேறியும், ஆக இருவகையிலும் எல்லாத்துயரங்களையும் துறந்து

நிற்பேன். இம்மகான் என்பொருட்டு நெடுந்தூரத்தையும் பொருட்படுத்தாது வந்து, பிராணனையும் இங்கே பறிகொடுத்து, என்றனைப் பெருமைப் படுத்தியிருக்க, யான் கேவலம் கண்ணீர் சொரிந்து என்றனை இழிவு படுத்திக் கொள்வதெதற்கு? எனது நாதன் விண்ணுலகம் ஏகும்போது யான் அமங்களமாக அழுவதும் அழகல்ல. உண்மையில் எனக்கு நன்மை புரிய நீ எண்ணங் கொண்டால், எனது பெற்றோர் மனமுறிந்து மரணமடையாமலிருக்கும் விதமாகவும், இனி அவர்கள் உன்றனைப் பெண்ணாகக்கொண்டு எனக்காகக் கோரியவைகளை உனறனிடம் நிறைவேற்றுமாறும் நீ செய்ய முயற்சிப்பாயாக' என்றாள்.

அப்பால் மாஹாச்வேதையைக் கட்டிக்கொண்டு 'என் அருமைத் தோழி! மீண்டும் உன்றனுக்கு மணாளனுடன் சேர்க்கையுண்டாகு மென்னும் எண்ணத்துடன் வெட்கமுறாத வகையிற் பிராணனை வைத்திருக்கின்றனை. யானோ எல்லாவிதத்திலும் ஆசையொழிந்தவளாய்விட்டேன். ஆகவே மீண்டும் நீ மறுபிறப்பிலும் எனக்கு ஆருயிர்ப்பாங்கியாய் வரவேண்டும்' எனக் கூறி, இனி விறகுகளைக் கொண்டுவந்து, சிதையடுக்குமாறு கேயூரகனுக்கு உத்தரவிட்டாள். பிறகு அவள் சந்திராபீடதேகத்தினிடம் சென்று, மயிர்ச்சிலிர்க்கையடைந்த மேனியுடன், வியர்வையாகும் அமுதத்தைப் பெருக்கும் இரு கரங்களாலும் அவனது பாதங்களை யேந்தி மடியின் மீது அமர்த்திக்கொண்டாள். அவ்வளவுதான்! உடனே சந்திராபீடன் மூச்சு விடுவதுபோலத் தோற்ற, அச்சரீரத்திலிருந்து திடீரெனத் திசைகளை யெல்லாம் வெளிறவும் குளிர

வும் செய்துகொண்டு மிகச் சோதியுடன் நன்கு விளங்காததோர் உருவம் உயரக் கிளம்பிற்று. அப்பொழுதே ஆகாயத்தில் ஓர் அசரீரி 'குழந்தாய்! மஹாச்வேதாய்! மீண்டும் உன்றனுக்கு நானே ஆறுதல் கூறுகின்றேன். உனது புண்டரீகனுடல் என்னுலகத்தில் என் குளிர்ந்த ஒளியினுற் பழுதுறுவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனது மற்றோர் தேகமான இச்சந்திராபீடனுடல் இயற்கையிலேயே அழிவற்றது; மேலும் காதம்பரியினுடைய கரங்களின் பரிசத்தினுல் இன்னும் அதிகமாகக் களிப்புற்றிருக்கிறது. இவ்வுடல் உங்களனைவரது நம்புதலுக்காக இங்கேயே இருந்து வரட்டும். சாபக்கேடு முற்றிலும் நீங்கி, மீண்டும் இவன் பிழைத்தெழுமளவும் இத்தேகத்தைப் பெருமுயற்சியோடு பரிபாலித்து வருவீர்களாக' எனக் கூறி அச்சோதியும் மறைந்துவிட்டது. அச்சோதியின் பரிசத்தினுல் பத்திரலேகையும் நினைவு பெற்றெழுந்து, ஆவேசமுண்டவளையொப்ப ஓடிப்போய், பரிவர்த்தகன் என்னும் குதிரைப்பாகனிடமிருந்து இந்திராயுதத்தை வலித்திழுத்துக்கொண்டு, அனைவரும் பார்த்திருக்கையிலேயே அச்சோதப் பொய்கையில் தானும் இந்திராயுதமுமாக வீழ்ந்து மூழ்கிப்போயினர்.

ஆ! என்ன அற்புதம்! உடனே அத்தடாகத்தினின்றும் தாபதகுமாரனொருவன், தண்ணீரிற் சிக்கிய பாசிக்கொத்துகள் போன்ற சடைமுடியுடன் திடீரெனக் கிளம்பி வந்தான். மரவுரியை அரைக்கச்சாகத் தரித்து, திகிலடைந்த மனத்துடன் மஹாச்வேதையின் அருகில் வந்தான். மஹாச்வேதை முதலானோர்

எங்கும் கண்டிராத இந்நிகழ்ச்சிகளைக் கண்டு மிகப் பிரமித்து நின்றனர். அம்முனிகுமரன் மஹாச்வே தையை நோக்கி 'அம்மணி! மறுபிறப்பெடுத்து மீண் டும் வந்துள்ள யான் உனது நினைவுக்கு வருகின் றேனே?' எனக் கேட்டான். அப்பொழுது அவளது மனம் இன்ப துன்பங்களுக்கு இடையில் அலைபாயும் நிலைமையைப் பெற, அவள் பரபரத்தெழுந்து, வந்த னம் செய்துவிட்டு 'ஐயன்மீர்! கபிஞ்ஜலனல்லவோ நீர்? யான் உம்மையும் அறியமுடியாமற் போக வேண்டுமோ? இஃதிருக்கட்டும். நமது புண்டரீக தேவனை யெடுத்தேகியவர் எவர்? இவ்வளவு காலமாய் நீர் எங்கிருந்தீர்? உமது நண்பனின்றியே நீர் தனித்து வந்ததேன்?' என வினவினள்.

கபிஞ்ஜலன் அதற்கு இவ்வாறு மறுமொழி கூறினன்: 'கந்தருவராஜபுத்திரி! அன்றிரவு புலம் பிக்கொண்டிருந்த உன்னையும் இவ்விடத்தில் தனித்து விட்டு, அத்தேவபுருடனுக்குப் பின்னுல் எழும்பிச் சென்றேனல்லவா? அவன் என்றனுக்கு மறுமொழி கூறுமலே ஒரே வேகமாகச் சென்று, சந்திரமண்டல மடைந்தான். ஆங்கு மஹோதயம் என்னும் மண்ட பத்திற் சந்திரகாந்தச்சிலையாலாகிய மஞ்சத்தின்மீது புண்டரீகனது சரீரத்தை அமர்த்திவிட்டு, என்றனை நோக்கி இவ்வாறு கூறினன்:—"கபிஞ்ஜல! என்னைச் சந்திரமூர்த்தி யென்றறிவாயாக. உனது இத்தோ ழன் மன்மதனளித்த மனோவேதனையால் மிகப் பீடிக் கப்பட, குற்றமற்ற என்றனை நோக்கி 'பாவி சந்திர! உன் கதிரொளிகளைக்கொண்டு என்னைத் தவிக்கச்

செய்து, என் மனதுக்கிசைந்தவனை மணக்க முடியாமலே வாட்டி யொழிக்கின்றனை. நீயும் என் போலவே கருமபூமியான பாரதவருடத்திற் பிறந்து, ஜன்ம ஜன்மத்திலும் மனமொப்பிய மணாட்டியுடன் கூடமுடியாமலே உள்ளம் தவிக்க உயிர்விடப்போகின்றனை' என்று எதும் யோசிக்காமலே என்றனைச் சபித்தனன். யான் அச்சாபத்தீயால் உடனே எரிக்கப் பெற்றவனை யொப்ப 'இஃதென்ன! இவன் தன் பிழையறியாமற் குற்றமற்ற என்றனைச் சபித்தானே !' எனச் சினங் கொண்டு, 'நீயும் என்னைப் போலவே இன்ப துன்பங்களைப் புவியிற் சென்று அனுபவிப்பாய்' எனப் பிரதிசாபந் தந்தேன். சற்றுக்கெல்லாம் என் சினம் தணிய, மஹாச்வேதை என் கிரணங்களிலிருந்துதித்த அரம்பையர் குலத்தில் தோன்றிய கௌரியின் மகளென்பதையும், அவள் இப்புண்டரீகனைச் சுயமாகவே கணவனாக வரித்துக் கொண்டதையும் யோசித்தேன். 'ஜன்ம ஜன்மத்திலும்' என்று இருமுறை கூறியிருப்பதைக் கொண்டு, இப்புண்டரீகனும் என்னுடன் மானிடலோகத்தில் இருமுறை பிறந்தாகவேண்டும். ஆகவே சாபக்கேடு நீங்கி உயிர் பெறுமளவும் இச் சரீரத்தைச் சீரழியாமல் வைக்க எனதுலகத்திற்கு எடுத்துவந்தேன். மஹாச்வேதைக்கும் தேறுதல் கூறியிருக்கிறேன். ஆகவே சாபம் நீங்குமளவும் இத்தேகம் இங்கேயே சீர்கெடாமற் பாதுகாக்கப்பட்டுவரும். இச்செய்தியை ச்வேதகேதுமாமுனிவரிடமும் சென்று அறிவிப்பாயாக. அவர் மாமகிமைவாய்ந்தவராதலால் இதற்குத்தக்க பரிகாரமும் ஏதேனும் செய்யக்கூடும்' என்றுரைத்து சந்திரமூர்த்தி என்றனுக்கு விடையளித்தனுப்பினர்.

யான் அப்பொழுது நண்பனைப் பிரிந்த துயரத்துடன் ஒன்றும் தோன்றாமல், விண்ணவரேகும் வழியில் ச்வேதகேது முனிவரிடம் விரைந்தோடினேன். அப்பொழுது கடுஞ்சினக்காரரான ஒரு தேவபுருடனைத் தாண்டிச்சென்று விட்டேன். திடீரென்று அவர் என்னை எரித்திடுபவர் போல நோக்கி 'துஷ்ட! அளவில்லாமல் அகன்ற இவ்வாகாயமார்க்கத்திலும் என்றனையண்டி இவ்விதம் தாண்டிப் போகின்றனையா? பகுத்தறிவற்றதோர் பரியைப் போல் ஓடினையல்லவா? ஆகவே நீயும் அக்குதிரைப் பிறப்புடன் மானிடலோகத்தை அடையக் கடவாய்' எனச் சபித்து என்னைத் திகைத்திடச் செய்தார். அப்பொழுது யான் கண்மூடித்தனமாயோடிய குற்றத்தையுணர்ந்து, அவரெதிரிற் கரங் கூப்பி 'ஐய! தோழனது துயரத்தினால் மனங்கலங்கி இவ்வாறு ஓட நேர்ந்தது; உங்களைப் புறக்கணிக்கும் நோக்கம் எனக்கில்லை. அருள்புரிந்து இச்சாபத்தை மாற்றவேண்டும்.' அதற்கு அவர் அநுதாபத்துடன் சிறிது தியானம் செய்து 'யான் கூறியது எப்பொழுதும் மாறாது. ஆனால் நீ எவனுக்கு வாகனமாகப் போகின்றனையோ அவன் இறக்கும் போது நீயும் நீரில் மூழ்கி சாபம் நீங்கியவனாய்விடுவாய். மேலும் உஜ்ஜயினியில் மக்கட்பேறு வேண்டித் தவம் புரியும் தாராபீடன் என்னும் மன்னனுக்கு மதியானவன் மகனாய்ப் பிறப்பான்; உனது நண்பன் புண்டரீகனும் அவனது அமைச்சனாகிய சுகநாஸனுக்குக் குமாரனாகப் போகிறான். நீயும் சந்திரமூர்த்தியின் அம்சமடங்கிய அவ்வரசகுமாரனுக்கே வாகனமாவாய்.' என்று அவர் மொழிந்ததுமே கீழே பெருங்கடலில் வீழ்ந்தேன். அதிலிருந்து குதிரையுருவம் பெற்று

வெளிக்கிளம்பினேன். குதிரைப்பிறப்பிலும் முந்திய ஜன்மத்து நினைவு மட்டும் மாறவில்லை. அதனாலல்லவோ சந்திரரூபியான சந்திராபீடனைச் சுவர்ணபுரமிருந்து இவ்விடத்தில் யான் கொண்டுவந்து சேர்த்தேன்? முற்பிறப்பிலுண்டான அன்பின் பற்றுதலால் உனதிடம் காதலுடன் வந்து உன் சாபத்தால் உயிர்நீங்கிய அவ் வாலிபனும் புண்டரீகனுடைய மற்றோர் அவதாரமே.

இவ்வரலாறுகளைச் செவியுற்ற மஹாச்வேதை ‘ஆ! புண்டரீகதேவ! நீர் வேறோர் உருவத்துடன் வந்து, என்மீது நேசத்தை மறக்காமல் தரிசினம் தந்தருளியும், இராக்ஷஸியைப்போல உம்மை யான் ஒழிக்க நேர்ந்ததே! பாழுந்தைவம் என்றனைப் படைத்ததற்கும், தீர்க்காயுளை எனக்கு அளித்ததற்கும் உம்மை அடிக்கடியும் கொல்லுதலே பயன்போலும்!’ என்று ஏங்கிப்புலம்பினாள். கபிஞ்ஜலன் மீண்டும் மனமிரங்கி அவளை நோக்கி ‘அம்மணி! உன்றனிடம் ஏதும் குற்றமில்லையே! சாபக் கேட்டினால் நீங்கள் இருவருங்கூட இத்துயரம் அனுபவிக்க நேர்ந்தவகையைத்தான் நான் விளங்கக் கூறினேனே. சந்திரமூர்த்தி மொழிந்த அப்பொய்யா மொழியையும் நீவிர் இருவரும் நேரிலேயே செவியுற்றிருக்கின்றீர்கள். இது காறும் புரிந்துவந்தது போலவே அத்தவத்தைக் கைவிடாமற் செய்துவந்தால் நீங்கள் இருவரும் நிச்சயமாய் நன்மையடைவீர்கள்’ என ஆறுதல் கூறினன். பிறகு காதம்பரியும் கபிஞ்ஜலனை நோக்கி ‘ஐய! இந்திராயுதமாய் நீர் இருந்தபோது உம்முடன் இக்குளத்தில் மூழ்கிய பத்திரலேகையின் செய்தி எனனாயிற்று?’ என வினவினள். அதற்குக் கபிஞ்ஜலன் தண்ணீரில்

மூழ்கியபின் அச்செய்தியெதையும் அறியேன். இப் பொழுது சந்திராபீடன் எவ்விடத்தில் எப்பிறப்பா யிருக்கின்றுனென்பதையும், பத்திரலேகை எவ்வாறு யினளென்பதையும் அறிய எனக்கும் ஆவலாயிருக் கிறது. இவ்வரலாற்றையெல்லாம் விளங்கக் கூறும் மகிமை பொருந்தியவர் ச்வேதகேது மாமுனிவரே. ஆகவே அவரிடமே இதோ யான் செல்லுகிறேன்' எனக் கூறியவாறு வானெழும்பி பேகினுன்.

## நான்காம் சருக்கம்.

கபிஞ்ஜலன் சென்ற பின்பு காதம்பரியானவள் மஹாச்வேதையை நோக்கி 'அன்பார்ந்த தோழி! நான்முகன் நம்மிருவரையும் துயர மனுபவிப்பதிலும் இப்பொழுது ஒப்பவராகச் செய்துவிட்டதால். இனி இருப்பதோ இறப்பதோ எதுவும் என்றனக்குத் துன் பமகாத் தோன்றவில்லை. இவ்விதம் நிகழ்ந்திருக்கை யிற் செய்வது யாதென நீதான் என்றனக்கு உப தேசிக்கவேண்டும்' எனக் கேட்டாள். அதற்கு மஹாச்வேதை 'என் அருமைத் தோழி இதிற் கேள்வி யேன்? சந்திரவடிவம் வாய்ந்த சந்திராபீடதேவனது சரீரம் இதோ உன் மடிமீதிருக்கையில் அது சீர் கெடாமலிருக்க அதற்குப் பணிவிடை செய்வதை விடுத்து நீ பண்ணும் பணிதான் வேறு யாது? புலன் களுக்குப் புலப்படாத புண்ணியதைவங்களெனக் கூறி, மண் மரம் சிலை முதலியதாலாகிய பதுமை களையுமல்லவா நன்மைபெறவேண்டி நித்தமும் தொழுதுவருகின்றனர்? அவ்வாறிருக்க உனது பிரத்

தியக்ஷதைவமான சந்திராபீடனென்னும் இச்சந்திர மூர்த்திக்குப் பணிவிடை செய்வதில் ஆக்ஷேபனை யென்ன?" என்றுரைத்தனள். இச்செய்தியோடு ஒருவாறு அன்றிரவு கழிந்தது.

மறுநாட்காலையில் காதம்பரி நீராடி மிகத் தூய்மையாயிருந்து, விசாலமான படிகச்சிலையாலாகிய மேடையில் மதலேகை முதலியவரின் உதவியால் சந் திராபீடனது தேகத்தை மெதுவாயெடுத்துப்போய் அமர்த்தி, பச்சைக் கற்பூரம் முதலியதால் நறுமண மேற்றிய தண்ணீரால் அச்சரீரத்தை நீராட்டி, மலர் களைக் கொண்டு அருச்சித்துத் தொழுதனள். பிறகு மதலேகையை யழைத்து 'தோழி! எனது நாதன் பிழைத்தெழும் வரையில் நான் இவ்விடம் விட்டகலு வதற்கில்லை. நீ என் தாய் தந்தையருக்கு இவ்வற்புதச் செய்தியை அறிவிப்பதுடன், இத்துன்பம் முடிவு பெறும் வரையில் என்றனை அவர்கள் வந்து காணாம லிருக்கவும் செய்வாயாக. அவர்கள் என் முன் வந் தால் இத்துயரவெழுச்சி என்னால் தாங்கவியலாததாய் விடும்' எனக் கூறியதும், மதலேகை ஏமகூடம் சென்று, அவர்களிடம் முழு வரலாற்றையும் அறி வித்துத் திரும்ப வந்தனள். சாபமொழிந்ததும் அவர் கள் காதம்பரியையும் மருமகனையும் வந்து மனங் குளிரப் பார்க்கப் போவதாக அறிவிக்கச் சொன்ன தாகவும் மொழிந்தாள். சந்திராபீடனது தேகம் பொழுதொரு வண்ணமாய் எழிலும் ஒளியும் பெற்று வருவதைக் கண்டு, ஒவ்வொருவரும் காதம்பரியைக் களிப்புறச் செய்துவந்தனர்.

இங்ஙனம் சில நாட்கள் சென்றன. மாரிகால மொழிந்தது. ஒரு நாள் மேகநாதன் காதம்பரியினிடம் வந்து, 'இளவரசு இவ்வளவு நாட்களாகத் திரும்பிவரக் காணேமெனத் தாராபீடதேவன் கவலையுற்று வேலைக்காரரைச் செய்தியறிந்துவர அனுப்பியிருக்கிறார். நடந்த வரலாற்றையறிந்து அப்பணியாளரும் பெருந்துயரமுற்று, இளவரசின் பாதங்களைப் பணிந்துபோக விரும்புகின்றனர்' என்று விண்ணப்பம் செய்தான். அதற்குக் காதம்பரியானவள் 'நன்று, விந்தைக்கிடமான இந்நிகழ்ச்சியை அவர்கள் நேறிற் கண்டாலன்றி நம்பிக்கையுண்டாவது அரிது. தேவனது தேகத்தை அவர்களும் வந்து காணட்டும்' எனக் கட்டளையிட்டனள். சற்றுக்கெல்லாம் அச்சேவகர்களை மேகநாதன் உள்ளே அழைத்துவர, அவ்வனைவரும் கண்களில் நீரைச் சொரிந்துகொண்டே பணிந்துவிட்டு நின்றனர். காதம்பரி அவர்களை நோக்கி 'சேவகர்காள்! இத்துன்பம் இன்பமாக முடிவுபெறவிருக்கக் கண்ணீர் சொரிவதேன்? சந்திராபீடதேவனது திருமேனி எங்ஙனம் தெளிவும் ஒளியும் பெற்றிருக்கின்றது பாருங்கள்! நடந்துள்ள எல்லாச் செய்திகளையும் நம்பிக்கையுண்டாகும் வகையில் தாராபீடதேவனிடம் சென்று, அவர்கள் மனம் அமைதிகுலையா வண்ணம் மொழிந்திடுங்கள். அவ்வாறு திறமையுறச் செய்திகளை விளங்க விளம்பத்தகுந்தவன் இளவரசின் சேவகனுன துவரிதகனே யாகையால், அவனை உங்களுடன் அழைத்துப்போகலாம்' எனக் கூறி உஜ்ஜயினிக்கு அவர்களை அனுப்பினள்.

இஃது இவ்வாறிருக்க, உஜ்ஜயினியில் விலாஸவதியானவள் வெகு நாட்களாகச் சந்திராபீடனது செய்தியறியாது சாலவும் துன்புற்று, அவன் சுகமாக வந்துசேர வேண்டிக்கொள்ளும் பொருட்டு அவந்திமாதா என்னும் அம்மனுடைய ஆலயத்திற்குச் சென்றனள். அவள் அவ்வாலயவாயிலிற் செல்லுகையில், அச்சோதக் கரையிலிருந்து வரும் அச்சேவகர்களைக் கண்டாள். ஆயிரக்கணக்கான நகரமாந்தர்கள் ஆவலுடன் செய்தியறிய அவர்களைப் பின்தொடர்ந்தனர். அவர்களை இவள் நெருங்கியதும், அச்சேவகர்கள் பணிவதற்கு முன்பே 'அப்பன்மார்களே! என் குழந்தையைப்பற்றி எனது மனம் ஏதோ வேறு விதமாக எண்ணுகின்றதே! அவனது செய்தியைக் கடுகக் கூறுங்கள்' எனக் கேட்டாள். சேவகர்கள் வரும் செய்தியையும், விலாஸவதி அக்கோயிலுக்குப் போனதையும் அறிந்த தாராபீடனும் சுகநாஸனுடன் உடனே அவ்வாலயத்தருகிற் பேராவலுடன் விலாஸவதிக்கு முன்னால் வந்து நின்றான். அப்பொழுது அவர்களுக்கெதிரிலிருந்த பெருங்கூட்டத்தை விலக்கிக் கொண்டு துவரிதன், அரசன் முதலானோருக்கு எதிரில் வந்து, வணக்கத்துடன் கை கூப்பி, அவன் சென்றது முதல் நடந்த வரலாறுகளை உள்ளபடி விளங்கக் கூறி வந்தான். சந்திராபீடன் இருதயம் பிளவுற்று வீழ்ந்த விஷயத்தைக் கேட்டதும், அரசன் தன் கைகளை நீட்டி 'போதுமடா! இனி என்ன மொழியப்போகின்றனை! குழந்தாய்! இருதயம் பிளவுறுகையில் நீ எங்ஙனம் தவித்தனையோ!' எனக் கதறினான். விலாஸவதியும் மூர்ச்சையுற்றனள்.

இதற்குள் துவரிதகன் இளவரசின் சரீரம் சீர ழியவில்லையென்பதையும், வைசம்பாயனன் முதலியவர்கள் சாபக்கேட்டினால் வெவ்வேறு ஜன்மமெடுக்க வேண்டி நேரிட்ட வரலாறுகளையும் விளங்கக் கூறி, வீணில் ஒருவரும் வருந்தவேண்டியதில்லையென்று விண்ணப்பம் செய்தான். அங்கிருந்த தோழிமார் விலாஸவதியையும் சீதோபசாராதிகளைச் செய்து எழுப்பி, இச்செய்திகளைச் செப்பி, அவன் மனதில் ஆச்சரியத்தையும் ஆறுதலையும் நிலைநாட்டினர். அரசனும், ஆச்சரியத்துக்கும் துயரத்துக்கும் இடையில் அலைபாயும் மனத்துடன் அமைச்சனது முகத்தை நோக்கினான். சான்றோர், தாம் பெருந்துயரமுற்றிருப்பினும், அதை அவரது விசாலமான மனதில் ஒருபுறம் அடக்கிக்கொண்டு, நண்பரது துன்பத்தைத் தீர்ப்பதற்கே முயலுவது இயல்பு. ஆகவே சுகநாஸன் அரசனைப்போலவே அரும் புதல்வனைத் துறந்திருந்தும், அதைப்பாராட்டாது மனோதிடத்துடன் மன்னனை நோக்கி இங்ஙனம் மொழிந்தனன் :—

'வேந்தே! விந்தைகளுக்கிடமானது இந்த உலகம். இங்கு நிகழத்தகாதது ஏதுமிலது. இதில் ஏன் நீங்கள் ஐயமுறவேண்டும்? யுக்தியினால் எதையும் ஆராய்ந்து நிரூபித்துவிடலாமெனக் கருதாதீர்கள். நமது யுக்திக்குட்படாது ஆன்றோர் இயற்றியுள்ள சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டே நம்பவேண்டிய அம்சங்கள் அநேகம் உண்டு. விஷம் முதலியதால் மூர்ச்சையுண்டவர்கள் மந்திரங்களாலும் குளிசங்களாலும் தெளிவுறுவதை நாம் காண்கின்றோமே! அயக்காந்தம் இரும்பை யிழுக்கின்றதே! இவ்வித

மான விஷயங்களுக்கு யுக்தியைக்கொண்டு எச்சமாதானம் கூறலாகும்? மேலும் புராணாதிகளிற் கூறியுள்ள வெவ்வேறு சாபச்செய்திகளை யாம் படித்தும் செவியுற்றும் இருக்கின்றோமல்லவா? விண்ணுலகில் வசித்த மஹாபிஷன் என்னும் அரசன் சாபத்தினால் இவ்வுலகில் சந்தனுவாகப் பிறந்தானல்லவா? இந்திர பதவியில் இருந்த நகுஷன் அகத்தியரது சாபத்தினால் மலைப்பாம்பாய்விட்டதை நாம் கேட்டதில்லையோ? வேறென்ன வேண்டும்! ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஜமதக்கினி முனிவருக்குப் புதல்வராகப் பிறக்கவில்லையோ? ஆகவே மானிடரிடம் விண்ணவர் வந்து பிறப்பதற்கு முகாந்தரங்கள் இல்லாமற் போகவில்லை. அல்லாமலும் தமது தேவிகளின் முகத்திற் பூரண சந்திரன் புகுந்ததாகவும், மனோரமாதேவியின் மடியில் வெண்தாமரைமலர் வைக்கப்பெற்றதாகவும் நாம் கனவுகண்டதற்கிணங்க அடுத்தாற்போல அவ்விருவரும் கருப்பந்தரித்திருக்கின்றனரே! ஆனதுபற்றி சந்திரமூர்த்தியும், அம்முனிகுமாரனுமே நமதிடம் புத்திரர்களாக வந்து தோன்றினர் என்பதிற் சந்தேகமென்ன? அவ்விருவருக்கும் நேரிட்டது சாபம்; அதுவே புத்திரபாக்கியம் பெற நமக்கு வரனுயிற்று. ஆகவே வீணில் துயரமுறாதீர்கள். தானதருமவிரதாதிகளை இனியும் இடையறாது இயற்றிவருவீர்களானால் எச்சங்கடமும் நீங்கி இன்பமுறலாம்' என்றான்.

தாராபீடன் அதையெல்லாம் கேட்டும் 'ஐய! நீங்கள் உரைப்பது அவ்வளவும் சரிதான்; ஆயினும் என் குழந்தையின் இருதயம் பிளவுற்றதென்னும்

செய்தி என் மனத்தில் மற்றெல்லா வற்றையுமே மறைத்துப் போடுகின்றதே! ஆகவே சந்திராபீடனது முகத்தைப் பார்த்தாலன்றி எனதுயிர் நிலை பெறாது. எனது நிலைமையே இவ்வாறாயின், தேவிகளுக்கு யான் ஆறுதல் கூறுவதெங்ஙனம்?' என மொழிந்தனன். இதைக் கேட்டதும் விலாஸவதி வேந்தனுக் கெதிரில் விரைந்து வந்து, கரங்கூப்பி 'ஆரியபுத்திர! இன்னமும் தாமதிக்கிறீர்களென்னை? சந்திராபீடனைக் காண எனதுள்ளம் துடிக்கின்றது' என்று ஆவலுடன் கூறினள். அரசன் அவளை நோக்கி 'மனோரமாதேவிக்கு இச்செய்தி எதுவும் தெரிந்திராது. நீயே நேரிற் சென்று, முற்றிலும் செய்தியறிவித்து, மகனைப்பற்றி மனம் வருந்தாதிருக்குமாறு தேறுதல் கூறவும். நான் பிரயாணத்திற்கான முயற்சிகளைச் செய்ய அரண்மனை சென்று அனைவருக்கும் உத்தரவிடுகின்றேன். உன்னுடன் மனோரமாதேவியும் அவ்விடம் வரட்டும்' எனக் கூறி, அரண்மனைக்குச் சென்று, புறப்பாட்டுக்கு ஆயத்தம் செய்தான்.

பிறகு அரசனும், அந்தப்புரத்தோரும், மந்திரிமாரும், மற்றும் பல மன்னர்முதலியவர்களும் ஒருங்கே புறப்பட்டு இராப்பகலாய் இடைவிடாமற்பல தினங்கள் பிரயாணம் செய்து, முன்னே துவரிதகன் வழிகாட்டிக் குதிரையில் சவாரிசெய்ய, அவரவரது வாகனங்களிலேறி அனைவரும் அச்சோதக்கரையை அடைந்தனர். துவரிதகன் முன்னதாகச் சென்று தாராபீடனது வரவை அறிவிக்கவே, அவ்விடத்திற் சந்திராபீடனுடன் போயிருந்த எல்லாச் சிற்றரசர் முதலியோரும் மேகநாதனை முன்னிட்டுக்கொண்டு

விரைந்து வந்து அரசனையெதிர் கொண்டழைத்தனர். தெளிந்த முகமுள்ள அவ்வரசர்களைக் கண்டதாலும், மேகநாதன் சந்திராபீடதேகத்தின் சிறப்பான நிலைமையைக் கூறியதாலும், தாராபீடனுக்கு மனத்துயரம் பெரிதும் தணிவடைந்தது. பிறகு மேகநாதன் முன்னே வழிகாட்டிச் செல்ல, அனைவரும் மஹாச்வேதையின் ஆச்ரமம் வந்துசேர்ந்தனர்.

மஹாச்வேதையானவள் சந்திராபீடனுடைய பெற்றோர் முதலானோர் வந்திருப்பதை யறிந்து, அவர்களைக் காண வெட்கங்கொண்டு குகையிற் சென்று மறைந்துகொண்டாள்; காதம்பரியும் நினைவிழந்து நிலத்திற் சாய்ந்தனள். இத்தருணத்தில் தாராபீடன் முதலானோர் ஆச்ரமத்தினுட் சென்று, அருமைப்புதல்வனது அழகிய தேகம் படிகச்சிலையின் மீது பாங்குடன் துயிலுறுவதுபோல அமர்ந்திருப்பதைக் கண்டனர். விலாஸவதியானவள், தன் கைகளை நீட்டி 'அப்பா! என் குழந்தாய்! உனக்கா இந்நிலைமை நேரிட்டது! என்னே எமது துர்ப்பாக்கியம்! அனைவரையும் விட்டு நீ தனித்துப்போயினையே!' என்றும் வேறு பலவும் கூறிப் புலம்பி, புதல்வனது பாதங்களைச் சிரத்தின்மீது வைத்துக்கொண்டு அழுதாள். தாராபீடன் தன் துயரமடக்கிக்கொண்டு, அவளை நோக்கி 'நாம் செய்த புண்ணியத்தினால் புதல்வனாக நமக்கு இவன் தோன்றினான். தைவப்பிறப்பல்லவோ இவன்? மானிடருக்கேற்ப இங்ஙனம் புலம்புவது உசிதமல்ல. அன்றியும் தமது மைந்தன் இறந்து மனமொடிந்துள்ள மனோரமைக்கும் மந்திரியாருக்கும் நாமல்லவோ தேறுதல் கூறவேண்டும்? அத்துடன்

எவளுடைய அரும்பிரபாவத்தினாலேயே நமது மைந்தன் மீண்டும் பிழைத்தெழவேண்டுமோ அந்த உன் மருமகள் இன்னும் இதோ மனமிழந்து வீழ்ந்திருக்கின்றனளே! அவளை யார் தேற்றுவது?' என்றான்.

உடனே எழுந்தாள் விலாஸவதி; காதம்பரியினிடம் சென்று அவளைத் தன் மடியின்மீது அமர்த்திக்கொண்டு 'அம்ம! என் குழந்தை சந்திராபீடனது இழந்த உயிரை மீட்டுவைக்க நீ அமுதமயமாகப் பிறந்தனையே! எழுந்திருக்கவேண்டும் அம்ம!' என்று அவள் தேறுதல் கூற, 'சந்திராபீடன்' என்னும் சொல் செவியில் விழுந்ததும், காதம்பரி மூர்ச்சை தெளிந்தும், வெட்கத்தினால் ஒன்றும் தோன்றாது தலை குனிந்திருக்க, மதலேகை அவளை விலாஸவதியின் மடியிலிருந்து எழுப்பி, முறையே தாராபீடமன்னன் முதலானோர்க்கு வந்தனம் செய்வித்தனள். காதம்பரியின் எழிலையும், மேன்மையையும் கண்டுண்டான மட்டில்லா மகிழ்ச்சியானது, அவர்களுக்கு மைந்தன் உயிரிழந்ததாலான மனத்துயரத்தையும் மறைத்து விட்டது. பிறகு மன்னவன் மதலேகையை அழைத்து, 'இங்கு உங்களனைவரையும் என் மைந்தனது முகத்தையுங் கண்டு முற்றிலும் கவலையொழிந்தவனானேன். இனி நாங்கள் இங்கு இருப்பதிற் பயனில்லை. காதம்பரிமுதலியோர் சந்திராபீடனது சரீரத்திற்குச் செய்யும் உபசாரம் இடையூறின்றி நடைபெறட்டும்' எனக் கூறி, மந்திரி முதலிய அனைவருடன் வெளிவந்தான்.

அரசன் வசிப்பதற்கென்று அமைக்கப் பெற்றிருந்த அகத்திற்குச் செல்லாமலே முனிவர்க்கேற்ற

முறையில் அவன் மிகச் சுத்தமான கற்பாறையுடன் கூடியதும், கொடிகளடர்ந்ததுமான மரத்தடியிற் போய் உட்கார்ந்தான். அப்பொழுது இளவரசுக்காகப் பல நாட்களாய் ஆங்கிருந்துகொண்டு தன்னைப் போலவே துயரமனுபவிக்கும் ஏனைய அரசர்களையும் அழைத்து, அவரருக்கேற்ப அனைவரையும் கௌரவித்து, அப்பால் அவர்களை நோக்கி இவ்வாறு கூறலானான் :—“ நண்பர்காள் ! துயரவெழுச்சியின் பயனாகவே இவ்வைராக்கிய வேஷத்தை யான் ஏற்றுக் கொண்டதாக நீங்கள் நினைக்கலாகாது. மைந்தன் மனைவியோடு இருக்கப் பார்த்ததும், அரசு செலுத்தும் பாரத்தை இறக்கி விட்டு, ஏதேனும் ஓர் ஆச்ரமம் சென்று அந்திமவயதை அமைதியுடன் கழிக்கப் போவதாக முன்னமே யான் கூறியிருக்கிறேன். எனது அக்கோரிக்கை, விதிவசத்தால் இவ்வகையாக வந்து முடிந்தது. விதியை வெல்லுவதற்காகுமோ ? தைவச் செயலாய் சீர்மையுடன் வாழும் சிற்றரசர்களான உங்களனைவரின் தோட்களிலும் உலகையாளும் பொறுப்பு என்றைக்கும்போல இன்றைக்கும் இருந்துவருகின்றது. ஆகவே நெடு நாட்களாகக் கோரியதை நிறைவேற்ற என்றனுக்கு இப்பொழுது சமயம் வாய்த்தது. எனது இம்முடிவை நீவிர் அனைவரும் அங்கீகரிக்க வேண்டுகிறேன் ” எனப் பெருந்தன்மையுடன் மொழிந்து, சக்கிரவர்த்திக்குரிய வைபவங்களை முற்றிலும் அகற்றி, ஆரண்ணிய வாசத்திற்கேற்ற உடைகளையும் உணவுகளையும் ஏற்றுக்கொண்டான். முனிவர்களைப் போல ஐம்பொறிகளை யடக்கி, அருந்தவம் புரியத்தொடங்கினான். அத்துடன் அவனும், விலாஸவதியும், சுக

நாஸன் முதலியவர்களும் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் மதியின் மற்றோர் உருவமான சந்திரா பீடனது தேகத்தைத் தரிசித்துக்கொண்டு, துயர மனத்தையும் துறந்து அவ்வாச்ரமத்தில் இனிது இருந்து வந்தனர்.''

## ஐந்தாம் சருக்கம்.

ஜாபாலி முனிவர் இவ்வாறு மொழிந்து, ஒரு சிறிது நேரம் யோசித்துப் புன்முறுவலுடன் அம்முனிவர் களை நோக்கி 'கதையின் சுவை உங்களுடைய மனதைப்போல என் மனதையும் மிகக் கவர்ந்து விட்டது. எதைக் கூற முயன்றேனோ, அதை விளக்கு வதற்குக் கதையின் சுவையால் ஒன்றோடொன்றுள்ள சம்பந்தத்தைக் கருதி, வழி கடந்து வெகுதூரம் மொழிந்து விட்டேன். இங்கிளியின் வரலாற்றைப் பற் றிய முடிவான அம்சமென்னவென்றால் :—புண்டரீகன் என்பவன் சிற்றின்பத்திற் பற்றுதலடைந்து மனம் தடுமாறி தீவினைக்குள்ளானவனாய், தைவலோகத்தி லிருந்து இக்கருமபூமியிற் சுகநாஸனுக்கு 'வைசம் பாயனன்' என்னும் புதல்வனாகப் பிறந்தான்; மீண் டும் ஒழுக்கத்தவறுதலாலேயே தன் தந்தையின கடுஞ் சினத்துக்குப் பாத்திரமானான்; தந்தையின் அத் திட்டும், மஹாச்வேதையின் சாபமும் அவனையே இக்கிளியாகப் பிறக்கச் செய்தன. இது இப்பறவை யின் வரலாறு.' என்றவாறு கூறி முடித்தனர்.

ஹாரீதன் அப்பொழுது 'தந்தையே! முனிவர் குலத்துதித்தவனுக்கு உயிரையும் தாங்கவியலாமல்

எங்ஙனம் சிற்றின்பத்திற் பற்றுதல் அவ்விதம் உண்டாம்? தைவலோகத்திற் பிறந்தவனுக்கு ஆயுளும் அற்பமானதேன்?' என்று வணக்கத்துடன் வினவினான். அதற்கு ஜாபாலிமுனிவர் 'கேவலம் பெண் வீர்யத்திலிருந்து இவன் பிறந்தனன் என்று முன்பே கூறியிருக்கின்றேன். ஆகவேதான் புண்டரீகன் ஸ்திரீ ரூபத்தைக் கண்டு மோகங் கொண்டு, உயர்குலத்திலிருந்து தன்னை வீழ்த்திக் கொண்டான். உலகத்திற் காரியங்கள் யாவும் காரண குணங்களைப் பெற்றிருப்பது இயல்பல்லவா? அதனாலேயே முற்பிறப்பில் மாத்திரமல்ல, இக்கிளிப்பிறப்பிலும் இவன் அற்பாயுளாகவே இறப்பான். சாபத்தாலான வினைப்பயன் அனைத்தையும் அனுபவித்ததும் பிறகு வெகு தீர்க்காயுளைப் பெறுவான்' என்றனர்.

சூத்திரகமஹாப்பிரபுவே! மிகப் பெருமை வாய்ந்த அம்முனிவர் இவ்வாறு எனது வரலாற்றை மொழிந்து வருகையிலேயே, அவ்விளம் வயதில் தூங்கியெழுந்தவனையொப்ப யான் முற்றிலும் முற்பிறப்புநினைவைப் பெற்றேன். வித்தையனைத்தும் விளங்கத் தோன்றிற்று. தெளிவுறப் பேசுவதற்கு வாக்கும் எனக்குண்டாயிற்று. மஹாச்வேதையினிடம் பற்றுதல்முதலான மற்றெல்லா எண்ணங்களும் அப்படியே தோன்றின. சந்திராபீடனைக் காண மிக்க ஆவல்கொண்டு, 'அவனது பிந்திய பிறப்பின் வரலாற்றையும் மனமிரங்கி மொழிந்திட்டால், யான் எவ்வாறாயினும் அவனிடம் போவேன்' என அம்முனிவரை வேண்டிக்கொண்டேன். அதற்கு ஜாபாலி முனிவர், ஒருவாறு சினந்தவர்போல் 'அடா

துஷ்ட! இன்னும் உனது சாபல்லியம் நீங்கவில்லையல்லவா? இரண்டு இறகுகள் கூட இன்னும் முளைக்கவில்லையே! வயது வந்து வானத்திற் பறக்கும் திறமை வரட்டும். பின்னர் என்னை வினவுவாய்' என மொழிந்து, எதிரிலிருந்த முனிவர்களை நோக்கி 'இதோ மதியானவன் கதிரொளி மழுங்கி மேற்றிசையில் மறைகிறான். மனதைக் கவரும் கதையிற் கருத்தினால் நம்மையுமறியாமலே இரவும் கழிந்து விட்டது. உதயகாலச்சடங்குகளைச் செய்யப்போமின்' எனக் கூறி, உடனே கூட்டத்தையும் கலைத்து விட்டு அனைவரோடும் எழுந்தேகினர்.

ஹாரீதன் என்றனைத் தன் பர்ணசாலையில் எடுத்துப்போய் விட்டு விட்டு, காலைச்சடங்குகளைச் செய்யச் சென்றான். எனக்கு அப்பொழுதுண்டான மனக்கவலை மலையத்தனையுண்டு: 'பல ஜன்மங்களிற் பண்ணிய புண்ணியத்தினால் மனிதப் பிறப்பு ஏற்படுகின்றது. அதிலும் அந்தணர்குலத்திற் பிறப்பது அரிது. முத்திமார்க்கத்திற்கு அடுத்துள்ள முனிவர் தருமத்தில் ஈடுபடும் நிலைமை எளிதிற்கிடைக்காது. இவ்வனைத்தோடும் விண்ணுலகவாசம் கிடைப்பது வெகு விசேஷம். இவ்வளவையும் யான் பெற்றிருந்தும், என் தலைவிதி, திடீரெனத் தீயவழியிற் சென்றேன். அதன்பயனாக எதற்குமுதவாத இப்பரிதாபநிலைமையில் என்னை யான் வீழ்த்திக்கொண்டேன்! பயனற்ற இப்பாழும் பரவையுடலைப் பரிபாலிப்பதினும் உயிர் துறந்து இதை உதறித்தள்ளுவதே உத்தமம். பலவகையாலும் எனக்குத் துன்பந்தருவதையே நோக்கமாகக் கொண்ட விதியின் எண்ணமும் ஈடேறட்டும்'

என்றவாறு பச்சாத்தாபத்துடன் சிந்தையில் ஆழ்ந்து வருந்துந்தருவாயில், ஆரீதன் வந்து, கபிஞ்ஜலன் என்னைப் பார்க்கவந்திருப்பதாகக் கூறினார்.

உடனே மிகக் குதூகலமடைந்தேன். 'அவனெங்கே?' என மிக்க ஆவலுடன் யான் வினவ, அதற்குத் தன் தந்தையின் சன்னிதானத்தில் இருப்பதாக அவர் கூறினார். அவ்விடம் பறந்தோட மனம் துடித்தது. இதற்குள், என் நண்பன் கபிஞ்ஜலன் களைத்துப்போன உருவத்தோடும், விண்ணுலகிலிருந்து நெடுந்தூரம் ஓடிவந்திருப்பதால் அலைந்தாடும் மயிர்ச்சடைகளோடும் எதிரில் வந்துகொண்டிருக்கக் கண்டு மிகு மகிழ்ச்சியில் ஆழ்ந்தேன். அவன, அருகில் வந்ததும், 'என் நண்ப! கபிஞ்ஜல! இரண்டு பிறப்புகளுக்குப் பின்பும் உன்னைக் காணக் கொடுத்து வைத்தேனே! எழுந்து வந்து மனமார உன்னைத் தழுவி மகிழ வகையற்ற இவ்வெளிய நிலைமையைப் பெற்றிருக்கின்றேனே! என் செய்வேன்! நீ பாலனாயிருந்தும் இச்சம்சார பாசத்திற் சிக்கிக் கொள்ளவில்லை. அப்ப! உட்காரவேண்டும். தந்தையார் சுகமா?' என்று அழுதவண்ணம் அவனை வினவினேன்.

கபிஞ்ஜலன் என்னைக் கண்டதும், அடங்காத் துயரத்துடன் கண்களில் நீர்சொரிய, என்னையெடுத்து உச்சிமுகந்து, மெதுவாகத் தடவிக்கொடுத்து இங்ஙனம் கூறினன்: "தந்தையார் க்ஷேமம். நமக்கு நேரிட்ட எல்லாத் துன்பங்களையும் அப்பொழுதே அவர் அகக்கண்கொண்டு அறிந்துகொண்டார். உடனே நமது தீவினைகளுக்குப் பரிகாரமும் செய்ய முயன்றார். அவர்

செய்த பலவகை முறையினால்தான் யான் சுகிளைப் பிறப்பை விலக்கவும், அவரது திருவடிகளை மீண்டும் போய் வணங்கவும் இயன்றது. முதலில் யான் அவரை அணுகுவதற்கு அச்சமுறுவதை அறிந்து, அவர் 'குழந்தாய்! பயமுறாதே! உங்களிடம் குற்றம் காண்பதிற் பயனில்லை. குழந்தைகள் பிறந்ததும் தீர்க்காயுளளிக்கும் சடங்குகளை யான் செய்திருத்தல் வேண்டும். அவ்விதம் செய்யாமற்போனது என் தவறு. அஃது எவ்வாறாயினும், உங்களுக்கு நேர்ந்த எல்லாச் சங்கடங்களையும் தீர்ப்பதற்கான சடங்குகள் பெரும்பாலும் நிறைவேறிவிட்டன. இப்பொழுதுதான் உனது நண்பனுக்கும் முற்பிறப்பு நினைவுவந்து, அவன் ஜாபாலி மாமுனிவரின் ஆச்ரமத்திற் கிளியுருவத்துடன் இருந்து வருகின்றான். நீ இப்பொழுது அவ்விடம் சென்று அவனைக் கண்டு, யான் வாழ்த்தியதாக மொழிவாயாக' என்றார். மேலும் உனது மாதாவான மாலக்ஷ்மியும் உன துன்பம் துலைவதற்கான அச்சடங்கில் அருகிலிருந்து உதவிபுரிந்து வருகின்றார். உனது வினைப்பயன் முற்றுபெறும் வரையில், இன்னும் சொற்பகாலம் ஜாபாலிமாமுனிவரது தாள்களைத் தரிசித்துக்கொண்டு இவ்வாச்ரமத்திலேயே இருந்து வரவேண்டுமென்றும் தந்தை யறிவிக்கச் சொன்னார்" என்று அவன் கூறிய பிறகு, முற்பிறப்பைப்பற்றிய செய்திகளையெல்லாம் ஒருவருககொருவர் கூறிக்கொண்டு, யான் சில நேரம் கிளிப்பிறப்பையும் மறந்து, அவனுடன் மகிழ்ந்திருந்தேன். பிறகு பகற்பொழுது வரவே, ஹாரீதன் கபிஞ்ஜலனையும் என்னையும் உணவருந்தச் செய்தார். அப்பால் கபிஞ்ஜலன் சற்றுநேரம் இருந்துவிட்டு, என்னை அன்புடன் நோக்கி 'நமது

பிதா இயற்றிவரும் சடங்கில் நானும் அருகில் இருந்தாக வேண்டும். ஆகவே யான் போய் வருகிறேன்' என விளம்பி, விரைவில் எழும்பி விசும்பாறாக விண்ணுலகம் சென்றான்.

ஆரீதனும் மற்ற முனிகுமாருமாக என்னை அன்புடன் வளர்த்துவரவே, காலக்கிரமத்திற் சிறகுகளும் செழித்து வளர்ந்து, பறக்குந்திறமையும் எனக்கு உண்டாயிற்று. வினைப்பயனுக்குள்ள வலிமையை என்னென்பேன்! என் மனம் மஹாச்வேதையினிடம் பற்றுதலை மீண்டும் பெற்றது. ஒரு நாள் விடியற் காலையில் ஒருவருமறியாது மஹாச்வேதையிருக்குமிடத்தைக் கருத்தில் வைத்து, வடதிசை நோக்கி அவ்வாச்ரமம் விட்டுப் பறந்தோடினேன். அன்றளவும் சிறிது தூரங்கூட யான் பறந்தோடப் பழகியதில்லை; புதிதாகப் பறந்தேகவே, சிறிது தூரம் நெடுகப்போனதும் என் சிறகுகள் களைத்துப்போயின; நாவரட்சியும் என்னை வாட்டியது; மேல்மூச்செறிந்தது. உடனே வழியிலிருந்த ஒரு மடுவின் கரையில் இறங்கி, நீரைப் பருகி, ஆங்கிருந்த காய்கனிகளையும் புசித்துப் பசியாறினேன். பிறகு அவ்விடத்திற் செழித்து வளர்ந்திருந்த ஒரு மரத்தின் அடிக்கிளையொன்றிற்சிறிது களைப்பாறுவதைக் கருதி, அமர்ந்துட்கார்ந்தேன். அப்பொழுதிருந்த ஆயாசமனது என்றனை நித்திரையில் ஆழ்த்தியது. பிறகு நித்திரை கழிந்து விழித்துப் பார்க்கையில், வலைக்கயிற்றால் என்றனைக் கட்டுண்டிருக்கக் கண்டேன். அப்பொழுது எனக்கெதிரில் காலபுருடனைப் போன்று ஊத்தும் கறுத்து

முள்ள உடலுள்ளவனும் ஒருவன் நின்றுகொண் டிருந்தான். 'இனி யான் தொலைந்தேன்' என இவ்வுடலில் ஆசையொழிந்தே, அவனை ஒருவாறு புகழ்ந்து இவ் வண்ணம் வேண்டினேன்: 'அப்ப! உன்னைப் பார்த் தால் நல்லவனாகக் காண்கிறது! நீ யார்? என்னைக் கட்டினது என் புலாலில் விருப்பத்தினாலென்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியாயின் யான் நித்திரையிலிருந்து விழித்தெழும்வரையில் இங்ஙனம் காத்திருக்கமாட்டாய்! விநோதத்திற்காக இவ்விதம் செய்திருந்தால், வேடிக்கை இத்துடன் போதும். கருணைபுரிந்து இக்கட்டையவிழ்த்து என்றனை விட்டு விடுவாயாக' என்று மன்றாடினேன்.

அதற்கு அவன் 'யான் சாதியிற் சண்டாளன். உன்னைக் கட்டியது உனது இறைச்சியில் இச்சையினாலு மல்ல, விநோதத்திற்காகவுமன்று. சிறிது தூரத்தி லுள்ள பெரியதோர் பறைச்சேரிக்கு அதிகாரி ஒருவர் உண்டு. யான் அவரது ஊழியன். அவருக்குச் சிறு பிராயத்தில் மகளொருத்தி இருக்கின்றாள். மிகவும் அற்புதக்கிளியென்று அவளுக்கு உன்றனைப் பற்றி எவனோ கூறிவிட்டான். உன்றனைப் பிடித்துவர அவள் பலருக்குக் கட்டளையிட்டிருக்கிறாள். நீ ஜாபாலி முனிவரின் ஆச்ரமத்தில்உள்ளவரையில் ஒருவரும் அவ் விடம் அணுகத் துணியவில்லை. இன்று யான் செய்த புண்ணியம், நீ அவ்விடம் விட்டு வெளிவந்ததோடு, என்றனிடமும் அகப்பட்டுக்கொண்டனை. யான் அவ ளிடம் உன்றனை எடுத்துப் போய்ச் சேர்த்துவிடுகின் றேன். பிறகு உன்னைக் கட்டிவைப்பதோ விட்டுவிடு வதோ எதற்கும் அவள் அதிகாரி' என்றான். அதைக்

கேட்ட யான் மனமொடிந்து 'அந்தோ! அந்த ச்வேத கேதுமாமுனிவரின் புத்திரனாயிருந்து, திவ்யலோகத்திலும் வசித்துவந்த முனிகுமரான் புண்டரிகனல்லவா யான்! இப்பறவைப் பிறப்பும் போதாமற் பறைச்சேரியிலும் புக வேண்டுமா! சீ! எனது ஜன்மத்தைச் சுடவேண்டும்!' எனச் சிந்தித்து மீண்டும் அவனை நோக்கி 'அப்ப! யான் முற்பிறப்பை யறிந்தவன்; முனிவர் குலத்திலுதித்தவன். இப்பெருஞ் சங்கடத்திலிருந்து என்றனை மீட்பாயாயின் உனக்கு மேலான தருமமுண்டு; இம்மையிலும், இவ்வடவியில் எவரும் அறியாது என்றனை விடுத்ததனாற் கெடுதலும் உனக்கில்லை.' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். அவன் அதற்கு 'ஓ! இஃதென்ன! மூடனைப் போல் பிதற்றுகின்றனையே! எஜமானனின் கட்டளையை யாரும் பாராமலிருந்தால் யான் மீறி விடலாம் போலும்! நல்ல நீதி கற்றனை!' என மொழிந்து கொண்டே சேரிக்குள் என்றனையெடுத்துப் போனான்.

நினைப்பதற்கும் அருவருப்பான அச்சேரியைக் கண்டு மனம் நடுங்கியது. ஆங்கு மீன்களையும் பறவைகளையும் பிடிப்பதற்கான வலைகள் ஒருபுறம் பின்னப்பட்டுவந்தன. இறைச்சியின் பொருட்டு ஒருசாரார் ஈட்டிகளையும் வாள்களையும் ஏற்றி விலங்குகளைக் கொலை செய்வதைக் கண்டு உடலும் உள்ளமும் கூசித் தவித்தேன். வீடுதோறும் வெள்ளெலும்புகளால் வேலிகளிடப் பெற்றிருந்தன. மண்டையோடுகளும், எலும்புச்சில்லிகளும், சிதைந்தழிந்த தோல்களும் குவிந்த குப்பைமேடுகள் எங்கும் துர்நாற்றம் வீசின.

மாதங்கர்கள் மாதர்களோடு மதுவையருந்தி மனம் போனவாறு திரிந்தலைந்து கொண்டிருந்தனர். அப் பறைச்சேரியில் முதுகாட்டில் நுழைவதுபோல அவனிடம் சிக்குண்டு யான் புகுந்தேன். 'அம்மாதங்க மாது அவளது சாதிக்கேற்றவாறு செய்யாமற் கருணை புரிந்து என்னைத் தொடாமலே விட்டுவிடுவளா? அவ்வளவு புண்ணியம் எனக்குண்டா?' என்றும், வேறு பலவும் யான் எண்ணித் தவிக்கையிலே, அவன் பார்ப்பதற்கு அக்காலை அச்சந்தரும் உருவமுள்ள அச்சண்டாள மாதினிடம் சென்று, முதலிற் பணிந்து விட்டு, 'இதோ தாம் விரும்பிய கிளி' எனக் கூறி, என்றனை அவளிடம் ஒப்புவித்தான்.

அவளும் மலர்ந்த முகத்துடன் 'நல்லது' எனக கூறி, அவனிடமிருந்து என்றனை அன்புமேலிட்டவள் போல வாங்கி 'அருமைப்புதல்வ! அகப்பட்டனை! இனி நீ தோன்றியவாறு திரிவதைத் தகைந்துவிடு கின்றேன்' என மொழிந்துகொண்டே, ஓர் மரக்கூட்டில் என்றனை அடைத்து, 'இதிற் கவலையொழிந்திருப்பாயாக' எனக் கூறி, பாதி யுலர்ந்து துர்நாற்றம் வீசிய பசுவின் தோல்வாரில் அக்கூட்டைக் கட்டித் தொங்கவிட்டாள். பிறகு யான் 'ஆ! இனி என் செய்வேன்? வருந்தி வேண்டிக் கொள்வதிலும் பயனில்லை. யான் அறிவுடன் பேசுவ தைக் கொண்டல்லவோ என்னை இவள் பிடித்துவரச் செய்தாள்? பேசுந்திறமையே பெருந்தீங்காய் முடிந் தது. யான் இவளுக்குப் புதல்வனா? உடன் பிறந் தோனா? உற்றேனா? ஒன்றுமில்லாத இவ்வெளி யப் பிராணி துன்புறுவதை இவள் ஏன் பொருட் படுத்

துவள்? இனி மௌனமா யிருப்பதே சாலவும் நன்று. அப்பொழுது இவள் மனம் வெறுத்து ஒருக்கால் என்னை விட்டுவிடவுங்கூடும். வாய் திறந்தால் ஒருநாளும் இவள் என்னை விடாள். வரிசையாகத் தோன்றிவருகிற இத்தீங்குகளுக்கெல்லாம் ஐம்பொறிகளை அடக்கியாளாத குற்றமே காரணம்; ஆகையால் வாக்கையும் ஏனைய இந்திரியங்களையும் இறுகக் கட்டிப்போடுகிறேன்' என்று மனவுறுதி செய்துகொண்டு மௌனமாயிருந்தேன்.

பிறகு அவர்கள் பலமுறை வலியப் பேச முயன்றும், பலவேறு தொல்லைகளிழைத்து அச்சமுறுத்தியும், யான் கீச்சென்று கூச்சலிட்டேனேயல்லாது ஓரெழுத்தும் பேசவில்லை. அவர்கள் அளித்த எவ்வுணவையும் ஏற்காமல் அன்றையதினத்தைப் பட்டினியாகவே கழித்தேன். மறுநாளும் ஆகாரவேளை அதிக்கிரமித்தது; எனது உடலும் உள்ளமும் சோர்வுற்றன. அச்சண்டாளக்கன்னிகை அநேக வகையான கனிகளையும், நறுமணம் பொருந்திய குளிர்ந்த நீரையும் தானே எடுத்துவந்து, அன்புடையகத்தினள்போல என்னை நோக்கி இங்ஙனம் மொழியலானாள்: 'சுபாவமாகவே சிந்தையொழிந்து வாழ்பவையான பசுக்களும் பறவைகளும் பசி-தாகங்களால் வருந்துகையில் உணவு கிடைக்கின் உபயோகிக்காமலிரா. நீ முற்பிறப்புணர்ச்சியுடன் பகுத்தறிவு பெற்ற ஓர் அபூர்வமான பறவை யென்று யான் அறிவேன்; ஆயினும் பகுத்தறிவில்லாச் சாதியிற் பிறந்தனை. இப்பிறவிக்கேற்க நீ உண்பதற்கு உசிதமாகாததும் உண்டோ? ஆதியிலேயே நீ விவேகம்

தவருது உன்றனை அடக்கி வைத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது தான் செய்த வினைக்குப் பயனுக இக் கிளிப் பிறப்பெடுத்தனை. அன்றியும் யான் கொண்டு வந்துள்ளவைகளிற் பஞ்சமர் பரிசித்ததென்று பரிகரிக்கத் தகுந்ததும் ஏதுமிலது. முனிவர்களுமல்லவோ கனிகளையும் காய்களையும் எல்லோரிடமிருந்தும் ஏற்கின்றனர்? ஆகையால் பைங்கிளியே! பசியாலும் நாவறட்சியாலும் வீணில் உன்றனை மாய்த்துக்கொள்ளவேண்டாம்' என்றவாறு அவளது குலத்திற்கு அரிதான வகையில் விவேகத்துடன் விளம்பிய உயர்மொழியைக் கேட்டு வியந்து, அவளிட்ட உணவைமட்டும் உயிர் தரிப்பதற்காக ஏற்றுக்கொண்டேன்; ஆனல் மௌனத்தைமட்டும் யான் விட்டவனல்ல.

## ஆறும் சருக்கம்.

இவ்வாருகச் சில காலம் செல்ல, யான் நல்ல நடுப்பிராயத்தை யடைந்து வந்தேன். அம்மாதங்கமாது அனவரதமும் அன்னையைப் போலவே என்னை அன்புடன் வளர்த்துப் பாராட்டி வந்தாள். எவளோ தைவப்பெண் இவ்வாறு மாறுவேடத்துடன் நடிக்கின்ருளென்றே நாள் செல்லச்செல்ல நான் ஐயமுறலானேன். இங்ஙனமிருக்கையில் ஒருக்காற் பொழுது விடிந்ததும், யான் கண்விழித்துப் பார்க்க, அவ்வருவருப்பான மரக்கூடு இவ்வழகான பொற்கூடாக மாறியிருக்கக் கண்டேன். அப்பறைச்சேரியனைத்தும் பளிச்சென்று தேவநகரம்போல் தேஜோமயமாக ஆய்

விட்டது. சூத்திரக மகாப்பிரபுவே! அச்சண்டாள மாது எத்தகையவள் என்பதையும் தேவரீர் இவ்விடத்திற் பார்த்திருக்கின்றீர். என் மனம் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. அப்பொழுது நியமத்தைக் கைவிட்டு, விந்தைக்கிடமான அவ்விஷயத்தை வினவ ஆவல் கொண்டேன். உடனே யான் வாய்திறப்பதற்கும் இடங்கொடாமலே, அவள் என்னை இப்பொற்கூட்டுடன் தேவரிடம் எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள். இதுதான் செய்தி. இனி 'இக்கன்னிகை யாவள்? வெளிக்குப் பஞ்சமசாதியைச் சேர்ந்ததாக இவள் காட்டிக் கொண்டதெதற்கு? என்றனைக் கட்டிப்போட்டிருந்த காரணம் யாது? தமது சன்னிதானத்திற்கு ஏன் என்னைக் கொண்டுவரவேண்டும்?' என்னும் இவ் விஷயங்கள் எனக்கே விளங்கவில்லை. இவற்றை யறிய எனக்கும் தங்களைப்போலவே ஆவலாயிருக்கின்றது." என்று அக்கிளி மொழிந்து முடித்தது.

சூத்திரக மன்னவன் இவ்வரலாற்றை யெல்லாம் கேட்டு மிகவும் வியப்புற்றான். உடனே மற்றச் செய்திகளையும் அறிய ஆவல் கொண்டு, வாயிற்காப்பவனை அனுப்பி அம்மாதங்கமாதை அழைத்துவரச் செய்தான். சற்றுக்கெல்லாம் அக்கன்னிகை, அங்கிருந்தவர் அனைவரும் பிரமிக்கத்தகுந்த ஒளிவீசும் உருவத்துடன் அரசனுக்கு முன் தோன்றி, ஆகாயத்திற் கிளம்பி நின்றவாறு, வெகு கம்பீரமான அழகிய தொனியில் இங்ஙனம் மொழியலானாள் :— 'ஓ புவன பூஷண! ரோகிணீநாத! காதம்பரிநாயக! உன்னுடையவும், மதிகெட்டப் பிராணியான இதனுடைய

வும் முந்திய வரலாறுகளனைத்தையும் நீ இக்கிளியின் வாயிலாகவே அறிந்துகொண்டனை. இது மீண்டும் தன் தந்தையான ச்வேதகேதுமாமுனிவரின் ஆணையையும் புறக்கணித்து, ஜாபாலிமுனிவரின் ஆச்ரமத்தை விட்டு, மனதையடக்காமல், மனைவியினிடம் ஓட முயன்ற தன் மூடச் செயலையும் சொல்லக் கேட்டாய். யான் மஹாலக்ஷ்மி; இவ்விழியோனின் மாதா. இதன் அடாத முயற்சியை யறிந்து யான் இவ்வுபாயம் செய்தேன். தகாததைச் செய்ய முயன்றவன் எவனும், தன் தவறுதலை யுணர்ந்து தானே அநுதாபப்படும் நிலைமை நேர்ந்தாலேயொழிய தீய வழியிலிருந்து திரும்புவதில்லை. இவனுக்கு நடைபெறும் தீவினைப்பயனை அநுபவித்து முடித்து, மற்றோர் கருமத்திற்கு இவன் தன்னை ஆளாக்கிக் கொள்ளுவதற்கு முன்பே, மானிடலோகத்தில் இவனைக் கட்டிப்போடுதல் நன்று என்று ஆலோசித்து, இதன் சேஷ்டைகளை அடக்கிச் சேரியில் இதைக் கட்டிப்போட்டேன். இப்பொழுது இதன் கருமம் முடிவடைந்து, உங்கள் இருவரையும் சாலவும் தொல்லைப்படுத்திய சாபமும் தொலைந்தது. இன்பம் அநுபவிக்கவேண்டிய இச்சமயத்தில் இருவரும் ஓர் இடத்திற் சேர்ந்திருத்தல் நலமெனக் கருதி இதை உன்றனிடம் எடுத்து வந்தேன். இப்பிரபஞ்சத்துடன் பற்றுதலற்று இருக்க வேண்டி, பஞ்சமகுலத்தவளாக யான் வெளிக்கு நடித்துவர வேண்டியதாயிற்று. இனி நீவிர் இருவரும் மூப்பும் பிணியு மற்றவராய் மனமுவந்த மனைவிகளுடன் கூடி இன்ப மனுபவிப்பீர்களாக' என மொழிந்தவாறு விசும்பாறுகச் சென்று விரைவில் மறைந்தனள்.

அவளது ஒளியையும், உருவத்தையும் கண்டு, மொழியையும் கேட்டு, அங்கிருந்தவர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். உடனே சூத்திரகனுக்கு முற்பிறப்பின் நினைவு முற்றிலும் உண்டாயிற்று. அவனது மனம் ஒடுக்கங்கொண்டு காதம்பரியை அடைக்கலமாய் அடைந்தது. முகவொளி மழுக்கங்கொண்டது. உடலிலிருந்து வரிவரியாக வியர்வைநீர் வடிந்தது. தன் கடமையான இராஜதருமங்களிலும் அவனுக்குக் கருத்தொழிந்ததைக் கண்டு, குமாரபாலிதன் முதலிய மந்திரிமாரும் மிக்க வியப்பும் மனக்குழப்பமும் அடைந்தனர். விரிவாகக் கூறுவானேன்? அவனுடல் அசைவற்று முற்றிலும் கட்டையைப்போலவே உணர்வற்றுப் போயிற்று. சந்திரனுடைய தேஜோரூபமான அவனது ஆவியானது, மற்றோரிடத்திற் காதம்பரிக்காகக் காத்திருக்கும் உடலை நோக்கி உடனே இங்கிருந்தேகியது. வைசம்பாயனனும், தன்னைப் புண்டரீகத் தன்மையனாகவே தியானிக்க, அவனது மனதும் மஹாச்வேதையினிடம் பற்றுதலைப் பெற்று, சூத்திரகனுக்கு நேர்ந்த அந்திம நிலைமையையே அப்பொழுதே அடைந்தான்.

இதே சமயத்தில், அச்சோதப்பொய்கையின் கரையில், அநேக நாளாகக் காதம்பரியும் சந்திராபீடனது தேகத்தை ஆதரவோடும் பொறுமையுடனும் போற்றிவர, இரஸிகரது இருதயத்தை இன்பத்திலாழ்த்தும் இயல்பினதான இளவேனிற்காலமும் வந்து தோன்றிற்று. ஓர் மாலைப்பொழுதில் சந்திராபீடனது சரீரம் துயிலுறும் பாவனையில் மேன்மேலும் நிலவு போன்ற ஒளியைப் பெற்று விளங்கியது. காதம்

பரி அச்சரீரத்தைச் சீராக நீராட்டி, நறுமணமுள்ள மலர்களாலும், சந்தனக் குழம்பாலும், வெண்பட்டா லும் அலங்கரித்தனள். தானும் மஞ்சனமாடி, மிகப் பரிசுத்தமாயிருந்து, தன் உள்ளங்கசிய, கண்களும் பொசிய, நெடுநேரம் நேர்த்தியான அவ்வுருவத்தைக் கண்டு மகிழ்ந்து, கண்களை மூடியவாறு கழுத்தில் தழுவிக்கொண்டாள். அப்பொழுதே அவ்வுடல் உயி ரைப் பெற்று, உணர்ச்சியையும் அடைந்துவிட்டது. உதயகாலத்துக் கமலமலர்களைப்போலக் கண்களும் மெதுவாக மலர்ந்தன. அப்பால் சந்திராபீடன் கணப்பொழுதில் அக்கற்பாறைப் படுக்கையிலிருந்து துயிலெழுபவன்போல உடலை யுதறிக்கொண்டு எழுந் திருப்பதைக் கண்டு காதம்பரி திகைத்துப்போனாள். அவளை நோக்கி அவன் ‘காதம்பரி! என்னைக் கண்டு அஞ்சுவானேன்? நீ அமுதத்திலுதித்த அரம்பையர் குலத்திற் பிறந்தவளாயிற்றே; அதனாலல்லவோ, உனது பரிசத்தைப் பெற்று யான் உயிர் பிழைத்தெழுந் தேன்? இத்தனை நாட்களாகச் சாபத்தடையினாற் பிழைத்தெழக்கூடவில்லையென்றாலும், உயிர் நீந்த இவ்வுடல் உன் அமுதமயமான கரங்களின் பரிசத்தி னாலேயே சீரழியாமலிருந்து வந்தது. இனி இவ்வுலக மும் சந்திரலோகமும் நீ மனங்களித்து வாழ்வ தற்கு ஆயத்தமாயிருக்கின்றன. அன்றியும் உனது உயிர்த்தோழி மஹாச்வேதையின் மணாளனுக்கும் அவளது தந்தை செய்த வேள்விச்சடங்குகளின் பய னாகச் சாபக்கேடு தீர்ந்துவிட்டது’ என்று சந்திராபீட தேகத்தில் மறைந்துள்ள சந்திரமூர்த்தி மொழிந்த வாறிருக்கையில், சந்திரமண்டல வாசத்தினாற் பற் றிய மதியின் ஒளிகளுக்கொப்பான அழகிய தேககாந்

தியைப் பெற்று, ஆகாயத்திலிருந்து கபிஞ்ஜலனது கரத்தைப்பற்றியவாறு இறங்கிவரும் புண்டரீகனை அனைவரும் கண்ணுற்றனர். முன்பு மயங்கியிருந்த நிலைமையில் மஹாச்வேதையினிட மிருந்து அடைந்த அம்முத்துமாலை அவனது மார்பில் புரண்டாடிக் கொண்டிருந்தது.

அவனிதனில் இறங்கியதும் அவனைச் சந்திராபீடன் அணுகி, ஆனந்தத்துடன் ஆலிங்கனம் செய்து, 'நண்ப! புண்டரீக! நமது முதல் ஜன்மத்து உறவினால் நீ என்றனக்கு மருமகனென்றாலும், மறுபிறப்பில் நேர்ந்த மித்திரன் என்னும் மேலான பிரீதியைக் கொண்டே நீ என்னுடன் பழகவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டான். காதம்பரியும் உடனே சந்திராபீடனது கரத்தை விட்டுவிட்டு, விரைந்தோடி மஹாச்வேதையைத் தழுவி, அவளுக்கு நேர்ந்த பேரின்பத்தையும் பெருமையுடன் பாராட்டினாள். அச்சமயம் கேயூரகன் அவ்வின்பச் செய்தியை அம்ஸனிடமும் சித்திரரதனிடமும் செப்புவதற்கு ஏமகூடம் சென்றான். மதலேலைகையும், மைந்தர் உயிர்த்தெழுந்திருத்தலைக் கோரி மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்துவரும் தாராபீடன்முதலியவர்களிடம் ஓடிச் சென்று, சென்னி வணங்கி, சந்திராபீட வைசம்பாயனர்கள் இருவரும் பிழைத்தெழுந்ததாக மொழிந்து, அவர்களை மகிழ்வுறச் செய்தனள்.

தாராபீடன் தவத்தினாலும் தளர்ந்த வயதினாலும் இளைத்துப்போயிருந்தும், இணையற்ற இன்பச் செய்தியினால் மனம் பதைக்க மனைவியுடனும், மந்திரிமார்

முதலியவரோடும் மஹாச்வேதையின் ஆச்ரமத்திற்கு விரைந்து வந்தான். தந்தை வந்ததும், சந்திராபீடன் பரபரத்துப் பரமானந்தத்துடன் அவன் பாதங்களிற் பணிந்தனன். சற்று மன்னவன் ஒதுங்கி, சந்திரா பீடனை யெழுப்பி ஆலிங்கனம் செய்துகொண்டு, 'அப்ப! உனக்கு நேர்ந்த சாபதோஷத்தினாலோ, யான் செய்த புண்ணியத்தினாலோ நீ எனக்குப் புத்தி ரனாகப் பிறந்தனை. ஆயினும் நீ உலகத்தோரால் பணி யத்தகும் லோகபாலனா யிருக்கின்றனை' என்று விளம்பி வருகையில், விலாஸவதி மைந்தனையணுகி, உச்சிமுகந்து மகிழ்ச்சியாகும் மாகடலில் மூழ்கினள். சந்திராபீடன் தன் அன்னைக்கும் அமைச்சன் முத லானோருக்கும் வந்தனம் செய்தான். சுகநாஸனும் அவனை அகமகிழ அனுக்கிரகித்தான். பின்னர் இவன் தனது தாய்தந்தையருக்கும், சுகநாஸனுக்கும், மனோரமை முதலான மற்றவருக்கும் முன்பாகப் புண்டரீகனைக் கையாற் பிடித்துவந்து நிறுத்தி, 'இதோ தமது வைசம்பாயனன்' எனப் புன்முறு வலுடன் காட்டினான். புண்டரீகனும் சுகநாஸன் முதலியவர்களை வணங்கினான்.

அந்நிகழ்ச்சியிலேயே கபிஞ்ஜலன் சுகாநாஸனிடம் சென்று, "ஐயன்மீர்! சுவேதகேது மாமுனிவர் தம திடம் விண்ணப்பம் செய்யுமாறு இவ்வண்ணம் செப்பியனுப்பினார்: 'இப்புண்டரீகனை யான் வளர்த் தெடுத்தேனாயினும், இவன் சுகநாஸரது புதல்வனே யாவன். இவனுக்கும் உமதிடமே பற்றுதலுண்டா யிருக்கின்றது. இவனை வைசம்பாயனனாகக் கருது வீர்களென்பதில் ஐயமின்றியே சாபமுடிவில் உம

திடமே அனுப்பிவிட்டேன். உலகிற் சந்திரன் இருக்கு மளவும் அகண்டமான ஆயுளையும் அடைந்து வாழ் வான்.' இது சுவேதகேதுமாமுனிவர் தமக்கு அனுப் பிய செய்தி" என மொழிந்தனன். அதற்குச் சுக நாஸன் 'கபிஞ்ஜல! யான் வெகு பாககியம் செய்தேன். மாமகிமைவாய்ந்த அம்மாமுனிவரும் நமதிடம் பெருங்கருணை புரிந்து இவ்விதம் கட்டளை யிட்டன ரன்றோ?' என்றான். அவ்வனைவரும் ஒன்று கூடிய மகிழ்ச்சியோடு, சென்றுபோன ஆச்சரியகரமான செய்திகளைப்பற்றி ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு இனபமுற்றிருக்கையில், இராப்பொழுது கழிந்ததை யும் ஒருவரும் உணரவில்லை. அதிகாலையிலேயே அம்ஸனும் சித்திரரதனும் முறையே அவரது தேவி மாரான கௌரியோடும் மதிரையோடும் திரளான கந்தருவர் புடைசூழ அவ்விடம் வந்து சேர்ந்தனர். அவ்விரு கநதருவமன்னர்களும் தைவச்செயலாய் உத்தம புருடர்களான தாராபீடனோடும் சுகநாஸ னோடும் உறவேற்பட்டதை உவப்புடன் பாராட்டி மகிழ்வெய்தினர்.

சித்திரரதன் அப்பொழுது தாராபீடனை நோக்கி, 'பாரத மன்னரே! நமது அரண்மனை அருகிலேயே இருக்க, அரண்ணியத்தில் இங்கே இவ்வரிய திரு நாளைக் கொண்டாடுவது பொருத்தமாயில்லை. நமது இல்லம் சென்று இவர்களது கல்லியாணத்தைக் கொண்டாடியபின், அவரவர் விரும்பிய இடத்திற்கு அனைவரும் செல்லலாம்' எனக் கேட்டுக்கொண்டான். தாராபீடன் அவனை நோக்கி 'கந்தருவமன்னரே!'எவ் விடத்திற் பெருமகிழ்ச்சிக்குக் காரணமான நிகழ்ச்சி

தோன்றுகிறதோ, அதுவே காடாயிருப்பினும் வீடாம். அன்றியும் யான் இல்லறவாழ்க்கை யனைத்தையும் உமது மருமகனிடம் ஒப்படைத்துவிட்டேன். ஆகவே இவனை உமது அகத்திற்கு அழைத்துப்போய் மணக் கோலங்களை இனிது இயற்றி வைப்பீராக' என மறு மொழி கூறினன். அங்ஙனமே சித்திரரதன் சந்திரா பீடனை ஏமகூடத்திற்கு அழைத்துப்போய், காதம்பரி யுடன் தனது இராஜ்யமனைத்தையும் சந்திராபீடனுக்கு மனக்களிப்புடன் அளித்தனன். அவ்வாறே அம்மை னும் புண்டரீகனை அழைத்துச் சென்று, மஹாச்வேதை யோடு அவனுக்கு மணம் புரிவித்து, அவனது அர சாங்கத்தையும் மனமுவந்து தந்தான். ஆனால் அவ் விருவரும், இரண்டு ஜன்மங்களிற் பெரிதும் வேண்டிய மனமுவந்த மனைவிமாரைப் பெற்றதுடன் முற்றும் திருப்தியடைந்து, மற்றெதையும் ஏற்றுக்கொண்டன ரில்லை.

இவ்வாறு அனைவரும் இன்புற்று வாழ, ஒருநாள் காதம்பரியானவள் ஒருவாறு வாடிய முகத்துடன் சந் திராபீடனுருவங்கொண்ட சந்திரனைநோக்கி 'ஆரிய புத்திர! யாம் அனைவரும் பல துன்பங்களைக் கடந்து இறுதியில் ஒன்றுசேர்ந்து இன்பமுற்றோம். ஆனால் அவ்வேழைப்பத்திரலேகை மட்டும் நமதிடையிற் காணக் கிடைக்காத காரணம் யாது?' என வினவி னள். அதற்கு அவன் 'காதம்பரி! அவளை இங்கெங்ங னம் காண்பது? அவள் ரோகிணியல்லவோ? யான் மா னிடலோகத்தில் தனித்துப் பிறந்து வருந்துவேனென் றுணர்ந்து, எனக்குப் பணிவிடைசெய்யக் கருதி அவள் பாருலகிற் பிறந்தாள்; அவள்தான் பத்திர

லேகை. மீண்டும் யான் சூத்திரனுகப் பிறக்க நேரிட்ட தும், அவள் என்னுடன் வர விரும்ப, யான் வற் புறுத்தி அவளைச் சந்திரலோகத்திலேயே நிறுத்தி விட்டேன். நீ அவளை அவ்வுலகத்திற் காண்பாய்.' காதம்பரி அதைக் கேட்டு மனத்தேற்றமடைந் தனள்.

இவ்வாருகச் சந்திராபீடன் மங்களகரமாக மணச்சடங்குகளைச் செய்துகொண்டு, ஏமகூடத்திற் பல நாட்கள் பெருமகிழ்ச்சியுடன் தங்கியிருந்தான். தாபதவேடங்களை விலக்கிப்போட்டு, மணமகளுக் கேற்ற மனோகரமான உடைகளையும் பூண்களையும் பூண்ட அக்காதம்பரி-மஹாச்வேதைகளின் அப்போ தைய எழில்வனப்பை யெடுத்து வர்ணிப்பதற்கு எவ ராலும் ஆகாது. பிறகு சந்திராபீடனும் புண்டரீகனும் மனமகிழ்ந்த மாமி மாமனார்களிடம் விடை பெற்று, தமது தந்தையார் வசிக்கும் வனத்திற்கு வந்து அவர் களைப் பணிந்தனர். சந்திராபீடன் ஆங்கு அநேக காலம் தனக்காக அளவற்ற ஆயாசங்களை யனுப வித்துவந்த அரசரனைவரையும் புகழ்ந்து, பலவகை யில் அவர்களைப் பெருமைப் படுத்தி, அவ்வனைவருக் கும் முன்னிலையிற் புண்டரீகனிடம் இராஜ்யப் பொறுப்பை ஒப்படைத்தான். அதுமுதல் அவன் சிலகாலம் பிறந்த விடமென்னும் பிரீதியினுல் உஜ்ஜ யினீநகரத்திலும், சில நாட்கள் கந்தருவராஜனிடம் கௌரவம் பாராட்டி ஏமகூடத்திலும், சில சமயம் ரோகிணியைச் சந்தோஷப்படுத்துவதற்காகச் சந்திர லோகத்திலும், மற்றும் சிலகாலம் காதம்பரியின் விருப்பத்திற்கேற்ப வேறு பல மனோகரமாள விடங்

களிலும் அவளுடன் வசித்துக்கொண்டு மிகவும் இன்புற்று இருந்து வந்தான். அவனைப்போலவே புண்டரீகன் மாஹாச்வேதை முதலியோரனைவருமே ஏதுங் குறைவின்றி நீடூழி காலம் நிகரில்லாச் சுகத்துடன் வாழ்ந்தனர்.

முற்றிற்று.

## காதம்பரியிற் குறிக்கப்பட்டுள்ள உபகதைகளின் விவரணம்.

**திரிசங்கு:** இவன் சூரியவம்சத்திற் பிறந்த ஓர் அரசன், அரிச்சந்திரனின் பிதா. வேள்வியைச் செய்து அதன் பிரபாவத்தால் மானிடதேகத்துடன் சுவர்க்கலோகம் போகக்கூடிய யாகத்தைச் செய்துவைக்க அவன் குலகுருவான வசிட்டரைக் கேட்டுக்கொள்ள, அவர் அது முடியாத காரியமென்றார். வசிட்டருடைய புத்திரர்களிடம் சென்று வேண்டிக்கொள்ள அவர்களும் முடியாதென்றதோடு, தந்தையின் கட்டளையை மீறிய விநயம் தவறிய திரிசங்குவைச் சண்டாளனாகக்கடவாய் எனச் சபித்தனர். பிறகு விச்வாமித்திரரிடம் சென்று பிரார்த்திக்க, அவர் தனது குடும்பத்தை முன்னொருமுறை பஞ்சத்திலேற்பட்ட வறுமையிலிருந்து திரிசங்கு காப்பாற்றியதைக் கருதி, அவனது வேண்டுகோளையேற்று, வேள்வி செய்வித்து அவனை விண்ணுலகம் ஏறச் செய்தார். வெகுதூரம் ஏறியதும், இந்திரன் சுவர்க்கத்தில் வர இடங்கொடாது அவனைத் தள்ளிவிடச்செய்தான். விச்வாமித்திரர் அவனைப் பூமியில் விழவிடாமல் நடுவானத்தில் இருக்கச் செய்தார். அதுமுதல் தென்திசையில் தலைகீழாகத் திரிசங்கு இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. (இராமாயணம், பாலகாண்டம்.) [காதம்பரி, பக்கம் 3.]

**இல்வல-வாதாபிகள்:** இவ்விருவரும் பொல்லாத இராக்ஷசர்கள். இல்வலன் ஒரு பிராம்மணனைப் போன்ற உருவமும், வாதாபி ஓர் ஆட்டின் உருவமும் எடுத்துக்கொள்வர். இல்வலன் ஆட்டுருவமுள்ள வாதாபியைச் சிதைத்து, அநேகம் பிராம்மணர்களுக்கு அவ்விறைச்சியைக் கொண்டு அதிதி பூசை செய்துவைப்பான். அனைவரும் புசித்தபின் இல்வலன் வாதாபியை அழைப்பான். உடனே வாதாபி

அவர்களுடைய வயிற்றையெல்லாம் கிழித்துக்கொண்டு பழைய உருவத்துடன் வெளியில் வந்துவிடுவான். இவ்வாறாக எண்ணிறந்த பிராம்மணர்கள் இவ்விரு இராக்ஷசர்களுக்கு இரையாயினர். அகஸ்தியர் ஒருக்கால் அவர்களுக்கு அதிதியாகப்போய், வாதாபியின் மாமிசத்தை வயிற்றிலேயே தமது தபோமகிமையால் ஜீரணம் செய்துகொண்டார். அது முதல் அவ்விராக்ஷசரால் பிராம்மணருக்கு ஏற்பட்ட தீங்கு ஒழிந்தது. (மஹாபாரதம். வநபர்வம். 99-வது பர்வம்) [காதம்பரி, பக்கம் 10.]

**வாலி சுக்கிரீவர்கள்:** வாலியென்பவன் வெகு வலிவுள்ள வாநரராஜன். சுக்கிரீவனுடைய மூத்தசகோதரன். இராவணனையும் பலமுறை வென்றவன். ஒரு சமயம் வாலியானவன் மாயாவி என்னும் இராக்ஷசனோடு போர் புரியச் சென்றான். நெடு நாட்களளவும் அவன் திரும்பி வாராததைக் கண்டு, மாயாவியால் வாலி கொல்லப்பட்டிருப்பானெனக் கருதி சுக்கிரீவன் வாலியின் சிங்காசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு வாலி திரும்பிவந்து சுக்கிரீவனைத் துறத்தியடிக்கவே, இருச்யமூகபர்வதத்தில் அனுமார் முதலிய நான்கு நண்பர்களோடு சென்று ஒளிந்து கொண்டான். இருச்யமூகம் என்பது பம்பை யென்னும் புனிதமான பொய்கைக்கு அருகில் உள்ளதோர் குன்று. (இராமாயணம். ஆரண்ணியகாண்டம். 72-வது சருக்கம்.) [காதம்பரி, பக்கம் 11.]

**ஸ்ரீராமன் வீழ்த்திய பனங்காடு:** வாலியை வென்று வாநரராஜ்யத்தில் சுக்கிரீவனை அரசனுக்குவதாக ஸ்ரீராமன் சுக்கிரீவனுக்குக் கூறினார். மிக்க வலிவுள்ள வாலியை வெல்லுவதில் ஸ்ரீராமனுக்குத் திறமையுண்டாவெனச் சந்தேகித்து, சுக்கிரீவன் ஆங்கிருந்த ஏழு பனைமரங்களை அம்புகளால் வீழ்த்தினால்தான் அவரது வன்மையை நம்ப முடியும் எனக்

கூற, ஸ்ரீராமனும் ஒரேபாணத்தினால் அம்மரங்களை வீழ்த்தி வானரர்களை வியப்புறச் செய்தார். (இராமாயண கிஷ்கி. 12-ம் சருக்கம்.) [காதம்பரி, பக்கம். 12.]

**ஏகலவ்யன்:** ஹிரண்யதநுஸ் என்னும் வேடர்களின் அரசனுடைய புத்திரன் ஏகலவ்யன். தநுர்வேதத்திற் கைதேர்ந்த திரோணாசாரியரை அடுத்து வில்வித்தையிற் பயிற்சியளிக்கக் கோரினான். அவன் வேடனென்பதைக் கருதி, அவர் அதற்கு இசையவில்லை. மனப்பூர்வமாகத் திரோணரை அவன் குருவாகத் தீர்மானித்து, திரோணரைப் போன்று மண்ணால் ஓர் உருவம் செய்து, அதைப் பூசித்துக் கொண்டு, வில்வித்தையை அந்தப் பிரதிமைக்கு முன்னால் தானாகவே ஊக்கத்துடன் பயின்றதில், அவன் அதில் மிகத் தேற்சியடைந்துவிட்டான். (மஹாபாரதம். ஆதிபர்வம். 132-ம் பர்வம்.) [காதம்பரி, பக்கம் 15.]

**காண்டவவனம்:** குருக்ஷேத்திரத்தைச் சேர்ந்ததோர் பெருங்காடு. அக்கினிதேவதை, பன்னிரண்டு வருடகாலம் தொடர்ச்சியாக யாகத்தில் ஓமம் செய்த அளவற்ற நெய்யைப் பருகி அஜீர்ணத்தினால் வருந்த நேர்ந்தது. அப்பொழுது அக்கினி பிரம்மதேவனிடம் முறையிட்டுக்கொள்ள, காண்டவவனத்தை எரித்துப்போட்டால் அந்த நோய் தீரும் என்றார். அப்படியே அவ்வனத்தையெரிக்கத் துவக்குகையில், தேவேந்திரன் அவ்வனத்தை அழியாமற் செய்ய மழை பொழிய ஏற்பாடு செய்தான். மீண்டும் பிரம்மதேவனுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து அக்கினிதேவதை ஓர் அந்தணருருவங்கொண்டு அர்ஜுனனையும் கிருஷ்ணனையும் அடுத்துவேண்டிக்கொள்ள, அர்ஜுனன் அம்புகளை மாரி போல் எய்து, மாரிநீர் சிறிதும் உட்புகாதபடி சரகூடம் கட்டிவிட்டான். அவ்வுதவியினால் அக்கினிபகவான் காண்டவ வனத்தைப் புசித்துப் பொசிக்க முடிந்தது. (மஹாபாரதம். ஆதிபர்வம்.) [காதம்பரி, பக்கம் 20.]

**ருச்ய சிருங்கர் :** விபண்டகர் என்னும் முனிவருடைய குமாரர். அங்கதேயம் ஒரு சமயம் கடும் பஞ்சத்தால் வருந்த, அப்பொழுது அந்தணர்கள் கூடி, அத்தேயத்து அரசனை ரோமபாதனிடம் ருச்யச்ருங்கரை அத்தேயத்துக்கு அழைத்து வந்தால் நல்ல மாரி சொரியும் என்றனர். அவ்வரசன் பல உபாயங்களைக் கொண்டு அம் முனிவரைத் தன் தேயத்துக்கு அழைத்துவர, விசேஷமாக மழை பெய்து நாடு செழித்தது. அதற்குக் களிகூர்ந்து அரசன், தசரதனிடமிருந்து சுவீகாரமாகப் பெற்ற சாந்தை யென்னும் புத்திரியை அம்முனிவருக்குக் கொடுத்து மணம் செய்வித்தான். இந்த ருச்யச்ருங்கமுனிவர் தான் தசரதருக்குப் புத்திர காமேஷ்டியாகத்தைச் செய்வித்து, மக்கட் பேறுண்டாகுமாறு அனுக்கிரகித்தார். (இராமாயணம் பால. 15-ம் சருக்கம்.) [காதம்பரி, பக்கம் 31.]

**பரசுராமன் - ரேணுகா :** பிரஸேநஜித் என்னும் அரசனுடைய பெண்ணான ரேணுகை யென்பவளை ஜமதக்னி முனிவர் மணம் புரிந்தார். அவ்விருவருக்கும் பிறந்தவர் பரசுராமன். இவர் விஷ்ணுவின் ஆறும் அவதாரம். தேக வன்மையிலும் பிடிவாதத்திலும் இவர் பெயர்போனவர். (ஸ்ரீ விஷ்ணுபுராணம். 4-ம் அம்சம்.) [காதம்பரி, பக்கம் 36.]

**ஸ்தூலசிரஸ் :** இப்பெயர் கொண்ட இருஷி தருப்பைகள் அறுப்பதற்காக ஒருக்கால் அடவியில் திரிகையில் 'நாங்கள் வெகு ஆழமான பாதாளத்தில் வீழ்கிறோம் ; காப்பாற்றுங்கள்' என்கிற உரத்த அச்சந்தரும் கூச்சல் அவர் காதில் விழுந்தது. அச்சமயம் ஓரிடத்தில் திரும்பிப் பார்க்கையில், இளைத்து ஒடுங்கிய உடலுடன் சிலர் தலைகீழாக ஆகாயத்திலிருந்து தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அம் முனிவர் அவர்களை யாரென்று வினவ, அவர்கள் 'நாங்கள் உனது முந்திய கூடஸ்த்தர்கள். நீ புத்திரப்பேறில்லாமல் இருக்கிறாய். ஆகவே நீ காலம் சென்றபிறகு நாங்கள்

அனைவரும் புத் என்னும் நரகக்குழியில் வீழ்ந்துவிட நேரிடும்' என்று பதிலளித்தனர். பிறகு இரம்பையைத் தனக்கு மனைவியாகக் கோரினர். அவள் தேவர்களுடைய வெகு அவசரமான காரியத்தைத் தான் முடித்துவர வேண்டியிருப்பதால், தான் திரும்பிவருமளவும் காத்திருக்கவேண்டுமெனச் சொல்லி வெகு தாமதம் செய்து வந்தாள். அதற்காக அவளை ஸ்தூலசிரஸ் பெண்குதிரையாகப் போகுமாறு சபித்தார். ம்ருத்திகாவதி என்கிற நகரத்தைப்பற்றி விவரம் தெரியவில்லை. ஆனல் இப்பெயர் ஹர்ஷசரிதத்தில் 6-வது உச்சுவாஸத்திலும் பாணனல் குறிக்கப்படுகிறது [காதம், பக்கம் 41.]

**குலூதராஜ்யம் :** முற்காலத்திற் குலூதம் என்று கூறப்பட்ட இவ்விராஜ்யம் பஞ்சாப் மாகாணத்தில், சதத்ரு (Sutlej) என்னும் ஆற்றின் மேலண்டைக் கரையில் உள்ளது. 'குலு' என்று இக்காலத்தில் வழங்கப்படுகிறது. சம்பா என்கிற ஸம்ஸ்தானத்திற்குத் தென்கிழக்காயுள்ளது. (Cunninghams Ancient Geography, p. 142). [காதம் பக்கம் 49]

**சிவன் மன்மதனை எரித்தது:** ஒருக்கால் சிவபெருமான் இமகிரியில் யோகஸமாதியில் இருந்தார். அப்பொழுது இமாலயத்தின் புத்திரியாகிய பார்வதி அவருக்கு உபசாரம் செய்துவந்தாள். அவளுக்கு அப்பொழுது நல்ல வாலிபப் பருவம். ஆச்சரியமான அழகு வாய்ந்திருந்தாள். அவளுக்குச் சிவபெருமானையே மணம்புரிய மிக விருப்பம். அச்சந்தர்ப்பத்திற் சிவபெருமானைக் கொண்டே சிறந்த சேனைத்தலைவனை யுண்டுபண்ண வேண்டுமென்று தேவர்களும் விரும்பினர். ஈச்வரனுக்குப் பார்வதியினிடம் காதலையுண்டு பண்ணுவதற்காக மஹேந்திரன் மன்மதனுக்குக் கட்டளையிட்டான். மன்மதனும் இமாலயம் சென்று, மனதைக்கவரும் வசந்த ருதுவில் பூஞ்செடிகளில் மறைந்தவாறு, பார்வதி வெகு அழகிய நிலைமையில் சிவபெருமானுக்கு எதிரில் இருக்கையில், அவர்மீது தனது மோஹனஸ்திரத்தைப் பிர

யோசித்தான். பரமசிவன் பார்வதியைக் கண்டு அதன் பல னாக உடனே காதல் கொண்டார்; ஆனால் அவ்விதம் தம் மனம் விகாரமடைந்ததற்குக் காரணம் என்னென்று யோசித்து, மன்மதனுடைய செயல்தான் காரணமெனத் தெரிந்து, எதிரிற் பார்க்கையில், நாணேற்றிய வில்லும் கையுமாக நின்ற மன்மதனைக் கண்டார். தன் ஸமாதியைக் கலைத்து, மனதைக் கெடுத்ததைக்கருதி மிகச் சினங்கொண்டு தமது நெற்றிக்கண்ணைத்திறந்து, அதிலிருந்துண்டான கடுந் தீயால் மன்மதனை எரித்தார். (குமாரஸம்பவம். 4-ம் சருக்கம்). [காதம்பரி, பக்கம் 70]

**பிரமத்வரை:** முன்னொருகால் விச்வாவஸு வென்னும் கந்தருவனால் மேனகை கருப்பவதியானாள். மேனகைக்குப் பெண் குழந்தை பிறக்க, அதை அவள் ஓர் ஆற்றங்கரையில் விட்டுப்போனாள். ஸ்த்தூலகேசர் என்னும் ஓர் இருஷி அக்குழந்தையைப் பார்க்க நேர்ந்தது. அவர் அதை ஆச்ரமத்துக்கு எடுத்துப்போய் வளர்த்துவந்தார். அதற்குப் பிரமத்வரை யெனப் பெயருமிட்டார். பிருகுவம்சத்திற் பிறந்தவனான (பிரமதி யென்பவரின் புத்திரனான) ருரு என்பவன் பிரமத்வரையை மணப்பதாக ஏற்பாடாயிருந்தது. அச்சமயம் ஆச்ரமத்தில் ஒரு சர்ப்பத்தை மிதிக்க, அதனால் அவள் தீண்டப்பட்டு உயிர்துறந்தாள். உடனே ஒரு தேவதூதனின் உபதேசத்திற்கிணங்க, ருரு என்பவன தன் ஆயுளிற்பாதியைப் பிரமத்வரைக்கு அளிக்க, அவள் சற்றுக்கெல்லாம் பிழைத்தெழுந்தாள். (மஹாபாரதம். ஆதி. 9-ம் பர்வம்) [காதம்பரி, பக்கம் 89.]

**ஸாந்தீபினி:** அவந்திபட்டணத்தில் வசித்துவந்த ஸாந்தீபினி என்னும் அந்தணர் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் தநுர்வேதத்தைக் கற்பித்து வைத்த குரு. அவருக்குக் குருதக்ஷிணையாகத் தன் இறந்து போன புத்திரனைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்று அவர்களை அவ்

வந்தணர் கேட்டுக்கொண்டார். அவருடைய பிள்ளை பஞ்சஜனன் என்றும் அரக்கனால் பிரபாஸம் என்னுமிடத்தில் கொல்லப்பட்டதால், ஸ்ரீ கிருஷ்ணன் சமுத்திரத்தில் மூழ்கிப் பாதாளலோகம் சென்று பஞ்சஜனனைக் கொன்றார். ஆனால் ஸாந்தீபினியின் புத்திரன் கிடைக்கவில்லை. உடனே இயமபுரிக்குச் சென்று இயமனை வென்று அப்பிள்ளையைக் கொண்டுவந்து, ஸாந்தீபினியினிடம் ஒப்புவித்தார். (விஷ்ணு புராணம். 5-ம் அம்சம்) [காதம்பரி, பக்கம் 89.]

**மஹாபிஷன்** : இப்பெயர் கொண்ட அரசன் ஆயிரம் அச்வமேதயாகங்களையும், நூறு இராஜஸூய யாகங்களையும் நன்றாகச் செய்து முடித்தான். அதனால் அவன் தேவர்களில் ஒருவனானான். ஒருக்கால் பிரம்மதேவனைத் தரிசிப்பதற்குத் தேவர்களெல்லாம் சென்றனர் ; அவர்களுக்கிடையில் மஹாபிஷனும் இருந்தான். அப்பொழுது கங்காதேவியும் தனது தைவத்தன்மைக்குரிய கம்பீரமான அழகிய கோலத்துடன் அவர்களுக்கு முன்னால் வந்து நின்றாள். அக்காலை அவளது மேலாடை காற்றினால் கலைந்து நழுவி விட்டது. ஏனைய தேவர்களும் அந்நிலைமையில் அவளைப் பார்க்கலாகாதெனத் தலைகுனிந்து கொண்டனர். மஹாபிஷன் மாத்திரம் மனம் சஞ்சலப்பட்டு அவளை நிமிர்ந்து நோக்கியவாறு நின்றான். முறைதவறிய அவனது நோக்கத்தைக் கண்டு நான்முகன் சினங்கொண்டு அவனை மீண்டும் மானிடனாகப் போம்படியும், சிலகாலம் கங்கையை மனைவியாகப் பெற்று அவளுடைய ஒற்றுமையைப் பெறாது மனம் துன்புற வாழவேண்டுமென்றும் சபித்தார். அவன்தான் சந்தனுவாகப் பிறந்தான் ; சந்தனுவே பீஷ்மாசாரியருடைய பிதா. (மஹாபாரதம். ஆதிபர். 96-ம் பர்வம்.) [காதம்,பக்கம். 155]

**நகுஷன்:** இவ்வரசன் புரூரவஸ் என்பவனுடைய பேரன். ஆயுஸ் என்பவனுடைய புத்திரன். விசேஷயாகங்களைச் செய்தவன். இந்திரன் விருத்ராசுரனைக் கொன்று

விட்டு, அதனால் ஏற்பட்ட பிரஹ்மஹத்தி தோஷத்தைப் பரிகரித்துக் கொள்வதற்காக நீரில் மூழ்கி மறைந்திருக்க நேர்ந்தது. அப்பொழுது சில அந்தணர் நகுஷனிடம் வந்து இந்திரனுடைய பதவியைப்பற்றிக் கொள்ளுமாறு மொழிய, அவனும் அவ்விதமே செய்தான். தான் இந்திரனானதும், இந்திராணியைத் தனக்கு மனைவியாகக் கோரினான். தேவ ருஷிகள் சுமந்துவரும் சிவிகையிலேறி இந்திரனுக்குள்ள எல்லாக்கோலத்துடனும் தன்னை மணக்க வரவேண்டுமென்று இந்திராணி கூற, அவனும் ஒரு நாள் அவ்விதமேபல்லக்கில் நகரவலம் வந்தான. அங்ஙனம் செல்லுகையில் அம்முனிவர்களை 'ஸர்ப்ப ஸர்ப்ப' (விரைவாகச் செல்லுங்கள்) என்று வணக்கமின்றியே வற்புறுத்தி, அகஸ்தியமுனிவரையும் காலால் உதைத்தான். அம்முனிவர் உடனே மிகக் கோபங் கொண்டு 'ஸர்ப்பமாகப் போகக் கடவாய்' எனச் சபித்தார். நகுஷன் பூமியில் விழுந்து மலைப்பாம்பாகப் போனான். (மஹாபாரதம். வநபர்வம். 181-வது பர்வம்.) [காதம்பரி பக்கம். 155.]

காதம்பரியிற் குறிக்கப்படும்

## கதாநாயகர் முதலியவர்களும் இடங்களும்.

### புருடர்.

சந்திராபீடன்—கதாநாயகன் ; காதம்பரியின் கணவன்.

வைசம்பாயனன்—மந்திரிகுமாரன் ; சந்திராபீடனது தோழன். கிளி.

சூத்திரகன்—விதிசாநகரத்து அரசன்.

குமாரபாலிதன்—சூத்திரகனுடைய முதன் மந்திரி.

தாராபீடன்—உஜ்ஜயினீ நகரத்தரசன் ; சந்திராபீடன் பிதா.

சுகநாஸன்—தாராபீடனது மந்திரி ; வைசம்பாயனனுடைய பிதா.

சந்திரன். (ரோகிணீ நாயகன்)

புண்டரீகன்—இருஷிகுமாரன் ; மஹாச்வேதை கணவன.

கபிஞ்ஜலன—இருஷிகுமாரன் ; புண்டரீகன் தோழன்.

சுவேதகேது—தேவருஷி ; புண்டரீகனுடைய பிதா.

ஜாபாலி—வைசம்பாயனனது வரலாற்றைக்கூறும் மஹருஷி.

ஹாரீதன்—வைசம்பாயனனைக் காப்பாற்றும் ஜாபாலி புத்திரன.

ஜாலபாதன்—ஜாபாலியின் சிஷ்யன்களில் ஒருவன்.

ஏம ஜடர்—சுவர்ணபுரத்தைச் சேர்ந்த சில வேடர்கள்.

சித்திரரதன்—கந்தருவராஜன் ; காதம்பரி பிதா.

அம்ஸன்—மற்றொரு கந்தருவராஜன் ; மஹாச்வேதை பிதா.

வலாஹகன்—தாராபீடனுடைய சேனைத்தலைவன்.

மேகநாதன்—சந்திராபீடனுடைய சேனைத்தலைவன்.

மங்களகன்—சுகநாஸ மந்திரியின் சேவகன்.

பரிவர்த்தகன்—சந்திராபீடனுடைய குதிரைப்பாகன்.

மாதங்கன்—வேடர்களின் தலைவன்.

கைலாஸன்—ஒரு கஞ்சுகி.

தமிழ்ப்பூசாரி—காளிகோயிலில் இருக்கும் திராவிடதார்மிகன்.

துவரிதகன்—சந்திராபீடனுடைய பால சேவகன்.
கஞ்சுகி—சித்திரரதனுடைய கஞ்சுகி.
கேயூரகன்—காதம்பரியின் வீணையேந்தும் கந்தருவவாலிபன்.
இந்திராயுதம்—சந்திராபீடன் குதிரை.

## ஸ்த்ரீகள்.

காதம்பரி—கதாநாயகி; சந்திராபீடன் மனைவி.
மஹாச்வேதை—புண்டரீகனுடைய மனைவி; காதம்பரியின் உயிர்த் தோழி.
சண்டாளக் கன்னிகை—சூத்திரகனிடம் கிளியைக் கொண்டு வருபவள்.
விலாஸவதி—தாராபீடனுடைய பட்டமஹிஷி.
மனோரமை—சுகநாஸன் மனைவி; வைசம்பாயனன மாதா.
பத்திரலேகை—சந்திராபீடனுடைய அந்தரங்க சகி.
மகரிகை—விலாஸவதியின தாம்பூலபரிசாரிகை.
குலவர்த்தனை—விலாஸவதியின் அந்தப்புரத்துத் தலைமைப் பரிசாரிகை.
முனி—சித்திரரதனுடைய மாதா.
அரிஷ்டை—அம்ஸனுடைய மாதா.
கௌரி—மஹாச்வேதையின் மாதா.
மதிரை—காதம்பரியின் மாதா.
மதலேகை—காதம்பரியின் தோழி.
தரளிகை—மஹாச்வேதையின் தோழி.
தமாலிகை—காதம்பரியின் மற்றொரு தோழி.
ரேவதீ—சந்திரன் மனைவி.
மஹாலக்ஷ்மி—புண்டரீகன் மாதா.

## இடங்கள்.

விதிசை—சூத்திரகனுடைய இராஜதானி.
உஜ்ஜயினீ—தாராபீடனுடைய இராஜதானி.
அவந்தீ—உஜ்ஜயினியை இராஜதானியாகப்பெற்ற தேசம்.
வேத்திரவதி—விதிசையைச் சேர்ந்த நதி.
சிப்பிரை—உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள ஒரு நதி.

விந்தியாடவி—விந்தியமலைக் காடு.
அகஸ்தியாச்ரமம்—விந்தியடாவியில் அடங்கியது.
பம்பாஸரஸ்—ஜாபாலியின் ஆச்ரமத்துக்கு அருகிலுள்ள தாமரைக்குளம்.
இலவமரம்—வைசம்பாயனக் கிளியிருந்த விருக்ஷம்.
ஏமகூடம்—கந்தருவமன்னர்களுக்கு இருப்பிடம்.
சுவர்ணபுரம்—வடதிசையில் மறவர்களின் ஒரு பட்டணம்.
அச்சோதம்—ஏமகூடத்திற்கு அருகிலுள்ள ஒரு மஹா ஸரஸ்.
சந்திரப்பிரபை—கைலாசமலைச்சாரலிலுள்ள தேஜோமய மானதோர் இடம்.
சைத்திரரதம்—அச்சோதக்கரையிலுள்ள ஒருபெரியசோலை.
ஸ்ரீமண்டபம்—சந்திராபீடன் காதம்பரி இவர்கள் கொலு மண்டபம்.
இமகிருஹம்—காதம்பரியின் அரண்மனையிலுள்ள குளிர்ச்சி தரும் வீடு.
காளிகோயில்—தசபுரத்துக்கும் அச்சோதத்துக்கும் இடையேயுள்ளது.
தசபுரம்—உஜ்ஜயினுக்குச் சமீபமாயுள்ள ஓர் ஊர்.
மஹோதயம்—சந்திரனுடைய ஆஸ்த்தான மண்டபம்.
சுப்பிரம்மண்ணியாலயம்—சிப்பிராநதிக் கரையிலுள்ள கோயில்.

# மேகஸந்தேசம்.

ஆயுர்வேத பூஷணம்

பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார்

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

---

வடமொழியில் காளிதாஸ மஹாகவி இயற்றிய மேகஸந்தேசம் மிகப்பிரசித்தமானது. தமிழில் இவ்விதமான காவ்யநூல் மிகவும் அரிது. ஸம்ஸ்க்ருதத்திலுள்ள ஒவ்வொரு பத்தியமும் வெகு அழகாக உயர்ந்த எளிய நடையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. படிக்கப்படிக்க மிகவும் இனிதாயிருக்கும். குபேரனது சாபத்தால் அவனது குற்றேவற்காரனும் ஒரு யக்ஷன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து, இராமகிரி ஆச்ரமங்களில் தங்கியிருந்து மேகத்தைக் கொண்டு தூது அனுப்பும் விஷயமே இதில் முக்கியமானது. அநேக நீதிகளும் நிரம்பியுள்ளன. முற் காலத்தில் வழங்கப்பெற்ற அநேக நாடு நகராதிகளைப்பற்றிய சரித்திர விஷயங்களும், வேறு பல அரிய அம்சங்களும் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முகவுரை முதலிய இதர விஷயங்களும் மிகவும் இன்பந்தரத்தக்கன.

விலை அணா 14


வைத்திய கலாநிதி ஆபீஸ்,

வேப்பேரி, மதராஸ்.